சமரசப் பண்ணை வெளியீடு—1

# வகுப்பு உரிமை நீதி

அல்லது

## சமதர்ம சமூக சாதனம்

“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”
—புறநானூறு.

ராஜன்

“கருணை யிலாவாட்சி கடுகி யொழிக
அருணயந்த நன்மார்க்க ராள்க — தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து”
—வடலூரடிகள்.

சமரசப் பண்ணை - சென்னை.

விலை: ரூ. 2.

எம்மை
எழுத, படிக்க வைத்தவர்களுக்கு
அர்ப்பணஞ் செய்தது

# FOREWORD

BY

**Mr. S. MUTHIAH MUDALIAR, B.A., B.L., C.I.E.**
*Ex-Minister, Government of Madras.*

It is with great pleasure that I went through the manuscript copy of the author's *"Vahuppu Urimai Needhi"* or *"Communal Justice."* The work exhibits the author's wide reading, up-to-date knowledge of current affairs and the analytical exposition of problem is commendable. He deals in extenso the origin and nature of rights and demonstrates how communal justice is one of the Fundamental Rights which ought to be guaranteed by the Constitution.

In about a third of the work, the pros and cons of the question, the objections to and justification for promoting communal justice are dealt with dialectically and the case for need and for promotion of communal justice fully established. The demand and insistent clamour for it and the measures adopted by the Government to promote the claim and the efforts made to undo such measures and retard the full growth of communal

justice are also dealt with. The final recognition of communal justice among Fundamental Rights and the inclusion of obligation of every Government to promote it among the Directive Principles in the Constitution, the efforts made in the Constituent Assembly to whittle them down, the fight in the law courts and the amendments made by the Parliament are dealt with.

The book gives a comprehensive view of the problem and supplies an essential need—the education of the public in one of its primary important rights. Being in Tamil, it will command a wide circle of readers.

Literature on the subject in all languages is necessary and the author has to be congratulated on this welcome measure.

S. MUTHIAH,

# நூன்முகம்

இந் நூலின்கண் தொகுத்துரைக்கப்பெற்ற பொருளைப் பற்றி யறிந்திராத தமிழ்ப்பெரு மக்களிராரெனினும், குவலய முன்னேற்றம் சமதர்மத்தினைப் பற்றியுள்ளமையான் சென்னை அரசியலார் அநுஷ்டித்துவந்த 'வகுப்பு உரிமை நீதி' சமதர்ம சமூக அமைப்பிற்கு உறுதுணையாகவிருக்கும் துணைக்கரணங்களுள் ஒன்ருக இருத்தல் ஓர்ந்து இம் முயற்சியில் தலைப்படலாயினேம். சென்னை அரசியலார் தம் பழைய உத்தரவு மாற்றியமைக்கப்பெற்ற போதினும், உண்மைக்கு எஞ்ஞான்றும் செல்வாக்குண்டென்று நம்புகின்ருேம். உண்மையின் சார்பாக வெளிவந்த உரை இஃதாகலின், காய்தல், உவத்தல் என்ற முறையை அறவே விடுத்துப் புனிதமிக்க மனித உயிர் செம்மையுடன் உலகிற் றங்கி வாழ்ந்து சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கமுடன் நூல் வடிவில் வெளியிடப்பெற்றது. இந்நூலுட் பல அறிஞர் பெருமக்கள்தம் உரைகளை "முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும், பொன்னே போல் போற்றுவம்' என்ற இலக்கண இலக்கிய மரபினை யொட்டி ஏற்றுக் கொண்டுள்ளமையான் அவ்வுரைகளை வழங்கிய அறிஞர் மணிகளுக்கும், அவற்றினை வெளியிட்ட பெரு மக்களுக்கும் யாம் என்றுங் கடப்பாடுடையோம். 'முன்னுரையோ', 'பொன்னுரையோ' என்னும் வகையில் இந் நூலுக்கு மதிப்புரைத் தந்து சிறப்பித்த முன்னாள் அமைச்சர்—மேதையர்—எஸ். முத்தையா முதலியார் அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக.

— ஆசிரியன்

# உள்ளுறை


| அதிகாரம் | உட்பிரிவு | பக்கம் |
|---|---|---|
| **1. தோற்றுவாய் :** | | |
| (1) | உரிமை உயிருக்கிடானது ... | 1 |
| (2) | உரிமையின் பெருமை கொடுங்கோன்மை உணர்த்தும் ... | 2 |
| (3) | தனி மனித உரிமையும் சமூக உரிமையும் ... | 4 |
| (4) | தனி மனித உரிமையும் அரசாங்கத்தின் அதிகாரமும் ... | 8 |
| (5) | உரிமையும் சலுகையும் ... | 11 |
| (6) | வகுப்பு உரிமை நீதியின் அவசியமும், அதன் அடிப்படைத் தத்துவமும் ... | 14 |
| **2. வரலாறு :** | | |
| (1) | வரலாற்றின் பெருமை ... | 19 |
| (2) | வட நாடும் தென்னாடும் ... | 20 |
| (3) | தேசியம் எது ? வகுப்புவாதம் எது ? ... | 31 |
| (4) | நீதிக் கட்சியும் வகுப்பு நீதியும் ... | 35 |
| (5) | வகுப்பு நீதியின் ஆட்சி விரோதம் ! ... | 43 |
| (6) | தேச விடுதலைப் பணியும் சமூக தர்ம நாட்டமும் ... | 51 |
| (7) | காங்கிரஸ் கட்சியும், வகுப்பு நீதியும் ... | 56 |
| (8) | இந்திய விடுதலையும், அரசியல் நிர்ணய சபையும் ... | 63 |
| (9) | நீதிமன்றத்தில் வகுப்பு நீதி ... | 71 |
| **3. வாதப் பிரதிவாதம் :** | | |
| (1) | வாத முறையின் அவசியம் ... | 75 |
| (2) | புதிய சகாப்தமும், பழைய வகுப்பு நீதியும் ... | 76 |
| (3) | பட்சபாதமென்பதா ? பங்கீடு செய்வதா ? ... | 79 |
| (4) | அரசாங்கப் பணம் பொதுப் பணமல்லவா? ... | 82 |
| (5) | தகுதி, திறமை கூப்பாடும், அறிவு, பண்பு படும்பாடும் ! ... | 86 |

| அதிகாரம் | உட்பிரிவு | பக்கம் |
| --- | --- | --- |
| (6) | மதச் சார்பற்ற சர்க்காரா? மனிதச் சார்பற்ற சர்க்காரா? ... | 121 |
| (7) | வகுப்பு நீதியும் வயிற்றுப் படிப்பும் ... | 126 |
| (8) | வகுப்பு நீதியா வகுப்புப் பூசலுக்குக் காரணம்? ... | 133 |
| (9) | வழக்கறிஞரிடத்தில் வகுப்பு நீதி! ... | 136 |
| (10) | வகுப்பு நீதிக்கொரு கால எல்லையா? ... | 140 |
| **4.** | **விளைவு :** | |
| (1) | சமூக நீதி—சட்ட ரீதியில் ... | 143 |
| (2) | சட்டமாவதற்கு முன் ... | 144 |
| (3) | சட்டமானதற்குப் பின் ... | 146 |
| (4) | சமூக நீதி—அரசியல் சட்ட விதி-13 ... | 148 |
| (5) | இந்திய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையும், பொதுப் பிரஜா உரிமையும்—விதி-15 ... | 149 |
| (6) | பொது விதியினுள் ஒரு சிறப்பு விதி-16 ... | 150 |
| (7) | மறக்க முடியாத சட்ட விதி-29(2) ... | 151 |
| (8) | சமூக நீதிக்குச் சாதகமான சட்டவிதி-46 ... | 153 |
| (9) | அடிப்படை உரிமையும், அரசாங்கக் கொள்கையும் ... | 156 |
| (10) | வகுப்பு நீதியைக் காக்க அரசியல் சட்டத்தைத் திருத்துவதா? ... | 163 |
| (11) | சமூக நீதிக்குப் பதிலாக வந்த புதிய நீதி ... | 168 |
| **5.** | **இறுவாய்** | |
| (1) | தொகுப்புரை ... | 176 |
| (2) | தேற்றவுரை ... | 180 |
| (3) | சமத்துவமே சமூக மார்க்கம் ... | 193 |
| (4) | வணக்கவுரை ... | 195 |

*"He that writes with judgment and never rises into improper warmths, manifests the true force of genius"*

—*Addisson.*

என்னை இத்தரணி எண்ணி ஈன்றது
தன்னைத் தொண்டால் சிறப்பிக் குமாறே!

—ஆசிரியன்

# வகுப்பு உரிமை நீதி

அல்லது

# சமதர்ம சமூக சாதனம்

## 1. தோற்றுவாய்

### உரிமை உயிருக்கீடானது

உரிமை என்பது தனி மனிதனொருவன் தன்னிச்சைப் படி தனது முன்னேற்றத்தைக் கருதி, பிறருடைய உரிமைக்கு எவ்விதத்திலும் பங்கம் நேராவண்ணம் கொண்டாடும் ஓர் இயற்கையான பாத்தியதையாகும். அதனை அரசியல் அறிஞர்கள் **மனித உரிமை** (Human Right) என்றும், **அடிப்படை உரிமை** (Fundamental Right) என்றும் பல நாமங்கள் வைத்து வழங்குகின்றனர். உதாரணமாக பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய வழிபாட்டுரிமை, சொத்துரிமை, சமூகத்தில் சமமாக வாழ உரிமை என்றின்னோரன்ன பிற முக்கிய உரிமைகளை அடிப்படை உரிமை என்னும் ஒரு பெரும் பிரிவினுள் வைத்து வகுத்துரைக்கலாகும். அவ்வுரிமையினை மனித உடமை எனவும் மதிக்கலாகும். உரிமை மனிதனுக்கு மானம் (பெருமை) வழங்கவல்லது. மானமின்றி உயிர் வாழ்வது மனிதனுக்கு ஒவ்வாத செயலாகும். அங்ஙனங் கூறு

வதால் உரிமை மனிதனுடைய புனிதமிக்க உயிருக்கீடான தென்று பெறப்படுகின்றது. உரிமை யின்றேல் இறப்பதே மேல். தனக்கு அங்கமாக (உடமையாக) இயற்கையில் அமைந்த மயிர்களுள் ஒன்றேனும் தன்னுடலினின்று நீங்கிடில் கவரிமான் உயிர் நீத்தொழிவதுபோன்று, மனிதன் தன் உரிமைச் செல்வத்தை இழந்து வாடாமல் அதனைப் பெற்றுப் போற்றிப் பதம் பெறலே சீரிய வொழுக்கமாகும். உரிமையற்றவன், விழிகளிருந்தும் கண்ணிலி போலவும், காதுகளிருந்தும் செவிடன் போல வும், வாயிருந்தும் ஊமையன் போலவும் கருதப் பெறுவான் காரியஞ் சான்ற இக்குவலயத்தில்! உரிமை உணர்வு மனிதனுடைய இயக்கத்திற்கே (சலனம்) ஒரு நெம்புகோல் (Lever) போல அமைந்து உதவுவதாகும். உரிமை இல்லாத இடத்து எழுச்சி ஏது? கொண்டாடினால் அன்றி, கோயிலும் தெய்வமும் உண்டோ?

## உரிமையின் பெருமை கொடுங்கோன்மை உணர்த்தும்

மனிதனுடைய இயக்கத்திற்கு உறுதுணையாக அமைந்த உரிமை உணர்வு சாதாரணமாக எஞ்ஞான்று ஏற்படும் என்பதனைப்பற்றி ஒரு சிறிது விவகரிக்கலாகும். ஆதி அறிஞர்கள் மனிதன் பகுத்தறியும் சக்தி வாய்ந்த ஓர் அற்புதமான பிராணி (Man is a rational animal) என்று மற்றுமுள்ள பலவித உயிர் வர்க்கங்களினின்று பிரித்துக் காட்டிச் சென்றனர். அவ்வறிவாற்றலின் துணை யால் அவன் தன்னுணர்வு (Introspection) பெற முடிகிறது. அப்பொழுது தனது உரிமை எது என்ற விசாரணையில் அவன் ஆழ்கின்றான். அத்தகு விசாரணை

கால மாறுதல், மனித அறிவு வளர்ச்சி ஆகியவைகளை யொட்டியே பெரும்பாலும் நிகழும். ஆதி மனிதன் உரிமை உணர்வு அற்றவன் என்று நாம் இன்று ஒருதலை யாகக் கூறுவதற்கில்லை. மனிதனுடைய உரிமை உணர்வு நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமாகவே இருக்கின்றது. இவ்வுணர்வின் ஆதியை அறிந்தாரில்லை; அந்தத்தை அறுதியிட்டுக் கூறவுமியலாது. உரிமையின் வளர்ச்சி நெறியில் வழியடைகள் அவ்வப்போது உண்டாகலாம்; அது காரணமாக உரிமை அழிந்துவிடக் கூடியது என்று கூறலாகாது.

உரிமை உணர்வு மனித உள்ளத்தில் ஏற்படும் ஓரிய நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சிக்கு உறுதுணையாவது மனிதனுடைய பகுத்தறிவேயாகும். பகுத்தறிவது என்றால் என்ன? அறிவின் இயக்கத்தையே பகுத்தறிதல் என்று கூறலாகும். 'நல்லதன் நலனும், தீயதன் தீமையும்' அறிந்துகொள்ளுஞ் சக்தியையே பகுத்தறிதல் எனலாகும். உரிமை உணர்வு பெரும்பாலும் தீயதன் தீமைகள் காரணமாகவே நிகழும். பகுத்தறிவு தீயதன் தீமைகளோடுப் போராடிப் பெறும் வெற்றியே உரிமை உணர்வென்பது. அவ்வுணர்வு பெற்றவன் தன்னிலைமையைச் சரிப்படுத்திக் கொள்ள அக்கணமே துரிதப்படுவான். உலக வரலாற்று நூல்கள் யாவும் மக்கள்பால் உரிமை உணர்வு உண்டானமைக்குக் காரணமாக அரசியல் கொடுங்கோன்மையைச் சுட்டிக்காட்டா நிற்கின்றன. பொதுவாக உரிமை வேட்கை, சமத்துவ தாகம் ஆகியவைகளெல்லாம் அவை பறிபோகின்ற காலங்களில்தான் நிகழும். நிழலருமை வெயிலிலன்றோ தெரியும்! உரிமையின் அருமையும், பெருமையும் கொடுங்கோன்மையால் நனி விளங்குவன

வாகும். அந்த மெய்மைக்கு ஒரு சிறந்த உதாரணமாக இருப்பது 'பிரஞ்சுப் புரட்சி' (French Revolution) யாகும். சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity) ஆக இம்மூன்று முக்கிய கோஷங்களே (watch words) அப்புரட்சியின் மூலம் எழுப்பப்பெற்றவை.

## தனி மனித உரிமையும் சமூக உரிமையும்

மனிதப் பண்பாடுகளைப் பாகுபடுத்தி யுணர்ந்த மேதைகள், மனிதன் சுயநலத்தில் விருப்பமுள்ளவனுகவே பெரும்பாலுமிருப்பான் என்று நவின்றுள்ளனர். இவ்வாக்கு முக்காலத்தும் ஏற்புடையதாகும். ஆதிமனிதன் தான் வாழ (சுயநலத்திற்காக) என்னென்ன வகையான உரிமைகளை நாடி நின்றனனே அங்ஙனமே இன்றுள்ள மனிதனும் தேடிய வண்ணமாகவே இருக்கின்றான். பழங்கால மனிதன் தனி மனித உரிமையைப் பெறுதலேயே பெருந் தொழிலாகக் கொண்டிருந்தான். தானிருக்க வசதி, தனக்குப் பாதுகாப்பு, சொத்துப் படைத்தல், வர்க்க விருத்தி செய்தல், என்றின்னவாறுன வாழ்க்கைக் கூறுகளைச் சம்பந்தப்பட்ட உரிமைகளையே அக்கால மனிதன் தனக்குத் தேவை என உணர்ந்தான். ஆனல், காலமாறுதலுக்கேற்ப இன்றுள்ள மனிதனுடைய தேவைகள் (wants) பல்கிவிட்டமையான் புது ரகமான பிரஜா உரிமைகளும் அவனுக்குத் தேவைப்படுகின்றன. எல்லா மக்களும் சட்டத்தின் முன்பு சமத்துவம் பெறுதல், பிறப்பு, பால், இனம், சமயம், இடம் ஆகிய வற்றின் காரணமாக மக்களினத்தைப் பிரித்துணரப் படாமை, பொது இடங்களில் சமத்துவமாகப் பழகுதல்,

பேச்சு சுதந்திரம், பிற மக்களுடன் கூடிப் பழக சுதந்திரம், ஆயுதம் படைக்க சுதந்திரம், சங்கங் காணுதல், கூட்டம் அமைத்தல், "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பான்மையில் வாழ்தல், உத்தியோகம், வியாபாரம், மற்றுமுள்ள தொழில்கள் செய்ய உரிமை, அடிமைத் தொழில் நீக்கம், சமய வழிபாட்டுரிமை, மொழி, கலை, நாகரிகம் இவைகளை அபிவிருத்தி செய்ய உரிமை, கல்வி பெற உரிமை, நீதி பெற உரிமை ஆக இன்ன பிற உரிமைகளை நாடி இக்கால மனிதன் செல்லுகின்ருன். மேற்கூறிய உரிமைகள் யாவும் ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கப் பெறுவனவாகும். இவைகளையே தனிமனித உரிமைகள் (Individual Rights) என்று அறிஞர்கள் கூறுகின்றனர். தனி மனித உரிமையில் மக்களுக்குப் பெரும்பான்மையான ஊக்கம் (விருப்பம்) ஏற்பட்டது கி. பி. பதினேழாம் நூற்றுண்டேயாகும். உலக நாடுகள் பூராவும் அக்காலமுதல் சமத்துவ தாகம் கொண்டு இலட்சியப் பாதையில் செல்ல ஆரம்பித்தன. இந்த நூற்றுண்டின் முதல் பகுதி வரை தனி மனித உரிமை நாட்டமே மக்கள்பால் சிறந்து ஒளிர்ந்தது.

மேலே குறிப்பிட்ட தனி மனித உரிமைகளை இரண்டு பிரிவினவாகக் கொள்ளலாகும். அழியாப் புகழ்பெற்ற அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கன் என்பவர் தனி மனித உரிமையின் பாகுபாட்டைப் பற்றிக் கூறியிருக்கும் கருத்தை ஈண்டு அறிந்து கொள்ளுதல் பொருந்தும். சுதந்திரம் என்பதனைப் **பிறருடைய சுரண்டலினின்று விடுபட்டிருப்பது** (Freedom from exploitation) என்றும், தன்னுடைய முன்னேற்றங் கருதி முயற்சி செய்ய உரிமை பெறுவது (Freedom to exploit) என்றும்

இரண்டு வகைக் கூறுகள் கொண்டதாகக் கண்டனர் அவர். ஒரே லட்சியத்தைப் பற்றி அவர் இரு வேறு இயல்பினதாகக் கண்டதற்கு நியாயம் உண்டு. தனி மனித உரிமை, முன்னர்க் கூறியாங்கு தனி மனித னுடைய (சுயநலத்தை) நன்மையை உத்தேசித்து வழங்கப் பெறுவதாகும். சுயநன்மையைப் பெருக்கிக் கொள்ள தான் பெற்ற கருவியாகிய உரிமையைச் சரிவர மனிதன் உபயோகிக்கும் வரையில் அதற்கு மதிப்புண்டு. அஃதொழித்துப் பர நலத்தைப் பாதிக்கவல்லதாக சுய நலக் கோட்பாடு அமையுமெனின் பல முரண்பாடுகள் (Poradoxes) உண்டாகின்றன. அம்முரண்பாடுகளைச் சட்டப்படிப் பார்த்துத் தீர்த்து வைக்கின்றது நீதிமன்றம்.

இனிச் சமூக உரிமை (Community Right) என்றால் என்ன என்பதனைப் பற்றி ஒரு சிறிது உணர்த்துதல் பொருந்தும். ஒருவருக்கு மேற்பட்ட பல மனிதர்கள் கூடி இயங்கும் கூட்டத்தினையே மனித சமூகம் என்று கூறுகின்றோம். தனி மனிதனுக் கென்னென்ன உரிமைகள் உண்டோ அவை யாவும் அவனது சமூகத்தினையும் சார்ந்தனவாகும். குற்றமும், குறையும் நீங்கிய பான்மையில் தனி மனித உரிமை அமையுமெனின் அத்தகு உரிமையினை அடைந்தோர் நிறைந்த சமூகம் அரண் பெற்றதாகின்றது. தனி மனிதனுக்கு வழங்கப் பெறும் உரிமையே சமூக உரிமையாக அமைந்து அச்சமூகத்தினை மேன்மைப்படுத்து கின்றது. குற்றமும் குறையும் அற்ற உரிமைதன்னைக் கொண்ட சமூகத்தினை மேன்மைப்படுத்த உதவுவதோடு நில்லாமல் தன்னைப் பாதிக்கும் அழிவுச் சக்திகளையும் எதிர்த்துப் போராடித் தன்னையுங் காத்து நிற்கும். இதுவே உரிமையின் ஒப்பற்ற சக்தியாகும்.

மனித குலம் உலகம் பூராவும் ஒரே இயல்பினதாகப் படைக்கப் பெற்றிருப்பினும் செயற்கையினீடுபாட்டால் எண்ணரிய, விசித்திரமான சமூகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அத்தகைய சமூகங்களின் சூழ்நிலை, மக்களுடைய அறிவு வளர்ச்சி, மனவளம், பொருளாதார அமைப்பு ஆக இன்னோரன்ன பிற வாழ்க்கைக் கூறுகளைத் தழுவிச் சிற்சில நாடுகளில் **வர்க்க உரிமைகள்** (Community Rights) என்று அரசினால் வழங்கப் பெறுகின்றன. இவைகளுக்கு விசேஷ உரிமைகள் (Special Rights) சிலவும் அளிக்கப் பெறுகின்றன. உதாரணமாக சமூகங்கள் சமயம், தொழில், வளம் ஆகியவைகளின் காரணமாக அமைக்கப் பெறும். அவைகளுக்கு அரசினரால் விசேஷ உரிமைகள் சில வழங்கப் பெறுகின்றன. பஞ்சாப் மாகாணத்தில் உள்ள சீக்கிய சமூகத்தினருக்குப் பல பிரத்தியேக உரிமைகள் உண்டு. மலைச் சாதியினக்குச் சில பிரத்தியேகமான உரிமைகள் வழங்கப் பெற்றுள்ளன.

இன்றுள்ள உலகம் அரசாங்க இயந்திரங்களுக்குக் (Governmental Mechinaries) கட்டுப்பட்டுள்ளதால் அரசாங்கமே மேலே கூறிய தனி மனித உரிமைக்கும், சமூக உரிமைக்கும் பாதுகாவலனாக (Guardian of Human Rights) அமைந்துள்ளது. அரசாங்கம் தன்னுடைய வேலையைச் சரிவரச் செய்யும் பொருட்டுச் சிற்சில அதிகாரங்கள் (Powers to State) வகுத்துரைக்கப் பெற்றுள்ளது; மனித உரிமை பங்கப்பட நேரிடும் பொழுதும், மக்கள் தமது மடமை காரணமாக உரிமையைக் காக்க சக்தியற்றபொழுதும், சூழ்ச்சி உருவெடுத்து ஆட்சி பீடம் ஏறியிருக்கும் காலையிலும்,

மக்களினம் பலவித விசித்திர வகுப்புகளாக பிரிந்துள்ள வரையிலும் அவ்வுரிமைகளைக் காப்பதற்குச் சில தடுப்பு முறைகளைக் (Safeguards) கையாள நேரிடுகிறது.

## தனி மனித உரிமையும் அரசாங்கத்தின் அதிகாரமும்

அரசியல் உரிமைகளைச் சட்டத்தின் மூலமும் வழங்கலாம்; அஃதின்றியும் வழங்கலாம். உதாரணமாக நமது பாரதநாட்டு அரசியல் சட்டத்தில் பல ரகமான உரிமைகள் கண்டுரைக்கப் பெற்றுள்ளன. உலகினுக்கே ஆன்ற அவிரொளியாக விளங்கும் பேறுபெற்ற ஆங்கில நாட்டில் அம்மாதிரியான முறை கிடையாது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் அந்தந்த நாட்டு மக்களுடைய அரசியல் அறிவுத் தெளிவின் அளவேயாகும். சட்டப்படி விநியோகிக்கப் பெறும் உரிமைகளைச் சட்டப்படி நடைமுறையில் கொண்டுவர அரசியலாருக்கு உரிமையும் அதிகாரமும் உண்டு. கூர்த்த மதியினரும், பரந்த மனப்பான்மையினருமான பண்டிதர் ஹிருதயநாத குன்ஸுரு என்பவர் இந்தியப் பாராளுமன்றத்தில் கூறிய வாக்கினை ஞாபக மூட்டுவது ஈண்டு சிறப்புடையதாகும். அவர் கூற்று ஆங்கிலத்தில் வருமாறு:—

*"The object of the Fundamental Rights is not to confer powers on the State but to confer Rights on the individual so as to protect him against the tyranny of changing parliamentary majority in future."*

இதன் கருத்து, அடிப்படை உரிமை தனி மனிதனுக்கு இயற்கையாக அளிக்கப்பெறும் உரிமையைக்

குறிக்கின்றதே யன்றி அரசியலாருக்கு யாதொரு அதிகாரமும் அளிப்பதாகக் கொள்ளலாகாதென்பதாகும். இக்கருத்து அரசியல் ஞானிகளின் சர்ச்சைக்குரியதாகும். அடிப்படை உரிமையினைப் பெற மனிதனுக்கு உரிமை உண்டென்று கூறுங்கால், அவன் அதனை மீறி நடக்கும் பொழுது அவ்வுரிமையின் மகிமையை நிலைநாட்ட, அவனைத் தடுக்க அரசியலாருக்கு உரிமையும், அதிகாரமும் உண்டு. அதனையும் ஓர் அடிப்படை உரிமையாகக் கொள்ளுதல் வேண்டும். மக்கள் வாக்கில் (ஜனநாயகத்தில்) நம்பிக்கையுடையவர்கள் இத்தகைய கருத்துக்களை நன்கு பரிசிலனை செய்வது நன்றாகும். மனித உரிமையின் மகிமை அதன் பிரயோகத்தில் (usage) அடங்கியுள்ளது. உதாரணமாக ஒன்று கூறலாகும். நமக்கு வீதியில் நடந்து செல்ல உரிமையுண்டு. யாதொரு விபத்துக்குள்ளாகாதிருக்க வேண்டுமாயின் நாம் இடதுசாரியாகவே நடந்து செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதை யொழித்து வலது பக்கத்தில் சென்றோமாயின், ஊர்க்காவலர் வந்து, "ஐயா! நீர் இடது பக்கமாகவே செல்லுங்கள்" என்று கூறுவார். எதற்காக இந்தத் தலையீடு? நடந்து போகிறவர் எப்படியாவது போகட்டுமே என்று இருப்பதுதானே அரசாங்கம்! ஆனால் அரசாங்கம் சும்மா இருப்பதற்கில்லை. ஒன்று உரிமையைச் சிதைப்பவரைத் தண்டனைக்குள்ளாக்கிப் பாதுகாக்க வேண்டும்; மற்றும் அவ்வுரிமையின் மகிமையினைப் புகட்ட வேண்டும். அரசாங்கத்தின் கடமை இதுவே!

தனி மனிதனொருவனோ, அல்லது குறிப்பிட்ட சமூகமோ பிறருடைய முன்னேற்றத்திற்குத் தடையாகவிருக்கலாகாது. பழங்கால, அநாகரிக ஏற்பாடுகளும்

குறுக்கே நிற்கலாகா. தனி மனிதனொருவன் மட்டும் 'சகல செல்வ போகமிக்க பெருவாழ்வில்' இருக்க, அவனால் மற்றவர்கள் அவல நிலைமை எய்தி வாட அரசியலார் இனியும் பார்த்திருக்கலாகாது. 'நான்,' 'எனது,' 'எனக்கு,' என்ற ஏகவாதம் நீதி தர்மத்திற்கே முரண் பாடானதாகும். தன்னலத்தை மட்டும் பேணிக்கொள்ள தனி மனிதன் செயலாற்றுவனேல் அவன் புறக் கட்டுப் பாட்டிற்கு, விளக்கவுரைக்கில், அரசியலார் வகுத்துரைத் துள்ள சட்ட திட்டங்களுக்கு ஆட்பட நேரிடும். அரசாங்கமே பலவித நன்மைகளை ஆக்கித் தருவதாக வைத்துக்கொள்வோம். அந்நன்மைகளை மக்கள் யாவரும் பெற்றின்புற்றிருக்கவே அரசாங்கம் எண்ணங்கொள்ளும். அவ்வாறன்றி ஒருசிலரே மேன்மேலும் நன்மைகள் பெறுவதாக அமைந்திடில் அரசாங்கம் சற்றுக் கவனிக்க வேண்டிய அவசியம் உண்டாகின்றது. அரசாங்கம் பொது நிலையில் இருப்பதால் அதற்கு மக்கள் யாவருமே பொது. பாரபட்சம் என்பது அதனிடை எட்டுணையும் இருக்கலாகாது. உரிமை நாடுகின்றோம் என்று கூறிக் கொண்டு கொடுமைக்கு வழி தேடுவதாயின் அதனைத் தீர்த்து வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. உரிமை பேரைச் சொல்லிக் கொடுமை புரிவதைப் புகழ்மலிந்த ஆபிரகாம் லிங்கன் என்னும் பெருமகனார் வன்மையாகக் கண்டித்துள்ளார் ஒரு சிறு உபமானத்தின் மூலம். அது வருமாறு:—

"*A shepherd drives the wolf from the throat of his sheep .........and the sheep of course thanks the shepherd.........but the wolf denounces him. To the sheep the shepherd has given liberty from exploitation; but from the wolf he has taken away the liberty to exploit. Let not the wolves cry 'liberty' when the word that they really mean is 'tyranny'.*"

## உரிமையும் சலுகையும்

உரிமை மனிதனுக்குள்ள இயற்கையான பாத்தியதை யைக் குறிக்கும்; ஆனால் சலுகை செயற்கையின் சேர்க்கையால் வழங்கக் கொள்வதாகும். உரிமை அழியாத தன்மை வாய்ந்தது! குறைத்துக் கட்டுப்படுத்த முடியாதது. சலுகைக்கு ஆயுள் நீடிப்புக் கிடையாது. குறிப்பிட்ட காலம்வரை, குறிப்பிட்ட காரணங்களுக்காக சலுகை வழக்காறிலிருக்கும். சலுகை உயர்வின் காரண மாகவும், தாழ்வின் காரணமாகவும் அளிக்கப்பெறுவ தாகும். உதாரணமாக, நன்றாகப் படித்துத் தேறும் மாணவனுக்கு அவன் அறிவுத் திறனைப் பாராட்டி அற நிறை நெஞ்சினர் உபகாரச் சம்பளம் (free scholorship) வழங்குகின்றனர். அதனைப் பெறும் மாணவமணி அவசிய மாக ஏழையாகத்தானிருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வேண்டப்பெறுவதில்லை. இஃது மாணவனுடைய அறி வின் திறத்தைப் பாராட்டி அளிப்பதாகும். அஃதேபோல், ஏழைமக்களுடைய பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் கவலைச் செலுத்தும் கண்ணியமிக்க புண்ணியசீலர்கள் பலர், அவ்வேழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குகின்றனர். இஃது மாணவர்களுடைய சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கவனித்து வழங்குவதாகும். இவ்விரண்டு உதாரணங்களால் பெறப்படும் முடிந்த கருத்துக்கள் இருவேறு இயல்பினதாயினும் இவைகளுக் காக வசதி செய்து தரப்படுவதைச் சலுகை என்ற ஒரு சொல்லால்தான் குறிப்பிடலாகும். அரசாங்கமும் இதே மாதிரியான நிலைமையில் உள்ளது. கல்வித் திறன்மிக்கோர் மாட்டுப் பாராட்டுதல் காட்டி யாதரித்தும், தாழ்ந்த நிலையில் உழன்று பரிபவப்படுவோர்மாட்டுப் பரிதாபங்

காட்டி ஆதரித்தும் அரசாங்கம் நின்று நிலவ வேண்டப் படுகின்றது. சலுகைகளால் உண்டாகும் முன்னேற்றத் தினையும், உரிமைகளால் சம்பாதிக்கப்பெறும் அபிவிருத்தி யினையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சலுகை யின் முடிந்த நோக்கம் முன்னேற்றமேயன்றி வேறு கிடையாது. உரிமையால் ஏற்படும் அபிவிருத்தியும், சலுகையால் உண்டாகும் நன்மையும் மாத்திரையில் வித்தியாசப்படும். சலுகையின் தன்மையை மற்றுமொரு உதாரணத்தின் மூலம் விளக்கமாக அறியலாகும். நமது நாட்டுக் கைத்தொழில்கள் (Local industries) அபி விருத்தியாகவில்லையெனின் அவைகளை மேலும் போற்றி வளர்த்தற்பொருட்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி யாகும் பொருள்களைக் கட்டுப்படுத்தியோ (Import Restrictions), விலைகூட்டி விற்கச் செய்தோ (selling at enhanced prices) பணங்கொடுத்து உள்நாட்டுத் தொழில்களை ஆதரித்தோ (grant of Subsidies to local industries) அரசாங்கம் வருகிறதல்லவா? அம் முறையினையே சலுகை காட்டி முன்னேற்றமடையச் செய்தலென்று கூறுவதுண்டு.

நாட்டு மக்களில் பெரும்பாலோர் சரித்திரகால முதல் பஞ்சைகளாக, நாயினும் கேடான வாழ்க்கை நடத்து வோராக, மனித உரிமைகள் இன்னின்னவை என்றே அறியாதவர்களாக, வாழ்வில் நொசிந்து போனவர்களாக இருக்கின்றமையை யோர்ந்து வகுப்புரிமை நீதி போன்ற சமதர்ம சாதனங்களை வழங்கிச் சமூகத்தில் சம நிலைமையை வளர்க்கும் அரிய சேவையினைப் பண்பிற் சிறந்த பெருமக்கள் நிறைந்த அரசியலார் புரியலாயினர். வகுப்புரிமை நீதியினைப் பெரும்பாலோர் உரிமையின் பரிசு

என்றும், சிலர், சில சமூகத்தாருக்காக ஏற்பட்ட சலுகை என்றும் கருதலாயினர். முன்னர்க் கூறியாங்கு சலுகை என்பது வேறு; உரிமை என்பது வேறு. உதாரணமாக, ஏழ்மை நிலைமையில் உள்ள ஒருவர் தன்னிச்சையாக அல்லாவிடினும் பிறரைப் பார்த்தாவது தானும் முன்னேற்றமடைய விழைந்தால் அதனை உரிமை உணர்வு என்று கூறலாகும். அவ்வுரிமை உணர்விற்கு உருவந் தருவது அரசியலார் ஆக்கிவைத்த சட்ட திட்டமாகும். அத்தகைய உணர்வு பெற்றெழுந்த மக்களுக்கு உரிமை வழங்குதல் அரசியலாருக்குக் கடமையாகின்றது. அவ்வாறு உரிமை வழங்குதலைச் சலுகை என்று கூறவொண்ணாது. எனவே, வகுப்புரிமை நீதி ஒவ்வொருவருடைய பிறப்புரிமையைக் குறித்து நிற்கின்றதேயன்றி, சில சமூகத்தினருக்குச் சலுகை வழங்க உண்டாக்கப் பெறவில்லை. நாட்டில் உள்ள சிலர், வகுப்புரிமை நீதியினைச் சலுகை என்று தம்முடைய மதிமயக்கங் காரணமாகக் கூறிவரலாயினர். வகுப்புப் பாகுபாடுகளில் காணப்பெறும் மக்களுக்கு, சமூகத்தில் தாழ்ந்த நிலைமையில் உள்ள மக்களுக்கு, வகுப்பு நீதி போன்ற **சமதர்ம சமூக சாதனம்** அவசியமே ஆகும். மனித குலத்தை உயர்ந்தோர், தாழ்ந்தவர்களாகப் பாவிக்கும் வரையிலும் ஏழைப் பணக்காரர் என்ற பாகுபாட்டில் எண்ணுந்தோறும் முன்னேற்றந் தரும் உரிமைகளுக்கு அவசியம் இருந்தே தீரும்.

## வகுப்புரிமை நீதியின் அவசியமும் அதன் அடிப்படைத் தத்துவமும்

வகுப்புரிமை நீதியின் அடிப்படை நியாயத்தையும், தத்துவத்தினையும் மக்கள் சரிவர உணர்ந்துகொள்ளாத காரணத்தால் நாட்டில் உள்ள பல்வேறு மக்களிடையே மதிமயக்கமும், மனக்கலக்கமும், அவற்றினை பொட்டி முறையே சூழ்ச்சியும், பகைமையும் சூழ்ந்தெழுந்து தேசிய வழியினை அறியவொட்டாமல் பொதுமக்களின் அறிவுக் கண்களைப் பாழாக்கி வரலாயின. வகுப்புரிமை நீதி நாட்டில் உள்ள எல்லா வகுப்பு மக்களுக்குமே ஆதரவாக ஏற்பட்ட அரசாங்க உத்தரவாகும். வகுப்புரிமை நீதி ஒரே வகுப்பு மக்கள் ஏகபோகமான சமூக நலனை அடைவதை நீக்கி, நாட்டிலுள்ள பல வகுப்பு மக்களும் தத்தமது ஜனத்தொகைக் கேற்றவாறு அரசியலார் தரும் நன்மைகளைப்பெற வசதி செய்து கொடுக்கும் ஓர் அரசியல் திட்டமாகும். சென்னை மந்திரி சபையில் நிதி மந்திரியாகவிருந்த சர். நார்மன் மார்ஜோரி பாங்க்ஸ் என்பவர் 27—11—1928 அன்று கூடிய மேல் சட்ட சபையில் கூறிய பதில் இக்கருத்தை ஆமோதிப்பதாக அமைந்திருத்தலைக் காணலாகும். அவர் கூற்று வருமாறு:—

"The principle is to give representation in proportion, very roughly to the population."

இந்தத் தத்துவத்தை ஒரு காட்சிப் பிரமாணத்தாலும் விளக்கிக் காட்டலாகும். மனித சமூகம் உறுப்பியல்படி (Organic Theory), மனித உடல் போன்றதாகும். மனித உடலில் பல உறுப்புக்கள்

அமைந்துள்ளன போன்று சமூகத்திலும் பல வகுப்புக்கள் உள்ளன. 'செவிடு, குருடு, வடிவுக் குறைவு' அற்ற உறுப்புக்கள் எங்ஙனம் மனித உடலை உயிர் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள உதவுகின்றனவோ அங்ஙனமே ஒற்றுமை (Unity), அமைதி (Peace), முன்னேற்றம் (Progress) ஆகியவைகள் எல்லா வகுப்பு மக்களிடையேயும் குலவினால் சமூகம் வளர்ச்சியுறும்; நாடும் கௌரவம் பெறும்.

இந்தத் தத்துவத்தை அரசாங்க உத்தரவு என்ற உருவத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்ததற்கு நியாயம் உண்டு. நாட்டில் யார் செய்த தவப்பயனாகவோ சாதி, சமயம், பணம், குணம், கல்வி, செய்தொழில், பழக்க வழக்கம், ஆக இன்னோரன்ன பிறவற்றின் காரணமாக மக்களினம் விசித்திரமான முறையில் எண்ணரிய பிரிவுகளாகப் பல ரக ஏற்றத் தாழ்வுகளுடன் பிரிக்கப் பட்டுள்ளது. இதனைச் சட்ட நிபுணர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் வெகு அழகாக "A first class system of graded inequalities" என்று இடித்துரைத்துள்ளார். அத்தகைய பிரிவுகள் ஒரு வகுப்பு மற்றொரு வகுப்புமீது பொச்சாப்பு கொள்ளவும், ஒருவரையொருவர் ஏற்றத் தாழ்வாகக் கருதும் மனப்பான்மையையும், ஜனசமூக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவும், சமதர்ம வாழ்க்கைக்கு வழியில்லாமலும், நாட்டில் பலவிதமான அவல நிலைமைகளை அவ்வப்போது உண்டாக்கியும் வந்தன. அவ்வாறாகப் பிரிக்கப்பெற்ற வாழ்க்கை முறையில் ஒரு சாரார் சந்தேகத்திற்குரிய சலுகைகள் (Priveleges) பெற்று வாழவும், மற்றொரு சாரார் செல்வாக்குப் (Authority) பெற்று உலவவும்,

இன்னொரு சாரார் உழைப்பாளராகவும் (toiling masses), மற்றுஞ் சில குழுவினர் மக்களுருவில் மாக்களாகவும் (Slaves) சேர்ந்தது.

அலங்கோல வாழ்விற்கு அடிமைப்பட்ட நமது நாட்டுச் சமூகம் ஆங்கில மக்கள் ஏவல் கொள்ளப் பெரிதுஞ் சாதகமாக இருந்தது. அவர்கள் இந்த நாட்டில் துரைத்தனஞ் செய்ய ஏதுவாக இருக்கும் என்றெண்ணி, ஆங்கிலக் கல்வி முறையினைச் சிறிது சிறிதாக சுயநல நோக்கமுடனும் (Selfish attitude), சந்தேகப் பார்வையுடனும் (Suspicious outlook) பரவச் செய்தனர். அந்தக் கல்வி முறையில் முதன் முதலில் மக்கள் கவனஞ் செலுத்தாமல் தமது திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியிலேயே மனஞ் செலுத்தி மடமையில் சிக்கித் தொலைவாராயினர். வறுமை வாட்டி வதைத்ததாலும், தம்முடைய ஊக்கத்தாலும், பிழைக்க வேறு வழியில்லாத காரணத்தாலும், ஒருசில மக்கள் ஆங்கிலக் கல்வி முறையில் பின்னர் ஈடுபட்டனர். அன்னோர் திறமைமிக்க கையாட்களாக, குமாஸ்தாக்களாக மாறலாயினர். அவ்வகைத் தொழில் மூலம் தம்முடைய வாழ்க்கையைச் செம்மையாக, அதிக உழைப்பின்றி நடத்திச் சுவைக்கலாயினர். தம்முடைய குடும்ப வியவகாரங்களில் மிகுந்த கவனஞ் செலுத்தாமலும், "பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில், உற்றார் உகந்தார்" என்பவர்களின் பாசங்களினின்று எப்படியோ விடுபட்டுத் "திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு" என்று கூறினபடி தம்முடைய சொந்தக் கிராமங்களை, ஊர்ப்புறங்களை, நகரங்களைவிட்டு எங்குக் குமாஸ்தா வேலை கிடைக்குமோ என்று நாட்டில் நாலா புறங்களிலும் ஆர்வமுடன் அலைந்து திரிந்து தத்தமது கல்வி

கேள்விகளுக் கேற்றாங்கு உத்தியோகங்களில் அமர்ந்தனர். இம்முறையில் படர்ந்து நாட்டை நாலாப்புறங்களிலிருந்து சங்கிலிப் போட்டு இழுத்து நிறுத்துவதுபோன்று, நிலைப்படுத்தித் தம்முடைய சுயநன்மையைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு அரும்பாடுபட்டு வந்தனர் அன்னோர்! அதன் பயனாகவே ஆங்கில ஆட்சியினர் இந்தப் பரந்த உபகண்டத்தில் ஓர் ஆட்சி ஒற்றுமையை (Administrative Unity) எளிதில் உண்டாக்க முடிந்தது. அஃது சிறுபான்மையினராகவிருந்த அவ்வெள்ளை மக்களின் அபிவிருத்திக்கேயன்றி நாட்டில் உள்ள சிறு சிறு வகுப்பு மக்களுக்கும் சாதகமாகவும் அமைந்தது. ஆனால், பெருவாரியான மக்கட் சமூகத்தினருக்குப் பாதகமாக, தீராத வினையாக வந்து முடிந்தது. வெள்ளை மக்கள் மேன்மையடையவும், தம் வயிற்றுப் பிழைப்பை யொட்டியும் வேலைப் பார்த்து வந்த சில மக்கள் நாளடைவில் நாட்டில் நானாவிதத் துறைகளிலும் ஈடுபாடு கொண்டு முன்னேற்றமடையலாயினர். ஆனால் அதே காலங்களில் மடமையாலும், தற்குறித்தன்மையாலும், அசட்டுத்தன்மையாலும், ஊக்கமின்மையாலும், வறுமை காரணமாகவும் பெரும்பான்மை மக்கள் ஆங்கிலக் கல்விப் பெறாமல் பாழாயினர். கால வேகத்தை யறிந்து நடத்தலே கருத்துள்ளவர் செயலாகும். பண வசதி யுடனிருந்த பெரும்பாலோர் தமது ஆணவ மூளைப் பால் அரிய சந்தர்ப்பங்களைக் கை நழுவ விட்டனர். ஆனால் அறிவுத் துடிப்புக்கொண்டவர்களும், விரல் விட்டு எண்ணக்கூடியவர்களுமான ஒரு சிலர் பழைய நாட்களிலும் கல்வி கேள்விப் பெற்றுக் கலங்கரை விளக்கங்கள் போலவும் (Light Houses), அறிவுக் கோயில்கள் போலவும் (Temples of Knowledge) நின்று

மக்களுக்கு நல்வழிக் காட்டி, உற்சாகமூட்டி வந்தனர். அன்னோர் நாமம் நீடு ஞானிலத்தில் நின்று நிலவுமாக! சிலருடைய விழிப்புப், பலருடைய உறக்கமும் நாட்டில் அறிவுத் துறையிலேயன்றி மற்றெல்லாத் துறைகளிலும் ஏற்றத் தாழ்வுகளை மேன்மேலும் பயிராக்கி வளர்த்தன. நாட்டில் ஏற்கனவே பலவித விசித்திரக் காரணங்களால் பிரிந்த மக்கள் ஆங்கிலக் கல்வி முறையாலும் பாதிக்கப் பெற்றனர்; வாழ வழியறியாது திகைத்தனர். பெருவாரியான மக்கள் ஏவல் கேட்டு நடப்பவர்களாக மாறினர்.

கல்விச்சாலைகளில் அனுமதியோ, தேற்றமோ திருப்தி தரும் அளவிற்கில்லாமலும், உத்தியோக அரங்கங்களில் அமர்ந்தலோ, முன்னேற்றமோ ஊக்கந்தருந் தோரணையில் இல்லாமலும் இருந்து கௌரவமற்றவர்களாகப் பெரும்பான்மை மக்கள் வாழ்க்கையை நடத்திவரலாயினர். அஞ்ஞான்று நாட்டுச் சேவையில் பேரார்வஞ் செலுத்திய பொது நலத் தொண்டர்கள் பலவகுப்பு மக்கள் சிக்கியிருந்த அவல நிலையினை ஊன்றிக் கவனிக்கலாயினர். விடுதலையை எல்லையாகவும் சமூக தர்மத்தைப் பணையமாகவும் வைத்து நாட்டுச் சேவையில் அச்சான்றோர்கள் ஈடுபடலாயினர். சமூக நலனை எந்தெந்த வகைகளில் அபிவிருத்தி செய்யலாகும் என்று அவர்கள் இரவும் பகலுமாகச் சிந்தித்து வந்தனர். அந்தச் சிந்தனையின் பயனாக நாட்டில் சமதர்மத்திற்கு வழிவகுத்தாலன்றி தேச விடுதலைக்கு மதிப்பு (Honour), உறுதி (Security) கிடையாதென்றெண்ணி உரிமைகளை வகுத்துரைக்க முன்வந்தனர். அவ்வுரிமைகளுள் ஒன்றே வகுப்புரிமை நீதி என்பது.

முதல் அதிகாரம் : முற்றும்.

# 2. வரலாறு

## வரலாற்றின் பெருமை

உலகத்துறு பொருள்கள் யாவற்றிற்கும் வரலாறுண்டு. உயிருள்ள பொருள்களுக்கே யன்றி உயிரற்ற பொருள்களுக்கும் அஃதுண்டு. பரந்த பாருலகிற்கும் வரலாறுண்டு; விரிந்த கடல்களுக்கும் வரலாறுண்டு. ஓங்கு மலைக்கும் வரலாறுண்டு; ஓடும் ஆற்றிற்கும் வரலாறுண்டு. உயிர் வர்க்கத்தின் இயக்கத்தினை நாம் சரித்திரம் என்று கூறுகின்றோம். அவ்வியக்கத்தின் கூறுகள் பலதிறத்தனவாகும். நாகரிகம், கலை, சமயம், மொழி, நாடு, அரசு, மக்கள் என்றின்ன பிற அங்கங்களை உடையது அவ்வியக்கம். ஆதி அந்தம் இல்லாத சம்பவங்கள் உலகில் நிகழ்ந்ததில்லை. வரலாறு, ஒரு தொடர்பான மனித இயக்கத்தினையே பெரும்பாலும் குறிப்பிடுவதால் அவ்வியக்கம் மகத்தான பாடங்களை மக்களுக்கு அவ்வப்போது புகட்டா நிற்கும். உலகம் காரண காரியத்தால் (cause and effect) ஆக்கப்பட்டதாகும். வரலாறு ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி (Telescope) போன்றதாகும். காலப்போக்கால் தூரப்படுத்தப்பெற்ற அரிய சம்பவங்களை, சமூகங்களின் அமைப்பு வரலாறுகளை, அவற்றின் கோரிக்கைகளை, ஆட்சியின் மாட்சியினை வரலாற்றின் மூலம் நாம் அறிந்து வருகின்றோம். அவ்வாறு வரலாறு உரைத்த மகத்தான பாடத்தால் முளைத்தெழுந்ததே வகுப்புரிமை நீதி என்பது. வரலாறென்னும் ஆறு தன் அரசியல் கரைமருங்கில் வகுப்புரிமை நீதியாம் ஒளிகால் மணியை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சென்ற

திறத்தைக் கூற நாவெல்லாம் விழைகின்றது ; மதியெலாக்
துடிக்கின்றது ; மனமெலாம் மகிழ்ச்சியால் பொங்கி
யெழுகின்றது ! ஒரு சம்பவத்தினை வரலாற்றுச் சூழ்நிலை
யின் (Historical background) மூலமாகத்தான்
செம்மையாக உணர முடியும். அவ்வழிப் பற்றியே வகுப்
புரிமை நீதியின் வரலாற்றைச் சிறிது கூறுவாம்.

சுமார் கி. பி. 1854-ஆம் ஆண்டு முதற்கொண்டே
வகுப்புரிமை நீதி வழங்கப்பட வேண்டும் என்று தென்
னிந்தியாவில் கிளர்ச்சி செய்யப்பட்டது, போதிய சௌகரி
யங்கள் அக்காலங்களில் இல்லாமையால் பெரும்பாலா
ருடைய கோரிக்கை அரசாங்கத்தின் செவிக்கு எட்டாம
லிருந்தது. விஷயம் கூறும் செய்தித் தாள்களும், விவா
திக்கும் சட்ட சபைகளும், இயக்கங்களும் அன்று
கிடையா. இருந்த ஒன்றிரண்டு பத்திரிகைகளும் இவ்
விஷயங்களில் துணிவுடன் அசிரத்தைக் காட்டி வந்தன.

## வடநாடும் தென்னாடும்

நமது தாய்த் திருநாட்டைச் செல்வக் களஞ்சியமாகக்
(Treasure-House) கொண்ட ஆங்கில ஆட்சியாளர் தமது
பிரித்தாளுங் கொள்கைக் (Policy of Divide and Rule)
கேற்ப வகுப்புரிமை தத்துவத்தை ஒப்புக்கொண்டன
ரென்று நமது மதிப்பிற்குரிய அரசியல் தலைவர்கள் அடிக்
கடிக் கூறுவதுண்டு. அக்கூற்று உண்மையானதேயாகும்.
ஆனால், வெள்ளை மக்களுக்கே சாதகமாக அமைய வகுப்
புரிமை கோரப்படவில்லை. இந்த உண்மையினையும் பொது
மக்கள் நன்கு உணர்ந்து தெளிதல் சாலும்.

உதாரணமாக, வட இந்தியாவில் பெருவாரியான
இஸ்லாமிய மக்கள் தம்முடைய சமூக மேம்பாட்டிற்கான

தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள தம்மின மக்களுக்குத் தனித் தேர்தல் தொகுதி வழங்கினால் அன்றி நாட்டின் விடுதலைப் பணியில் பெரும் பங்கு கொள்வதற்கில்லை என்று முடிவுசெய்து இடிமுழக்கஞ் செய்வாராயினர். அம்முழக்கத்தின் பயனாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படித் தேர்வு முறை வழங்கப்பெற்றது. இஸ்லாமியர்களின் தனியுரிமை கோரிக்கை ஆளும் கட்சியாராலும், மாற்றுக் கட்சியாராலும், இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே 1909-ஆம் வருடத்தில் ஆங்கில அரசினரால் கொண்டுவரப்பட்ட **மின்டோ-மார்லி அரசியல் திட்டப்படி** ஒத்துக்கொள்ளப்பெற்றது. இதனை அடுத்து காங்கிரஸ் மகாசபையும், முஸ்லிம் லீகும் 1916-ஆம் வருடத்தில் இலட்சுமணபுரியில் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி முகம்மதியர் தொகுதி என்றும், முகம்மதியர் அல்லாதார் தொகுதி என்றும் தனித்தனியாகத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பெற்றன. அவர்கள் கோரிய சமூக சலுகைகளும் வழங்கப்பெற்றன. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கிளர்ச்சி செய்து பெற்ற இஸ்லாமியர்களைப் பலவாறு மாற்றுக் கட்சியினர் தூற்றலாயினர். ஆனால், தமது சமூக நலனே பெரிதெனக் கொண்ட அவர்கள் மாற்றுக் கட்சியின் தூற்றல்களைப் பொருட்படுத்தினார்களில்லை. மேலும், ஊக்கமுடனிருந்து கிளர்ச்சி செய்து முஸ்லிம் லீக் மூலம் தனிநாடு அமைக்கும் பாக்கியமும் பெற்றார்கள். அவர்தம் முயற்சி இன்று பாகிஸ்தானமாக விளங்குகின்றது!

வடநாட்டில் வகுப்புரிமையைக் கோரி நின்றபோது இஸ்லாமியருக்கும் ஹிந்துக்களுக்கும் இடையே பலத்த வாதம், குழப்பம் ஏற்பட்டன. இஸ்லாமியரும், ஹிந்துக்களும் இருவேறு சமய சார்புடையாராதலால் பலவித

விசித்திரக் காரணங்களை யொட்டி இவ்விருபாலாரிடை எந்நேரமும் சச்சரவு ஏற்பட்டவண்ணமாக இருந்தது. இதனை ஆங்கிலத்தில் மிலிடன்ட் கம்யூனலிஸம் (Militant Communalism) என்று கூறுவதுண்டு. இதற்கு இரையானவரே நமது தெய்வத் தலைவர் காந்தியடிகள். வடநாட்டில் நடந்துவந்த ஹிந்து—இஸ்லாமிய குழப்பம் மகத்தான பாடத்தைத் தந்துள்ளது. நமது அரசியலை மதச் சார்பற்றதாகச் சமைக்க வேண்டும் என்று திட்டமிட்டதற்குக் காரணம் அக்குழப்பமேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் பம்பாய் மாகாண மந்திரியார் மொரார்ஜி தேசாய் (Mr. Morarji Desai) அவர்கள் அண்மையில் சத்தியவதி நகரில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸின் ஐம்பத்தேழாவது திருக்கூட்டத்தின்போது கடல்மடை திறந்தாற்போல சொற்பொழிவாற்றுகையில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

*He said, "For centuries our country has been a slave country. If we look back and try to find the reason for this we shall inevitably come to the conclusion that this slavery came because of disunity in our own ranks. I do not believe that the British rulers created this unity or sowed the seed of Communalism here. Facts do not show that the British were responsible for the people in India becoming Communalists. The British only succeeded in exploiting the Communalism that already existed in us."*

*" We have again attained freedom. How did we do so? We did not earn our freedom by fighting among ourselves but uniting ourselves under the leadership of Mahatma Gandhi. It was Mahatma Gandhi who cemented the people into one well-knit whole and took us forward......"*

*This communal position existed in a virulent form in what was called provincialism, system of castes and in a way different communities..."*

*The Hindu-Muslim question had existed in India for centuries."*

மேலே கூறிய ஹிந்து—முஸ்லிம் குழப்பத்தில் நன்கு ஊறிய ஆங்கில ஆட்சியினர் தென்னாட்டிலும் அம்மாதிரியான குழப்பத்திற்கு விதைபோட முயன்றனர். இதற்குப் பெரிதும் உடந்தையாக இருந்தவர்கள் போலித் தேசிய வாதிகளே யாவர். தேசியவாதிகளில் இருதிறத்தினர் உண்டு. ஒரு சாரார் மக்கள் நன்மை கருதி உடல், பொருள், ஆவி ஆக இம்மூன்றினையுமீந்து தொண்டு புரிந்தவர்கள்; மற்றொரு சாரார் சுயநலம், புகழ், கௌரவம், பதவி, பணம் ஆக இவைகளை விரும்பி உடலசைக்காமலே தேசத் தொண்டர்களென மதிக்கப் பெற்றோராவர். பின்னவர் உண்மை அவதாரத்தைக் காலம் விளக்கிக் காட்டிக் கொண்டே வருகிறது. மக்களில் மதிக்கவல்லார் அவர்களை நன்கு அறிவர். ஆனால் ஏழைப் பொது மக்கள் அவர்தமை யாரென அறியார்!

தென்னாட்டில் உண்டான பூசலுக்குப் பல ரகமான காரணங்களைக் கூறலாயினர் பல பிரமுகர்கள். அவர்களுடைய அறிவுரைகள் அப்படியே உதாரணங் காரணமாகக் கீழே தரப்படுகின்றன. மக்களே தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டியவர்களாதலால் உண்மையான காரணம் எது என்று நாம் சொல்லத் தேவையில்லை.

முதலாவதாக, நீதிக் கட்சி சென்னை மாகாண ஆட்சிபீடத்திலிருக்கையில் சட்டசபைக் காரியதரிசியாகவிருந்த

பாவுமதிர்த்த திருவாளர். ஆர். வி. கிருஷ்ண அய்யர் அவர்களுடைய கூற்று தரப்படுகிறது.

*"During the period of British Rule in this country the British administrators, for their own purposes gave every encouragement to 'Indians' to learn English with a view to training them to fill subordinate posts under them. As the Brahmins were without any earmarked professions of their own at the time they readily took to English education and got themselves employed in large numbers in Government Service It was not their fault that members of other communities, who still had occupations of their own, did not do likewise. So long as the Brahmin officials were content to be mere hewers of wood and drawers of water under the British Civil Service they were honoured and pated on the back by the latter; but when they began to claim a share of the higher posts to which by their qualifications and proved merit they justly entitled they became suspect. Moreover in those days, the Brahmin Community gave most of the recruits to the Indian National Congress also. The British Civil Service therefore began to put down the Brahmin and to set up possible objections of the non-Brahmin Communities to alleged Brahmin domination. The non-Brahmin leaders walked in to their parlour. The Communal trouble in this province was thus the direct result of the 'Divide and Rule' policy of a foreign Government."*

—*"The HINDU" Republican Supplement issue 1950.*

அடுத்து கனம் மந்திரியார் திருவாளர் பி. கோபால் ரெட்டியார் அவர்களுடைய கருத்துத் தரப்படுகின்றது:—

*There was no Hindu-Muslim problem in South India. The Christian Community had taken a nationalistic attitude. But there was the Brahmin—non-Brahmin controversy. The Brahmins are intelligent and industrious people and they took*

*advantage of the English education. Except few mirasdars the Brahmins had no landed property and therefore they had the incentive to study and enter the services. On the other hand the non-Brahmins being a landed class did not care for the services and were lethargic. Ultimately the Brahmins who held most of the priveleged positions wanted to maintain it and the non-Brahmins began to agitate stating that it should not be the monopoly of any one community. They were supported by the Indian Christians, Muslims and other backward Communities who were also the 'have nots'. The Congress took a diferent line of action, but was unable to function without these complexes. The Brahmins in the congress began to think in terms of Brahmins and naturally the non-Brahmins in their turn began to think in such terms."*

பத்திரிகையுலகில் பெரும் புகழ்ப் படைத்த **திரு. போத்தான் ஜோசப்** அவர்கள் தமது 'கட்சண தூதர்'—'**The Deccan Herald**' என்ற பத்திரிகையில் கூறியுள்ள அருமையான வாசகம் கீழே தரப்படுகின்றது:—

*The complaint in the South is not the kind of Hindu-Muslim Communalism derived from religion, but a sociological cleavage screened under a misnomer (Communalism). The theory of Hindu-Muslim divergence culminating in partition by dual consent has nothing to do with the non-Brahmin problem in South India which Sardar Patel rightly interpreted as a peculiar phenomenon not to be brushed aside by phrase mongers."*

அடுத்தபடியாக உலகிற் சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான **திரு. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்** அவர்கள் வாக்கைத் தரப்படுகின்றது:—

*The crux of the Indian political problem is not really a problem of nationalities, race or religion nor even a problem*

*of minorities as it is understood in Europeon countries. It is the communal problem for which there is no parallel or precedent in any other part of the World. It is a product of the Hindu Social Order. If the communal problem were only a religious problem, you cannot explain the emergence of such movements as the non-Brahmin movement and the organisation of the Scheduled Castes as, a separate political entity. Whether the Hindu religion sanctions such organisation of society in water tight compartments or not, in practice a caste bound social system has existed in India for ages. The devastating effect of this social order burst out in all its fury in the political life of the Indian people. In a society in which political power was always concentrated in the hands of a few belonging to ths privileged castes, it is natural that the struggle for power must be on communal lines."*

இனி, இப்பாரதநாடு பெற்றெடுத்த புகழ் மிக்க சொல்லின் செல்வர்களுள் ஒருவரும், உலக அறிஞர் மாமணிகளுள் ஒருவருமான திரு. சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களைப் பார்த்துப் புளகாங்கிதம் கொண்டு கூறிய திருவாக்கினைக் கவனியுங்கள் :—

"The eonflict between vested and divested interests, between the 'haves' and 'the have nots', between what has been termed the priveleged, and the under previleged. the conflict indeed between classes and communities, has continued in this province for several decades. It has come into exceptional prominence during the last four decades—what has been termed the Communal problem has eaten into the very vitals of our society, has poisoned social relations, has bred an amount of bitterness which has slowly but inescapably affected the political synthesis of the Province, and indeed has made it hard for individuals and sections of the society alike

to deal fairly with many matters of puplic moment. I have been long familiar with these problems. I can see both the obverse and the reverse of the coin. I can understand the grievances of of those who claim protection whether it be *in admission to colleges or entrance to service or a less restricted social life.* I can with the experience of passing years and the knowledge of problems that were not as complete when I first entered public service see and even perhaps appreciate the point of view of those who feel, that their position is being slowly undermined and that they are being deprived of opportunities which once were theirs and which they feel ought legitimately to continue to be theirs. *The problem is an infinitety human problem, not subject to mere logic or the theory of numbers, not capable of solution by reference to the past or to the grievances of an ancient day.*

"Is it not possible that men of goodwill on either side, men with large vision, with an eye to the possibilities of the future, with devotion to that which is most valued and inestimable—the good of the State as a whole—is it not possible that a few of such men, from either section of the controversy, can meet together and evolve a solution, which will be lasting and permanent, just and equitable to all concerned, and so bring about a state of society when, without bitterness over the past and without jealousies about the future, harmony may be restored and the progress of the province assured? It is a thought that I leave with those patriotic citizens in the province —and they are found in all communities—who are in a position to take a just-view of the situation and who, by their unselfishness and their probity, will through their decisions claim the consent and in fact, the gratitude of a public which is torn by conflicting emotions and appeals."

இறுதியாக பெரியார் என்ற தனிப்புகழ்ப் பெயர் கொண்ட திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள், ஹிந்து பத்

திரிகையின் குடியரசு தின இதழில் வரைந்துள்ள கட்டுரை யின் வாசகத்தினைத் தரப்படுகின்றது :—

"Before the year 1920 the Congress organisation was chiefly concerned with the securing of big jobs for Indians, most of which were in the hands of foreigners. This resulted in almost all the key jobs being filled up by the priveleged few, I mean the Brahmins. With a view, therefore, to securing equal rights and opportunities for the rest of the communities of South India, and securing political, educational and economic equality for the down-trodden non-Brahmin community, the Justice Party was started by these two great leaders (Dr. T. M. Nair and Sir P. T. Thyagaroya Chettiar). In those days, not even ten per cent of the non-Brahmins were educated and not even five per cent were in Government and other public services. And in the domain of politics their influence was almost nil. In the legislatures, in the local bodies, and in almost all spheres of life the non-Brahmins were completely neglected. Almost all the lucrative jobs, say above Rs. 100 were denied to the non-Brahmins who form 97 per cent of the population. High posts carrying salaries of thousands of rupees per month could not even be dreamt of.

"As a result of this, a great community was suppressed in all walks of life, and even the educated and efficient few could not come up. Hence the birth of the South Indian Liberal Federation (Justice Party).

"Between 1923—26 those of us who knew, the ins and outs of the Congress move I mean a few non-Brahmins including me, had to leave the Congress. But I did not join the Justice Party immediately; I was a nationalist to the core. But I agreed with the principle of communal representation which was the bed rock of the Justice Party. Even as a staunch Congress-man and no-changer, and a strong lieutenant of Mr. C.

Rajagopalachariar, I was fighting for communal representation and equality of rights and priveleges. I even made the Madras Congress Party accept this principle and set apart fifty per cent of places for the non-Brahmin communities. I and other nationalist non-Brahminn started the Madras Presidency Association, and made this Association also accept this principle. Besides this I also started the Nationalist Association which included not a few Brahmin nationalists, and made this too accept this principle of communal representation.

"All this I say in order to emphasise my ardent belief in this principle being the only practical way for the upliftment of the non-Brahmin community. How I brought a resolution for the acceptance of communal representation at the Provincial Congress Conference at Conjeevaram and how it was ruled out by the president and how I walked out of the Conference along with my friends, are all too wellknown to bear repetition here."

எவ்வகையானும் சொற்குற்றம், பொருட்குற்றம், கருத்தழிவு ஆகியவை நேராவண்ணம் மேல்கண்ட பல ரகமான கருத்துக்களைத் தாலாயினோம். அவற்றின் முடிந்த கருத்தினை மக்கள் அறிய விரும்புகின்றோம்.

நாட்டுச் சேவையில் ஈடுபட்ட தென்னாட்டுத் தலைவர்கள் அமைத்த தேசிய கூட்டுமுனையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. சட்ட சபை தேர்தல்களில் மற்றுமுள்ள சமூக அபிவிருத்திக்கான துறைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையினை ஒப்புக்கொண்டாலன்றி தேசிய இயக்கத்தில், விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள சாத்தியமில்லை என்று பல உண்மைத் தொண்டர்கள் கூறவே, அந்நீதி முறையினைச் சென்னை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்த தலைவர்கள் முதலில் ஒப்புக்கொண்டனர்.

அறம் பிழைத்தோர் அரசியலே நேர்மையற்ற ஒரு சூதாட்ட மாக்குவது உலக நாடுகளில் இயற்கையாக மாறி விட்ட தன்றோ! பின்னர் காங்கிரஸ் மகாசபையின் தேசியத் தத்துவத்திற்கு (Nationalism) வகுப்பு உரிமை கோரும் "வகுப்பு வாதம்" முரண்பட்டதாகும் எனக் கூறி மறுப்பாராயினர். அதன் பயனாகவே தென்னாட்டில் எதிர்ப்புக் கிளர்ச்சி வன்மை பெற ஆரம்பித்தது. இந்தச் சூழ்நிலேயே நீதிக் கட்சியின் தோற்றத்திற்கு ஆக்கமளித் தது. தேசியவாதிகளாக அதுவரை இருந்த திரு. தியாக ராயர், திரு. மாதவ நாயர் என்னும் இரு பெருந் தலைவர்கள் நாட்டு மக்களின் சமூக நலனை உத்தேசித்து 1916—17-ஆம் வருடம் மேன்மைச் சின்னமாகிய 'தராசு' பொறித்த கொடியுடன் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்னும் ஓர் அரசியல் கழகத்தினை அமைக்கலாயினர். பல அரசியல் தலைவர்களும், அரசாங்கத்தினரும் இம் மாபெருங் கழகக் கோட்பாட்டினை நன்கு உணர்ந்து ஆதரவளித்தனர்.

இந்தியருக்கு நாடாளும் உரிமையினைப் படிப்படி யாகவே அளிக்க முடியும் என்று திட்டவட்டமாகக் கூறிய ஆங்கில ஆட்சியினர் 1919-ஆம் வருடம் "மாண் டேகு — செம்ஸ்போர்ட் திட்டம்" என்ற ஓர் அரசியல் திட்டத்தினைத் தயாரித்தனர். அதன்படி இந்தியர்கள் மாகாண ஆட்சி மன்றங்களில் பங்கு கொள்ள சந்தர்ப்பங் கிடைத்தது. அத்திட்டப்படி மாகாணங்களில் "இருதலை யாட்சி" (Dyarchy) நிறுவப்பெற்றவுடன் அதனை நடத்த நீதிக்கட்சியினரும், நீதிக் கட்சிக் கொள்கைகளை ஒப்புக் கொண்ட இதர கட்சியினரும் பதினேழு வருட காலம் ஆட்சிபீடம் ஏறலாயினர்.

## தேசீயம் எது? வகுப்புவாதம் எது?

வகுப்பு நீதி தத்துவத்தினைத் தேசியத்திற்கு முரண்பட்டதென்று தேசியத் தலைவர்கள் கூறினர் என்று முன்னர் குறிப்பிட்டதை ஈண்டு சற்று விளக்குவாம்.

முதலில் "வகுப்புவாதம்" என்றால் என்ன என்பதனைப்பற்றி ஆராய்வாம். இந்தத் துர்ப்பாக்கிய நாட்டில் மட்டும் வகுப்புவாதத்தினைத் தேசியம் என்றும், தேசியத்தினை வகுப்புவாதம் என்றும் அரசியல் முகமூடிகள் திரித்துக் கூறியவண்ணமாகவே இருக்கின்றனர். 'வகுப்புவாதம்' என்பதனை ஒரு நியாயவாதி (Advocate) தன்னிடம் ஒப்படைக்கப்பெற்ற தாவாவை (Suit) நீதிபதி முன்பு சட்டங்களை யொட்டி நீதியை விளக்கிக் காட்டும் வாதத் தோரணைக்கு ஒப்பிடலாம். 'வகுப்புவாதம்' என்பது ஒரு வகுப்பு மக்களுக்காக அவர்களினின்று முளைத்த சிறந்த தலைவர்கள் மக்களின் அதிபதியாகிய அரசாங்கத்தினை நோக்கி வாதிடுவதாகும். இந்த வாதம் ஒரு வகுப்பு பிற வகுப்புகளுக்காகப் பிரதிநிதித்துவம் எல்லாத் துறைகளிலும் கோரினாலும், அல்லது தம் வகுப்பின் ஜனத்தொகைக்கேற்ற விகிதாச்சாரப்படி பெற்ற நன்மைகள் போதாவென மேலும் பிரதிநிதித்துவம் கோரினாலும் வகுப்புவாதம் என்று அழைக்கப்பெறும். இந்த வாதமே நாட்டில் வாழும் பொது மக்களுக்குத் தீங்கு பயப்பதாகும். இதுவே தேசியத்திற்கு முரண்பட்ட வகுப்புவாதமாகும். ஆனால், இவ்வித வாதமிடுவோர் தம்மை நாட்டில் தேசியவாதிகளைச் சார்ந்தவர் என்று கூறிக்கொள்ளுகின்றனர்!

இக்கருத்திற்கு மாறாக, ஆங்கிலத்தில் உள்ள கம்யூனலிஸம் (Communalism) என்ற சொல் குறிப்பிடும்

உண்மைக் கருத்தினை நீதிக் கட்சித் தலைவர் திரு. சர். பி. டி. ராஜன் அவர்கள் வாயிலாக உணரலாகும். அவர் கூற்று வருமாறு :—

*"Communal means according to the English Lexicon 'pertaining to the whole community' and it was left to our friends to twist the meaning of the word 'communal' and give a sinister significance to that term which is not at all warranted by usage. The word communal is one thing in Madras and another in Northern India The Hindus apply the term there to Muslims and* vice versa. *The much abused Communal G. O. is applicable to all the cross sections of the community, and as it serves the community's interests as a whole, it is called communal. This is the true meaning and real purpose."*

சொல்லின் பொருளும், பிரயோகமும் (usage) ஒருவாறிருக்க, நமது நாட்டாருக்கு மாத்திரம் அஃது வேறாகத் தோன்றி வழக்கில் வந்து பல சழக்குகளை உண்டாக்கி நின்றதன்றோ?

இனி, தேசியம் என்றால் என்ன என்பதைக் கவனிப்போம். ஆங்கிலத்தில் அதன் கருத்து வருமாறு :—

*"Nationalism is but a recognition of the principle that States should vary in their methods of law and Government reflecting in their variety the distinctions of human groups. Not only does each nation gain in its individuality, but humanity as a whole thereby adds to its cultural wealth. 'For the human race is not at its best when everyman or every group is a copy of every other. Civilization progresses by differentiation as well as by assimilation of interests and character.'"*

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, விடுதலைக்கு அந்த நாட்டின் மொழி, கலை, வரலாறு, சமயம், நாகரிகம் முதலியன மூலம் மக்கள் மறுமலர்ச்சி பெறவும், அம் மறுமலர்ச்சி மூலம் பிறநாட்டின் ஏவலினின்று விடுதலை

பெறவும் தேசியம் என்னும் அரிய மார்க்கம் துணைபுரியும். தேசியம், நாட்டு மக்கள் பெறும் அரசியல் தன்னுணர்வைக் (Political Introspection) குறிக்கின்றது. அவ்வகைத் தன்னுணர்வு பெற்றிலங்கும் சமூகம் தனது மொழி, கலை, நாகரிகம், வரலாறு எவையெவை என்று தேடியலைந்து அவைகளை அபிவிருத்தி செய்யத் துடிப்பதே தேசியமாகும். அஃதினுங் குழவியே சமத்துவ நாட்டமென்பது. சமத்துவ நாட்டத்தில் மக்களை ஈடுபடுத்துவதே தேசியத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் என்போர்தம் முக்கிய வேலையாகும். இவ்வகைக் கிளர்ச்சிக்கு மாறாக, ஒருசில வகுப்பு மக்களே ஏகபோகமான அரசியல் நன்மைகளைப் பெற பிரயாசைப்பட்டு வாதிடுவது வகுப்புவாதமாகும். இவ்வுண்மையினை அன்னோர் மனச்சாட்சி (conscience) அறியும்; ஆனால் வாயிட்டுரையார்.

வகுப்புவாதத்தின் உண்மைப் பொருளை மற்றுஞ் சில அரசியல் கூறுபாடுகளுடன் (political aspects) ஒப்பிட்டுப் பார்த்தறியலாகும். உலகில் ஜனநாயக ஆட்சி அமைந்த நாடுகளில் பெரும்பான்மையினர் பிரச்சினை (Majority problem), சிறுபான்மையினர் பிரச்சினை (Minority problem) என்ற இரு கூறுபாடுகளையே காணலாகும். சிறுபான்மையினர் (Minority community) தம் பாதுகாப்புக்காக அல்லது விடுதலைக்காகப் பிரதிநிதித்துவம் கோருவதுண்டு. இது வகுப்புவாதம் ஆகாது. பெரும்பான்மையினர் கட்சியே ஜனநாயகத்தில் ஆட்சி பீடம் ஏறுமாதலால், சிறுபான்மையினர் இயற்கையில் கொள்ளும் அச்சத்தினைப் போக்க சலுகைகள் பல வழங்குவதுண்டு. இஃது சட்டபூர்வமாகவும் ஒத்துக் கொள்ளக்கூடியதாகும்.

மற்றுமொரு உதாரணம் கூறலாம். சட்டப்படி அரசாங்கம் ஆதிக்கக் குழுவினருக்கு (vested interests) சலுகை அளிக்க வேண்டுமென்றிருக்கிறது. அதன்படியே தொழில் (Labour) விஷயங்களில் அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டுமாகலாலும், வர்த்தகத்தைப் (Commerce) பற்றி அரசியலார் கவலையுடனிருக்க வேண்டுமாகலாலும், முதலாளிகள் (Capitalists), நிலச்சுவான்தாரர்கள் (Landed gentries) ஆகியவர்களின் இஷ்டபூர்த்திகளை அவ்வப்போது நிறைவேற்ற வேண்டுமாகலாலும், மேற்கூறிய துறைகளில் படிந்தாருள் ஒருவரைப் பிரதிநிதியாகச் சட்ட சபையில் நாட்டாட்சி ஏற்றுக்கொள்வதை வகுப்புவாதமெனலாமோ? வகுப்பு என்ற சொல் கேவலம் வெறும் சாதியை மாத்திரமா குறிப்பிடுகின்றது? ஏழை இந்தியருக்கு எண்ணிப் பார்க்க நேரமில்லை போலும்! உலகில் உள்ள ஜனநாயக நாடுகளில் சிறுபான்மையினர் பிரச்சினையைப் பற்றியே கேள்வியுறுகின்றோம். ஆனால் இந்தத் துர்ப்பாக்கிய நாட்டில் பெரும்பான்மையினர் பிரச்சினையே பலகாலும் நின்று காலூன்றினமையை நினைக்குந்தோறும் நெஞ்சு பொறுக்குதில்லையே! இவ்வேதனை விசித்திரமானதேயாயினும் வாஸ்தவமன்று என்று கூறவொண்ணுமோ? வகுப்பு நீதி பெரும்பான்மையினர் பிரச்சினையாக (Majority problem), தேசிய பிரச்சினையாக (National problem) நாம் மனங் கொள்ளுதல் நேர்மையாகும். இதனை ஒருசில வகுப்பினர் பிரச்சினையாக (Communal problem) இனி ஏற்கலாகாது. பெரும்பான்மையினர் பிரச்சினை தேசியப் பிரச்சினையாகவன்றி வேறென்னவாக இருக்க முடியும்?. இவ்வுண்மையினை மக்களுக்கு எடுத்துப் புகட்ட

வேண்டும். இத்த அரிய பணிக்குப் பெரும்பான்மையினர் பால் தீரமான அறிவு, ஓயாத உழைப்பு, குறிக்கோளில் உறுதியான நம்பிக்கை, கட்டுப்பாடு ஆகியவை சிறந்து விளங்க வேண்டும் என்று இவ்விருபதாம் நூற்றாண்டு மக்களுக்குச் சொல்ல தேவையா?

## நீதிக் கட்சியும் வகுப்பு நீதியும்

உலகம் காரண காரிய தத்துவத்தின் அடிப்படையில் கட்டப் பெற்ற ஒரு விசித்திரமான இயற்கைச் சித்திர மாதலால், ஒன்று மற்றொன்றைப் பற்றி நிற்கும் தன்மைய தாயுள்ளது. பற்றுக்கோடில்லாமல் ஒரு பொருளும், இயக்கமும், தத்துவமும் வளராது; காரணமின்றி காரியம் நிகழாது (Law of Relativity). மறம் மண்மீது மிக் கோங்கிடில், அறந் தோன்றி அதனை மாய்க்கும். மறம் எதிர்ப்புச் சக்தி வாய்ந்ததெனினும், வெற்றிபெறு மாற்ற லுடையதன்று! ஆனால், வெற்றி அற வழியினையே சாரும். இந்த உண்மையைத் "தருமமே ஜயம்," "சத்தியமேவ ஜயதே" என்று பலவாறு கூறக் கேட் கின்றோம். உலகில் அதர்மம் ஓங்கிடில் அதனை நீக்க தர்ம புருஷனை உலகம் தோற்றுவிக்கும். இந்தத் தத்து வம், எந்நாட்டாரும் ஏற்றுப் பொன்னேபோல் போற்றுந் தத்துவங்களில் ஒன்றாகும். நாட்டு மக்கள் அவல நிலைமையில் சிக்கி உழல்வதற்குக் காரணம், மற மிக்கோங்கி யிருத்தலேயாகும். ஈண்டு குறிப்பிடப்பெறும் அறம் வெறும் தான தருமமன்று; சிந்தனை யறமே (Charity or toleration) சமூகத்தினைச் செழிக்கச் செய்யுமாதலால் அந்த உயரிய அறவொழுக்கத்தினையே யாம் ஈண்டு குறிப்பிடுகின்றோம். அத்தகு சிந்தனை யறம்

மக்களிடை பரவாதிருந்ததற்குக் காரணம் பெருவாரி யான மக்கள் உறங்கிக் கிடந்ததையேயாகும். சிந்தனை யறம் செழித்திராத காரணத்தால் கல்வித் துறைகளிலும், அரசியலார் பணிமனைகளிலும், மறம் கள்ளியும், காளானு மென செழித்து வளரவே அறத்திற்கு வேலை கிடைத்தது; சந்தர்ப்பம் வாய்த்தது. அவ்வரிய பணிக்கு நீதிக் கட்சி அருகதை யுடையதாயிற்று. பிறநாட்டு மக்களினும் நமது நாட்டு மக்கள் நீதி வாசகங்களை (Books on Ethics) மிகுதியும் கேட்டுக்கேட்டு அலுத்துப் போனவர்களாதலால் மறந்தும் மறஞ் செய இசையாதவர்களாவர்; பிறரும் அங்ஙனம் புரியாதிருக்கவும் ஏற்பாடு செய்வர். அவ் வழிப்பற்றியே அரசியல் ஞானம் தேர்ந்த தலைவர்கள் சங்கம் அமைத்துச் சமூக நீதிக்கு வழிகோலுவாராயினர். அன்று அவர்கள் மறத்தினை மாய்ப்பான் பொருட்டு, அறத் தொண்டு செய்திராவிடில் இந்நாளில் அரசியலார் வகுத்துத் தந்த அரசியல் சட்டத்தின் (Constitution Act) கண்ணும் சமநீதி தத்துவம் புகுதற்குச் சந்தர்ப்பம் ஏற் பட்டிருக்காது. இந்தச் சரித்திர உண்மையினை மக்கள் சிந்தித்துப் பார்த்தே சித்தங் களிகொள்ள வேண்டும்.

சமநீதியின் மாண்பினை யுணர்ந்த அரசியலார், வகுப் புரிமை நீதியினை மறஞ் செறிந்த நாட்டில் நடை முறைக்குக் கொண்டுவர எண்ணங் கொண்டனர். அதன் சப்பந்தமாக 1854-ஆம் ஆண்டு 'ரெவின்யூ போர்டார்' (Board of Revenue) தமது குறிப்பில் (Report) தெரிவித்த விபரத்தினைக் கீழே தரப்படுகின்றது :—

" *The Collectors should be able to see that the subordinate appointments in their districts are not monopolised by the members of a few influential families. Endeavour*

*should always be made to divide the principal appointments in each district among the several castes. A proportion of Tahsildars in each district should belong to castes other than Brahmins and it should be a standing rule that the two chief revenue servants in the Collector's office should be of different castes."*

இந்த அபிப்பிராயம் வெளிவந்து சற்றேறக்குறைய வருடங்கள் நூறாயினும், வாசகத்திற்கு இன்றும் மகிமை (பிரயோஜனம்) இருக்கின்றது! 'காலம் போகும்; வார்த்தை நிற்கும்' என்று கூறுவதுபோல், மேற்படி வாசகமே பின்பு சமூக நீதியாக மாறியது; இன்று இந்திய அரசியல் சட்டத்தில் விதி 15(4) ஆகவும், 16(4) ஆகவும் பரிணமிக்கின்றது. மேற்கூறிய கருத்தினையே, ரெவின்யூ போர்ட் நடைமுறை உத்தரவு எண் B. S. O. 128(2)-லும் சற்று விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளது. உள்ள உத்தியோகங்களை எல்லாச் சாதியினருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே அதன் உட்கருத்து. (Distribution of appointments among the several castes). ஆனால், இவ்வுத்தரவுகள் எல்லாம் ஏட்டளவே நின்றனவாதலால் பெரும்பான்மை மக்கள் பயன்பெற்றிலர். அவர்கள் முன்னேற்றமடையாத குறை நாட்டில், நெடிது நாளாக (long standing) ஊன்றி (deep seated) உறுத்தி வரும் நோய் (fostering sore) போன்றிருந்தது. இந்தச் சமூக நோயினைப் போக்க பலநாள் வரை சந்தர்ப்பம் இல்லாமலிருந்து, பின்பு ஏற்படுத்தப்பெற்ற சென்னைச் சட்டசபை நிலைக்களனாக நின்று நீதிபால் நாட்டங் கொண்ட நன் மக்களுக்கு உதவிபுரியலாயிற்று. பெரும்பான்மை

மக்களைப் பிடித்திருந்த இச் சமூக நோய்தனைப் போக்க மருந்து இங்கே தயாரிக்கப்படவில்லை!

"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்.
அம்மருந்து போல்வாரு முண்டு."

என்றபடி நம் ஆதித் தலைவர்கள் திறன்மிக்க ஆட்சியாளர்கள் நிரம்பியிருந்த மைசூர் சாம்ராஜ்யத்தி னின்று "பிணி தீர்க்கும் நல்ல மருந்தினை"க் கொண்டு வந்தனர். 1918-ஆம் ஆண்டு, பல சமூக மக்களின் நன் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்ற சர். லீஸ்லி மில்லர் துரைமகனார் தலைமையில் கூடிய ஓர் ஆலோசனைக் குழு, நாட்டில் உள்ள நானாவித வகுப்பு மக்களும் அரச மன்றங் களில் இடம் பெற வசதிகளை வகுத்துரைக்க வேண்டும் என்று தீர்மானித்தது. அதன் பயனாக அரசாங்க உத்தரவு ஒன்றில் வெளியிடப்பெற்ற விபரத்தின் ஒரு சிறு குறிப் பைக் கீழே தரப்படுகின்றது:—

"*As there is at present a large preponderance of the Brahmin community in the public services, it is the desire of the Government of His Highness the Maharaja that all other important communities are adequately represented therein.*"

சென்னைச் சட்டசபை 1918-ஆம் வருட அரசியல் சட்டப்படி அமைத்த பின்பு நீதிக் கட்சியின் தலைவர் களுக்கு அரிய வாய்ப்பு கிடைத்தது. கிடைத்த வாய்ப் பினை வகையுடன் பிரயோஜனப்படுத்திக் கொண்டு சமூகத்தில் அறம் ஓங்கி வளர தினமும் பாடுபட்டு வரலாயினர். இவ்வரிய பணிக்கு முதன்முதலாக முயற்சி எடுத்த **பெருமகனார் - நல்லோன் - நடேச முதலியாராவர்.**

அவர், பெரும்பான்மை மக்களைச் சார்ந்தவர்கள் அரச மன்றங்களில் அமருவதற்கு வழியில்லாமையை நன்குணர்ந்து சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வந்தனர். அதனையடுத்துப் பல தலைவர்கள் சமூக நீதியின் முக்கிய அம்சங்கள் பலவற்றைத் தீர்மானங்கள் மூலம் கொண்டு வரலாயினர். உருவான தீர்மானமொன்றைக் கொண்டு வரும் பாக்கியத்தை மாவீரர் - ஓ. தி. தணிகாசலம் செட்டியார் அவர்களே பெற்றூர்; திருமகனர் - நடேச முதலியார் ஆமோதித்தார். அந்தத் தீர்மானப்படி மூன்று வருட கால எல்லைக்குள் அரச மன்றங்களில் எல்லாச் சமூக மக்களும் குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி இடம் பெற்றாக வேண்டும் என்பதாகும். தீர்மானத்தைச் சட்ட சபையினர் ஏகமனதாக நிறைவேற்றி அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தனர். இந்தத் தீர்மானம் மாகாணத்தில் அமைந்திருந்த ஜில்லா கலெக்டர் பணிமன்றங்களைப் பொருத்ததாகும். பின்னர் சென்னை செகரடேரியட்டில் உள்ள உத்தியோகங்களின்மீது ஆதித் தலைவர்கள் கண் பார்வை விழுந்தது; அதன் மகிமையினை அறிந்தார்கள். சென்னை செகரடேரியட் மாகாணத்தின் இருதயம் போன்றதாகும். எனவே, அவ்வுத்தியோகங்களில் பல திறப்பட்ட மக்களைச் சார்ந்தவர்கள் இடம் பெற வேண்டும் என்று மற்றுமொரு தீர்மானம் கொண்டுவரப் பெற்றது. உயிர்நாடியில் தலைவர்கள் கை வைக்கத் தொடங்கியதும் உருண்டு திரண்டெழுநதத அறிவுப் போர்; சட்ட சபை ஆட்டங் கண்டது. தீர்மானத்தின் பலனைப் பற்றிப் பேசுவோர் பலராகவும், பழித்துரைப் போர் சிலராகவும் நின்று வாதிட்டனர். அவர்களுடைய வாதம் இக்காலத்தில் மக்கள் தலைவர்கள் வகுப்புரிமை

நீதிக்காக வாதிடுவதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே இருந்திருக்கிறது என்று கூறலாம். மேலே இரண்டாவதாகக் குறிப்பிட்ட தீர்மானத்தைச் சட்ட சபையினர் ஏற்பதாயிருந்தால் .வெளியுலகம் எள்ளி நகையாடும் என்றார் ஒரு பெருமகனார். அவருக்கு; திருவாளர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அன்று கூறிய மறுமொழியை ஈண்டு குறிப்பிடாமற் செல்ல மனந் துணியவில்லை. மறம் நிறைந்த சூழலினின்று அறநெறிப் படர ஆதித் தலைவர்கள் மக்களை விடுதலை செய்த உண்மையினை அவர் கூற்று விளக்கா நிற்கும். அது வருமாறு:—

*"I consider that if we pass this resolution and if we make the Government yield to the representatives of the people then posterity will consider us as the heroes of a great victory against a monopolistic Government. Bypassing this resolution I feel confident that posterity will consider us the men that gave their country liberty."*

1921-ஆம் வருட முதற்கொண்டு சமூக நீதியினைக் குறித்துச் சட்டசபை அங்கத்தினர்கள் பல ரகமான கேள்விகளைக் கேட்டவண்ணமாகவே இருக்கலாயினர். 1921-ல் சென்னைச் சட்ட சபையினர் செய்த தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட காரணத்தால் முதன் முதலாக சமூக நீதி குறித்து 15-8-1922-ல் ஓர் உத்தரவை அரசியலார் பிறப்பித்தனர். அவ்வுத்தரவு எல்லா வகுப்பு மக்களுக்கும் அரச மன்றங்களில் இடவசதி செய்து தர வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டது. ஆனால், அவ்வுத்தரவைச் சரிவர அதிகாரிகள் நடைமுறையில் கொண்டுவரவில்லை. பழைய நிலைமையே நீடித்து வரலாயிற்று. இதனைக் கவனித்த நீதி நெறிச்-

சான்ற தலைவர்கள் மனந் துளக்கமுற்று இதற்கு என்ன வழி செய்வதென அல்லும் பகலும் சிந்தித்தவண்ணமாக இருந்தனர். இன்று கண்டனர் அரசியலார் சதவிகிதப்படி யாவரையும் வசதி பெறச் செய்வதைப் பற்றி! இந்தச் சதவிகிதத்தின் மாண்பினைப் பண்டே உணர்ந்தார் நல்லோன் - நடேச முதலியார். பழைய நிலைமையே நீடித்து வருவதை ஒருவழியாக ஒழித்துக் கட்ட அவர், "குறிப்பிட்ட சதவிகிதப்படி எல்லா வகுப்பு மக்களையும் உத்தியோகங்களில் கொள்ள வேண்டும்," என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதனைக் கண்ட சுயராஜ்யக் கட்சியினைச் சார்ந்த சட்டசபை அங்கத்தினர்கள் பலத்த சந்தேகங் கொண்டனர். அதன் காரணமாக மேற்படி தீர்மானத்தைத் திருத்தி வாதத்திற்கு விடுவதாகக் கூறி, திருவாளர் டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள், "1922-ல் வெளியிடப்பெற்ற உத்தரவுப்படி ஏன் அதிகாரிகள் நடக்கவில்லை என்பதனைப் பற்றிப் பரிசீலனை செய்யவும், மேற்கொண்டு எவ்வகையில் சமூக நீதியினை நடைமுறைக்குக் கொண்டுவந்து விருத்தி செய்யலாம் என்று திட்டம் தீட்டவும் 'கமிட்டி' ஒன்றை நியமித்து விடலாம்," என்பதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இந்தத் தீர்மானத்தையொட்டிச் சட்ட சபையினர் செய்த வாதப் பிரதிவாதங்களை மக்கள் ஒருமுறையாவது படித்துணருவரேல் அவர்கள் பல்லாற்றானும் பலன் பெற்றோரேயாவர். இத்தீர்மானம் சட்ட சபையில் நிறைவேறியதாயினும், அச் சட்ட சபைக்குள்ளேயே அதனைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டனர். தொண்டர்களின் வீரவுரைகள்தான் மீதமாயின! 'கமிட்டி' கூடியதாகவும் தெரியவில்லை; கூடி வேலை செய்ததாகவும் தகவல்

இல்லை; அதைப்பற்றிக் கேள்வி கேட்டாலும் அரசாங்கத்திடமிருந்து பதில் வந்ததில்லை. இவை யாவும் அறவழியில் இடப்பெற்ற இடர்பாடுகளேயாகும். அரசமன்றங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுக்க தேர்வுக் குழு (Staff Selection Board) ஒன்றினை நியமித்தனர் அரசியலார். அஃதும் பயனற்ற முயற்சியாக முடிந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லோன் - நடேசனாருடைய முடிந்த கருத்தைக் கூறி மேலே சொல்லுவோம் :—

*"Communal representation is most important for the amelioration of the various communities. That is the only way of building our nation. There is no other means whatever. People may belong to various political parties and may have different views on many questions. But all must agree that there is no salvation for India except through communal representation. The classes rise or fall with the masses. It is not only my opinion but even so high an authority as Mr. Ramsay Macdonald in his book "The Government," says at Page 76. "Practically we must recognise that much of the bitterness between religious and social communities in India—like the organised opposition of the non-Brahmins in Madras to the Brahmins—is the opposition of the injured. I have changed my mind on this point, because on careful consideration I see that certain communities that ought to be represented will not be represented except by special provision, that the representation of these communities will raise their status and that it will bring them with that national co-operation in the councils which is bound to issue not in division but in unity of interest and spirit."*

1922-ஆம் வருடம் வெளியிடப்பெற்ற அரசாங்க உத்தரவினைச் சரிவர அதிகாரிகள் நடைமுறையில்

கொண்டுவரவில்லை என்று நன்கு அறிந்த பின்பு, நீதிக் கட்சிப் பிரமுகர்கள் தகுந்த சமயம் பார்த்திருந்தனர். திருமகனார் - எஸ். முத்தைய்யா முதலியார் 16-3-1928-ல் மந்திரி பதவி ஏற்ற பின்பு, சமூக நீதி உருவம் பெறலாயிற்று. ஊரறியாது உழைத்துப் பேரெடுத்த பெருமகனார் - முத்தைய்யா முதலியார் ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசாங்க உத்தரவாக்கி வெளியிட்டார். அவ்வுத்தரவுப்படி பன்னிரண்டு பதவிகள் இருந்தால் அவை களில் ஐந்து பதவிகள் பிராமணரல்லாதார்க்கும், இரண்டு பதவிகள் பிராமணர்களுக்கும், இரண்டு பதவிகள் இஸ்லாமியர்க்கும், ஒரு பதவி தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், இரண்டு பதவிகள் ஆங்கிலோ - இந்தியர், கிறிஸ்தவர்க்கும் என முறையே வகுத்தளிக்கப் பெற்றன. இந்த விபரங்கள் அடங்கிய அரசாங்க உத்தரவைத்தான் "கம்யூனல் ஜீ. ஓ." என்று அரசியலார் வழங்கினர்.

## வகுப்பு நீதியின் ஆட்சி விநோதம்!

சென்னை அரசினர் கொண்டுவந்த வகுப்பு உரிமை நீதி உருவம் பெற்று வெளிவந்தவுடன் உத்தரவில் கண்டுள்ள விதிகளுக்கேற்ப அரசாங்கக் கல்வி ஸ்தாபன அதிகாரிகளுக்கும், அரசமன்ற அதிகாரிகளுக்கும், 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' அதிகாரிகளுக்கும் கட்டளை கள் பிறப்பிக்கப்பெற்றன. கல்வி ஸ்தாபன அதிகாரிகள் உத்தரவில் கண்டுள்ளபடி ஒவ்வொரு வகுப்பு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய விகிதாச்சாரப்படி பிள்ளைகளைப் பாடசாலைகளில், கலைக் கல்லூரிகளில், தொழிற் கல்லூரி களில், வைத்தியக் கல்லூரிகளில் அனுமதித்துப் பாட

போதனைச் செய்து உதவ வேண்டும் என்றும், அரசமன்ற அதிகாரிகளும் அவ்வாறே ஒவ்வொரு வகுப்பு மக்களுக்கென்று ஒதுக்கப்பெற்ற விகிதாச்சார முறைப்படி உத்தியோகங்களில் நபர்களை நியமிக்க வேண்டும் என்றும் விவரித்துக் கூறப்பெற்றனர். அரசினர் கூறிய முறைகளுக்கேற்ப நடப்பதுபோல் கல்வி ஸ்தாபன அதிகாரிகளும், அரசமன்ற அதிகாரிகளும் நடித்துக் காட்டினர். அரசினர் உத்தரவைப் பல கலாசாலைகளின் அதிகாரிகளும், பெரும்பாலும் அரசமன்ற அதிகாரிகளும் நிராகரித்துத் திரைமறைவில் நடத்தி வந்த இரகசிய கபட நாடகத்தின் விளைவாக சமூகத்தில் புது ரக ஏற்றத் தாழ்வுகள் பல்கினமையை இன்றுங் கண்கொண்டு காணலாகும். இது கருதியே நீதிபால் நாட்டங்கொண்ட அறிஞர் ஒருவர், "Government orders are more honoured in the bereach than in their observance" என்று மனவருத்தத்துடன் தெரிவித்தார் போலும்!

நாடே சிந்தனையைத் தூண்டவல்ல சிறந்த ஏடாக உதவுதலான், புள்ளி விபரஞ் செறிந்த நூலேடு மேற்கூறிய மெய்மையினை விளக்க அவசியமாமோ? நாட்டில் நானாவித மக்களிடையே ஏற்றத் தாழ்வு பல்கியது. ஒருசிலரே கல்விச்சாலைகளிலும், அரசமன்றங்களிலும் புகுந்து வசதி பெற்று மேலோங்கினர்; மற்றவர் வகையறியாது திகைக்கலாயினர். இந்த நிலைமைக்குக் காரணங்கள் பல கூறப்பெற்றன. பெருவாரியான மக்கள் படிக்க வரவில்லை என்றும், படித்தவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை என்றும், தேர்வு பெறவில்லை என்றும், பின்தங்கிய வகுப்பார், தாழ்த்தப்பட்

டோர் ஆகியோர் படிப்பைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை யென்றும், படித்தவர்களில் பலர் திறமையற்ற வர்களாக இருக்கின்றார்கள் என்றும் பலவாறு கூறப் பெற்றன. இக்காரணங்களை முற்றிலும் பொய்யுரைகள் என்று நாம் கூறத் தயாராயில்லை. எனினும், இந்தச் சாக்குப் போக்குகளை வைத்துக்கொண்டு அரசினர் உத்தரவில் கண்டுள்ள நீதி முறைப்படி நடக்கத் தவறிய குற்றத்திற்குப் பாவ மன்னிப்புண்டோ? கல்வி ஸ்தாபன அதிகாரிகளும், அரசமன்ற அதிகாரிகளும் பொதுநலக் கவலையில்லாமல் சுயநல கவனசித்தராயிருந்து கடனாற்றி வரலாயினர். நாடிருந்த நிலையில் முன்னேற்றமடைந் தோர், ஆதரித்தால்தானே மற்ற மக்களும் பலன்பெற முடியும்! சாதிக் கொடுமைக்கு ஆளாக்கப்பெற்ற மக்கள், வறுமையிலுழன்று பரிதவித்த ஏழைகள் படிக்க வசதி யில்லாமற் போய்விட்டது. சிரத்தை கொண்ட ஒரு சில மக்கள் தவிர, கல்வியின் மேன்மையினை உணராது சோம்பித் திரிந்து பெருவாரியான மக்கள் தம் வாணாட் களை வீணே கழிக்கலாயினர்! கருத்தோடு கல்வி பயின்ற மக்கள் ஒருசில வகுப்பு மக்களாகவே இருந்தமையான் நாளடைவில் பிற வகுப்பு மக்களுக்குச் சிறிது விழிப்பு உண்டாயிற்று; அஃது இயற்கையன்றோ? விழிப்பெய்திய வகுப்பு மக்களில் ஒருசிலர் கல்வி கற்க முனைந்தனர். பணவசதி இல்லாத குறை, மோசமான சமூகச் சூழ்நிலை ஆகியவைகள் அழுந்திய கால்களை மேலெடுக்க வொட் டாது தடுக்கும் களிப்புச் சேறுபோல கஷ்டப்படுத்தின. பல தொல்லைகளுக்குட்பட்டுப் பெருவாரியான வகுப்பு மக்கள் முன்னேற்றமடைவதென்பது சற்றுக் கடினமான காரியமேயாகும். இவ்வாறாகப் படிப்புத் துறையிலேயே

பெருவாரியான மக்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்குங் காலே, சிறுபான்மை வகுப்பினரில் பலர் படித்து அபரி மிதமாக முன்னேற்றமடையலாயினர். வகுப்பு உரிமை நீதி நடைமுறையில் இருந்தபொழுதும் இம்மாதிரியான ஏற்றத் தாழ்வுகள் என்ருல் காது கொடுத்துக் கேட்கவும் வெட்கமாயிருக்கின்றது! நிலைமை அவ்வாறிருந்தும் பெருவாரியான மக்கள் கோரிக்கைக்கு எதிராக சிறு பான்மையினர் நன்மையையே பெரிதும் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வந்திருக்கிறது. சென்னே ராஜ்ய ஜனத்தொகையில் 2·8 சதவிகிதமாகவும், ஹிந்து ஜனத்தொகையில் 3·8 சதவிகிதமாக இருக்கும் சிறு பான்மை வகுப்பினர் நடுத்தர வகுப்புக்களில் (Intermediate classes) 33 சதவிகிதத்திற்கு மேலாகவும், பி. ஏ. வகுப்புக்களில் 38 சதவிகிதத்திற்கு மேலாகவும், பி எஸ்ஸி. வகுப்புக்களில் 47 சதவிகிதத்திற்கு மேலாகவும், வைத்தியக் கல்லூரியில் 24 சதவிகிதத்திற்கு மேலாகவும், பொறியியல் கல்லூரிகளில் 25 சதவிகிதத்திற்கு மேலாகவும் இடம் பெறலாயினர். ஆனல் 68 சதவிகிதத்தில் வியா பித்துள்ள பெரும்பான்மை வகுப்பினர், நடுத்தர வகுப்பில் 49 சதவிகிதத்திலும், பி. ஏ. வகுப்புக்களில் 45 சதவிகி தத்திலும், பி.எஸ்ஸி. வகுப்புக்களில் 38 சதவிகிதத் திலும், வைத்தியக் கல்லூரிகளில் 46 சதவிகிதத்திலும், பொறியியற் கல்லூரிகளில் 49 சதவிகிதத்திலும் இடம் பெறலாயினர். 16 சதவிகிதத்தில் வியாபித்துள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பெறும் கல்வி வசதி 2 அல்லது 3 சதவிகிதத்திலேயே நின்று விடுகின்றது! மலேபோன்ற கிளர்ச்சி செய்தும் மேற்கூறிய நிலைமை என்ருல், அதற்கு முன்னர் இருந்த நிலைமையைப் பற்றிக் கூறவும்

வேண்டுமா? உண்மையில் மேற்கூறிய பட்டியல் வகுப்பு நீதியில் கூறப்பெற்றபடி அமைந்த விநியோகமல்ல. சுயநல கவனசித்தர்கள் புரிந்த மறச் செயலால் நிகழ்ந்த ஆத்ம வேதனை யுண்டாக்கும் விளையாடல்களே மேலே குறிப்பிட்ட புள்ளி விபரங்கள்!

பாழ்பட்டு நிலைதவறி வாழ வகையறியாது திகைத்துக் கொண்டிருந்த மக்களைத் தட்டி யெழுப்பி வழியைக் காட்டி, வகைகளைச் செய்து வைத்தது வகுப்பு நீதி உத்தரவு. சமதர்மத்தில் நாட்டமுள்ளவர்கள், ஜனநாயகத்தில் உண்மையான நம்பிக்கையுடையவர்கள் செய்ய வேண்டிய முதல் வேலை இதுவே. இன்றைய நாட்களில் "சோஷலிஸம்" (Socialism) (சமதர்மம்), "கம்யூனிஸம்" (Communism) (பொதுவுடைமைத் தத்துவம்) என்றெல்லாம் மண்ணதிரவும், விண்ணொலிக்கவும் பேசப் பெறுகின்றன! அவைகளின் அடிப்படைத் தத்துவம் யாது? நாட்டில் உள்ள மக்கள் எவ்வித பேதாபேதமுமின்றி முன்னேற்றமடைய வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கமே பொறுப்பேற்று, உற்பத்தி (Production), விநியோகம் (Distribution) ஆகிய வேலைகளைச் செய்யும் அமைப்பு ஸ்தாபனங்களை எல்லாத் துறைகளிலும் கண்காணித்துக் கடமையாற்றி வருவதன்றோ! இந்தத் தத்துவத்திற்கும், வகுப்புரிமை நீதியின் தத்துவத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? வேண்டுமானால் முறைகள் வேறாக இருக்கலாம்; தத்துவத்தில் வித்தியாசம் உண்டோ? தர்மம், சமதர்மம் என்பன சிந்தையினின்று வழங்கப் புழங்குவதேயன்றி, விலை கொடுத்து வாங்கக்கூடியதன்று! (Charity begins at home). மக்களுடைய உரிமைகளின் பாதுகாவலனாக

அமைந்த அரசாங்கம் சமூகத்தில் சமதர்மம் (Social justice) கமழச் செய்வதைத் தன்னுடைய முதற் கடமையாகக் கொண்டாக வேண்டும். இதனையே அரச தர்மம் என்று கூறலாகும். "**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**" என்று இது கருதியே அரசியல் ஞானம் நன்கு தேர்ந்த நம்முடைய தமிழ் மூதாதையர்கள் கூறிச் சென்றனர் போலும்! அறம் வழங்க அரசு வெற்றி பெறும்! இதைவிடத் தெளிவாகக் கூறினவர்கள் உண்டோ வேறே?

நாட்டில் சமதர்மம் குலவினாலன்றி மனித குலம் நன்கு வாழ இயலாது. எல்லாரும் இன்புற்று வாழ்வதே, வாழ வேண்டும் என்பதே உண்மைத் தொண்டர்கள் தம் எண்ணமாகும்; நல்ல அரசியலார் நோக்கமாகும்; ஆருயிர் அளித்துக் காக்கும் அண்ணலின் விருப்பமும் அஃதாகவே இருக்கக்கூடும். இது கருதியே காலம், கருவி, கண், கருத்து, கை ஆகியவற்றிற்கெட்டாத காரணனாகிய கடவுளை நோக்கித் தாயுமானார்,

"எல்லாரும் இன்புற் றிருப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே"

என்று பொதுமை யறத்தினை வலியுறுத்தி நிலை தவறிய மக்களுக்காக வேண்டுவாராயினர். அடிகளாரின் கருணை கீதமே ஆட்சியாளர்தம் இதய கீதமாக அமைந்திடில் வேறென்ன வேண்டும் நமக்கு?

பேரும் புகழும் படைத்த அரசினர் சீருஞ் சிறப்பும் மலிந்த வகுப்பு உரிமை நீதியை இரட்டை ஆட்சி (Dyarchy) காலத்தில் வழங்கினர். சமதர்மப் பயிரை அரசியல் பைஞ்ஞிலத்தில் கட்டுப் பாதுகாத்து வளர்த்

தனர். இரட்டை ஆட்சி மூலம் மக்களுக்குப் பலத்த நன்மைகள் வழங்க அதிகாரம் தரப்படவில்லையாதலால், அதனை யேற்று நடத்த பல கட்சியினர் விருப்பங் கொள்ள வில்லை. நாட்டு மக்களின் நலனையே பெரிதென மதித்த ஒருசில கூர்த்தமதியினர், தர்ம சிந்தனையாளர் அத் திட்டத்தை ஏற்று நடத்த முன்வந்தனர்.

அவர்களிற் பெரும்பாலோர் நீதிக் கட்சியினராகவே இருந்தனர். பலக் கட்டுப்பாடுகள் (Checks and Balances) மிகுந்த அவ்விரட்டையாட்சித் திட்டத்தை ஏற்று நடத்த பொறுமை, அறிவு, திறமை வேண்டும் என்று அரசியலாசிரியர்கள் கூறுவதுண்டு. அத்தகைய நெருக்கடியான ஆட்சியிலிருந்து கொண்டே வகுப்பு நீதிக் கான உத்தரவை வெளியிட முடிந்ததெனின் மாகாண சுயாட்சி (Provincial Autonomy) வழங்கக் கொண்டிருந் தால் எவ்வளவு நன்மைகள் தரவல்ல திட்டங்களைச் சட்டங்களாக்க முடிந்திருக்கும்! இந்த இந்திய உப கண்டத்திற்கே ஒரு மாதிரி நாடாக (Model State) நமது சென்னை மாநிலத்தை அமைத்திருக்கலாம்! இது குறித்துப் பொது மக்கள் சிந்தனை செய்திருக்க வேண்டும். ஆனால், அஃது செய்ய அவர்களுக்கு இயலவில்லை; கடமையை மறந்தொழிந்தனர். இனியாவது விழித்துப் பார்த்து ஆவன செய்வார்களா? பன்மொழியினர் நிறைந்த நாட்டில், பல வகுப்பு மக்கள் உலவும் நாட்டில் கருத்து வேற்றுமை, கலை வேற்றுமை இல்லாமலிரா. உலகம் இன்றுள்ள மக்களுக்கு மிக நெருங்கிய இடமாகப் புலப்படுவதால், பிரதேச ஒருமைப்பாடு (Geographical Contiguity or Territorial Unity) இருப்பது மிகமிக அவசியமாகத் தோன்றுகின்றது. ஆனால் அதுபோன்ற ஒருமைத்

தன்மையைச் சமூக, பொருளாதார அபிவிருத்தி அமைப்புச் சாதனங்களிலும் (Uniform Social and Economic Laws) இடம் பெற்றுக வேண்டும் என்று வற்புறுத்துவது தீமை பயப்பதாகும். தென்னிந்திய மக்கள் இனிவரும் சகாப்தத்தில், சமாளிக்க வேண்டிய பிரச்சினை இதுவே! (One should realise the need for unity in the modern world but he should never confuse unity with uniformity.)

இந்திய மக்கள் அரசியலில் முன்னேற்றமடைய அவ்வப்போது பிச்சை (Progressive Realisation of Responsible Government) அளித்துவந்த ஆங்கில ஆட்சி மன்றத்தினர் உண்மையாகவே அரும்பாடுபட்டு 1935-ஆம் வருடம் ஓர் அரசியல் சட்டத்தினை உருவாக்கி, ஆதரவுப் பெற்று நடைமுறைக்குக் கொண்டுவரலாயினர். அச் சட்டத்தின்படி மாகாணங்களில் சுய ஆட்சியினை (Provincial Autonomy) நிர்மாணிக்கலாயிற்று. பொது மக்கள் சற்றுத் திருப்தியடையலாயினர். ஆனால், அத் தரு மாகாண சுய ஆட்சியால் "வகுப்புவாதம்" மேலும் உரம் பெறும் என்று தப்பிதமாக எண்ணிய கற்றறி மூடர்கள் டில்லியில் கோயில் கொண்டிருக்கும் மத்திய அரசாங்கத்தினிடமே எல்லாவகை அதிகாரங்களையும் ஒப்படைக்க வேண்டும் என்ற அழிவு வாதத்தினைக் கிளப்ப லாயினர் தேசியம் என்ற போர்வையில் இருந்துகொண்டு! இந்த வாதத்திற்கு எதிராக நின்று அறிவுப் பிரச்சாரம் செய்துவந்த நல்ல தொண்டர்களை "வகுப்புவாதிகள்" (Communalists), பிரிவினை வாதிகள் (Separatists), குறுகிய நோக்கத்தினர் (Narrowminded people), மாகாணப் பித்தர்கள் (Parochialists), என்றெல்லாம்

வாயார வசவு பாடி, அவதூறு சொல்லி நாட்டில் "நாஜிப் பிரச்சாரம்" செய்து வந்தனர், போலி தேசியவாதிகள்!

## தேச விடுதலைப் பணியும் சமூக தர்ம நாட்டமும்

காங்கிரஸ் ஸ்தாபனம் சத்தியவேந்தர் காந்தி அண்ணலின் தலைமையின்கீழ் வந்த பின்பு சுயராஜ்ய பாதையை நாடிச் சென்றது. அந்த நாட்டத்திற்கு உயிர்த் துடிப்பாக இருந்தவர் **மனிதகுல மாணிக்கமான பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களேயாவர்.** அவரே இந்தியா பரிபூரண விடுதலையடைவதன்றி வேறு வழியில்லை என்று பலதடவைகளில் தீர்மானங்கள் கொண்டுவந்து பல மேடைகளில் பேசினர்; நாட்டு மக்களின் கவனத்தை நாட்டுரிமை வேட்கையின்வழி திருப்பி நின்றார். சத்திய ஒழுக்கத்தினை மேற்கொண்ட அண்ணலார் கூறிய கூற்றுக்கள் அத்தனையும் மக்களிடம் ஏற்புடைத்தாயின. இப்பூவுலகில், தமது தாய்த் திருநாடு விடுதலையடைய வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆசை காரணமாகப் பல மைகள் பிரயாணம் புரிந்து, பிரச்சாரஞ் செய்து, உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பித் தொண்டுபுரிந்த பெருமகனார் ஒருவர் இருந்தாரெனில் அவர் அடிகள் காந்தியாரேயாவர். அடிகளாரின் கட்டளையை ஏற்று அரிய பணிபுரிந்த தொண்டர்கள் பல்லாயிரவர். உயரிய தொண்டர்கள் பலர் இருந்திலரேல், மக்கள் விடுதலை மார்க்கத்தில் படர்ந்திருக்க முடியாது.

அவ்வகைத் தேசத் தொண்டர்கள் இருதிறத்தினராக மாறி வரலாயினர். ஒரு சாரார் இராஜதந்திரத்தைத் தன்னுடைய கைவல்யமாகக்கொண்ட இங்கிலாந்துடனிருந்து கொண்டே காளாவட்டத்தில் அரசியல் விமோசனம் அடையலாகும் என்னுங் கருத்தினரானார். மற்றொரு சாரார் பூரண விடுதலையையே இந்தியர் விரும்புகிறது என்ற கருத்தினராக அமைந்தனர். பின்னவர் நாட்டு விடுதலைப் பணிபுரிவதில் முன்னணியில் நின்றனர்; மூன் சாரார் மக்கள் நலனை உத்தேசித்துச் சமதர்மத்தைப் பாய்ச்சவல்ல திட்டங்களைத் தீட்டிப் பொதுமக்களை அறிவுப் பாதையில் செலுத்திவரலாயினர். இந்தச் சார்பினரைச் சேர்ந்தோரே நீதிக் கட்சியினர். அவர்கள் விடுதலையை விரும்பவில்லையென்று திட்டத்தில் வித்தியாசம் கொண்ட எதிர்த்தரப்பினர் பொய்வழக்குச் செய்தனரேயன்றி அவர்களுடைய நாட்டார்வம் என்றுங் குறைந்ததில்லை. சமூக தர்மத்தில் நம்பிக்கை வைத்த நீதிக் கட்சியினர் வகுப்பு நீதியைக் கொண்டு வந்ததனால் சமூகம் பயன்பெறலாயிற்று. தாழ்ந்த நிலையடைந்த மக்கள் தமது அவலநிலைமையை உணர்ந்து எழுச்சி பெற, வகுப்புரிமை நீதி ஒரு செம்புகோலாக உதவிற்று. உறங்கிக் கிடந்த மக்களைச் சற்றுக் கண்விழித்துப் பார்க்கும்படித் தட்டியெழுப்பிய அபயக் காமாயிற்று. உணர்வு கலங்கி, நாயினுங் கேடான வாழ்க்கையை நடத்திவந்த மக்கள் உயிர் வாழ்க்கையின் மேன்மையினை, உலக வாழ்வின் ஏற்றத்தினைப் பற்றிச் சற்றுத் தெளிவுப் படுத்திக்கொள்ளலாயினர். இதுகாறும் பக்திப் பாவசத்திலேயே திளைத்துப் பசிக்கு உணவு பெறவும் பாக்கு பெறாதவர்கள், படிப்பு, பணம், பதவி, பெருமை,

புகழ் என்னுஞ் சிறப்பியல்புகளின்மீது நாட்டங்கொள்ள லாயினர். விழுமிய உழுகலப்பையைப் பிடித்துவந்த விவசாயி, கூலி வேலை செய்துவந்த ஆலைத் தொழிலாளன், சேவகஞ் செய்துவந்த அரசமன்ற காவலன், தந்தி தபால் கொடுத்துவந்த தபாற் சேவகன், ஊரைக் காத்து வந்த போலீஸ் சேவகன், மற்றுமுள்ள தொழில் துறைகளில் ஈடுபட்ட மக்கள் 'தம்வழியினர் (பிள்ளைகள்) படிக்க வேண்டாமா?' என்ற ஏக்கம் கொள்ளலாயினர். அங்ஙனமே, பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில், கலாசாலைகளில், கல்லூரிகளில் விட்டுப் படிக்கவைக்கத் தொடங்கினர். படிப்பில் ஆர்வங்காட்டிப் பிள்ளைகள் படிக்கலாயினர். பதினைந்து வருடகாலமாகப் பெருவாரியான மக்கள் படிப்புத் துறையில் முன்னேற்றமடைந்து வரும் விஷயம் ஊரறிந்த இரகசியமாகும். பள்ளிப் படிப்பு முடிந்ததும், அறிவுச் செல்வத்தை நாடிய செம்மல்கள் மேலும் படிக்கலாமா என்ற உயரிய வேட்கையை இயற்கையில் கொள்ளலாயினர். சந்தர்ப்பம், சக்தி, பண வசதி ஆகியவைகளின் ஒத்துழைப்பால் ஒரு சில மக்கள் கல்லூரிப் படிப்பையும் பெறலாயினர். படித்த மக்கள் சும்மா இருக்க முடியுமா? பிழைக்க வழி தேடி அலையலாயினர். நாட்டிலோ செல்வாக்குக் கிடையாது. நாட்டில் உள்ள கல்வி ஸ்தாபனங்களும், அரசமன்றங்களும் எப்படியோ ஒருசில மக்களுடைய ஆதிக்கக் கோட்டைகளாக இருந்துவரலாயின. புதிய மக்களுக்கு வரவேற்பே கிடையாது. படிக்கச் சென்றால் பரிதவிப்பு! வேலையை நாடிச் சென்றால் மண்டை குடைச்சல்! என்ன செய்வார்கள் பாவம்! இவ்வளவையும் சமாளித்துச் சில மக்கள் முன்னேற்றமடையலாயினர்; காரணம்,

வருப்புரிமை நீதியின் ஆட்சியேயாகும். இந்த முன்னேற்றத்தைக் கண்ட பொதுமக்கள் சற்றுத் திருப்தி கொள்ள ஆரம்பித்தனர். ஆனால், சிறுபான்மை மக்கள் சஞ்சலம், கிலி முதலிய மனவேதனைகளைக் கொண்டனர். அறிவுத் துடிப்புள்ளவன் எந்த நாட்டிலும் கீழ் நிலைமையையோ, மக்கள் அறியாத நிலையையோ அடைந்ததில்லை; அவனது மேன்மையை எங்ஙனமாவது ஊரறியும்; அந் நியதிப் படியே அறிவுத்திறம் நிரம்பிய மக்கள் மேற்படி வகுப்பு உரிமையால் பாதிக்கப்பெறாமல், மேன்மேலும் முன்னேற்றப் பாதையில் செலுத்தப்பட்டனரே யன்றி, புறக்கணிக்கப்படவில்லை. புறக்கணிப்பது நீதியின் செல்லுகை (Rule of Justice) யன்று. எனினும், அறிவுப் பாழாகின்றது, திறமை மறைகிறது, தகுதி உதாசினப் படுத்தப்பெறுகிறது, நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடைப் போடப்படுகின்றது என்று நாவாரப் பொய் சொல்லிப் பொருள்வழிக் கண்ணராக இருந்து சுயநல கவனசித்தர்கள் மேலும் முன்னேற்றமடையலாயினர். என்னே சமூக நீதியின் சுழலாட்சியின் போக்கு இருந்த வாறு!

நாட்டு விடுதலைப் பணியில் ஈடுபட்ட பெருமக்களுடைய வீரவுரைகளைக் கேட்டுவந்த பொதுமக்கள் முதலாவதாக நாட்டு விடுதலையே மக்களின் தற்காலிக க்ஷேமத்தை விடப் பெரிதென்று தீர்மானித்து அன்னோருக்கு அமோகமான ஆதரவுத் தரலாயினர். விடுதலை வீரர்கள் நாட்டு மக்களின் ஆதரவுப் பெற்ற உண்மையினைத் தாம் தேர்தலில் பெற்ற வாக்கு உரிமையின் (Ballot box victory) மூலம் நிரூபித்தனர். ஆனால், சமூக தர்ம வளர்ச்சியில் ஈடுபட்ட பொதுநலத் தொண்டர்கள் மக்களுடைய ஆதரவிற்குப்

பெரிதும் பாத்திரர்களாகத் தவறி விட்டனர். காரணம், விடுதலை வீரர்கள் அன்னோரை மக்களுக்குத் தவறிய முறையில் அறிமுகப்படுத்தினமையேயாகும். நீதிக் கட்சிப் பிரமுகர்களைத் தாக்குமுகத்தான் விடுதலை வீரர்கள், நீதிக் கட்சிப் பிற்போக்கான கட்சி, அது விடுதலையை வேண்டாத கட்சி, ஆங்கில ஆட்சியினை நாட்டில் நீடித்து வாழ விரும்புங் கட்சி, அது பணக்காரர்கள் கட்சி, பதவி வேட்டைக்காரர்கள் கட்சி, என்றெல்லாம் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர்.

விடுதலையில் நம்பிக்கைக் கொண்ட மக்கள் நீதிக் கட்சியினர் செய்த நன்மையினை மறந்து, விடுதலை வீரர்கள் புனைந்துரைத்த பொய்யுரைகளை யெல்லாம் கேட்டனர். பொதுமக்கள் எடுப்பார் கைப்பிள்ளை போலவன்றோ கிடந்தனர்! மேலும், கட்சித் திட்டத்திற்கு ஏற்றவாறும், அந்நாள் அரசியல் திட்டத்தில் வழங்கப்பெற்ற அரசியல் உரிமைகளுக்கு ஏற்றவாறும், நீதிக் கட்சியினர் பொதுமக்களுடைய தொடர்பு அற்றவர்களாக இருந்தமையான் அவர்கள் தேர்தலில் வெற்றிப் பெற முடியாது போயிற்று. இந்த நிலைமை வகுப்புரிமை நீதியை எதிர்த்து வந்தவர்களுக்கு ஆக்கமளித்தது. நீதியை எதிர்த்ததோடு நில்லாமல், நீதியை உண்டாக்கிய ஸ்தாபனத்தையும் விடுதலை வீரர்கள் ஒடுக்கலாயினர். இன்னவாறு நீதிக் கட்சியினரை எதிர்த்து ஈடு எடுப்பின்றி 1935-ஆம் வருட அரசியல் திட்டப்படி நடத்தப்பெற்ற தேர்தலில் வெற்றிப் பெற்று மாகாண சுய ஆட்சியினை நடத்த காங்கிரஸ் கட்சி 1937-ஆம் வருடம் ஆட்சி பீடம் ஏறியது.

## காங்கிரஸ் கட்சியும் வகுப்பு நீதியும்

1935-ஆம் வருடத்தின் அரசியல் சட்டப்படி (Government of India Act of 1935) அமைக்கப் பெற்ற அரசாங்கம் காங்கிரஸ் மகாசபையினைச் சார்ந்த தாகும். அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்குக் கிடைத்த முதல் அரசியல் வெற்றி, எல்லா மாகாணங் களிலும் தன் கட்சியினை ஆட்சிபீடம் ஏற்றினமையாகும். அவ்வாறு அமைக்கப்பெற்ற ஆட்சிகளுள் ஒன்றான சென்னை மாகாண ஆட்சிக்குப் பிரதம மந்திரியாக திருவாளர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் வந்தமைந் தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் வகுப்பு நீதியைத் (Communal G. O.) தொலைத்துவிட எண்ணிப் பல புகார்கள் எழுப்பப்பெற்றன. அறிஞர் ஆச்சாரியாருக்கு வகுப்பு நீதியைத் தொலைக்க விருப்பமிருந்தபோதிலும், அவருடனிருந்த சட்டசபை அங்கத்தினர்கள் அவர் விருப்பத்திற்கு இணங்காத காரணத்தால், அந் நீதியை ஒழிக்கும் விஷயத்தில் அவர் தீவிரமாக தலையிட்டுக் கொள்ள முடியவில்லை. அவர் காலத்தில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதுபற்றி வெளியிட்ட ஓர் உத்தரவை மட்டும் ஈண்டு குறிப்பிடலாம். அது வருமாறு :—

" The Principals of Government Colleges are requested, while making selections for admission to all classes in their colleges, to exercise the greatest care in seeing that due representation is given to non-Brahmins, to all minority communities, to Muhammadans, to Scheduled Classes and to women. The fact that candidates from backward communities do not possess equaly high marks as candidates from forward communities should not stand in the way of deserving applicants from such communities being given due consideration. In the case, for example, of the scheduled classes and of Muslim,

women, very few of whom ever reach the collegiate standard, special consideration should be shown. In cases of doubt, the Principals of Colleges may, if they consider it necessary, refer the cases to the Director of Public Instruction for decision."

மேலே கூறிய உத்தரவில் வகுப்புரிமை நீதியின் உயரிய தத்துவமும், நோக்கமும் விளங்க உரைத்திருப்பதைச் சற்றுக் கவனியுங்கள்!

இதற்குள், அவருடைய ஆட்சிக்கு அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் ஒத்துழையாமை தீர்மானம் ஒன்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. காங்கிரஸ் கட்சிப் பின்னர் அஞ்ஞாதவாசம் செய்ய ஆரம்பித்துவிட்டது. இதற்குக் காரணம் இரண்டாவது உலக மகா யுத்தமே யாகும். ஆங்கில ஆட்சியினர் இரண்டாவது உலக மகா யுத்தத்தை நடத்துவதற்காக செல்வாக்குப் பெற்ற காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்பை நாடினர். ஆனால், தேசீய காங்கிரஸ் முதல் மகாயுத்தத்தின் இறுதியில் அரசியல் விமோசன விஷயமாக தோல்வி அநுபவம் பெற்றதால், இரண்டாவது மகா யுத்தத்தின்போது ஆங்கிலேயருக்கு உதவ உடன்படவில்லை. அதுகாரணமாக ஒத்துழையாமை இயக்கத்தினை ஆரம்பித்து நடத்தலாயிற்று. இன்னவாறான அரசியல் சூழ்நிலை காரணமாகக் கைவிடப்பெற்ற சென்னை மாநிலச் சர்க்காரை ஆலோசகர் ஆட்சிக் குழுவினர் (Advisers' Regime) பொறுப்பேற்று நடத்தலாயினர்.

சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆலோசகர் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டபோதிலும் மக்களுடைய சம்ரக்ஷணைகளில் பேரார்வம் காட்ட முடியவில்லை. அவர்களுடைய கவனமெல்லாம் யுத்த முயற்சியில் செலுத்தப் பெற்றமையால், உள்நாட்டு வியவகாரங்களில் ஒரு சிறிதே

கவனஞ் செலுத்துவாராயினர். யுத்த பீதியால் அலங்கோலப்படுத்தப்பெற்ற மக்கள், ஆட்சி ஒழுங்கினைத்தாலும் பெரிதும் பாதிக்கப்பெற்றனர். அவர்கள் மிகுந்த தொல்லைகளுக்குட்பட்டு ஆட்சி நடத்த வேண்டியவர்களாயிருந்தமையால், கல்வி, சுகாதாரம், வர்த்தகம், சீர்திருத்தம் முதலிய துறைகளில் தீர்க்கமான சட்ட திட்டங்கள் கொண்டுவர இயலாமற் போயிற்று. நிலைமை அங்ஙனமிருந்தபோதினும், வகுப்புரிமை நீதி விஷயத்தில் மாத்திரம் சிறிதளவு தலையிட்டுப் புத்தம் புதிய உத்தரவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரலாயினர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சில முக்கிய உத்தரவுகள் அரசாங்கக் கல்விச்சாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதைப் பற்றி வெளிவந்தன. 1—8—40-இல் வெளியிடப்பெற்ற 1435-வது அரசாங்க உத்தரவுப்படி கல்லூரி முதல்வர்கள் எல்லா வகுப்புக்களிலிருந்தும் மாணவர்களை உத்தரவில் கண்டு கூறிய சதவிகிதத்தில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடப்பெற்றனர். அதனையடுத்து 14—3—42-இல் 960-வது அரசாங்க உத்தரவு ஒன்றினை அரசியலார் பிறப்பித்தனர். அவ்வுத்தரவிலும் மேற்கூறிய நியதியை அனுஷ்டிக்க வேண்டுமென்று ஆணையிடப்பெற்றது. பின்னர் 22—7—1943-இல் சில சதவிகிதங்கள்படி மாணவர்களை வைத்தியக் கல்லூரிகளிலும், தொழிற் கல்லூரிகளிலும் அநுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். அவ்வுத்தரவுப்படி 50·8 சதவிகிதத்தில் தமிழ் மொழி பரவியுள்ள நாட்டினர்க்கும், 38·1 சதவிகிதத்தில் தெலுங்கு பாஷை பேசப்பெறும் நாட்டாருக்கும், 11·1 சதவிகிதத்தில் மலையாள மொழி வழங்கும் பிரதேசத்தினருக்கும் இடவசதி அளிக்க வேண்டுமென்று வகுத்துரைக்கப்

பெற்றது. மேற்கூறிய மொத்த சதவிகிதத்தில் 20 சத விகிதம் திறமை மிக்க மாணவர்களுக்கு அளிப்பதெனவும் கண்டுகொள்ளப்பெற்றது; பின்தங்கிய வகுப்பாருக்கும், பெண்களுக்கும், யுத்தத்தில் சேவை செய்தவர்கள்தம் மக்களுக்கும், சமஸ்தான பிரதேசங்களில் இருந்துவந்த மாணவர்களுக்கும் இடவசதிகள் செய்து தரவேண்டும் என்றும் உத்தரவளிக்கப்பெற்றது. இன்னவாறாக ஆலோசகர் ஆட்சிக் காலத்தில் சென்னை மாநிலத்தை மூன்று பாஷாவாரி பிராந்தியங்களாகப் பிரித்து மாணவர்களைக் கல்லூரிகளில் அநுமதிக்க ஏற்பாடுகள் நடந்தன. இவையே ஆலோசகர் ஆட்சிக் குழுவினர் செய்த பொது நலக் கைங்கரியங்கள்!

இதற்குள் யுத்தம், மழை பெய்து நிற்பதைப்போல், நின்றது; உலகம் யுத்த பீதியினின்று ஒருவாறு நீங்கியது. மக்களிடையே ஒரு புதிய பரபரப்பு (awakening) உண்டாயிற்று. முதல் மகா யுத்தம் இந்திய மக்களுக்கு அரசியல் வேட்கையை, தேச விடுதலை ஆர்வத்தைத் தந்தது. ஆனால், இரண்டாவது மகா யுத்தம் பொருளாதாரத் துறைகளில் அம்மக்களுக்கு விழிப்பை யுண்டாக்கியது. மக்கள் வாழ்க்கைக்கு உற்ற துணையாகவிருக்கும் துறைகள் எல்லாம் வளர்ச்சி பெற ஆரம்பித்தன. நாட்டின் பொருளாதார நிலைமை செங்குத்தாக (Steep-rising) ஓங்கி வளர்ந்து வரலாயிற்று. அவ்வளர்ச்சியால் உண்டான பலாபலன் மிகப் பலவாகும். மக்களிடைப் பணப் புழக்கம் அதிகமாயிற்று. பணம் பல வேலைகளைச் செய்யுமல்லவா? அவற்றுள் ஒன்று மக்களின் கல்வி வளர்ச்சி. பிள்ளைகள் பெருவாரியாகப் படிக்கத் தொடங்கினர். இந்த உண்மையினை மந்திரி மாதவ மேனனுர்

வெளியிட்ட கருத்து ஆதரிப்பதால் அஃது கீழே தரப்படுகின்றது :—

"In 1940 there were 623 High schools while in 1949 there were 1103. There has been considerable increase in the number of Arts Colleges also during this period. In 1940 there were 40 colleges but to-day there are 62. In 1940 about 16,000 were declared eligible (S. S. L. C.) and last year (1949) including the October Examination 24,000 were declared eligible."

ஆனல், மக்கள்பால் உண்டான கல்வி நாட்டத்திற் கேற்றவாறு கல்வி ஸ்தாபன வளர்ச்சி இருக்க முடிய வில்லை. அரசினராலும், பிறராலும் நடத்தப்பெறும் கல்வி ஸ்தாபனங்கள் மிக மிகச் சிலவே. அவை நாட்டின் தேவைக்குப் (Demand) போதாமலிருப்பதால் ஒரு பத்து வருட காலமாகவே இட நெருக்கடி உணரப்பெற்றது. கல்லூரி முதல்வர்கள் மாணவர்களுக்குப் போதுமான அளவுக்கு இட வசதி அளிக்க முடியவில்லையே என்று சங்கடப்பட்டனர்; பெற்றோர்கள் தம் பிள்ளைகள் படிக்க முடியவில்லையே என்று மனங் கவன்றனர்; மேற்கொண்டு படிக்க முடியாமல் பல மக்கள் பரிதவிக்கலாயினர்; கல்விச் சாதனங்களை அபிவிருத்திச் செய்வதற்குப் போதிய பண வசதி இல்லையே என்று அரசினர் திகைத்து நிற்கலாயினர். இன்னவாறன சூழ்நிலையில் இடவசதியின்மையை நன்கு உணர்ந்த காரணத்தால் வகுப்புவாரி திட்டத்தைச் சரிவர நடைமுறையில் கொண்டுவர அரசினர் தலைப்பட்டனர். அது காரணமாகவே பத்திரிகைகள் வசவுமாலையைத் தொடுக்க ஆரம்பித்தன. சமயம் பார்த்திருந்த போலித் தேசியத் தலைவர்கள் பல வசவு மாலையைத் தொடுக்க பூக்களைப் [(பத்திரிகை நிருபருக்குப் பேட்டி (Interview to the Press Correspondent), பத்திரிகைக்கு அறிக்கை

(Statement to the Press), பொது மேடைப் பேச்சு (Public Speech)] பல ரகங்களில் பறித்துத் தயார் படுத்தித் தரலாயினர். சென்னை அரசாங்கம் பலவித வர்ண வசவுப் பூமாலைகளால் தினமும் அலங்கரிக்கப் பெற்று அர்ச்சனை ஏற்க வேண்டியதாயிற்று! கல்விச் சாலைகளை மார்ச்—ஏப்ரல் மாதங்களில் மூடுவார்கள் அதிகாரிகள்; ஜூன்—ஜூலை மாதங்களில் கோடை விடுமுறைக்குப் பின் திறப்பார்கள்; மே மாதக் கடைசியிலிருந்து எல்லாக் கலாசாலைகளும், கல்லூரிகளும் திறக்கும்வரை மேற்கூறிய வசவு தோத்திரங்கள் பாடப் பெறும். நமது "கண்ணிய"மிக்க தேசீயப் பத்திரிகைகளை வருஷக்கணக்கில் புரட்டிப் பார்த்தால் விஷயங்கள் எல்லாம் வைரத்தினின்று வீசப்பெறும் ஒளிக் கிரணங்கள்போல் வெளிப்படும்.

குறிப்பாக வைத்தியக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவைகளில் பிள்ளைகள் இடம் பெற முடியாமல் அவதியுறுவதை மக்கள் காணுவாராயினர். வேதனைக் கிடந்தரும் அப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது நல்ல அரசினர் கடமையும், ஊக்கமிக்க பொதுமக்கள் ஒத்துழைப்புமாகும். ஆனால் நாட்டில் நடந்ததென்ன? வகுப்புவாரித் திட்டப்படிப் பிள்ளைகளைத் தேர்ந்து எடுப்பதால் படிக்க வசதி பெறமல் பெரும்பான்மையோர் வீடு திரும்புகின்றனர் என்று பொய்யை மெய்போலவும், மெய்யைப் பொய்போலவும் திருத்திக் கூறி வரலாயினர் சுயநல கவன சித்தர்கள்.

இவ்வாறுன சூழ்நிலைகள் வளர்ந்துவந்த நாளில் காங்கிரஸ் மகாசபை லார்ட் வேவல் துரைமகனாரின் உண்மையான முயற்சி காரணமாக இந்திய அரசியல்

வானத்தில் மீண்டும் வந்து பிரகாசிக்கலாயிற்று. **சென்னை மாகாண வகுப்புரிமை நீதியின் வாழ்வு, இந்திய அரசியல் சூழ்நிலைமையைப் பற்றியே வந்திருக்கிறது!** வேவல் துரைமகனார் நடத்திய சிம்லா மகாநாட்டின் விளைவாக காங்கிரஸ் மகாசபையும், முஸ்லிம் லீகும் அரசியலில் பங்கு கொள்ள ஆரம்பித்தன. இவ்விரு பெரு அரசியல் கட்சியாளர்கள் தத்தமக்குள் செய்து கொண்ட தேர்தல் திட்டப்படி 1946-ஆம் ஆண்டு தேர்தலில் கலந்து கொண்டனர். இரண்டாவது முறையாக காங்கிரஸ் கட்சியினர் மாகாணங்களில் பொறுப்புள்ள ஆட்சியினை நிர்மாணிக்கலாயினர். அவ்வமயம் அமைக்கப்பெற்ற சென்னை மாநில ஆட்சிக்குப் பிரதம மந்திரியாக, ஆந்திர கேசரி என்ற சிறப்புப் பெயர் படைத்த **பிரகாசங்காரு** தேர்ந் தெடுக்கப்பெற்றார். அவரும், அவரது உயிர்த் தோழர்கள் சிலரும் வகுப்புவாரித் திட்டத்தை அடியோடு ஒழித்து விடத் தீவிரமான முயற்சிகள் செய்தனர்; முறைகளை மாற்ற முற்பட்டனர். கல்வி இலாகா, வைத்திய இலாகா மந்திரிகளுக்கு யோசனைகள் கூறப்பெற்றன. இரு சட்ட சபைகளிலும் பெருத்ததோர் ஆரவாரம் செய்யலாயினர். ஆனால் கருத்து முற்றுப்பெற்றுக் காரியமாக மாறுவதற்குள் பாவம், பிரதமர் பிரகாசங்காரு பதவியினின்றும் இறக்கப் பெற்றார்! அவருடைய அரசியல் அதிகாரம் கப்பல் கவிழ்வதுபோல் கவிழ்ந்தது. சட்டசபை அங்கத்தினர்கள் நம்பிக்கையையும், மேலிடத் தலைவர்களின் கிருபா கடாட்சத்தினையும் இழந்தார்; நாட்டில் அரசியல் அநாதியானார்!

மாஜிப் பிரதமராக பிரகாசங்காரு மாறிய பின் **ஓமந்தூர் - பெத்த - இராமசாமி ரெட்டியார்** வசம் சென்னை

முதன் மந்திரிப் பதவி சட்டசபைக் கட்சியினரால் ஒப்படைக்கப்பெற்றது. அவரது ஆட்சிக் காலத்தில் வகுப்புவாரித் திட்டத்தைக் குறித்து மறுபடியும் எதிர்ப்புக்கள்தோன்றின; சட்ட சபைகளில் கண்டனமாரிகள் வருஷிக்கப்பெற்றன. நேர்மைக் குணமிக்க அவரது ஆட்சியில் வகுப்புரிமைத் திட்டம் ஒரு சிறிது மாற்றங்கள் ஏற்று வெளிவரலாயிற்று. அதன்படி பதினொன்கு இடங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால், ஆறு பதவிகள் பிராமணரல்லாதார்க்கும், இரண்டு பதவிகள் பிராமணர்க்கும், இரண்டு பதவிகள் பின்தங்கிய வகுப்பு மக்களுக்கும், இரண்டு பதவிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், ஒரு பதவி கிறிஸ்தவருக்காவது அல்லது ஆங்கிலோ—இந்தியருக்காவது என்றும் வகுத்துரைக்கப்பெற்றன. இந்த நியதியைச் சட்ட சபை (Legislature), ஸ்தல ஸ்தாபன சபை (Municipal Council), மந்திரி சபை (Ministerial Cabinet) ஆகியவைகளை அமைப்பதிலும் அனுஷ்டிக்க வேண்டுமென மேலும் கண்டுகொள்ளப் பெற்றது.

## இந்திய விடுதலையும் அரசியல் நிர்ணய சபையும்

இந்திய நாட்டினருக்குச் சுயராஜ்யம் அளித்து விடுவதே நன்று என்று திட்டவட்டமாக முடிவுச் செய்துகொண்ட ஆங்கில நாட்டின் தொழிற் கட்சியினர் பாராளுமன்றத்தில் பலதடவைகளில் அப்பிரச்சினையை எழுப்பிச் சர்ச்சில் துரைமகனார் தலைமையில் அமைந்திருந்த சர்க்காருக்கு ஓயாத தலைவலியை யுண்டாக்கினர். 1935-ஆம் வருடத்தின் அரசியல் சட்டத்திற்குப் பின்

யாதொரு கவலையும் எடுத்துக் கொள்ளாமலிருந்த ஆங்கில ஆட்சியினர் தொழிற் கட்சியின் தூண்டுதலால் 1942-ஆம் வருடத்தில், இராஜதந்திரத்தில் கைதேர்ந்த கிரிப்ஸ் துரைமகனரை இந்திய நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவர் தயாரித்து வந்த அரசியல் திட்டம் காங்கிரஸ் மகா சபையினருக்கும், முஸ்லிம் லீகர்களுக்கும், மற்றுமுள்ள குட்டிக் கட்சியினர்களுக்கும் ஒவ்வாததாக இருந்தமையான் நிராகரிக்கப்பெற்றது. அஃது இந்திய சரித்திரத்தில் நடந்த ஒரு தோல்விச் சம்பவமேயாயினும், ஆங்கில மக்களின் இராஜதந்திர, இந்திர ஜாலவித்தையின் மகிமை, நமது நாட்டாருக்கிருந்த விடுதலை ஆர்வத்தின் உறுதி ஆகியவற்றினை வெளிப்படையாகத் தெரிவிக்கலாயிற்று. வந்த தூதுவர், யுத்த சம்பந்தமாக ரஷ்ய நாட்டில் பெற்ற வெற்றிபோல் இந்திய அரசியல் விமோசன சம்பந்தமாக வெற்றிப் பெற முடியாமல் ஆங்கில நாடு திரும்பினர்; பாராளுமன்றத்தில் தாம் அடைந்த தோல்விப் படலத்தைப் பற்றி விவரித்தார்.

ஆங்கிலச் சாம்ராஜ்ய முடியில் அணிகிளர் மணியாய் அமைந்த இந்திய நாட்டைவிட்டு விடுவதா, என்ற மனப்பான்மையுடனிருந்த சர்ச்சில் துரைமகனர் அவற்றைக் காது கொடுத்துக் கேட்டனரெனினும், அவர் தமக்குகந்த காரிய ஈடுபாட்டிலேயே மிகுந்த கவனஞ் செலுத்தி வந்தமையான், இந்திய சுதந்திரப் பிரச்சினையைப்பற்றி வழக்கம்போல் அசிரத்தையாக இருந்துவிட்டார். கன்சர்வேடிவ் கட்சியினரால் அமைக்கப்பெற்ற ஆங்கில அரசாங்கத்தின் போக்குப் பிடிக்காத தொழிற் கட்சியினர் 1945-ஆம் வருடத் தேர்தலில் கலந்து கொண்டு, வெற்றிப் பெற்றுத் தம்முடைய கட்சி ஆட்சியை

கிறவினர். அவர்கள் கட்சித் திட்டப்படி மறுபடியும் இந்திய நாட்டு அரசியல் தலைவர்களுடன் ராஜீய சமரசப் பேச்சு நடத்த அவ்வமயம் வைஸ்ராயாகவிருந்த வேவல் துரைமகனுருக்கு உத்தரவிட்டனர். “மன்னித்துவிடு; மறந்துவிடு” (Forgive and Forget Policy) என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சிம்லா மகாநாடுகள் (Simla Talks) கூட்டப்பெற்றன. அவற்றால் வெற்றிக் காண முடியவில்லை யெனினும், ஆங்கில நாட்டிலிருந்து மூவர் அடங்கிய கோஷ்டி ஒன்றினை இந்தியாவிற்கு வரவழைப்பதற்கேற்ற சந்தர்ப்ப சௌகரியங்களை ஆக்கியமைக்க முடிந்தது. இந்திய அரசியல் வியவகாரங்களை நன்கு அலசிப் பார்த்திருந்த கிரிப்ஸ் துரைமகனார், இந்தியாவின் காரியதரிசியாக அப்போதிருந்த லார்ட் பெதிக் லாரன்ஸ், கடற்படைத் தளபதியாகவிருந்த ஏ. வி. அலெக்ஸாண்டர் என்னும் துரைமகனுர், ஆக இம்மூவர் அடங்கிய கோஷ்டியினை இந்தியாவிற்கு ஆங்கில நாட்டின் பிரதமர் ஆட்லி துரைமகனுர் ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார். வந்த தூது கோஷ்டியினர் காலவரம்பின்றி நாட்டில் செல்வாக்குப் பெற்ற இரு அரசியல் கட்சித் தலைவர்களுடன் கூடிச் சமரசப் பேச்சுகள் பல நடத்தினர். இறுதியில் மலையைக் கல்லி எலியைப் பிடித்ததுபோல் “இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் (British Commonwealth of Nations) உள்ள கானடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் பெற்றுள்ள குடியேற்ற அந்தஸ்தை (Dominion Status) வழங்குவதெனவும், அதற்கிடையில் பொறுப்புள்ள கட்சியினரிடத்தில் நாட்டாட்சியினை ஒப்புவிக்கப்படுமென”வும் அத் தூது கோஷ்டியினர் கூறினர். ஆனால் பூரண சுதந்திரமாம் இனிய நற்கனியைச் சுவைக்க

ஆவலுடனிருந்த தேசத் தொண்டர்கள், முன்னரே பேசிப் புளித்துப்போன அக்கூற்றினை ஏற்கவில்லை! கடைசி வரையில் மர்ம மிக்க தூது கோஷ்டியினர் இந்தியாவிற்கு விடுதலைத்தர வந்திருக்கிறோம் என்று வாய்விட்டுக் கூறினார் களில்லை. எல்லாம் மர்மமாகவே வைத்திருந்து மேற் கூறிய எண்ணங்களைத் தெரிவித்தனர். இந்தச் சமரசப் பேச்சு நாளில் இந்தியாவைத் துண்டாடக்கோரிய முஸ்லிம் லீகர்களின் பாகிஸ்தானக் கோரிக்கை பரந்த விளம்பரம் பெற்றுவிட்டது! பாகிஸ்தானம் வழங்கினாலன்றி இந்தியா வுக்குச் சுதந்திரம் அளிக்க முடியாது என்று லீகர்கள் உறுதியுடன் எடுத்துக் கூறினர். ஹிந்து—முஸ்லிம் வகுப் புக் கலவரத்தால் சரித்திரமேயறியாத அளவில் மக்கள் நாசமடைந்ததை உண்ணி, புண்ணி மனம் வெந்த தேசியத் தலைவர்கள் திகைக்கலாயினர் வேறுவழியில்லாமல்; பாகிஸ்தானக் கோரிக்கைக்கு இணங்கினர். ஆங்கில ஆட்சியினரிடம் தாம் செய்துகொண்ட நன்னம்பிக்கை உடன்படிக்கைக்கு ஏற்றவாறு (Truce on Goodwill) தேசியத் தலைவர்கள் லீகர்களுடன் சேர்ந்து இந்தியாவில் தற்காலிக ஆட்சியினை (Interim Government) 1946-ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 6-ஆம் தேதி அமைத் தனர். அன்று முதல் அரசியல் கட்சித் தலைவர்கள் ஆட்சி யும் நடத்தினர்; விடுதலைப் பேச்சும் தீவிரமாக நடத் தினர். அச்சமயத்தில், பாரத யுத்தத்தில் இருசாரா ருக்குமே உதவிபுரிவதாகக் கூறிப் பாசாங்கு செய்து முடிவில் பாண்டவர் தூதன் எனவே பெயர் கொண்ட கிருஷ்ணனைப் போன்று லார்ட் மௌண்ட்பேட்டன் என்னும் துரைமகனார் ஆங்கிலச் சாம்ராஜ்யத்தின் இறுதி வைஸ்ராயாக வந்தமைந்தார். அவர் ஆங்கில அரச் குடும்பத்தைச் சார்ந்தவர். இந்தியாவின் முதல் கவர்னர் -

ஜெனரலாக வந்து, கிழக்கிந்தியக் கம்பெனியாரால் ஒப் படைக்கப்பெற்ற அரசியல் அதிகாரத்தை நடத்தும் பேறு பெற்றவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் (Lord Warren Hastings); அந்த அதிகாரத்தினை ஆங்கில ஆட்சியினரிடமிருந்து மீண்டும் இந்தியர்பால் ஒப்படைத்த பெருமை மௌண்ட் பேட்டன் பிரபுவைச் சாரும். கடற்படைத் தலைவராக இருந்து, ஆங்கில நாட்டின் கடற்படைக் கௌரவத்தைக் (Naval Supremacy) காப்பாற்றி வந்தமையான் அவருக்கு அரசியல் வட்டாரத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்து வந்தது. அதுபற்றி, இந்திய விடுதலைச் சம்பந்த மாக அவர் அவ்வப்போது தயாரித்துக் கூறிய திட்டங் களையெல்லாம் ஆங்கில ஆட்சியினர் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் அனுமதியின் பேரில், 1947-ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம் 15-ஆந் தேதி இந்தியாவுக்குப் பரிபூரண விடுதலை அளிப்பதாக வாக்குறுதி தந்தார்; நாட்டாட்சி யினைப் பொறுப்புள்ள தலைவர்கள் அமைந்த சர்க்காரிடம் ஒப்படைக்கப் போவதாகவும் கூறினார். தலைவர்கள், "வாராது போல வந்த மாமணியை" விட்டுவிடுவதா என்ற மனப்பாங்குடையாராய் அவ்வேற்பாட்டினைக் கேட்டு மனங் களித்தனர் ஒருபால்; நாடு இரு பிரிவினதாகப் போகிறதே என்று மனங் கவன்றனர் மற்றொருபால்! தலைவர்கள் இசைவுப்படி இந்திய உபகண்டம் 'பாரத்', 'பாகிஸ்தானம்' என்ற இரு பிரிவினதாகப் பிரிக்கப் பட்டது. 1947-ஆம் வருடத்தில் ஆங்கிலப் பாராளு மன்றம் கொண்டுவந்த அரசியல் சட்டப்படி (Indian Independence Act of 1947) இந்திய நாடு விடுதலை யடைந்தது! சத்திய சோதனை, தேச சுதந்திர மென்னுமோர் முடிவு கண்டது !!

விடுதலையடைந்த இந்தியாவிற்குப் புதிய அரசியல் திட்டம் வகுக்க அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) ஒன்றினை அமைத்து உலக நாடுகள் கொண்டுள்ள அரசியல் திட்டங்களை நன்கு அலசிப் பார்க்கவும், இந்தியாவுக்கேற்ற ஓர் அரசியல் திட்டத்தைத் தயாரிக்கவும், நாட்டில் உள்ள சட்ட நிபுணர்களையும், பிரமுகர்களையும், நாட்டின் ஏகப் பிரதிநிதிக் கட்சியாகிய காங்கிரஸ், ஏவல் கொள்ளத் தொடங்கியது. அப்பொழு திருந்த தேர்தல் விஸ்தரிப்புப்படி (Extent of Franchise) அரசியல் நிர்ணய சபைக்கு நபர்களைப் பொறுக்கி எடுத்தனர். அம்முறையினைத் தேர்தல் என்ற சொல்லால் அரசியல் ஞானஞ் சிறக்கப்பெற்றோர் வழங்கமாட்டார். மாகாண சுயாட்சி மக்களிடைப் பிரிவினை வாதத்திற்கு ஆக்கந் தரும் என்று அழிவு வாதம் கிளப்பிய கற்றறி மூடர் கள் சமயம் பார்த்திருந்தனரன்றோ! அன்னோருக்கேற்ற வண்ணமே அரசியல் நிர்ணய சபை என்னுமோர் அரங்கம் அமைக்கப்பெற்றது. அவர்கள் நாட்டில் வகுப்பு நீதி யைக் குறித்து எதிர்த்துப் பிரச்சாரஞ் செய்தும், சட்ட சபைகளில் கண்டித்தும் பயன்படாது போகவே, அற மார்க்கத்திற்கு மாறான வகையில் விதிகள் சிலவற்றை அரசியல் திட்டத்தில் தலைமறைவாகப் புகுத்தத் தீர்மானித்துக் கொண்டனர். அவர்களது வாதங்களை நாட்டில் உள்ள கைக்காசுப் பெறாத பக்க வாத்தியங்கள் (பத்திரிகைகள்) அறிவின் தெளிவென்றும், திறமையின் மகிமை என்றும், அனுபவச் சித்தாந்தம் என்றும் முழங்கலாயின. அத்தகைய மதிவாணர்களையே நமது சென்னைச் சட்ட சபையினர்களும், மற்றும் பிரபல காங்கிரஸ் தலைவர்களும் பொறுக்கி (Selection) அனுப்பலாயினர். அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்!

வாது சூது அறியாதவர்கள்; சத்திய வேந்தர் காந்தியண்ணல் வழிவந்தவர்களன்றோ அவர்கள்! வகையற்றவர்கள்; உழைப்பார்கள்; பிழைக்க வழி கற்றுக் கொள்ளாதவர்கள்; தாம் கெட்டாலும் பிறரைப் பெருமைப்படுத்தும் பண்பு மிக்கவர்கள். வடவர் மங்கள ஆரத்தி எடுத்தேத்தி வரவேற்கவும், தென்னாட்டுச் 'சங்கிலிப் பிரமுகர்கள்' களிப்பால் வாழ்த்தி ஆசி நல்கவும், மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் தோத்திரம் பாடி நிற்கவும், அரசியல் நிர்ணய சபைக்குச் சட்டஞ் செய்யவல்ல நபர்கள் அனுப்பப்பெற்றனர்.

ஒரு நாட்டின் அரசியலமைப்பை நிர்ணயித்தல் என்பது முக்கியமான விஷயமாகும். இந்தச் சகாப்தத்தில், நாட்டரசியல் வீதியில் ஓடும் நாயையும் பாதிக்கக் கூடியதாகும். அவ்வளவு கண்காணிப்புமிக்க அரசியல், மக்கள் க்ஷேமத்தையே நோக்கமாகக் (Aim) கொண்டிருக்கும். அரசியல் நிர்ணயம் என்பது, ஒரு வயதுவந்த ஆண்மகன் தனக்கேற்ற பெண்மகளை விரும்பி யேற்றுத் தனது தாலி மூலம் அவளது வாழ்க்கையை நிர்ணயிப்பது (திடப்படுத்துவது) போலாகும்; விளங்கவுரைக்கில் நாட்டின் தலைவிதியை (போக்கு) எழுத்து மூலம் குறிப்பதாகும். அந்த அரிய பணிக்குச் சிறந்த பொது நலத் தொண்டர்களே, மக்கட் பிரதிநிதிகளே அருகதையுடையோராவர். அன்னோர் அமைக்கும் அரசியல் திட்டத்திற்கு அடிப்படையாக (Basis) விளங்குவது பொது மக்களின் சம்மதமாகும் (Will of the Community). இது கருதியே கிரீன்ஸ் (Greens) என்னும் அரசியல் ஞானியார், "Will, not force is the basis of the State" என்று சுருங்கிய சிலவாய சொற்களால் மக்கட்

சம்மதத்தின் மகிமையினை, அவசியத்தைத் திரும்பக் கூறினர். மக்கட் சம்மதம் பெறாத அரசியலமைப்புக் கால வகையினால் கழிக்கப்படும். மக்கட் சம்மதம் பெறாமலும், பெற மனமில்லாமலும், பொது மக்களுக்குத் தெரியாத சில நபர்களைக்கொண்டு அரசியல் திட்டத்தைத் தீட்டியது நல்லோர்க்கடுத்த செய்கையன்று. கல்வியறிவு (Literacy) மிக மிகக் குறைந்தபட்சத்தில் உள்ள நாட்டில் அரசியலில் தவறான முறையைக் கையாள்வது மாபெரும் அரசியல் சூது (Greatest Political Fraud) என்றே நன்னோக்குடையோர் கருதுவர். இந்தக் குற்றத்தினின்று நீங்கியதாக நமது பாரதநாட்டு அரசியல் திட்டத்தைக் கூறுவதற்கில்லை. முதன் முதலில் அரசியல் நிர்ணய சபையினர் மாகாண சுயாட்சி அமைந்த சமஷ்டி திட்டத்தைத் (Federal Constitution) தீட்ட எண்ணமிட்டனர்; ஆனால் அவர்கள் பின்னர் தீட்டியது ஐக்கிய ஆட்சித் திட்டமாகும் (Unitary State Constitution). இச்சம்பவம், யானையை ஓட்டிவரச் சென்ற வீரர்கள், பூனையைப் பிடித்து வந்ததுபோலாயிற்று! அவர்கள் ஆக்கியமைத்த திட்டப்படி எல்லா முக்கிய அதிகாரங்களும் இந்தியாவின் மத்திய அரசாங்கத்தினையே சாரும். மாகாண ஆட்சி வெறும் குமாஸ்தா ஆட்சியாக (Agency Rule) மாறியது. டில்லிப் பெருங் கோயில் மூலவர் அருள் கொடுக்கவும், அதனை அட்சய பாத்திரத்தில் பிச்சையாக ஏந்தி உற்சவமூர்த்திகளான நமது மாகாண மந்திரிகள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவுமாயினர். என்னே, விந்தை யாட்சியின் அமைப்பு!

அத்தகு சட்டத்தில்தான் நமது நாட்டிற்கு மதச் சார்பற்ற சர்க்காரே (Secular State) தேவையானதெனத்

தீர்மானித்து 'வகுப்புவாதம்' எவ்வகையினும் தலைக் காட்டாவண்ணம் திட்டங்கள் புகுத்தப்பெற்றுள்ளன. அவைகளுள் முக்கியமானவைகளே விதிகள் 15, 16, 17 என்று முறையே வந்தமைந்தன. இந்த விதிகளை யொட்டியே சென்னைச் சர்க்காரின் வகுப்பு நீதியினைக் குலைக்கும் விதியாக 29(2)-ஐயும் ஆக்கினர் சுயநலக் கவன சித்தர்கள். இந்த 29(2)-வது விதியின் முழுக் கருத்தையே விளக்கிக் கூறும் பான்மையில் 1929-ஆம் வருடம் ஜனவரி மாதம் 28-ஆந் தேதி கூடிய சென்னைச் சட்டசபையில் கேட்கப்பெற்ற 1013-வது கேள்வியாக அமைந்துள்ளமையைக் காணுந்தோறும் வியப்பும், வேதனையும் தோன்றுகின்றன. **நாட்டில் தோன்றும் அவல நிலைமைக்குக் காரணம் மனிதப் பண்பு அழிவேயன்றி சமயம் அல்ல! சாதி முறையல்ல!!** மனிதனைத் தன் சார்புபடுத்திச் சன்மார்க்க வழியில் விடவே அரசினர் முயல வேண்டுமே யொழிய மதச் சார்பற்ற சர்க்கார் என்று கூறிப் பட்டங் கட்டிக் கொள்வதில் யாது பயன்? இத்தகு அரசியல் திட்டம் 1950-ஆம் வருடம், ஜனவரி மாதம் 26-ஆந்தேதி பிரகடனப்படுத்தப்பெற்றதும் வகுப்புரிமை நீதியை எதிர்த்தவர்கள் நிம்மதியும், சந்தோஷமும் அடைந்தனர்!

## நீதிமன்றத்தில் வகுப்பு நீதி

தன்னுடைய அரணை, பாசறையைப் பாதுகாப்பிட்டுப் போருக்கெழும் திறமைமிக்க படைத் தலைவன்போல வகுப்புரிமை நீதியை எதிர்த்தவர்கள் அரசியல் சட்ட மூலம் நிலைமையைச் சமாளிக்கவல்ல திட்டத்தினை உண்டாக்கிக்கொண்டு, சென்னைச் சர்க்கார் அனுஷ்டித்து வந்த வகுப்புவாரி உத்தரவு இந்திய அரசியல் சட்டம்

(Indian Constitution Act) வழங்கும் அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ளதென முதன் மந்திரி திரு. குமாரசாமி ராஜா அவர்களது ஆட்சிக் காலத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இவ்வழக்கில் சென்னைச் சர்க்காரே எதிர்த்தரப்பு வாதியாக அமைய வேண்டியதாயிற்று. சட்டம் என்ற இருள் சூழ்ந்த கூண்டினுள்ளே, சமூக நீதி தள்ளப்பெற்றது! வழக்கில் வாதிகள் தம் அறிவிற்கெட்டியபடியெல்லாம் அரசியல் சட்டத்தைக் காட்டி வகுப்பு நீதியைச் சென்னைச் சர்க்கார் இனி அனுஷ்டிப்பது கூடாதென வாதித்தனர். பிரதிவாதியான சர்க்கார் வக்கீல் (Advocate-General) தானறிந்தவகையில் வகுப்பு நீதிக்குச் சார்பாகப் பேசினார்.

சென்னை நீதிபதிகள் வாதப் பிரதிவாதங்களை நன்கு கவனித்தனர்; பின்பு ஆழ்ந்து சிந்தனை செய்தனர்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று தெய்வப் புலவர் அறங் கூறும் மக்களை விதந்து கூறியாங்கு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் தம் கருத்தை, காலத்தை, அறிவை, திறமையைச் செலவு செய்து வகுப்பு உரிமை நீதி இந்திய அரசியல் சட்டப்படி முரணானது என்று திட்டவட்டமாகக் கூறினர்; மேற்கொண்டு சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்து கொள்ளவும் அனுமதித் தந்தனர். நாட்டின் அரசியல் சட்டப்படி கடைசி கோர்ட்டாக அமைக்கப்பெற்ற சுப்ரீம் கோர்ட்டின் இறுதியான உரையை (Final Word) அறிந்து கொள்வான்பொருட்டுச் சென்னைச் சர்க்கார், வழக்கில் அப்பீல் செய்துகொண்டது. வழக்கில் வாதிக்குச்

சார்பாகப் பேச அவசியமளிக்காமலேயே அப்பீல் செய்துகொண்ட சென்னைச் சர்க்கார் அனுப்பிய வக்கீலின் வறண்ட வாதத்தினை மட்டும் கேட்டுவிட்டுச் சென்னை உயர்நீதி மன்றத்தினர் அளித்த தீர்ப்பைச் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஊர்ஜிதப்படுத்தினர் **(Confirmed).** இரண்டு கோர்ட்டார்களின் தீர்ப்பும் சட்டப்படிப் பார்த்து அளிக்கப்பட்டதேயன்றி, நீதியை உணர்ந்து, நாட்டின் நிலைமையை அறிந்து கூறப்பெற வில்லை. இது கருதியே சட்ட நிபுணர் டாக்டர் - அம்பேத்கார் அவர்கள், சுப்ரீம் கோர்ட்டார் வகுப்புவாரித் திட்ட விஷயமாக அளித்த தீர்ப்புத் திருப்திகரமாக இல்லை என்று இந்தியப் பாராளுமன்றத்தில் கூறினர்.

சுப்ரீம் கோர்ட்டார் அளித்த தீர்ப்பையறிந்த சென்னைச் சட்ட சபையினர் சிறிது சலனம் (Restlessness) அடைந்தனர்; எவ்வகையிலாவது வகுப்பு நீதியை நீடிக்கச் செய்து சமூகத்தில் சம நிலைமையை வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடையாராய் நின்றனர்; அதற்கேற்றவாறு இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்க சட்டசபையில் வேண்டினர். சென்னைக்கு ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் 16—4—51 அன்று வந்திருந்தபோது சென்னை மந்திரிகள் கூடிக் கலந்து பேசினர். பழங்காலச் சிற்றரசர்கள் சக்கரவர்த்திக்கு மனுச் செய்து கொண்டதுபோல டில்லிக்குக் கடிதம் எழுதிக் கேட்டுக்கொண்டனர்; பின்னர் டில்லிப் பெருங் கோயில் மூல மந்திரிகளையும் சென்னை மந்திரிமார்கள் தரிசித்துப் பேசினர். இன்னவாறாக சென்னை அரசியலார் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக மனிதவர்க்கத்தின் தலைமாமணியா யிலங்கும் பண்டிதர் ஜவஹர்லால் நேரு

அவர்கள் பிரச்சினையின் உண்மையை நன்கறிந்து கொண்டனர். உண்மையை உணர்ந்துகொண்ட உத்தமர், உரையால் தெரிவிக்கத் தயங்குவாரா? எனவே, அவர் வகுப்புவாதம் என்பது வேறு; பின்தங்கிய மக்களுக்கு ஆதரவளித்தல் என்பது வேறு என்று விளக்கமாகக் கூறினர். மக்களின் தலைவரான அவர், மக்கள் சுகத்தினைப் போற்றுவதில் அளவுகடந்த ஆசை கொண்டவர். ஆனால் அவரைச் சூழ்ந்த அரசியல் வட்டம், அவர்தம் முழுப் பொலிவைக் காட்ட தடுத்தே வருகின்றது! எனினும், அரசியல் சட்டத்தினைப் பின்தங்கிய மக்களுடைய நன்மைக்காகத் திருத்த துணிவுகொண்டார்; அங்ஙனமே அரசியல் சட்ட விதி பதினைந்திற்கு-நான்காவது உட்பிரிவு விதியாக ஒரு திருத்தத்தைக் (Amendment) கொண்டு வந்தார்; பரிசிலனைக் குழுவினர் ஆலோசனைக்கு (Select Committee) முறைப்படி விட்டார்; எதிர்த்தரப்பினர் வாதங்களைக் கூர்ந்து கேட்டார்; அவர்களுக்கெல்லாம் தக்க பதிலிறுத்தார்; பின்னர் அமோகமான ஆதரவுடன் சட்ட திருத்தத்தினைச் சாதித்துக் கொண்டார். சாதாரண ஓர் அரசாங்க உத்தரவின் (Madras Government - Communal Government Order) சாராம்சத்தை நாட்டரசியல் சட்டத்தினுள்ளும் சில மாற்றமுடன் கொண்டுவந்த சீரிய செயல் பாராட்டுதற்குரியதாகும். அவ்விதி முறையை யொட்டிப் பழைய வகுப்பு நீதிக்குப் பதிலாகப் புதியதோர் சமூக நீதியைச் சென்னை அரசியலார் வகுக்கலாயினர்.

கொட்டு முரசே வெற்றி—நம தென்று
கொட்டு முரசே.

**இரண்டாம்: அதிகாரம் முற்றும்.**

# 3. வாதப் பிரதிவாதம்

---

## வாத முறையின் அவசியம்

மனிதனுடைய பிறப்புரிமையைச் சுட்டி நிற்கும் வகுப்பு உரிமை நீதியின் மேன்மையினை இதுகாறும் வரலாற்று முறையில் ஒரு சிறிது கண்டோம்; இவ்வதிகாரத்தில் அந்நீதியின் மெய்மையினை அவசியங் கருதி வாத முறையில் சற்றே விளக்குவாம்.

வாத முறை என்பது உண்மை விசாரஞ் செய்யும் தத்துவ ஞானிகள் கையாளும் ஓர் அரிய முறையாகும். உண்மை காட்சிக்கரியதாயுள்ள பரம்பொருளைப்போல் மறைந்து கிடக்கும்; அதனைக் கூரிய மதியுடையோர் எளிதில் உணர்ந்து கொள்வர்; சிலர் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்திய பின்பே அறிவதுண்டு. உண்மை வழி இயங்குவதே நீதியின் இலட்சணமாகும் (Justice is truth in action). உண்மை யறியாத வரையில் நீதியின் விசேஷத்தைப் பற்றிப் பலவாறு விவாதிக்கப் பெறும். நீதிக்கு வாதம் தேவையில்லை என்று முன்னர்க் கூறியாங்கு, உண்மை உணர்வு வீண் வாதங்களை ஏற்றுக் கொள்ளாது. மக்கள் அறியாமைச் சூழலினின்று பிறந்த உயிர் வர்க்கத்தினரன்றோ! உலக மார்க்கத்திலும், அவர்கள் அறியாமைக் கடிமைப் பட்டவர்களாகவே பெரும் பாலும் இருக்கின்றனர். அறியாமைப் பிடியினின்று நீங்குவதற்கு வாதம் நிகழ்த்தி யாகவேண்டியதாயிருக்கின்றது. அந்தப் பாணியில் வகுப்பு நீதியின் மெய்மையினை, அதன் மாண்பினை காட்டிற்ந்த வகையில் தொகுத்

துரைப்பாம். அவ்வாதப் பிரதிவாதம் பெரும்பாலும் சட்ட வரம்புகட்குட்பட்டதாகவே இருக்கும் என்று கூற இயலாது; பொதுமக்களின் அறிவுக்கேற்புடைத்தாக இருக்குமென்று நம்பி இம்முறையினை மேற்கொள்ளலாயினோம்.

## புதிய சகாப்தமும் பழைய வகுப்பு நீதியும்

**வாதம்** :—வகுப்பு உரிமை நீதி புதிய சகாப்தத்திற்கும் (New Era) புதிய முற்போக்கான கருத்துக்களுக்கும் முரணுகவுள்ளது.

**பிரதிவாதம்** :—புதிய சகாப்தம், புதிய கருத்துக்கள் என்பன யாவை? அவைகளின் கூறுபாடுகளைச் சற்று விளங்க உரைக்க வேண்டும்.

**வாதம்** :—1950-ஆம் வருடம், ஜனவரி மாதம் 26-ஆம் தேதி முதல் இந்திய நாடு ஒரு தனிச் சுதந்திர ஜன நாயகக் குடியரசாகி (Sovereign Democratic Republic) விட்டது. அதனது அரசியல் வாழ்வு ஒரு புது மெருகு கொண்டுவிட்டது. புதிய இந்திய அரசியல் சட்டத்திற்கு (Indian Constitution) முரணுக உள்ள பழைய அரசியலார் சட்டங்களும், உத்தரவுகளும் இனியும் நாட்டில் நடமாடுவதற்கில்லை (அரசியல் சட்ட விதி 13-ஐக் கவனிக்கவும்). ஜனநாயகக் குடியரசில் இந்திய அரசியல் சட்டத்தின் முன்பு எல்லா மக்களும் ஒரே விதமாக நடத்தப்பெற வேண்டும். இனியும் பெரும்பான்மைக் கட்சியினர், சிறுபான்மைக் கட்சியினர் என்றெல்லாம் நின்று வாதிடுவதற்கில்லை. நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு. இனம்,

சமயம், சாதி, பால், பிறப்பிடம், தொழில் என்றின்னோ ரன்ன பிறவற்றின் காரணமாக இனியும் மக்களைப் பிரித்துணரலாகாது; அவற்றின் காரணமாக விசேஷ சலுகைகளோ, உரிமைகளோ வழங்கலாகாது.

**பிரதிவாதம்:**—ஆம்; இந்திய நாடு விடுதலையடைந்த பின்பு ஒரு தனி அந்தஸ்தை (Political Status) உண்டாக்கிக் கொண்டது; தனது அரசியல் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால் விடுதலை அடைந்த நாட்டிலுள்ள **மக்களுக்கு எவ் வகையில்** புதிய சகாப்தத்தை உண்டாக்கியுள்ளது? பழைய சகாப்த மக்களுக்கும் புதிய சகாப்த மக்களுக்கும் என்ன வித்தியாசம் காணப்பெறுகின்றது? நாட்டு விடுதலை (Political Independence) ஒரு புதிய சகாப்தத்தை யுண்டாக்கியதென்றால், அந்நாட்டு மக்களின் சமூக வாழ்வில் (Social Structure), பொருளாதாரத் துறையில் (Economic Front), அரசியல் அமைப்பில் (Political Set-up) புதிய சகாப்தத்தை உண்டுபண்ண வேண்டாமா? சட்ட ஏடுகளிலும் அவற்றினைப் பற்றிச் சரிவர கூறப் பெறவில்லையே! பழைபடியே சாதி முறைகள் சமூகத்தில் தங்கி, உலவி, மக்களை மேலும் பாழாக்கி வருகின்றனவே! பணமுள்ளவன் பணக்காரனாகவும், ஏழை பரம ஏழை யாகவும் ஆக முடிகிறதே யொழிய, பொதுப்பட நோக்கில் மக்களது பொருளாதார நிலைமை (Economic Condition) அந்தகாரஞ் சூழ்ந்ததாகவேயுள்ளது. நாட்டில் இன்னும் உயர்ந்தவன், தாழ்ந்தவன்; பணக்காரன், ஏழை; ஆண்டான், அடிமை என்ற பாகுபாடுகள் இருக்கத்தானே செய்கின்றன? இவைகளுக்கு எவ்வகையிலாவது முடி வுண்டா? 'சுதந்தர ஜனநாயகக் குடியரசு' என்று

சொல்லலங்காரமாகப் பட்டங் கட்டிக்கொண்டு என்ன பயன்? சுதந்திரம் என்பது பிறநாட்டவரினின்று விடுபடுவதை மட்டுங் குறிப்பதாகாது. இது கருதியே காந்தியண்ணல் சுயராஜ்யம் என்ற சொல்லுக்குப் புதியதோர் பொருள்கண்டு அரசியல் மார்க்கத்தில் கூறி வரலாயினர். ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும் கவலையின்றி ஆனந்தமடைய வேண்டுவதே சுயராஜ்யம் என்று அவர் கூறிவந்தார். இத்தகைய சுதந்திரத்தினையே உலக மார்க்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருடைய உள்ளமும் அவாவி நிற்கின்றது. அந்தச் சுயராஜ்ய உணர்வு காட்டும் ஆனந்த மாராஜ்யத்திற்கு (Paradise on Earth) வழி எதுவாவது காணப்பெற்றதா? இன்பபுரிக்குச் செல்ல உதவும் பயணப் பாதை எது என்றே இன்னும் அறிய முடியாமல் திகைக்கின்றது மனித குலம். இது குறித்து நம் நாட்டுள்ளாரில் எத்துணைப் பேர்கள் சிந்தனை செய்கின்றனர்! ஆடு, மாடு, புழு, பூச்சிகள் போலவன்றோ மனித உயிரும் பிறப் பிறப்பெனுஞ் சூழலில் அகப்பட்டு உழல்கின்றது! மனித உயிரின் மேன்மையை, உலக வாழ்வின் ஏற்றத்தினை நன்கு உணர்ந்தோர்க்குச் சுயராஜ்யத் தத்துவத்தின் மகிமையினைக் கூறத் தேவைப்படாதென்றே கருதுகிறோம்.

எனவே, பிரஸ்தாபிக்கப்படும் புதிய சகாப்தத்திலும், பழைய நிலைமைகள் (மனித சமூக நோய்கள்) தொடர்ந்து வருமேல் அவைகளைப் போக்கப் பழைய சகாப்தத்தில் எடுத்துக்கொண்ட கழிவு முறைகளுக்கு (Remedies) அவசியம் இருந்தே தீரும். மற்றல்லாவிடில்,

"நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று ஈடில்லாத போறிஞர் ஒருவர் கூறினரே அதன் பொருள் என்ன? அதனுல் நாம் கற்றுக்கொள்ளும் பாடந்தான் (Lesson) என்ன? **ஆனந்த 'சுயராஜ்ய' சுதந்திரம் அடைந்தாலன்றிப் பள்ளு பாடி, யாடி, மகிழ வொண்ணுமோ?**

## பட்சபாதமென்பதா? பங்கீடு செய்வதா?

**வாதம்:**—சென்னை அரசாங்கத்தின் வகுப்பு உரிமை உத்தரவு (Communal Government Order) மூலமாக சாதி பாகுபாடுப் படுத்தி மக்களைக் கல்வி ஸ்தாபனங் களிலும், அரச மன்றங்களிலும் அனுமதிப்பதால், தகுதி மிக்கவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்; பட்சபாதமாக நடத்தப்பெறுகின்றனர்.

**பிரதிவாதம்:**—இந்த வாதமுறை நீதி நெறிச் சான்ற தாகும் என்று கூறுவதற்கில்லை. வகுப்பு நீதியின் அடிப்படைத் தத்துவத்தை (Basic Philosophy) உணர்ந்துகொண்ட தர்ம சிந்தனையாளர்கள் மேலே கூறிய வாதத்தினை ஏற்றுக் கொள்ளத் தயங்குவர். சென்னை அரசாங்கத்தின் வகுப்பு உரிமை உத்தரவு வகுப்பு மக்களின் ஜன சங்கியைக்கேற்பப் பலதிறப்பட்ட வகுப்புக் களினின்று தகுதி வாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு நல்ல முறையை வகுத்துக் கூறுவதாகும். கல்வி ஸ்தாபனங்களில் உள்ள இடவசதியை அனுசரித்தும், அரச மன்றங்களில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையை அனுசரித்தும் மக்களுக்கு நியாயமான முறையில் சம சந்தர்ப்ப சௌகரியங்களைப் (Equal Opportunities For All) பங்கீடு செய்து கொடுக்கவே வகுப்பு உரிமை நீதி கையாளப் பெறுவதாயிற்று. இந்த உத்தரவில் சாதி

காரணமாக எந்த வகுப்பு மக்களும் புறக்கணிக்கவோ, அபரிமிதமாக சலுகை கட்டவோ பெறவில்லை. பட்சபாதமாக நபர்களைத் தேர்ந்தெடுக்கலாயினர் என்று கூறி வாதிடுவதில் அர்த்தமே இல்லை. பட்சபாதமாக இருத்தல் என்பது எப்பொழுது? ஒரு சாராரே அரசினரால் போற்றிப் புரக்கப் பெற்றால் அதற்குப் பட்சபாதம் என்று கூறலாம். (இதுகாறும் நடந்து வந்தது அதுதான்!) அதற்கு மாறாக, பலதிறத்தினருக்கும் அபயக் கரந் தந்து அரசாங்கம் ஆதரவுக் காட்டினால் அதனையா பட்சபாதமென்பது?

1928-இல் கொண்டுவரப்பெற்ற வகுப்பு உரிமை உத்தரவின் தந்தையாரான திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள், 1950-ஆம் வருடத்தில் கூறிய வாக்குப்படியே உண்மை உணரலாகும். அவர் வாக்குவருமாறு:—

*"I shall say a few words about the Communal Government Order. Fourteen seats are to be distributed, six to non-Brahmins, two to Brahmins, two to Backward Classes, two to Scheduled Castes, one to Christian and Anglo-Indians and let us take it in the following order;—*

1. *Non-Brahmin*
2. *Scheduled Caste*
3. *Chiristian*
4. *Muslim*
5. *Brahmin*
6. *Backward Class*
7. *Non-Brahmin*
8. *Non-Brahmin*
9. *Scheduled Caste*
10. *Backward Class*
11. *Non-Brahmin*
12. *Chiristian*
13. *Brahmin*
14. *Non-Brahmin*

*For the first place Non-Brahmin has to be chosen. This is discrimination in favour of a Non-Brahmin and discrimination against all others—Scheduled Castes, Chiristians,*

*Backward Classes, etc. Similarly in the choice for the second place there is discrimination in favour of the Scheduled Caste and against the remaining five. In the choice for the fourth place there is discrimination in favour of a Muslim and against all other five. In the choice for the fifth place there is discrimination in favour of Brahmin and discrimination against all other classes. Thus in completing each cycle there is discrimination in favour of each community and discrimination against each community, that is to say, discrimination in favour of all and discrimination against all.*

*Can this be called discrimination as contemplated by Constitution?"*

இந்தக் கருத்தினையே அறிஞர் அம்பேத்கார் மிகவும் அழகாகவும், ஆணித்தரமாகவும், எளிய முறையில் விளக்கிக் கூறியுள்ளார். அஃது வருமாறு :—

*"Referring to the interpretation of Article 16(4) the Law Minister said, that the fundamental principle of Hindu Law was that there was no Hindu who did not have a caste. If, therefore, reservations were made in favour of backward classes which were nothing but a collection of certain castes, those who were excluded would belong to certain other castes. In the circumstances of the country it was impossible to have reservation without excluding some people who had a caste. On these points therefore, I do not think personally that the judgment (of the Supreme Court in respect of Madras Government C. G. O.) is a very satisfactory judgment."*

எனவே, சாதி காரணமாக மக்கள் புறக்கணிக்கப் பெறுகின்றனர்; பட்சபாதமாக நடத்தப்பெறுகின்றனர் என்பது அபவாதமாகும். சமூகத்தில் சாதி முறைகள் இன்றும் இருந்து வருவதால் அவற்றினை அடையாளக்

குறி (Index or Trade Mark)யாகக் கருதி மக்களுக்கு வசதியளிக்க வேண்டுவதாகின்றது. போட்ட பாதையின் மீதுதானே புகைவண்டி ஓடி ஆக வேண்டும்; போட்ட பாதை பழுதுடைத்தென இன்று நமக்குப் புலப்பட்டால் அதனை அடியோடு அகற்றிப் புதிய பாதையன்றோ போட வேண்டும்! இதனையல்லவா இன்று இந்திய சமுதாய முழுதுமே எதிர்பார்க்கின்றது!

தேர்ந்த ஞானஞ் சிறந்தொளிரும் முப்பாலைச் செய்தளித்த வள்ளுவப் பெருந்தகையாரை உலகினுக்கே தந்து வான்புகழ் தமிழ்நாடு கொண்டதென்றால், அர்த்தம் என்ன? அவர் சொன்ன வாக்கினைத் தாமேற்று நடக்காது, மற்றவர்களுக்கா விட்டுவிட்டனர்; இல்லை.

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்று செங்கோன்மையின் இலட்சணத்தைத் தெளிவுறக் கேட்ட சென்னை மாநில அரசியலார் மறந்தும் பிழைப்பரோ? அரசு இறைமைப் பதவி யேற்றிருத்தலான், மேற்கூறிய அரச தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியல் நடாத்தப்பெற வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டது.

## அரசாங்கப் பணம் பொதுப் பணமல்லவா?

வாதம்:—அரசாங்கத்தாராலும், அரசாங்கப் பண வுதவி (Grants in Aid) பெற்று நடத்தும் கல்வி ஸ்தாபன அதிகாரிகளாலும் நடத்தப்பெறும் கல்விச்சாலைகளில் மக்களை இனம், சமயம், சாதி, பால், பிறப்பிடம், மொழி ஆகிய வித்தியாசங்கள் காரணமாக மட்டுமே அனுமதி தா

மறுக்கலாகாது. இந்தக் கருத்தினையே இந்திய அரசியல் சட்டத்தின்கண் விதி 29(2) வலியுறுத்திக் கூறுகின்றது. அது வருமாறு ;—

*"No citizen shall be denied admission in to any educational institution maintained by the State or recieving aid out of State funds on grounds only of religion, race, caste, language or any of them."*

**பிரதிவாதம் :**—இந்த வாதந்தான் தென்னாட்டில் நடந்துவந்த அறிவுப் போரைப் பழித்துரைக்க ஏற்பட்டதாகும். முன்னர்க் கூறியபடி தென்னிந்தியாவில், குறிப்பாகச் சென்னை ராஜ்யத்தில் அநுஷ்டிக்கப்பெற்ற வகுப்பு வாரித் திட்டத்தை ஒழிப்பதற்காகவே இவ்வாத முறை தோன்றிற்று. அது வாதமாக மட்டும் நிற்காமல், அரசியல் சட்டத்தின்கண்ணும் இடம்பெற்று விட்டது! இந்தச் சட்ட விதி வகுப்புவாதத்தினைக் களைந்தெறியக் கூடியதென வடவர் மயக்கங்கொண்டு ஆதரவுக் காட்டினர். தென்னவர் விதியினால் உண்டாகும் தீமையினை எடுத்துப் புகட்டா நின்றனர். **சமூக நீதியைச் சாட வந்த சட்ட விதியே 29(2) என்பது.**

மேற்கூறிய சட்ட விதி மூலம் அரசாங்கத்தின் நேர்முக ஆட்சிக்குட்பட்ட கல்வி ஸ்தாபனங்களும், அரசாங்கப் பணவுதவி பெறும் கல்வி நிலையங்களும் கட்டுப் படுத்தப்பெறுகின்றன, அரசாங்கத்தாரிடம் பொதுமக்களிடமிருந்து சேரும் பணம் பொதுப் பணமாகக் கருதப் பெறுவதால், அரசாங்கம் ஒரு நம்பிக்கையான குழு (Trustee) போல அமைந்து நாட்டில் உள்ள பலதிறப் பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கே அதனை அர்ப்பணஞ் செய்ய வேண்டும். அந்தப் பொதுப் பணம் ஒரு

சில வகுப்பு மக்களையே ஏகபோகமான வாழ்விற்கு ஆக்க மளிப்பதாக அமையலாகாது. ஒரு குடும்பத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் சுகர் தரும்வகையில் குடும்ப வரவு–செலவு பட்டியலை (Family Budget) நிர்மாணிப்பது போல், நாட்டில் உள்ள எல்லா மக்களுடைய க்ஷேமத்தைக் கோரியே அரசாங்க வரவு—செலவு பட்டியல் (Government Budget) தயாரிக்கப்படுகின்றது. அவ்வாறு தயாரிக்கப்படும் பட்டியலின் அடிப்படைத் தத்துவத்தைப் பொருளாதார நிபுணர்கள் பலவாறு விளக்கி வருவதை நூற்கள் வாயிலாக உணருகின்றோம். அரசியல் ஞானம் நன்கு தேர்ந்த பிளேட்டோ (Plato) என்னும் அறிஞர், அரசாங்கத்தினுடைய பொதுக் கொள்கைகளை இரண்டு கூறுகளாக வகுத்துக் கூறியுள்ளனர். அவை ஆங்கிலத்தில் வருமாறு :—

*(1) "To keep the good of the people so clearly in view that regardless of their own interests, they will make their every action conform to that."*

*(2) "To care for the welfare of the whole body politic and not in serving the interests of some one party to betray the rest."*

இவ்வுயரிய நோக்கங்களைப் பூர்த்திச் செய்வான் பொருட்டே மக்களிடமிருந்து வரி வசூல் செய்து இராஜாங்கக் கஜானாவுக்கு (State Treasury) அனுப்பப் படுகின்றது. பொதுமக்களிடமிருந்து வரி வசூல் செய்வதற்குப் பல முறைகள் கூறப்பெற்றுள்ளன. அவைகளுள் ஒன்று அனுகூலந் தரும் வரி வசூல் (Benefit theory of taxation) முறையாகும். அதன்படி பணக்காரன், ஏழை என்ற பாகுபாடின்றி; உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி; கற்றவன், கல்லாதவன் என்ற

வித்தியாசமின்றி அரசாங்கம் பொதுப் பணவுதவியால் மக்களுக்கு நன்மை புரிய வேண்டும் என்று வலியுறுத்தப் படுகின்றது.

மேற்கூறிய நோக்கங்களைக் குறிப்பிட்ட முறை வழி நிறைவேற்றுவதனை அளந்தறிய வேண்டுவது மக்கள் பொறுப்பாகும். ஜெரிமி பென்தாம் (Jeremy Bentham) என்னும் அரசியல் ஞானியார், அரசாங்கம் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் நன்மைகள் வழங்கிச் சந்தோஷமாக வாழச் செய்ய வேண்டுமென்று கூறுகின்றார். பெருவாரியான மக்களின் பூரண சந்தோஷமே (Greatest happiness of the greatest number) ஓர் அளவு (Formula) கோலாக அரசியலில் அமைய வேண்டுமென்று குறிப்பிடுகின்றார் அம்மேதை. இவர் எல்லா மக்களும் சமம் (All men are equal) என்ற வாதத்தினை ஒப்புக் கொள்ளாதவராய், அவ்வாதம் அமைதிக்கு ஊறு செய்யுந்தகையது (Anarchic fallacy) என்று கூறிய போதினும், அரசியலார் ஆக்கித் தரும் நன்மைகளைக் கணித்தறிய ஓர் அளவுமுறைத் தேவைப்படுகின்றது என்று பகருகின்றார். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான நன்மைகளை ஓர் அரசாங்கம் பெருவாரியான மக்களுக்கு அளிக்க இயலுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அஃது நல்லாட்சி எனப் புகழப்பெறும். இதுகாறும் கூறப் பெற்ற முறையில் அரசாங்கம் அமையப் பெறுவிடில் பொதுஜனப் பழிப்பிற்கு (Public condemnation) ஆளாக நேரிடும். பொதுமக்களுக்கு நன்மை யளிக்காத காரணத்தால் அத்தகைய அரசாங்கம் மக்களை வருத்தி வரி வசூல் செய்வதாகக் கருதப்பெறும். அவ்வாறு மக்கள் வருந்த, வசூல் செய்த வரிப் பணம் நின்றுதவாது

பாழாகும். அத்தகைய அரசியலமைப்பைக் குறளாசிரியர் மக்கள்

"அழக் கொண்டவெல்லாம் அழப்போம்"

என்றும்,

"அல்லற்பட் டாற்று தழுத்கண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்றும் வன்மையாகவும், விளக்கமாகவும் கூறிக் கண்டிப்பாராயினர்.

எனவே, பொதுமக்களிடமிருந்து வரும் பொதுப் பணம் அவர்களுக்கே உபயோகமாகுமளவில் அரசாங்கம் ஒரு நல்ல முறையைக் கையாளுவதில் குற்றமில்லை என்றே கருதுகின்றோம். அத்தகைய அற மார்க்கத்தின்கண் சென்றதே வகுப்புரிமை நீதி என்னும் நேரிய சாதனம். அதனைக் குறை கூறி நிற்போர், ஒன்று, பல சமூக மக்களுக்கும் நன்மை தரும் நீதியை வழங்க மனமொருப்படாத வரேயாவர்; மற்றும் அவர்கள் சுயநலக் கவன சித்தர் களாக விருப்பர். ஓங்குக பரநலம்; வீழ்க சுயநலம்!

## தகுதி, திறமை கூப்பாடும், அறிவுப் பண்பு படும்பாடும்!

வாதம்:—(1) தகுதியும் திறமையும் உள்ளவர் களையே கல்வி நிலையங்களிலும், அரச மன்ற பணிகளிலும் அனுமதிக்க வேண்டும்.

(2) தகுதியும் திறமையுமின்றி வேறு அடிப்படை யில் மக்களுக்கு வசதியளிக்கலாகாது.

(3) தகுதியும் திறமையுமற்றவர்களை அனுமதிப்பதால் மனித சக்திப் பாழாகின்றது; நாடு முன்னேற்றமடையாமல் பாழாகும்.

(4) தகுதியும் திறமையும் உள்ளவர்களை நியமித்தால்தான் சிறந்த தரத்தினை விருத்திச் செய்ய இயலும்.

**பிரதிவாதம்** :—முதன் முதலாவதாக, மனித குலம் வாழத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும் என்று அறிஞர் டார்வின் (Darwin) கண்டுரைத்த கூர்தல் அறம் (Theory of Evolution) குறிப்பிட்டுக் காட்டியது. மனித உறுப்பியலைப் பற்றியும், ஜனப்பெருக்கத்தைப் பற்றியும் அவர் நன்கு ஆராய்ந்ததமையான் உலகில் வாழ வேண்டுபவன் தகுதியுடையவனாகவே இருத்தல் வேண்டும் (Survival of the Fittest) என்றுணர்ந்து கூறினார். இந்தக் கருத்தைப் புனைந்துரையென்றோ, ஆதாரமற்ற அபிப்பிராயமென்றோ கூறிவிட முடியாது.

உலக சுகாதாரக் கழகம் (World Health Organisation) உலகை ஜனப்பெருக்கத்தைப் பற்றி அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டது. அதன்படி கி. பி. 1650-ஆம் வருடம் உலகில் சுமார் 545 இலட்ச மக்கள் இருந்தனரென்றும், 1949-ஆம் வருடத்தில் 2,377·4 இலட்ச மக்களாக விருத்தியாயினரென்றும் அறியக் கிடக்கின்றன. இவ்வாறாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மக்கட் கூட்டம் உலகில் வாழ்ந்தே இறக்க வேண்டுமாதலால் தம்மை உலக வாழ்வினுக்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்கொள்வது வரவேற்க வேண்டிய முயற்சியேயாகும். தேர்ந்த ஞானம் படைத்தோர் கருத்தும் அப் பாணியிலே இருக்கக் காண்கின்றோம்.

ஆயினும், இந்தக் கருத்தினைச் சுயநலக் கோட்பாட்டிற்காக அடிமைப்படுத்தலாகாது. தகுதியுள்ளவனே வாழ்தற்குரியவன் என்று சொல்லி வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் மக்கட் கூட்டம் போட்டியிட்டுப் பரிதவிப்பது மனம் பொறுத காட்சியாகவுள்ளது!

பிள்ளை பெற தகுதி, பிறந்த குழந்தை உயிருடனிருக்க தகுதி, வளர்த்த மகவு படிக்க தகுதி, படித்த பிள்ளை உத்தியோகம் பெற தகுதி, சம்பாதித்துப் பிழைக்க தகுதி, பிழைத்து இறந்தபின் நற்கதியடைய தகுதி என்றின்னவாறு ஒவ்வொரு துறையிலும் தகுதி வேண்டும் என்று கூறிப் பெருத்ததோர் கோட்டமிடுவதில் பொருள் இல்லை. தகுதி வாதம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; மனிதன் தோன்றின நாள் முதற்கொண்டு அவ்வாதம் பலவிதத் திருவிளையாடல்களுக்குக் காரணமாக இருந்து வருகிறது. தகுதி வாதம் பிறரைச் சுரண்டிப் பிழைக்க வழி வகுத்துக் கொள்வதற்காகக் கையாளப்படும் ஒரு போலி முறையாகும். அவ்வாதத்தினைக் கேட்டு மயங்காதவனே மனிதன்; அவனே இன்றுள்ள உலகில் வாழத் தகுதியுள்ளவன். இயற்கையின் வல்லபத்தால் முளைத்தெழுகின்றது மனித இனம். அதனது இயற்கைப் பாதையில் செயற்கைத் திட்டங்கள் தலையிடுமானால் மிகுந்த குழப்பங்கள் (Maladjustments and dislocations) உண்டாகின்றன. அக்குழப்பங்கள் நேராவண்ணம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இற்றை நாளில் அரசியலார்பாலும், மக்கள் பாலும் அமைந்துள்ளது.

முதன் முதலில் தகுதி, திறமை என்ற சொற்களின் பொருள்களையும், அவற்றின் ஆட்சி முறைகளையும் (Usage) தெரிந்துகொள்வது மிக அவசியமாகும்.

தகுதி என்ற சொல், ஒருவன் தன்னுடைய மன இசைவுக் கேற்ற தொழில் முகாந்தரத்தில் ஈடுபடப் பொருத்தமுள்ள வனுக இருத்தல் வேண்டும் என்றுதான் குறிக்கும். அவ்வாறு இசைந்த பொருத்தத்தின் காரணமாக ஏற்றுக் கொண்ட தொழின் முறையினைப் பிறர் கண்டு மெச்சும் வண்ணம் சாதித்துக் காட்டுதலையே திறமை என்று குறிக்க லாகும். அங்ஙனமின்றி எடுத்ததற்கெல்லாம் தகுதி, திறமை என்று கூப்பாடுப் போடுவது மனித குலத்தின் கூடாத செயலேயாகும். நமது நாட்டில் தகுதி என்ற சொல்லின் ஆட்சிப் பயன் எங்ஙனம் அமைந்திருந்தது என்பதை விளக்கச் சில உதாரணங்கள் காட்டலாகும்.

உதாரணம்: ஒன்று: சமயம்:—உலகிற் பிறந்த ஓர் உயரிய ஆன்மா, கடவுள் உணர்வு மிகுதியும் பெறு வான் வேண்டி பல இன்னல்களை யனுபவித்து முடிவில் அண்ணலார் பாதம் நண்ணுங்காலைப் பிறனெருவன் குறுக்கிட்டு, "நீ ஆண்டவன் திருவருட் கடாட்சத்திற்கு அருகனுகக் கூடியவனல்லன்; அங்ஙனம் பெறுவதற்கு நீ உயர்ந்த குலத்தில் பிறந்திருக்க வேண்டும்" என்று தகுதி வாதம் இயற்றியது பொருந்தாத செயலன்றே! குலத்தினைச் சாக்காக வைத்துப் பிறரை அவமதித்து ஒதுக்குவது நேரிய ஒழுக்கமன்று! இந்த உதாரணக் கருத்திற்குக் காவியமாக அமைந்த நந்தனர் கதையை அறியாதாருண்டோ?

உதாரணம்: இரண்டு: அரசு:—விழுமிய உழு கலப்பையைப் பிடித்து நிலத்தினைப் பண்பு செய்து விளையுள் உண்டாக்கிப் பிழைத்துவந்த குடும்பத்தில் பிறந்த ஒரு வீர வாலிபன், நாட்டார்வங் கொண்டு அவன் காலத்தில்

எதிர் அரங்கத்தில் நின்றோரை நன்கு தாக்கி, வென்று மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்தான்; பாணி பாடி தாணியாக்கினன் என்ற புகழ் பெற்றான். ஆனால் அவன் மணிமுடி தரித்து அரசன் ஆக அருகனல்லன் என்று தடுக்கப்பெற்றான் வேத வேதாந்தத்தில் சிறந்த காகபட்டன் என்போனால்! இதற்குக் காரணம், அவ்வீர வாலிபன் அரச குடும்பத்தில் பிறவாமையேயாகும். நாட்டை ஸ்தாபிதம் செய்த அவ்வீர வாலிபன் சிவாஜி, நாடாளத் தகுதி பெறவில்லை என்று கூறிய வாதம் ஏற்புடைத்தாகுமா?

உதாரணம்: மூன்று: கல்வி:—வில் வித்தையில் பயிற்சிப் பெற்றுத் தேர்வுப் பெற விருப்பம் மீதூர, அரச குடும்ப குரு துரோணரை அடுத்தான் ஏகலைவன் என்னும் அருங் கலைவாணன். ஆனால், அவன் அனுமதிக்கப்படவில்லை. குரு பக்தியில் சிறந்த அவன் துரோணரைப் போன்ற ஓர் உருவம் அமைத்து வழிபடலாயினன். அதன் காரணமாக அரசகுல மாமணிகள் துரோணரிடம் கற்றுக் கொண்ட வில் வித்தைகளினும் சிறப்பாக, ஏகலைவன் ஓதாதுணர்ந்தான். வேடுவ குலமணியாய் வந்த அவ்வேகலைவன் குரு பக்தியை விளக்கும் கதையினைப் படிக்காத சிறுருண்டோ?

உதாரணம்: நான்கு: தொழில்:—பழைய காலத்தில் பின்னணி வகுப்பாரின் நிலைமையை இராமாயணத்தில் ஒரு கதை விளக்கமாகக் கூறுகிறது. இராமர் அரசாண்ட காலத்தில் ஒருவர் வந்து தன் மகன் இறந்துவிட்டானென்றும், இராம ராஜ்யத்தில் ஏதோ அநீதி நடந்திருந்தாலொழிய தன் மகன் நல்ல பிராயத்தில் இறந்து

விட மாட்டானென்றும் கூறினாராம். அஃதென்ன அநீதி என்று ஆராய்ந்தபோது ஒரு சூத்திரன் பாப விமோசனத்திற்காகத் தவஞ்செய்து கொண்டிருந்தான் என்று உணரப்பெற்றது. அதன்பேரில் பிராமணோத்தமர்களுக்கே உரிய தவத்தைச் செய்த சூத்திரன், இராமரால் மாய்க்கப்பட்டான் என்று கதை எழுதப்பட்டிருக்கிறது. இதனைப் படித்துணராத இராமாயணப் பக்தர்களுண்டோ?

மேலே காட்டிய உதாரணங்களின் மூலம் தகுதி என்ற சொல் நமது புண்ணிய பூமியாகிய பாரத நாட்டில் எங்ஙனம் கருத்திலும், காரியங்களிலும் பரிணமித்தது என்ற மெய்மையினை ஒருவாறு உணரலாகும். இந்தத் துர்ப்பாக்கிய நாட்டில் என்று "மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" வகுக்கப்பெற்று அநுஷ்டானத்தில் வந்ததோ அன்று முதற்கொண்டே ஒருசில மக்களே எல்லாத் துறைகளிலும் சீர்மைப் பெறத் தகுதியுடையவர்கள் என்ற கருத்து (Cenception) தோன்றிவிட்டது! இதனையே இன்று 'வள்ளுவர் செய் முப்பாலை மறுவற நன்குணர்ந்தோர்' மரபில் வந்தவர்கள் ஆட்சேபணை செய்கின்றனர்கள். இது பிழைப்பெனல் பொருந்துமோ?

இனி, திறமையைப் பற்றி நந்தேயத்தினர் எங்ஙனம் உணர்ந்திருந்தனர் என்பதைக் கூறலாம். **திறமை, பழக்கத்தால் பெறும் ஒரரிய பக்குவநிலை.** இஃது ஒருசில வகுப்பினருக்கே அமைவதாகும் என்று வாதிடுவது அபவாதமாகும். மேலும், திறமை பிறர் கண்டு மெச்சும் போதுதான் உணரப்படும் பல்லோரால். ஒருவன் தன்னைத் தானே திறமைசாலி என்று கூறிக்கொள்வதைப் பிறர் கேள்வியுற்ற போதினும் நகைப்பரன்றோ! நமது நாட்டில்

மூடி மறைக்கப்பெற்ற திறமை மிக்க சின்னங்கள் பல வுண்டு. திறமையை மெச்சுவோன் சான்றோஞக இருக்க வேண்டும்; சமுக்கர்கள் திறமையை நன்கு மதியார். ஒருவன் தனக்கு உகந்தானல்லாவிடில் அவன்பால் திறமை காணினும், சமுக்கர்கள் அவனை மதித்துப் பெருமை செய்யார்; அதற்கு மாருகத் தனக்கு வேண்டிய வன்பால் திறமையற்றபோதினும், மதிப்பினைக் காட்டுவர்; மேலும் பூரணமாகப் பூட்டுவர். இஃது பண்டும் நிகழ்ந்தது; இன்றும் காணப்பெறுகின்றது! இந்த நாட்டில் ஓதாதுணர்ந்தபோதினும் உரை மூலம் தெளிவிக் காதவரான இராமகிருஷ்ணரைப் புகழ்ந்து பேசும் அளவு, ஓதாதுணர்ந்தும், அருட்பா வென்னுமோர் உயரிய நல்லுரை வழங்கியும் வந்த இராமலிங்கப் பெருமானைப் போற்றிப் பாவுவதற்கு ஆளில்லாது போனமைக்குக் காரணம் என்ன? திருவள்ளுவர் செய்தளித்த வாழ்க்கை வழிகாட்டியாகிய ஒரு பெரு நூலுக்கு மறு நூலாக உலகிலெங்காவது காட்ட வியலுமோ? அந்தப் பெரு மகனுருக்கு நாடு செய்யும் பெருமை யாது? 'கண்ணன் காட்டிய வழி'யென்று கீதைக்குப் புனைந்துகொண்டு, ஜயந்தி கொண்டாடி மகிழ்கின்ருேமே, அதற்குக் காரணம் அறிந்து கொண்டீர்களா?

சமயத்தொண்டும், இலக்கியப்பணியும் மேற்கொண்ட பெருமக்களுக்கே நாட்டிலிருக்கும் செல்வாக்கு இங்ஙன மாயின், அரசியல் நிர்வாகமும், மக்கட் சேவையும் புரிந்த பெருமக்களைப் பற்றிக் கூற வேண்டுமா? எத்துணை அறிஞர்கள் ஆதரவுப்பெருது கைவிடப் பெற்ருர்கள்! தகுந்த சமயம், சந்தர்ப்பமில்லாது எத்துணை மாணிக்கங் கள் இன்று மறைந்து கிடக்கின்றன? இம்மாதிரியான

நிலைமையை ஆங்கிலக் கவிஞர் பெருமான் மிகவும் அருமை யாகச் சித்தரித்துள்ளமையை ஈண்டு உணர்ந்து கொள்ளற் பொருந்தும். அது வருமாறு :—

*" Full many a gem of purest ray serene*
*The dark unfathomed caves of ocean bear*
*Full many a rose was born to blush unseen*
*And waste its fragrance in the desert air."*

தகுதி, திறமை என்ற சொற்களின் அர்த்த இலட் சணங்களும், ஆட்சி முறைகளும் வேறாக இருக்க, அவற்றினை எங்ஙனம் இக்கால அதிகாரிகள் நிர்ணயிக் கின்றனர் என்பதனை அடுத்துக் கவனிப்போம். குறிப் பிட்ட பரிட்சையில் அதிக அம்சங்கள் (Marks) வாங்கி முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று தேறியிருந் தால் அம்மாணவர்களையே மற்ற தொழிற் கல்வி (Professional Courses) கற்க தகுதியுடையவர்கள் ஆவார் கள் என்று தீர்மானித்து அவர்கள் திறமைசாலிகளாகவு மிருப்பர் என்று நம்புவாராயினர் அதிகாரிகள். இம் முறையில் தகுதி, திறமையை நிர்ணயம் செய்யும் வழக்கம் ஆங்கில ஆட்சியினரிடமிருந்து இரவல் வாங்கப் பெற்ற தாகும். நமது நாட்டில் பண்டைய காலங்களில் கூட் டாக இருந்து மாணவர்கள் குருகுல வாசஞ்செய்து ஞானநுபவம் பெறுவர். ஆனால் அவர்கள் பெரிதும் பரிட்சார்த்த முறைகளுக்குட்பட்டிருப்பர் என்று கூறு வதற்கில்லை. அறிவுக் கலைகளில் ஆர்வமிக்கவர்கள் தாமா கவே கற்று மேலும் அக்கலைகளை அபிவிருத்திச் செய்து உலகுப் புகழ வாழ்ந்தனர். அவர்கள் தேர்வுப் பத்திரம் பெற்றவர்களாகத்தானிருந்தனர் என்று உறுதியாகக் கூறு வதற்கில்லை. பரிட்சை வைத்தல், அம்சம் வழங்குதல், குறைந்தபட்ச அம்சத்திற்கு (Minimum Qualifying

Marks) மேலாக வாங்கியவர்களைத் தேர்ந்தெடுத்தல் என்ற இயந்திர முறையை (Mechanical System) நம் முன்னோர்கள் கையாளவில்லை. இந்த அம்சம் போடும் வழக்கம் முதன் முதலாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டது. குறிப்பாக ஆங்கில நாட்டில் விக்டோரியா மகாராணியார் ஆண்டுவந்த காலங்களில் இப்பழக்கம் சலுகை காட்டித் தேர்ந்தெடுத்த முறையினை (Patronage and Favouritism) எதிர்த்துக் கைக்கொள்ள பெற்றதாகும். ஆயினும் காலத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளும் யூகம் படைத்த அம்மேலை நாட்டு மக்கள், இம்முறையினை நாளடைவில் கைவிடலாயினர். மாணவர்கள் பெயர்களுக்கு எதிரில் அம்சங்கள் போடுவதை விடுத்துப் பரீட்சை முடிவுகளை முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்பு என்றின்னவாறாகக் குறிப்பிட்டு வகுத்து வெளியிடுகின்றனர்.

அம்சம் வாங்குவதனை அடிப்படையாகக்கொண்டு மக்களின் தகுதி, திறமையை நிர்ணயிக்கும் முறையினை அத்துறைகளில் அநுபவம் வாய்ந்த அறிஞர்கள் தம் கருத்துரைகளின் ஆதரவுடன், அம்பலமேற்றுவாம். கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் - திரு. குருவில்லா ஜாகப் (Kurivilla Jacob) அவர்களுடைய அநுபவ வாக்குக் கீழே தரப்படுகின்றது :—

*"The students, the public and the employers have always given a value to public Examination marks more than they ever deserved and have identified these marks as almost final indications of merit of individuals. A careful analysis of the Conditions under which these totals of marks are made—unreliability of questions—unreliability of valuations—fluctuations in individual performances—one would hesitate to say*

*that any single set of marks indicate the real merit of an individual—we should remember that the success of an individual is due to a very complex functioning of the human system. The merit of which cannot be judged by examination based on bookish and verbal achievement. The social, emotional, intellectual and physical growth of a person do not follow the same rate. Intellectual and emotional growth of a person are continuous.*

*For all these reasons it is impossible to assess the merit of any individual with any finality."*

கல்வித் துறையநுபவஞ் சிறக்கப் பெற்ற பேராசிரியர் - எம். இரத்தினசாமி அவர்கள் கூற்று அடுத்துத் தரப் படுகின்றது :—

*" Much has been said in all this discussion about merit. What is merit? It is to be judged only by performance at examinations? A touching faith in written examinations was the note of the mid—victorian reaction against the evils of patronage. But recent investigation into the examination has shown that they are not reliable criteria of merit as they were once considered to be. That is why most selection processes nowadays include the oral interview where the personality, alertness, physical and social fitness of the candidate for admission to the service can be tested and his character can be reviewed from the school and college records."*

சட்டசபை அங்கத்தினராக விருந்த ஆசிரியர் - ஏ. டி. பால்மர் (A. T. Palmer) அவர்கள் 5–8–1921 அன்று கூடிய சட்டசபையில் பேசிய கருத்து கீழே தரப்படுகின்றது :—

*" Examinations do not always indicate efficiency of man, I as a school master, have come across various instances in*

*which young people who failed in their matriculation are able to do a great deal of work. And the Government knows that efficiency is always expected from examinations when they appoint officers in the Police Department and in the Salt Department and when officers are recruited from 'Home.' The honourable the Finance member said that men in the Secretariat offices are not born but made. But it does not take a very long-time, Sir, to prepare men for the Secretariat offices. An intelligent young man, I suppose can learn, the work in the Secretariat offices, with in six months."*

சட்ட மந்திரியும், கல்வி மந்திரியுமாக இருந்த கனம் - மாதவ மேனன் அவர்கள் அம்சம் வழங்கும் பழக்கத்தை ஹாஸ்ய நயத்துடன் கூறிய வாக்கினை அடுத்துத் தரப்படுகின்றது :—

"We have heard much about merit from experts like Dr. Lakshmanaswamy Mudaliar and Dr. Cheriyan. In this connection, may I suggest to Dr. Lakshmanaswamy Mudaliyar, Vice-Chancellor of the Madras University, one thing? I have heard that in certain Western Universities and in England also, they do not give marks at all but only the class. They say, so many first classes, with distinctions obtained in subjects, if any, and never give marks. Why should not our Universities also follow that example, which would certainly be a test of merit? What is the difference between 75 marks and 74 marks—I cannot see any except the difference in the temper of the examiner. When he was in a good temper he might have given 75 marks and at another stage when he was in a bad temper he might have given 74 marks. I myself, had occasion to correct certain examination papers when I was for a few days working as a teacher on behalf of somebody else. I knew that much depended on my temperament at the time of valuation of the paper, whether it was after food, or before food, whether I was irritated or otherwise. Of course the fundamentals will be there, that is, marks for questions

will be there. Giving 75 or 74 adding half a mark here and giving half a mark less there, is not very real or so much to be counted as when we say simply that a class will be given. By adopting that example we could do much help."

உலகிற் சிறந்த அறிஞர் எனவும், கல்வித் துறையில் பரந்த அநுபவம் பெற்றவர் எனவும் புகழப் பெற்ற **மருத்துவமாமணி - திரு. சர். ஆற்காடு - இலட்சுமணசாமி முதலியார்** அவர்களுடைய ஆழ்ந்த கருத்துரையைக் கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றது :—

*" Marks and merit were not necessarily identical. He had, as a student, not obtained a First class pass ; he did not mind stating that now. He could mention Dr. John Mathai Dr. C. Ramalinga Reddi and others in this connection. As Dr. Gregory had emphasised it was originality and not mere success in an examination which only showed up one's power of memory that mattered.*

*Dr. Mudaliar did, however, believe in merit. But the 'merit' he had in view was the solid achievement of every individual."*

இந்திய யூனியன் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அதிகாரிகள் தயாரித்த அறிக்கையொன்றை உள் நாட்டு மந்திரியாகவிருந்த அறிஞர் - **இராசகோபாலாச்சாரியார்** அவர்கள் 11-10-51 அன்று இந்தியப் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தார். அவ்வறிக்கை,

*" With the widely acknowledged deterioration in the standards of our University degrees, the written test has become in many cases more an evidence of the power to memorise book knowledge than of genuine mental qualities."*

என்று (Indian Administrative Services) ஐ. ஏ. எஸ். பரிட்சைகளில் ஈடுபடுபவர்கள் தம் உண்மையான தகுதியைப் பற்றியும், திறமையைப் பற்றியும் அம்பலப்படுத்தியுள்ளது. உண்மையான தகுதி, திறமையினை யறிய மேற்கூறிய கமிஷன் அதிகாரிகள் நேர்முகத் தேர்வு முறையைக் (Viva voce test) கையாள வேண்டுவது அவசியமாகும் என்று கூறியுள்ளனர்.

மேற்கூறிய அறிவுரைகளின்படி உண்மையான தகுதி திறமைகளை அம்சங்கள் மூலம் நிர்ணயிக்க முடியாதென்று பெறப்படுகின்றதன்றோ! ஆனால், இக் கருத்திற்கு மாறாக ஒருவருடைய தகுதி திறமைகளை அறிவதற்கு வேறு முறைகள் இல்லாதபோது அவர் பெறும் அம்சத்தினையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியதாக இருக்கிறதென்ற கருத்தும் நாட்டில் உலவி வரலாயிற்று, இந்தத் தகுதி திறமை கூப்பாடு இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவை இயங்க வைக்கும் அங்கமாகிய தென்னாட்டில் ஒரு சில மக்களால் உண்டாக்கப்பெற்ற ஓர் இடர்பாடாகும். "யாமே உயர்ந்த மக்கள்; யாமே ஓதற்கும், ஓதுவித்தற்கும் உரியேம்" என்று கூறிப் பிறரை மயக்கி ஏமாற்றிய காலங் கழிந்தபடியாலும், காட்சிக்கரிய பரம்பொருளின் பேரைச் சொல்லி அச்சமூட்டிப் பல கதைகள் எழுதி மேலும் ஏமாற்ற முடியாமற் போனபடியாலும், தகுதி திறமை என்று சொல்லி, சுயநலக் கவன சித்தர்கள் நாட்டில் புதியதோர் தொல்லையை உண்டாக்கினர். இந்தத் தொல்லைக்குக் காரணம் ஒன்றே! நாட்டில் மக்களுடைய நன்மையைக் கோரி அமைக்கப்பெற்ற ஸ்தாபனங்களில் உள்ள பதவிகளின் எண்ணிக்கை மிகச்

சில; அவற்றினைக் கூட்டாக நின்று சுயநலக் கவன சித்தர்கள் தாமே பெற முயற்சிகள் பல இயற்றி வருவதால் மேற்கூறிய இடர்பாட்டிற்கு இடம் ஏற்படு கின்றது. இந்த அநாகரிகப் போட்டித் (Indecent competition) தகுதியற்ற, திறமையற்ற மக்களுக்கு இட வசதி செய்து கொடுக்கின்றார்கள் அரசியலார் என்று அபத்தமான முறையில் எழுந்ததாகும். ஆண்டவனால் படைக்கப்பெற்ற மக்களினம் பிறப்பால் ஒக்கும்; மற்றபடி செய்தொழிலின் சிறப்பால் பிரிந்து காணும். அதற்கு அறிவு உண்டு; திறன் உண்டு; அவற்றினை ஆய்ந்தறிந்து பிரயோகிக்க வேண்டியதே அவ்வறிவு பெற்றவனுடைய கடமை. ஒருவருடைய தகுதிக்கும், திறமைக்கும் மற்றவருடைய தகுதிக்கும் திறமைக்கும் மாத்திரையில் (Degree) வித்தியாசம் இருக்கலாம். அது காரணமாகத் தகுதியில்லை; திறமையில்லை என்று குறைந்த பட்சம் அம்சம் வாங்கியவர்களை ஏமாற்ற நினைப்பது சிறந்த சமூக ஒழுக்கமன்று. தகுதியை அடிப்படையாகக் கொண்டு அநுமதி தரப்பட வேண்டும் என்று கூறினால், தகுதியின் தரத்தை அல்லது எல்லையைக் கணித்துக்கொண்டு மக்களைத் தெரிந்து எடுத் துக்கொள்ள வேண்டும் (A fixed standard for admission). தகுதி நிர்ணயம் இல்லாது மன விருப்பப்படித் தேர்ந்தெடுப்பது முறையாமோ? குறிப்பிட்ட கலைப் படிப்பைப் பெற விரும்புபவர்கள் குறிப்பிட்ட அம்சம் வாங்கியிருந்தால், தேர்வுச் செய்யப்படும் என்று திட்ட வட்டமாகத் தெளிவித்தல் வேண்டும். ஒரு மாணவனை விட இன்னொரு மாணவன் பத்து அல்லது பதினைந்து அம்சங்கள் அதிகம் வாங்கிவிடுவதால் தேர்வுத் தகுதியின் தரத்தை (Standard of merit) மாற்றலாகாது. மேலும்

இந்தத் தகுதியை மற்றும் பல அம்சங்கள் சேர்ந்தியைந்த தாக நிர்ணயிக்கலாகாதா? மாணவனுடைய அறிவின் திறம், உடல்வளம், உதாரகுணம், முகப்பார்வை, நடவடிக்கை, அவனுக்குள்ள சமூகச் சூழ்நிலை (Social Condition), பொருளாதார வசதி (Economic Status) ஆக இவ்வனைத்தையும் கண்டு தகுதி திறமையை நிர்ணயித்தல் சாலும். தகுதியை அம்சத்தின் வழி நிர்ணயிக்க வேண்டுமானால் குறிப்பிட்ட ஒரு பரீட்சையின் முடிவினை மட்டும் எடுத்துக்கொள்ளாமல், மாணவன் எழுதிய முக்கியமான பட்ரிசைகள் பலவற்றில் வாங்கிய அம்சங்களின் சராசரி (Average) கணக்குப் பார்த்து நிர்ணயிப்பது, உறுதிப் பயப்பதாகும். தேர்வுப் பெறுவார்தம் தகுதியை நிர்ணயிப்பதற்குமுன், தேர்வுச் செய்வார்தம் தகுதியை நிர்ணயித்துத் தேர்வுக் குழுவில் அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டும். பொதுமக்கள் முன்னேற்றத்தில் கவலை இல்லாத சுயநலமிகளுக்குக் குழுவில் இடம் கண்டிப்பாக அளிக்கலாகாது. சிறந்த ஞானமும், பரந்த அநுபவமும், நன்னோக்கமும், சான்றாண்மையும் மிக்குள்ள தேசபக்தர்களையே நியமித்து, நபர்களைத் தெரிந்தெடுக்கப் பணிக்க வேண்டும். இதுகாறும் தகுதியினைப் பற்றிப் பொதுப்படக் கூறலாயினோம்; இனி, உதாரணங்கள் மூலம் விளக்குவாம்.

**உதாரணம்: ஒன்று: கல்வித் துறையும் — தகுதி நிர்ணயமும்:**—இட நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இற்றை நாளில் சிறுபிள்ளைகள் படிப்பிலும் தொல்லைகள் புகுந்து, சமூகத்தினரை அலைக்கின்றது. எலிமெண்டரி பாடசாலையினின்று நீங்கி உயர்நிலைப் பள்ளி ஏக விரும்பும் மாணவனுக்கு ஒரு பரீட்சை (Entrance test); உயர்நிலைப் பள்ளிப்

படிப்பு முடிந்து கல்லூரிப் படிப்புப் பெற விரும்புபவனுக்கு ஒரு தகுதி (Eligibility) ; நடுத்தரத் தேர்வுப் படிப்பு முடித்துத் தொழிற் கல்விப் பெற ஒரு தகுதி (Merit), அத்தகுதியை நிர்ணயிக்கும் அம்சம் என்று இன்னவாறாகப் பல வழியடைகளை மாணவர்கள் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கின்றது. இத்தகைய முறையில் தகுதி நிர்ணயம் அமைந்திடுவதால், பொழுது வீணாவதன்றி விழுப்பமொன்றும் கண்டிலம்.

கல்வித் துறையிலீடுபட்ட உபாத்தியாயர்கள் நேர்மையுடனிருத்தல் வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்ப் பார்க்கின்றனர். ஆனால் அவர்கள் பெரும்பாலும் ஏமாற்றமே யடைகின்றனர். ஆசிரியர்கள் தமக்கு வேண்டியவர்களுக்கும், தம்மை வந்தடுத்து இறைஞ்சுகின்றோர்களுக்கும் சலுகைக் காட்டி வருவதாகக் குற்றஞ்சாட்டப் பெறுகின்றார்கள். நேர்மைமிக்க தொழில் ஒன்று உலகில் இருக்குமேல், அஃது உபாத்திமைத் தொழிலேயாகும். அத்தொழிலைப் பற்றியும் புகார்கள் வருகின்றனவென்றால், தக்க கவனஞ் செலுத்திச் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அதிகாரிகள் கடனாகும். மாணவர்களின் முன்னேற்றத்தினை உபாத்தியாயர்களின் நேர்மையற்ற தன்மைப் பாதிக்கின்றதாலும், தகுதி திறமை நிர்ணயமுடன் மக்களைக் கல்வி வசதி பெறச் செய்ய வேண்டும் என்று வாயிட்டுக் கூறிச் செயலில் வேறு வழியிலிறங்கில் அஃது ஒரு 'கண்கட்டிய வித்தை'யெனவே கூறப்படுமாதலாலும், இஃதுரைக்கப்பெற்றது.

வைத்தியத் துறை, பொறியியல் துறை ஆகியவைகளுக்கு நண்ண தகுதியற்றவர்களாக வேறு கலைப் படிப்

பைக் கற்றுணர்ந்த மாணவர்கள் கதியை அதிகாரிகள் அறிந்துணர வேண்டும். கணக்கு, இரசாயனம், மற்ற அறிவியல் சாத்திரங்கள் (Scientific studies) எடுத்துப் படிப்பவர்களின் விடைத் தாள்களைத் திருத்துவதற்கும், சரித்திரம், பொருளாதாரம் அரசியல் சாத்திரம், தத்துவம், இலக்கியம் ஆகியவற்றினை எடுத்துப் படிப்பவர்களின் விடைத் தாள்களைத் திருத்துவதற்கும் வித்தியாசம் மிக வுண்டு. முன் சாரார் பெறும் அம்சத் தொகையை (total marks)விடப் பின் சாரார் குறைவாகவே அம்சங்கள் பெறுவர். முன்சாரார் நூற்றுக்கு நூறு அம்சங்கள் வாங்குவதற்குச் சந்தர்ப்பம் உண்டு; ஆனால் அதே நிலை யில் பின்சாரார் வருவதற்கில்லை. இந்த விசித்திரமான ஏற்றத் தாழ்வின் விளைவு, அரசாங்கப் பதவிகள் ஏற்பவர் களைப் பாதிக்கின்றது. அரச மன்றப் பணியாளர்களாக வர விரும்புவோர் ஒரு கலையுணர்வுப் பெற்றவர்கள் அல்லர்; எல்லோருமே அப்பணிக்கு முந்துகின்றனராத லால், வரலாறு, பொருளாதாரம் முதலியன எடுத்துப் படிப்பார்தம் இன்னலை யுணர்ந்து அதனைத் தீர்க்க அதி காரிகள் முன்வருவார்களா? மனுதாரர்களின் (Applicants) தகுதியை அம்சங்கள் வழி யுணர்ந்தே அரச மன்றப் பணியளிக்கப்படுதலான் இஃது கூறப்பட்டது.

வாரத்திற்கொரு பரிட்சை யென்று கல்வித் துறையில் இருக்குங் காலையில், மாணவன் தன்னைப் பலவித தொல்லை களுக்குட்படுத்திக்கொள்வது போதாமல் கற்று முடித்து வெளியேறிய பின்பு வேலையை நாடிச் செல்லும்போதும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதிகாரிகள் வைக்கும் பரீட்சை யொன்றினை ஏற்க வேண்டியதாக இருக்கின்றதெனின் கல்விச்சாலை யமர்ந்து செலவுகள் பல செய்து கற்றுத்

தேறினமைக்கு என்ன மதிப்பு (Value) என்றுதான் விளங்கவில்லை. ஆளெடுப்பு (Recruitment) இட வசதியை (Vacancy) அனுசரித்து நிற்பதால், அரசாங்கத்தாரால் நடத்தப்பெறும் பரிட்சை யொன்றிற்கு அவசியம் ஏற்படுகிறது. அப் பரிட்சையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்தவர்களும், கல்லூரிப் படிப்பெல்லையை யடைந்தவர்களும் சேர்ந்து எழுத அதிகாரிகள் அநுமதிக்கின்றார்கள். இந்த முறையின் விளைவு என்னவாகும்? ஏற்றத் தாழ்வான முடிவேயாகும். சமூகம் வேண்டுவது சமதர்மம்; சர்க்கார் வளர்ப்பது சரிசமமற்ற முறை என்றிருந்தால் நாடு என்று சிறப்புற்றோங்கும்? அம்சம் வாங்குவதை அடிப்படையாகக்கொண்டு வெளியிட்ட தேர்வு முடிவுகளை அரசாங்கம் ஆமோதிப்பதால் அவ்வரசாங்கமே மக்களுடைய உத்தியோக வசதிக்கும் பொறுப்புள்ளதாக வேண்டும். நாட்டில், படிக்கும் மாணவர்கள் எல்லாருமே பொது வாழ்வில் அமைந்துள்ள பிழைக்க வுதவுஞ் சாதனங்களைப் பெரும்பாலும் நம்புவதற்கில்லையாதலால், அரச மன்றப் பணிகளை நாடி வர வேண்டியவர்களாகின்றனர்; அரசாங்கம் அவர்களை வரவேற்று உபசரிக்க வேண்டியதாகின்றது.

இன்னவாறாக கல்வித் துறையில் பல கோளாறுகள் உள்ளனவெனினும் அவைகளை மேலும் விரித்துரைக்க இந் நூலின்கண் முடியாது விடுக்கின்றோம். 'கல்வித் திட்டம்', 'சீர்திருத்தக் கல்வி' என்று சொல்வதெல்லாம் முக்கியமான, பெரியதொரு பிரச்சினையாகும். சமயம் வாய்த்திடில் அதனைப் பற்றியும் தீட்டுவோம்.

**உதாரணம்: இரண்டு: தொழிலும் திறமையும்:—** தகுதியுள்ளவர்கள் தம் மன இசைவுக்கேற்றபடி

ஏற்றுக்கொண்ட தொழில் முகாந்தரங்களில் திறமையாளர்கள் என்று பெயர் பெறுவது நன்றாகும். ஆனால், அத் தொழில் முகாந்தரங்களுக்குச் செல்ல விழையும்போதே திறமையிருக்கிறதா என்று கேட்பது "பசு ஈனும் முன்னம், என்ன கன்று ஈந்ததென்று" கேட்பதை யொக்கும். இந்தக் கருத்தைக் கீழ்வரும் உதாரணங்கள் மூலம் விளக்குவாம் :—

(1) வைத்தியத் தொழில் (Medical Profession) :— வைத்தியம் என்பது ஓர் அற்புதமான கலையாகும். மற்ற கலைகள் (Arts) போன்று வைத்தியம் மனித சுகத்தை நேர்முகமாகக் கண்காணிப்பதாகும். வாழ்வின் ஒழுங்கு, நோயற்று இருத்தலைப் பற்றியுள்ளது. எனவே, அவ் வருங்கலைவல்லான் மிக மிகத் திறமைச்சாலியாகவே இருத்தல் வேண்டும். இந்தத் திறமை அவனுக்குப் பழகப் பழக ஏற்படுவதாகும். வைத்தியத் துறையின் கடைசி எல்லைவரைப் படித்து ஞானம் பெற்றால்கூட ஒருவரைத் திறமைசாலி வைத்தியர் என்று கூற முடியாது. வைத்தியத் தொழில் செய்பவருக்கு முக்கியமாக வேண்டப்பெறுவன முக லட்சணம், பெருந்தன்மையான நடிப்பு, தாய்போன்று தயை காட்டுந் தகைமை, எளிமை, உதாரகுணம், உடல்வளம், பரந்த பொது அறிவு, தன்னுணர்வு, மூட நம்பிக்கையைக் கடிதல், அஞ்சாமை, தியாகம், சுத்த அநுபவம் ஆகிய சிறப்பியல்புகளேயாகும். இவ்வியல்புகளை யற்றவர் உயர்ந்த ரக வைத்தியப் படிப்பைப் பெற்றவரேயாயினும், நாறு மலரனையராவர். உள்ள வைத்தியர்களில் எத்துணைப் பேர்கள் டாக்டர் ரங்காச்சாரி போலவும், இலட்சுமணசாமி போலவும், குருசாமி போலவும் புகழ்ப் பெற முடியும் ?

**(2) பொறியியற் றொழில் (Engineering Profession):** தவ யுகத்தில் உலக மக்களுடைய வாழ்வினைச் சிறக்கச் செய்வது பொறியியல் துறையேயாகும். விஞ்ஞானக் கலையறிவு விருத்தியாகுந்தோறும், பொறியியல் துறை மேன்மை பெறுகின்றது. விஞ்ஞானத்தால் விருத்தியாக்கப்படும் இக் கலைஞானம், தொழிலபிவிருத்தியினை (Industrial developments and expansions) உண்டாக்குகின்றதால், மக்கள் அக் கலைஞானத்தினைப் போற்றிப் படித்தல் அவசியமாகிவிட்டது. தொழிலபிவிருத்தி மக்கள் வாழ்க்கையைச் செம்மையாகவும், எளிதாகவும் நடத்த உதவுகின்றதாதலால், திறன் மிக்கவர்களே அத்துறைக் குருகராவார். அவ்வகைத் திறன் அடைய விரும்புவோர் நல்ல உடல்வளம், சுறுசுறுப்பு, சிக்கன குணம், யுக்தி, தீர்க்கமான யோசனை, உழைக்குஞ் சக்தி ஆக இன்ன பிற நல்லியல்புகளை வாய்த்திருத்தல் அவசியம். வெறும் படிப்பு, வேலைக்குதவாதன்றே! புகழ்மிக்க சர். எம். விஸ்வேஸ்வரய்யா போன்ற பல இன்ஜினியர்களையல்லவா அக்கல்வி தோற்றுவிக்க வேண்டும்.

**(3) நியாயவாதத் தொழில் (Legal Profession):—** ஆங்கிலநாட்டுச் செந்நாப் புலவர் (Edmund Burk, the greatest English orator) பர்க் என்பவர், நியாயவாதத் தொழிலை மிகவும் பெருமை மிக்கதெனவும் (Noble profession)வும், சட்ட ஞானத்தை அற்புதக் கலையறிவு (Book of curious sciences) எனவும் புகழ்ந்து பாராட்டியுள்ளார். சட்ட அறிவுப் பெறுமல், படித்தவன் என்று கூறிக்கொண்டால், அவன் படித்தவனுகான். யாராவது தப்புச் செய்துவிட்டு, சட்டந் தெரியாத காரணத்தால் நேர்ந்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டால், உடனே படித்தவர்கள், சட்டந் தெரியாது என்ற காரணத்திற்காகக் குற்றஞ் செய்தவரை மன்னிக்க முடியுமா (Ignorance of law is of no excuse) என்று கூறுவார்கள். இஃது உணர்த்தும் பாடம் என்ன? பகுத்தறிவு வாய்ந்த மனிதன் சட்ட ஞானம் பெற வேண்டும் என்று வற்புறுத்தப்பெறுகின்றது.

நமது நாட்டில் நியாயவாதிகள் தொழில் வெறுஞ் சட்டவாதத் தொழிலாகவே உள்ளது. சட்ட ஞானத்தை அபரிமிதமாக வளர்த்த தேசம் இத்தாலி நாடாகும். அந்நாட்டு இலத்தீன் மொழியை அறிஞர்கள் சட்ட மொழி என்றே கூறுகின்றனர். காரணம், அவர்கள் சட்ட ஞானத்தை மிகவும் அபிவிருத்திச் செய்திருத்தலேயாகும். நமது நாட்டில் கைக்காசுப் (Fees) பெறுமளவுக்குத்தான் சட்ட அறிவுப் பயன்படுகின்றது. சட்ட ஆராய்ச்சி என்பதே நமது நாட்டுச் சட்ட வாதிகள் பால் இல்லை. சட்ட ஞான வளர்ச்சி மனித சமூகத்தைப் பாதுகாத்து நிற்கும். சட்டம் போடப்பெற்ற புகைப் படம் எங்ஙனம் பாதுகாப்புப் பெற்று அழகு செய்கிறதோ, அங்ஙனமே சட்ட நூலறிவு, சமூகத்தினை மேன்மையடையச் செய்யும். பொதுச் சேவை (Public life) இற்றை நாளில் முழு நேரச் சேவையாக இருந்தாலும், சட்ட ஞானம் பெற்றவர்கள் அத்தகைய சேவைகளில் ஈடுபடுவது நன்றாகும். அவர்கள் தமக்குப் பொதுச் சேவையில் இடமில்லையென ஒதுங்கிக் கொள்வரேல், பிரயோஜனமற்றவர்களாகக் கருதப் பெறுவர் (Useless members of the society). இற்றை நாளில் சட்ட சபைகளில் (Legislatures) சட்டமறியாதார், சட்டத்தின் அவசியமுணராதார் அங்கம் பெறுகின்றனர்.

சட்டம் படித்தவர்களுக்கு அங்கே இடம், பெரும்பான்மையாக இல்லாமற் போவதைக் குறித்து வருந்த வேண்டியதாக இருக்கின்றது. சட்ட சபை என்பது எதற்கு? குதர்க்கமாக இரண்டு, மூன்று கேள்விகளைக் கேட்டுவிட்டு விளம்பரம் பெறுவதற்காகவா? நாட்டில் நல்ல தொண்டு செய்யப் புறப்பட்டுச் சமூக மக்களின் நன்மையைக் கோரும் திட்டங்களை (Proposals) உருவாக்கி வைத்துக்கொண்டு, பொதுமக்களுக்கு அவற்றின் அவசியத்தையும், பயனையும் பற்றி அறிவித்துத் தேர்தல் வழிச் சட்டசபைப் புகுந்து தமது திட்டங்களைத் தீர்மானங்களாகக் கொண்டுவந்து நல்ல சட்டங்களாக்க வேண்டாமா? நியாயவாதத் தொழிலை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அவசியமாக வேண்டப்பெறுவன நாணயம், கூர்த்தமதி, பிறர் வாதங்களில் குற்றங் காணுஞ் சக்தி, சொல்வன்மை, ஞாபகச் சக்தி, சமூகப் பழக்கம், உண்மை யொழுக்கம், வாஞ்சனை, ஓயாத படிப்பு, தோல்விக் கஞ்சாமை, நீதியின்பால் நாட்டம் ஆகிய அறங்கூறுந் திறங்களேயாகும். குறித்த நோக்கங்களுக்காக, மேலே கூறிய முறையில் சட்ட ஞானம் பெற்றிருத்தலே நன்றாகும்.

(4) **உபாத்தியாயர் தொழில் (Teaching Profession):** நாப் பழக்கத்தால் பேசத் தெரிந்த மனிதகுலம், தன்னை மிருக ராசிகளினின்று வித்தியாசப்படுத்திக்கொள்ள பெரிதும் உதவுவது 'செல்வத்துட் செல்வமும்', 'கேடில் செல்வமு'மான கல்வியாகும். கண்ணெனத் தகும் என்று சிறப்பித்துக் கூறிய எழுத்து, எண் ஆகிய இவ்விரண்டு கல்விகளை அறிவிப்பவரை இறைவர் என்றே மதித்தனர் ஆன்றோர். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்"

என்று கூறியதுங் காண்க. மனித உயிரின் வணக்கத்திற்குரிய ஐம்பெருங் குரவர்களுள் ஒருவருமாவர் எழுத்தறிவித்தவர். அவர்பால் அமையவேண்டுவன உயர்ந்த ரக அறிவும் (நன்ஞானம்), நல்லொழுக்கமுமாகும். படிப்பின் எல்லையை யடைந்தும் பண்பற்றிருப்பரேல் பள்ளிப் பிள்ளைகளிடமே அன்னோர் பரிபவப்பட நேரிடும். அவர் கலைக் கோயில் புகவும் அருகராவார். பூரண ஞானம், 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' போன்று மாந்தர்க்குக் கற்குந்தோறும் வளர்ந்து ஒளிரும். ஆசானுடைய இலட்சணங்களையும், மாணவனுடைய இலட்சணங்களையும் சிறந்த இலக்கண இலக்கிய நூற்கள் வாயிலாக வுணர்ந்து கொள்ளல் பொருந்தும்.

(5) அரச மன்றப் பணி (Government Service):— இனி, அரசாங்கப் பணிமனைகளில் தகுதி, திறமை என்பனவற்றை அதிகாரிகள் எங்ஙனம் கணித்து நடைமுறையில் வைத்துள்ளனர் என்பதனைப் பற்றிக் கவனிப்போம். குறைந்தது ஒரு கீழ்நிலை குமாஸ்தா வேலை (Lower Division Clerk)யைப் பார்ப்பதற்கு நடுத்தர வகுப்பு (Intermediate Class) அல்லது உயர்நிலைப் பள்ளி முடிவு (S. S. L. C.) வகுப்பு படித்தவர்களாக இருக்க வேண்டும் என்று அரசாங்க உத்தரவு கூறும். ஆனால் அரச மன்ற அதிகாரிகள் தெரிந்தெடுப்பது பி.ஏ. அல்லது பி.எஸ்,ஸி. என்ற பட்டங்கள் பெற்றவர்களேயாகும். அங்ஙனமே மேல்நிலை வேலை பார்க்கும் குமாஸ்தாக்களின் (Upper Division Clerk) தகுதியை ஒருவகையில் நிர்ணயித்திருப்பர்; ஆனால் அதிகாரிகள் தெரிந்தெடுப்பது ஒரு பட்டம் போதாதென்று, இரட்டைப் பட்டங்கள் கட்டிக் கொண்டவர்களேயாகும். இம்மாதிரியாகத் தகுதி நிர்

ணயிப்பதில் மாற்றங்கள் (Shiftings) ஏற்படுவதால் மக்கள் பல ரகமான திண்டாட்டங்களுக்கு ஆளாகின்றனர். திரைமறைவில் நடக்கும் மாற்றங்களைக் குறித்துக் கேட்பாரில்லை இந்த நாட்டில்! கேட்டால், பட்டங்கள் பெற்றவர்கள் திறமைசாலிகளாகவிருப்பரா, வெறும் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள் திறமைசாலிகளாகவிருப்பரா என்று எதிர்க் கேள்விகள் பிறக்கும். தகுதி நிர்ணயித்தல் என்பதில் ஒரு வரையறை இருக்க வேண்டாமா? அஃது அநுஷ்டானத்தில் இல்லாத வரை நாடு பலவிதச் சமூகக் கோளாறுகளுக்கு ஆட்பட நேரிடும். சர்க்கார் பணிமனைகளில் ஆளெடுப்பு (Recruitment), முன்னேற்றம் (Promotion) எங்ஙனம் அநுஷ்டானத்தில் உள்ளன என்பதைப்பற்றிக் கூற மனம் வரவில்லை. ஏனெனில், அவை நீதிக்குப் புறம்பான மார்க்கத்தைப் பற்றி யுள்ளமையான் அவ்வநீதி முறைகளைப் பற்றிக் கூறிப் பூசல் செய்து பயன் இல்லை. அவற்றினைப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று அரசினை அமைக்கும் கட்சி அரசியலார் அவ்வப்போது கவனித்து நீக்க முயலுதல் சாலும். தகுதி திறமை என்று சொல்லி முறையற்ற மார்க்கங்களை அநுஷ்டிப்பதைத் தடுக்க சமதர்மத் திட்டமே உதவுவதாகும். சமூகத்தின் முடிந்த குறிக்கோள் சமதர்மமே யாதலால் அதனை வழங்க, தகுந்த ஏற்பாடுகளைச் சிந்தித்து அமைக்க வேண்டும் அரசியலார். விரிவஞ்சி இவ் வுதாரணத்துடன் நிறுத்திக் கொள்ளலாயிற்று.

இனி, இரண்டாவது கிளை வாதத்தினைப் பற்றி ஆராய்வாம். சிறந்த அரசியலாருக்கு நாடு ஒரு பொது அமைப்பாகவே தோன்றும். நாட்டில் பலதிறப்பட்ட சமூகத்தினர் வாழ்ந்து வருவதால் 'சமூகம்', 'நாடு'

னன்றளவில் நின்றுதான் சமூக நலனை வழங்க அரசியலார் முனைவர். நாட்டை ஆள்வதற்குத் தகுதிபெற்ற அரசியலார் நாட்டு மக்களுக்குச் சுகவழிகள் அமைப்பதில் (சம்ரக்ஷணையில்) பொதுப்படையாக நின்று கவலை செலுத்தா தொழிந்திடில் நாட்டில் அதிருப்தி, பூசல், குழப்பம், கலகம் ஆகியவைகள் தோன்றியவண்ணமாகவே இருக்கும். சம்ரக்ஷணை நாடு (**Welfare State**) அமைக்க வேண்டுமென்று துடிக்கும் அரசியலாரின் பொறுப்பைப் பற்றி ஆங்கிலேய அறிஞர் **W. A. ராப்ஸன் (W. A. Robson)** கூறும் அருமையான வாசகத்தினை ஈண்டு அறிந்து போற்றுதற்குரியதாகும். அது வருமாறு;—

"*The work of the officials have become more creative less aloof from the realities of everyday life, more closely in touch with the business community, more directly concerned with the welbeing of the common man and his family.*"

"*There has been a continuous expansion in the functions of Government during the present century in all countries which have moved towards greater industrialisation and urbanisation. All political parties of whatever colour have contributed to this expansion.*"

"*As a necessary consequence, the power of the executive has increased both absolutely and relatively, to that of legislature and the Judiciary. The era of public administration marks the middle of the twentieth century as clearly as the laissez-faire era marked the middle of the nineteenth century.*"

கண்ணுங் கருத்துமாக் குழவிகளைக் காப்பாற்றி வரும் பெற்றோர்களைப்போல, இன்று அரசியலார் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியவர்களாவர். இஃது இவ்விருபதாம் நூற்றாண்

டில் ஏற்பட்ட விழிப்புக்களின் விளைவுகளுள் (Result of awakening) ஒன்றாகும். எனவே, மக்கள் யாவரும் சரி சமமாக அரசியல் நன்மைகளைப் பெற வசதி செய்து தர அரசியலார் கடமைப்பட்டுள்ளனர். அதற்கான முறைகள் பலவற்றை அன்னோர் கையாளுவதில் குற்றமொன்றுமில்லை. தகுதி, திறமையைத் தவிர வேறு அடிப்படையில் மக்களுக்கு வசதியளிக்கலாகாது என்று அரசியலாருக்குச் சுயநலக் கவன சித்தர்கள் திட்டமிடுவது வரம்பு கடந்த கோரிக்கையேயாகும்.

அரசியலார் வர்க்க உரிமையினையே (Community Right) யன்றி வட்டார உரிமையினையும் (Regional Claim) கவனித்துவர வேண்டியவர்களாவர். தம் ஆட்சிக்குட்பட்ட எல்லைகளில் எங்கெங்கு மக்கள் உளரோ அவர்கள் யாவருமே சமூக நன்மைகள் அடைவதற்கு அரசியலார் சௌகரியஞ் செய்து தர வேண்டும். நாட்டில் ஒருசில பாகங்களில் மட்டுமே கல்வி வளர்ச்சி, வாழ்க்கை வளம் மிகுதியாகிவிட்டால் போதாது; நாடு பூராவும் சமூக சௌகரியங்கள் (Social Amenities) பரவச் செய்தலே நன்று. இது கருதியே சிந்தனைச் சிற்பிகள்,

"Admission to colleges has to be made on definite principle taking into consideration the claims of merit' communities, and localities" என்று விளக்கமாகக் கூறியுள்ளனர்.

அரசாங்க ஊழியர்கள்தம் வழிவந்தவர்களுக்கும் (Sons and relatives of the departmental servants), செஞ்சோற்றுக் கடனாற்றிச் சேனையினின்று நீங்கினோர்தம் வழியினர்களுக்கும், சமஸ்தானப் பிரஜைகளின் மக்களுக்கும், கலகம், குழப்பம் ஆகியவைகள் காரணமாக தம்

பதியைவிட்டு ஆதரவுத் தேடி வந்தவர்கள்தம் (Refugees) பிள்ளைகளுக்கும், அரசியல் சட்டப்படி பெண்களுக்கும், கடல் கடந்து அயல்நாடுகளில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள்தம் மக்களுக்கும், அரசியலார் விசேஷ சலுகைகள் காட்டித் தனியிடம் ஒதுக்கிவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பெற்றுள்ளனர். அம்முறைகளைக் குற்றமுடையன என்று கூற முடியாது. அவற்றினை அனுஷ்டிக்கும் அரசியலாரை ஆட்சேபித்துத் தகுதி, திறமை பார்க்க வேண்டுமென்று தம் பட்டம் அடிப்பதில் பயனில்லை.

இனி மூன்றாவதாகக் குறிப்பிட்ட கிளை வாதத்தின் மெய்மையினைப்பற்றி ஒரு சிறிது கூறுவாம். வகுப்புரிமை நீதியில் கூறப்பெற்றுள்ள மக்களுக்கு வசதி செய்தளிப்பதைச் சுயநலக் கவன சித்தர்கள் தகுதி, திறமையற்றவர்களுக்குச் சௌகரியம் செய்து தரப்படுகின்றதென வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதை யொப்ப, திருத்திக் கூறி வரலாயினர். உதாரணமாகத் திருவாளர் R. V. கிருஷ்ண அய்யர் அவர்களுடைய ஆழ்ந்த கருத்தினை இது குறித்துக் கவனிப்போம் :—

" All wellwishers of India must agree that communal considerations in the educational field are obstacles to the flowering of talent, prevent the release and unrestricted play of energy, lead to a lowering of standards, implant seeds of hatred and suspicion in the receptive minds of youth and are insuperable barriers to national solidarity and progress. In a world of competition they will inevitably lead India to ignominious inferiority and perhaps to destruction."

" There are professions and professions. Some professions are simply means of livelihood for their followers. Other professions like the Medical, Engineering, Scientific—agriculture and Teaching are not

mere professions in which their followers make a profit for themselves, but are of utmost public usefulness to society at large. The prevention of entry of the best talent into these professions is against the best interest of society as a whole and should therefore be strenuously fought against by every patriotic Indian."

மேற்கூறிய கருத்து, தகுதி திறமையற்றவர்களை வகுப்புச் சலுகைக் காரணமாக வைத்தியம், பொறியியல், விஞ்ஞானத் தொழிற் கல்வி, ஆகிய முக்கிய தொழிற் கல்வி களைக் கற்க அரசியலார் அனுமதிப்பதால் பொருட் கேடும், மனித சக்திப் பாழும் உண்டாகின்றனவென்றும், நாடு முன்னேற்றமடையாமல் அழிவுப் பாதையை நோக்கிச் செல்லுகின்றதென்றும், அச்சமூட்டுகிறது. இந்த வாதம் சமரச ஞானிகளுக்கு ஏற்புடைத்தாகாது. உலகினர் கண்முன் இந்தியர் என்று கூறிக்கொள்ளும் நாம் யாவருமே திறமையற்றவர்களாகவும், தகுதியற்றவர் களாகவும், சோம்பித் திரிபவர்களாகவும் இன்று புலப்படுகின்றோம். ஏடு கண்ட சரித்திர கால முதல் மனித வர்க்கத்திற்கு உபயோகப்படக்கூடிய பான்மையில் நாம் கண்டு பிடித்துக் காட்டிய கண்டுபிடிப்பு (Discovery) யாது? சாதனை யாது? நம்முடைய தகுதி, திறமை எந்த வகையில் மேலை மக்களின் தகுதி திறமையைவிட மேலோங்கியவை? மேலை மக்களுடைய கூர்த்த மதி கண்டுணராத அற்புதங்கள் உண்டோ? அச்சு இயந்திரங் கண்டு, உலகில் அறிவைப் பரப்பியது; நீராவிப் பொறி யினைக் கண்டு, போக்கு வரவை எளிதாக்கியது; மின் சாரத்தைத் தோற்றுவித்து, சாதிக்காத பயன்கள் இல்லை; கம்பியில்லாத் தந்தியைத் தந்து, அற்புதமான வகையில் விஷயம் அறிவிக்கின்றது; ரேடியோவைக் கொடுத்து தூரப் பகுதிகளில் நடக்கும் சங்கீதங்களையும், பேச்சுக்களை

யும் கேட்டு ஆநந்திக்கச் செய்கிறது. டெலிவிஷனைத் தந்து பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ளவர்களையும், நேர் முகத் தரிசனத்திற்குக் கொண்டு வருகிறது; எக்ஸ்ரே ('X' Ray) காஸ்மிக் ரே, (Cosmic Ray) என்று உணர்த்திற்று; விமானத்தைப் பறக்கவிட்டு உலகினை ஒன்றுக்கியது; மோட்டார் வண்டி, சைக்கிள் வண்டி ஆகியவைகளையும் கண்டு, மக்கள் வாழ்க்கைக்குச் சௌகரியப் படும்படியாக்கிற்று; அணுச்சக்தியையும், ஹைட்ரொஜன் புகையையும் காட்டி உலகினை ஆட்டிப் படைக்கிறது! இன்னும் கணக்கிலடங்காத கண்டுபிடிப்புக்கள் உள்ளன வெனினும், அவைகளை மேலும் எண்டு பட்டியலிறுத்தாது மேலே செல்லுவாம். மேலை நாட்டு மக்கள் விஞ்ஞானத் துறைகளில் (Scientific field) பெற்றிருக்கும் அபிவிருத்தி, நம்மை யறியாமலே அவர்கள்தான் உலகில் வாழத் தகுதியுள்ளவர்கள் என்று கூறத் தூண்டுகிறது! அங்ஙனமே அவர்கள் சட்டம் (Law), அரசியல் (Political status), சமூகப் பொருளாதாரத் துறை (Social and economic conditions), வைத்தியம் (Medical developments), வியாபாரம் (National and International trade relations) ஆக இன்ன பிற வாழ்க்கைக்கு வசதியளிக்கும் கூறுகளில் மகோன்னத நிலையை அடைந்துள்ளனர். அம்மக்கள்பால் உயரிய தகுதியும், நம்பற்குரிய திறமையும் செறிந்தகமழ்ந்து வந்தன. அது காரணமாக வாழ்க்கையைச் செம்மையாக்கிக் கொண்டனர்; ஆனால் நாமோ "உனக்குத் தகுதி திறமை கிடையாது; எனக்குத்தான் தகுதி திறமை யிருக்கிறது!" என்று வாய்ப் பந்தலிட்டு பிறர் கைக் கொட்டி எள்ளி நகையாடும் நிலையில் இருக்கின்றோம். மேலை மக்கள் தகுதி திறமை சுய நன்மைக்கேயன்றிப் பர நல மேம்பாட்டிற்கும் உதவிபுரியலாயிற்று.

ஆனல் நம் நாட்டுள்ளார், சுயநலங் காரணமாகப் போட்டி யிடும் நிலைமையிலேயே உள்ளனர்.

சமயக் கலை யுணர்வு நம் நாட்டார் பிற நாட்டினரினும் அதிகம் பெற்றவர்; அவர்கள் உலக மக்களையே நல் வழிப்படுத்தும் தகுதியும் திறமையும் வாய்ந்தவர் என் றெல்லாம் கீதாஞ்சலிப்புகழ் - கவீந்திரர் - ரவீந்திரநாத தாகூர், தெய்வீக மார்க்கம் (The Life Divine) இது வெனச் சிறந்த முறையில் குறிப்பிட்டுக் காட்டிய யோகியர் - அரவிந்தர் ஆகியோர் முதலாகக் கூறி வரலாயினர். நாம் அந்த வகையில் பண்டும் தோல்வியுற்றோம்; இன்று வரை யிலும் தோல்விக் கண்டு வருகின்றோம். சமய மார்க்கங் களிற் சிறந்ததாகக் காணப்பெறும் பௌத்தச் சமயம் நம் நாட்டில் தோன்றியபோதினும், இலங்கை, பர்மா, சீனம், ஜப்பான் முதலிய கீழ் நாடுகளில் தழைத்து வளர லாயிற்று. இந்நாட்டில் தங்கிச் சமூக மக்களைப் பல வகுப்பு முறைகளில் கண்டு களிக்கும் ஹிந்து சமயம், பிற நாட்டார் மதிப்பினைப் பெறவும் தவறியே வந்திருக் கின்றது. விஷய உணர்விற்காக அதனைப் படித்தனரே யன்றி, பற்றி நடக்க மனமொருப்படாராய் மேலை மக்க ளும், கீழை நாட்டாரும் இதுகாறும் இருந்து வருகின்ற னர்.

பழைய இந்திய அரசியல் அமைப்பு (Ancient Indian Polity) மிக உன்னத நிலைமையில் இருந்தது என்று இவ்விருபதாம் நூற்றுண்டில் இந்திய சரித்திராசிரி யர்கள் எழுதி அகங் களிக்கின்றனர். ஆனல் அவர்கள் இந்தத் துர்ப்பாக்கிய நாட்டின் ஆட்சி அந்தஸ்து (Political Status) கால காலமாக இருந்துவந்த விதத்தைப்

பற்றிச் சிந்தித்தார்களில்லை. கிறிஸ்துப் பிறப்பதற்குமுன் இந்நாட்டில் அடி வைத்த ஆதிக்க வெறியன் அலெக்ஸாந்தர் முதலாக, கிறிஸ்துப் பிறந்தபின்னும் கால்வைத்து இந்நாட்டில் 'களம்' விளைவித்த சிலேவ் ஈறான ஆதிக்க வெறியர்களுக்கே நாம் அடிமைப்பட்டு உழன்று வந்திருக்கின்றோம். நம்மனோர்பால் இருந்த தகுதி, திறமை, அரசியல் செங்கோன்மை முதலியனவெல்லாம் எங்குச் சென்றன அக்காலங்களில்? இந்த ஆட்சி அலங்கோலத்திற்குக் காரணம் நம்முடைய அரசியலில் கட்டுப்பாடு (Discipline), அமைப்பு முறை (Organised Method), ஒருமைப்பாடு (Unity) ஆகியவை உறழ்ந்து கமழாமையாகும். ஆங்கில மக்கள் விட்டுச்சென்ற அரசாங்க இயந்திர முறை (Rule by Governmental Machienery) நிற்காதொழிந்திருக்குமேல், இன்றுகூட நாம் பழையபடியே நாடாளத் தகுதியற்றவர்களாய்ப் பிறர் கண்களில் புலப்பட்டிருப்போம்.

ஆங்கில ஆட்சியினர் அளித்த கல்வி முறை மூலமே மேலை நாடுகளில் விஞ்ஞான அறிவு வளர்ந்த விதத்தினை யறியலானோம். நம்மிடையே விஞ்ஞானம் பண்டும் பரிணமிக்கவில்லை; அதுபற்றி இதுவரையிலும் ஒன்றுங் காண்கிலேம்; நாம் கண்டு பிடித்ததெல்லாம் கட்டை வண்டிக்குப் பின் ஒன்றுங் கிடையாது! மேல் நாட்டார் ஆக்கித் தந்த விஞ்ஞானச் சாதனங்களால் ஏற்படும் பலன்களை யெல்லாம் அனுபவிக்க அலைகின்றோமே யொழிய நாம் விஞ்ஞான அறிவைப் (Scientific mind) பெறத் தவறி வருகின்றோம். நோபல் பரிசுப் பெற்ற இந்திய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கள் மக்களின் வாழ்க்

கைத் தரத்தை உயர்த்த உதவுவனவாக அமையவில்லை என்றே கருதுகிறோம்.

இங்ஙனமே நாம் இன்னும் பல துறைகளிலும் தகுதி, திறமையற்றவர்களாக இருக்கும் ஊறிந்த இரகசியத்தைச் சொல்லிக் கொள்வதில் பயனில்லை என்று விடுக்கின்றோம். வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் திறமைக்கு உரை கல்லாகக் கொள்ளாமல் சாதனைகளைத் திறமைக்குரிய சின்னங்களென மதித்து, எல்லோருமாகச்சேர்ந்து, எல்லாத் தொழில் துறைகளிலும் ஈடுபட்டு முன்னேறுவோமாக!

தகுதி திறமையைக் கவனித்துச் சாதன சௌகரியங்களைப் பெற மக்களை அனுமதிப்பது போற்றற்குரியதெனினும், எத்தகு தகுதியும், திறமையும், நம்பற்குரியன என்று நாம் முதலில் கணித்துக் கொள்வது மிகவும் நன்றாகும். உண்மையான தகுதி திறமை, நாட்டின் நடப்பிற்கு, மக்கள் முன்னேற்றத்திற்கு, சமூகப் பொருளாதார, அரசியல் அபிவிருத்திக்கு உதவ வேண்டும். தகுதி திறமை யுடையோனாகி இரக்கமில் அரக்கனாகத் திகழ்வனேல் அவனது தகுதி திறமை என்னாகும்? பக்குவப் படுத்தப்பெற்ற தகுதியும், நம்புதற்குரிய திறமையும் ஒவ்வொருவர்பாலும் அமைய வேண்டும். பண்பில்லாத ஒருவன் அறிவுடையவன் எனினும் அவனது அறிவு யாருக்குப் பயன் தரும்? இது கருதியே மறுப்புரைக்கு (Adverse Criticism) இடந் தராத மயிலை அடிகள்,

" அரம்போலுங் கூர்மைய ரேனு மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்",

என்று அறிவுத் திறம் நிரம்பியவர்கள்பால், நற்குண நல்லியல்புகளும் ஒருங்கே அவசியமாக அமைய வேண்டும்

என்று திட்டம் போட்டு வைத்தார். அவர் மேலும், உலகியல் எஞ்ஞான்றும் அழியாது நிலைபெற்று வருவதற்குக் காரணமாகப் பண்புடையவர்களே அமைகின்றார்கள் என்ற மெய்மையை,

" பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் "

என்ற குறள் மூலம் வலியுறுத்தி நின்றார். இம்மாதிரியான அறவுரைகள் சங்க இலக்கியங்களில் மிகுதியும் காணலாகும். எனவே, அறிவு அறமுடனியைந்ததாக, திறமை பண்புடன் கலந்ததாகப் பரிணமிக்க வேண்டும் என்று மேலே கூறிய வுரையால் விளங்குகின்றதன்றோ! மனிதன் " மதியால் வித்தகனாகவும் மனத்தால் உத்தமனாகவும் " (Qualities of head and heart) ஒருங்கே இருத்தல் வேண்டும். அங்ஙனம் அமைந்த பண்பு மிக்க அறிவின் திறனை நம்பி உலக வாழ்வினைச் செம்மைப்படுத்த மக்கள் முற்பட வேண்டும். வெறும் நூலறிவை யொட்டிய தகுதி திறமைகளைச் சிறந்த முறைகளெனக் கையாண்டு மக்களை மேலும் மதி மயக்கமடைய வொட்டாது, நன்ஞானம், நன்னோக்கம், நல்லொழுக்கம் ஆக இம்மூன்று அம்சங்களைப் பெற்ற மனிதமணிகளை அறச் செயலாற்ற மக்களினம் தோற்றுவிக்க வேண்டும்.

இனி, நான்காவது கிளை வாதத்தினைப் பற்றி ஒரு சிறிது கூறலாகும். மக்களினத்தார் தமது அறிவெல்லையினை விரிவுப்படுத்துந்தோறும், நாகரிக மேம்படுடையோராக விளங்குகின்றனர். நாகரிகம் என்றால் வெறும் ஆடை ஒழுங்கினையும், அணிகலன் பூணுவதையும் மட்டும் குறிக்காது. அக வளர்ச்சியின் முழுப் பொலிவினையே நாகரிக முதிர்ச்சி எனலாகும். மேலே மக்கள் எக்காரியத்திலீடுபட்

டாலும், பாங்கும் (Sweetness), பூரண தன்மையும் (Perfection) சிறந்தொளிரும் வகையில், அதனைச் சாதித்துக் காட்டுவர். ஒரு சிறு க்ஷவர கத்தி (Blade or Razor) செய்வதிலும் அவர்கள் தமது சிறந்த மதி நுட்பத்தினையும், பரந்த கால உழைப்பினையும் தியாகஞ் செய்கின்றனர்; பிற நாட்டினர் மெச்சும் வகையில் காரியங்களை நிறைவேற்றுகின்றனர். அன்னோர் தமது வாழ்க்கையின் தரத்தினை நாளுக்கு நாள் விருத்திச் செய்து வருகின்றனர். அவர்கள் போலவன்றோ இந்திய மக்கள் அமைய வேண்டும்! வெறும் நூலறிவுப் பெற்று 'இப்படி இருந்தால் நன்றாக விருக்கும்; அப்படி அமைத்தால் பயனுண்டு' என்று பேச்சுத் திட்டமுடன் அமையாது, காரியத்தில் திறமையினைச் செலுத்தி மக்களுக்குப் பெருத்த நன்மைகளைச் செய்துதவ வேண்டும். உதாரணமாக விவசாயத் தொழிலை எடுத்துக்கொள்ளுங்கள். பயிர் செய்யக்கூடிய நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக இருக்கலாகா; ஏரை நம்பியும் ஏற்றத்தை நம்பியும் காலத்தைச் செலவழிக்கலாகாது; குப்பைக் கூளத்தைச் சிறந்த எருவென இட்டுக் கொழுத்த விளைவுக் காண முடியாது; விஞ்ஞான ரீதியில் விவசாயத் தொழிலை நடத்த வேண்டும் என்று வாயளவில் சொல்லிப் பயனில்லை. அவ்வறிவுத் திறனைக் காரியாம்சத்தில் காட்டுதலே நன்றாகும். எனவே விவசாயக் கல்விப் (Scientific Agricultural education) பெற்றவன் உழு கலப்பையை என்றைக்குப் பிடிக்கின்றனனோ அது முதற்கொண்டே நாடு நன்னிலையடையும்! ஏர் உழுவதற்கு ஓர் ஏமாளி, ஏற்றம் மிதிக்க ஒரு கோமாளி, எண்ணிக் கொட்டிக் கொள்வதற்கு ஓர் எத்தன் என்றினியும் நாம் இருப்போமானால் தகுதி திறமை என்று சொல்லுவதும், அவற்றின் மூலம் சிறந்த தரத்தினை

உண்டாக்க உரைப்பதும் வெற்றுரைகளெனவே மதிக்க லாகும். எட்டைப் பிடித்தவன், ஏரையும் பிடிக்க வேண்டும்! இந்த மாறுதலுக்கு எத்துணைப் பேர்கள் அருகராக முனை கின்றனர்? யூகம் படைத்த மேலை நாட்டு மக்களைக் காணீரோ? நாட்டில் நல்ல தரத்தினை (Fine Standard) விருத்திச் செய்ய விரும்புபவர்கள், செம்மையான கல்வி முறையினை அமைக்கலாகும். ஆதாரக் கல்வி (Basic Education), ஆரம்பக் கல்வி (Primary Education), உயர்தரக் கல்வி(Higher Education), ஆராய்ச்சிக் கல்வி(Researches) ஆகியவைகளைச் சிறந்த அடிப்படைகளின்மீது அமைத்தலே நன்றாகும். கல்வியில் சீர்திருத்தம் செய்யாது தரத்தினை விருத்திச் செய்ய நாடுதல், மணலால் கோட்டைக் கட்டுவதை நிகர்க்கும். கல்வி மூலமே உணர்வெய்தி, தரத்தினை ஒவ்வொரு துறையிலும் விருத்திச் செய்யலாகும். தகுதியும் திறமையும் மதிப்பிடத்தக்க தரத்தினை உண்டாக்கவல்லன என்று கூறினால், மக்களுக்குப் பெருத்த நன்மைகள் நல்க அரிய சந்தர்ப்பம் கிடைக்கின்றதென்று தான் நாம் உணரலாகும்.

" வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர கோனுயர்வான் "

என்ற தத்துவப்படி மக்களின் அறிவெல்லை விரிவுப்படுந் தோறும், வாழ்க்கையின் தரம் மிக்கோங்கும்.

மக்கள் கல்வி வளர அறிவுப் பெருகும்,
அறிவுப் பெருக தரம் மிக்கோங்கும்,
தரம் மிகுந்தால் பலன் கொழிக்கும்,
பலன் கொழிக்க மக்கள் சுகமடைவர்,
மக்கள் சுகமடைய நாடு சிறக்கும்,

என்று கூறி இந்தத் "தகுதி திறமை கூப்பாடும், அறிவு, பண்பு படும்பாடும்" என்ற தலைப்பினை முடிப்பாம்.

## மதச் சார்பற்ற சர்க்காரா?
## மனிதச் சார்பற்ற சர்க்காரா?

**வாதம்:**—இந்திய சுதந்தர, ஜனநாயகக் குடியரசு சர்க்கார், மதச் சார்பற்ற அரசினை (Secular State) நிறுவி நல்லாட்சி செய்ய விழைவதால் வகுப்புவாதத்தினை யுண்டாக்கும் வகுப்புரிமை நீதி போன்ற அரசாங்க உத்தரவுகளை ஆமோதிப்பதற்கில்லை.

**பிரதிவாதம்:**—நாட்டில் நிகழ்த்தப்பெறும் பல போலி வாதங்களுள் ஒன்றே மேலே கூறியது. மன்பதையினரில் பல்லோர் மதி மயக்கங்கொண்டு மடமைச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அச்செயல்களுள் ஒன்றே மதவாதம் என்பது. மதம் என்ற சொல்லின் உண்மையான பொருளை யுணர்ந்துகொள்ள சக்தியற்றுப் பல போலி வாதங்களை நிகழ்த்தி மத வாதிகள் மக்களை மயக்கி வரலாயினர். சமய உணர்வு மனித உயிர்கள்பால் இயற்கையில் எழும் ஓர் ஆத்மீக இயக்கத்தையே (தன்னுணர்வு) குறிக்கும். சீரிய வாழ்க்கை முறையை (Good or pious life) விவரித்துரைப்பதே மதம் என்பது. எனவே 'வகுப்புவாதம்' என்று போலியாக வழங்கும் சொல்லுக்கும், 'மதச் சார்பு' என்பதனுக்கும் தொடர்பு உண்டாக்கி வாதமிடுவது குறிக்கோளை விடுத்து உணர்வுக் கலங்கி அனுவசியமான வாதத்தில் இறங்குவதாகும். இஃது காசிக்குச் செல்ல விரும்பியவன் கன்னியாகுமரியால் ஏகும் பாதையில் நடப்பதை யொக்கும். சர்க்கார் மதச் சார்பற்று இருப்பது வேறு; மக்கள் வகுப்புவாதத்தினின்று விடுபட்டிருக்க வேண்டும் என்பது மற்றொன்று. நாட்டிலுள்ள பல்வேறு சமயச் சார்புடையவர்கள் தத்தமது கருத்

தினிசைவுக்கேற்ப சமய வொழுக்கம் மேற்கொள்ளுதற் குரியராவர். **சர்க்கார் அந்த விஷயங்களில் தலை யிட்டுக் கொள்ளாதிருத்தல் மிகவும் சீரிய அரசியல் ஒழுக்கம் என்றே கூறலாம்.** அதற்கு மாறாக, அரசிய லார் பலவித சமயிகளுக்குத் தக்க ஆதரவு, பாதுகாப்பு முதலியன தந்து போற்றுதல் சமாதான நிலைமைக்கு வழி வகுப்பதாகும். சமய உரிமைகள் (Religious Rights) என்ற பேரால் தனி மனித உரிமைகள் பங்கப்பட நேரிடு மாதலால் அரசியலார் சிறிது கவனமுடனிருத்தல் சாலும். இம்மாதிரியான கொள்கைகளை இந்தியச் சர்க்கார் தமது அடிப்படைக் கொள்கைகளாகக் (Fundamental basis of the Secular Government) கொண்டது மகிழ்ச்சிக்குரிய தேயாகும். கொண்ட கொள்கைக்கேற்றாங்கு அரசிய லொழுக்கம் இருக்க வேண்டும் என்பதுதான் மக்களுடைய கோரிக்கை. அன்னவாறின்றி கொள்கைக்கு எதிர்மாறாக அநுஷ்டானம் அமையுமெனின் அதது கொள்கையின் தற்கொலை (Suicidal policy of the Government) எனப்படும்.

அண்மையில் ஜனாதிபதி முதற்கொண்டு மந்திரிப் பிரதானிகள் உள்பட சோமநாதர் ஆலய மறுமலர்ச்சியில் (Resurrection of the Temple of Somnath) மிகுந்த ஆவேச கோஷ்டமுடன் (Emotional vindication of history) பங்கு கொண்டமை இந்தியச் சர்க்காரின் மதச் சார்பற்ற கொள்கையினை மிகவும் சந்தேகப்படச் செய்து விட்டது. இதுபோன்ற மூரணை ஒழுக்கங்கள் பல உண்டெனினும், இங்கே முக்கியமான ஒரு சம்பவத்தினை மட்டுமே கூறலானோம். இது கருதியே நாம் மேற்கூறிய வாதத்தினைப் போலி வாதம் என்றோம்.

மதம் மனிதனுடைய ஆத்மீக வாழ்வைக் குறித்து நிற்கின்றதென்றேமல்லவா? ஆத்மீகம் (உள்ளொளி) (Spiritualism) மனிதன்பால் ஒப்படைக்கப் பெற்ற ஓர் அற்புதச் சக்தியாகும். ஆத்மீகம் மனிதப் பிராணியின் நல்ல கூற்றினைக் (better aspect of the human animal) குறித்துக் காட்டுவதாகும். ஆத்மீகம், ஞானத்தைத் (அறிவு) (knowledge) துணைக்கொண்டே உண்டாகும். பர ஞானமேயன்றி அபர ஞானமும் ஆத்மீக இயக்கத்திற்கு உறுதுணையாகும். ஞானமும், ஆத்மீக இயக்கமும் சேர்ந்து உண்டாக்கும் சக்தி மகாவல்லபம் வாய்ந்ததாகும். அஃது லோகாயத (material) ஆட்சி முறைகளால் பாதிக்கப் பெறாது.

ஆத்மீக இயக்கம் அகக் காட்சிகளை, தன்னுணர்வுகளை மனிதனுக்குத் தோற்றிய வண்ணமாகவிருக்கும். அதனைப் புறப் பொருளின் ஏவலுக்கு ஆட்படுத்த எண்ணுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைக் கொள்வதையொக்கும். உயிர் வர்க்கங்களைக் காத்து நிற்பதும் அவ்வாத்மீக இயக்கமே. மனித உயிர்களேயன்றி, புலி, கரடி, சிங்கம், முதலான பொல்லா விலங்குகள்பாலும், புழு, பூச்சிகள்பாலும், மற்றுமுள்ள தாவர, சங்கம பொருள்கள் பாலும் ஆத்மீக இயக்கம் உண்டென அத்துறைவல்ல மெஞ்ஞானியர்கள் கூறக் கேட்குந்தோறும், நமது சிற்றறிவுத் தெளிவுப் பெற்றுப் பேருண்மைகளை அறிகின்றது. வல்லபம் வாய்ந்த ஆத்மீக வாழ்வைக் கேவலம் மதக் கட்டுப்பாடு (கோயில், குளம், திருவிழா, பூசாரி, பக்தன், சாமி, சாதி முறை, வருணதர்மம் முதலிய ஆசார சங்கற்ப விகற்பங்கள்) என்ற ஓர் இரும்பு கூண்டிற்குள் மக்கள் தாமே, மதர்த்த காலையில் கொண்டு சிக்க வைத்தனர்

ஆத்மீகத்திற்கு மத வழி என்பது கிடையாது. நாம, ரூப மற்ற பரம்பொருளுக்குக் கபட நாடக மியற்றுவோர் ரூபத்தினைக் காட்டியது போன்று, ஆத்மீகத்தினை மத வழி புணரலாயினர்.

எனவே 'வகுப்புவாதம்' என்பதனோடு 'மதச் சார்பற்றிருத்தல்' என்ற கொள்கையை இணைத்துக் கூறும் வாதம் தவறானதென்று பெறப்படும். வகுப்பு உரிமை நீதி மக்கள் சமுதாயத்தின் பொருளாதார, அரசியல் மேம்பாட்டினை வலியுறுத்துவதாகும். அகத்தின் வன்மையால் அருளையும், புற வளர்ச்சியால் பொருளையும் மனிதன் பெற இயலும். மனிதனுக்கு ஆகவேண்டிய விஷயங்கள் இவை இரண்டே. அவற்றினை அடைய உண்மையான, ஊக்கஞ் செறிந்த உழைப்பே உதவா நிற்கும். இது கருதியே இகபர அமைப்பில் நம்பிக்கைக் கொண்டிருந்த பொய்யில் புலவர்,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு"

என்று பொருளுரை வழங்கினர் போலும்! வகுப்புரிமை நீதியை வழங்க வேண்டும் என்று கூறிய வாதம் மக்கள் சமுதாயம் பலதிறத்தினர்களைக் கொண்டுள்ளதால், அவரவர்தம் கல்வியறிவு, தகுதி திறமை ஆகிய முக்கிய கூறுகளைக் கவனித்து, பண்பு, பருவம், பார்வை ஆகிய சிறப்புக்களை உற்றுநோக்கிச் சமூகத்தில் திருப்தி நிலவும் பான்மையில் வாழ வழி வகைகள், கல்வி வசதிகள், உத்தியோக உயர்வுகள், மக்கள் பெற்றுய்ய வேண்டும் என்பதாகும். அத்தகைய வசதிகள் தேவைக்கேற்ப விநியோகிக்க வேண்டியிருப்பதால் (Question of Supply and

Demand) அதன் அடிப்படையில் நீதி நிலவ வேண்டும் என்று கோரப்படுகின்றது. இந்த நற்கருமத்தைப் பொது நிலையில் உள்ள அரசியலாரே செய்ய அருகதை உடையோ ராவர். எனவே, இந்த விஷயங்களில்தான் அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக, மனித உயிர்களின்பால் அன்பு கொண்டு அவர்கள் சார்பில் கருணை யாட்சிச் செய்தல் வேண்டும். மதச் சார்பற்ற சர்க்காரைச் சிருஷ்டிச் செய்துள்ளோம் என்று முரசு கொட்டி, மனிதச் சார்பற்று அரசு நடத்தப்பெறுமேல் மக்கள் எள்ளி நகையாடுவர், காலம் கலகத்தைத் தோற்றுவிக்கும். அரசியலில் வகுப்புவாதம் தலைகாட்டலாகாது என்ற கூற் றினைச் சொல்ல சுவைதரும், கேட்க காது குளிரும். ஆனால் வகுப்புக்கள் பல உள்ள அரசியலில் வகுப்பு நீதி வேண்டாம் என்று கதறுவது பாலைவனக் கூச்சல் எனவே மேன்மக்கள் கொள்ளுவர். மனிதன் ஒரு சமூகப் பிராணி யன்றோ! அவனது பிறப்பு, வளர்ச்சி, மேன்மை ஆகியவைகளெல்லாம், தன்னுடைய சமூகத்தைப் பற்றி யுள்ளது. ஆதலால் முதலில் ஒழிக்கப்பட வேண்டியன பாழ்ப்படுத்தும் வகுப்பு முறைகள்; பின்னர்க் களைந் தெறிய வேண்டும் அரித்துத் தின்னும் வகுப்புவாதத்தினை! இது குறித்து இன்னும் கல்விக் கேள்விப்பெற்ற சான்றோர் கள் சிந்திக்க வேண்டும். வகுப்புரிமை பங்கப்பட்டால், 'வகுப்புவாதம்' ஓங்கும்; வாதம் ஓங்கினால் கலக நிலை யோங்கும். நீதி குலைந்தால் சட்டந் தேவைப்படுகின்ற தன்றோ! நீதி கோயிலுறை தெய்வம் போன்றது; சட்டம் துவாரக பாலகர்களைப் போன்றது.

நாட்டின் இலட்சணங்களை நன்கு உணர்ந்து உரைத்த நாயனார் கருத்துரையினை உள்ளுந்தோறும்,

தெள்ளமுதம் அருந்தி இன்பம் துய்ப்பது போலுள்ளது. அவர் கூறுகின்றார்,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு"

என்று. இவ்வமுத மொழியின் கருத்துரையைக் கடுகள வேனும் செயல்வழிக் காணுவரோ நம் அரசியலார்? சமயங்கள் காரணமாகப் பலவித கூட்டத்தினரையும், சாதி காரணமாக பல வகுப்பினர்களையும் கொண்டுளது நமது பாரத நாடு. அத்தகைய சமூகத்தினிடையே உட்பகை, மனிதன் தோன்றிய நாள்தொட்டு இருந்து வருகின்றது. அவற்றினை நீக்க உழைக்க வேண்டும் என்பதே மக்கள் பக்தி கொண்ட மாண்புடையவர்களின் நோக்கமாகும். சமரச ஞானத்தினைப் பரவச் செய்து, சமதர்ம சாதனைகளை அமைத்து நாட்டில் சமூக முன்னேற்றத்தைக் கைவல்யமாக்க வேண்டுவதே அருள் மிக்க ஆட்சியாளர் கடமையாகும்.

## வகுப்பு நீதியும் வயிற்றுப் படிப்பும்

**வாதம்** ;—வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏகதேச மான நன்மையை அளிக்கவல்லது. அதன் மூலம் எல்லா மக்களும் பயன் அடைய முடியும் என்று கூறுவதற்கில்லை. அதனை விரும்புபவர் 'வயிற்றுப் படிப்புப் படிப்போரேயாவர்.' பல சமூக மக்களிடை இருந்து வரும் பூசலை இம்முறை முற்றிலும் தணிக்காது. வயிற்றுக்கென ஆங்கிலம் (கலை ஞானம் என்று கொள்ளவும்) கற்பதே வகுப்புக் கலவரத்திற்குக் காரணம்.

ஆங்கிலக் கல்விப் பயின்றூர் தொகைக்கேற்ப உத்தியோக பீடங்கள் இல்லையாதலால், ஒருசிலரே வர முடிகின்றது. இதனுல் பலருக்கு உத்தியோகம் பெருத வருத்தம் ஏற்படுகிறது. அது நாளடைவில் வகுப்புப் பூசலை யுண்டு பண்ணுகின்றது; வகுப்புப் பிரதிநிதித்துவப் போராட்டத்தை எழுப்புகின்றது. இப்பூசல் பொன்ற வேண்டுமானுல் வயிற்றுப் படிப்பு நாட்டம், நாட்டுத் தொழின் முறைகளின்மீது திருப்பல் வேண்டும். பூசல் முதன் முதலில் ஆங்கிலம் கற்றூர்பாலே உண்டாகின்றது. வயிற்றுப் படிப்புப் பெருகப் பெருக நமது நாடு ஒரு சுடுகாடாகும்.

**பிரதிவாதம்**:—மேற்கூறிய வாதம் முற்றிலும் ஏற்புடைத்தெனை உலகில் நன்கு வாழ வேண்டும் என்ற எண்ணமுடையோர் ஒத்துக்கொள்வதற்கில்லை. வாழ வகை தெரியாது திகைத்த சமுதாயம், தன்னை நம்பியே வாழ முடியாது போனமையான், அரசியலாரைத் துணைக் கோடலாயிற்று. துயரக் கேணியில் உழன்று பரிதவித்த அம்மக்களை "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்", "வகுப்புரிமை நீதி" என்ற தாழ்வடங்களைக் கொடுத்துக் கரையேற்றி வைக்கலாயினர் நீதி நெறிச் சான்ற அரசியலார். இம்முறைகளால் படித்தோரே முன்னேற்றமடைந்தனர்; படிக்காதவர்கள் பட்டி மாடெனை உழைத்து அலுத்துப் போயினர் என்பதே அவ்வாதம். நாட்டில் நன்மைப் பெருக ஒரு சாதன சௌகரியம் அமைக்கப்பெறின் அஃது எல்லா மக்களுக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்பதே மேற்கூறிய வாதத்தின் முடிந்த கருத்து. அது காரணமாகவே வகுப்பு நீதி

ஏகதேசமான நன்மைகளைப் பயக்கவல்லது எனக் கூறப் பெறுகின்றது. வகுப்புரிமை நீதியால் படித்தோரே பயன் பெறுவாராயினர் என்ற கூற்று மெய்யேயாயினும், படிக்காதவர்களும் அதுபோன்ற பயன்களைப் பெறாது போனமையைக் குறித்துக் கூறிய வாதம் ஈண்டு ஒத்துக் கொள்ளக் கூடியதன்று. படித்தவர்கள் படும்பாடே தீராமலிருக்க, படிக்காதவர்கள் படும்பாட்டைப் பற்றியும் கூறி இரண்டு பிரச்சினைகளையும் ஒன்றாக இணைத்துச் சிந்தனை செய்வதில் பயனில்லை. நாட்டில் உள்ள குடும்பங் களில், வீட்டுக்கொரு பிள்ளையாக படித்தால் கூட, இந்த நாட்டில் வேலை கிடையாதே! படித்த பிள்ளையும், படிக்காத பிள்ளைகளோடுச் சேர்ந்துழல வேண்டியதாக விருக்கின்றது !

அடுத்தது, வகுப்புரிமை நீதி வயிற்றுப் படிப்பையே வளர்க்கின்றது என்பதாகும். படிப்பில் வயிற்றுப் படிப்பு என்றும், வயிற்றுக்கல்லாத படிப்பு என்றும் வித்தியாசங் காணுவதுண்டு. பொருளால் ஆக்கப் பெற்ற உலகில் பிறந்த மனித உயிர் வர்க்கம் வயிற்றுப் படிப்பைப் பெற்றாலன்றிப் பிழைக்க வேறு வழி கிடையாது. வயிற்றுக் கல்லாத படிப்பை அதாவது சமயக் கல்வியினை ஒவ்வொருவரும் சொந்த வகையில் பெறவே முயற்சித்தல் சாலும். அரசாங்கத்தாரால் ஆமோதிக்கப்பெற்ற கல்வி யினைப் பெற்றாலன்றி வேறு வழி கிடையாது இக்காலங் களில், கைவினைஞர்களுக்கு அவரவர்தம் ஆயுதங்களே பிழைக்க உதவுவனபோன்று வயிற்றுப் படிப்புப் பெற்ற வர்கள் அதனை நம்பியே உலகில் குடும்ப பாரத்தைச் சுமந்து, நீங்க வேண்டியதாகின்றது! கல்வி என்பது எண்ணும் எழுத்தும் உணர்ந்தவன் கையாயுதமாகும்.

வகுப்புரிமை நீதியால் வழங்கப்பெறும் நன்மை காரணமாக, பல சமூக மக்களிடை இருந்துவரும் பூசல் அகன்றுவிடும் என்பதற்கில்லை. இக்கூற்று உண்மையான தாகும். வகுப்புரிமை நீதியை, சமத்துவத்தைச் சமூகத்தில் நிலை நாட்ட உதவும் ஒருவகைச் சாதனமாகவன்றி அவ்வெல்லையினை யடைய உதவும் ஒரே சாதனமாகக் கொள்வதற்கில்லை. வேறு சாதனங்களைக் கண்டு ஆட்சி முறையில் (Practice) கொண்டுவர வேண்டுவதே அரசியலார் கடமையாகும். வகுப்புரிமை நீதி மூலமாகப் படிக்க கல்வி வசதியும், பிழைக்க உத்தியோக வசதியும், சமதர்ம நீதியில் அளிப்பதுபோல், தங்கி வாழ இட வசதியும், உண்டு உழைக்க உணவு வசதியும், இடுப்பாரக் கட்ட உடை வசதியும் சமதர்ம நீதியில் அமைக்க வேண்டும் என்பதே இக்கால மக்களினத்தின் முடிந்த குறிக்கோள். ஜனநாயக நாடுகளில் அடுத்து நிகழ வேண்டியது சமதர்ம இயக்கமே (Socialism is the next step in a Democracy) ஆகும்.

வயிற்றுக்கென ஆங்கிலம் கற்பதே வகுப்புக் கலவரத்திற்குக் காரணம் என்று ஒரு புதிய முறையில் கற்பிக்கப்படுகின்றது மேற்கூறிய வாதத்தில். 'வகுப்புவாதம்' ஆங்கிலக் கல்வியால்தான் முளைத்தது எனக் கூறுதல் உண்மையன்று. தென்னாட்டில் நிகழும் 'வகுப்புவாதப் பிரச்சினை' 'வலியான்—எளியவன்' பிரச்சினையே யன்றி வேறல்ல. இதற்கு ஆங்கிலக் கல்வியே காரணம் என்று கூறுவது பொருந்தாது. ஆங்கிலம் பெற்றிருக்கும் நிலைமையினை இந்தி மொழிப் பெற இருக்கின்றதே, அப்பொழுது என்ன சொல்லுவார்கள் மேற்கூறிய வாதமிடுவோர். இனி இந்தி

மொழிப் பயின்றால் அன்றி இந்திய நாட்டில் இந்தியர்களுக்கே வேலையில்லையே! மக்கள் வேலை நாடிப் பிழைக்க இந்தி மொழிக் கற்றுப் பிறகுப் போட்டியிட்டால் இந்தி மொழிக் கல்விதான் வகுப்புவாதத்திற்குக் காரணம் என்று கூற இயலுமா? எனவே வயிற்றுக்கென கற்கப் பெறும் ஆங்கிலக் கல்வி, வகுப்புப் பூசலை எழுப்பியது என்று கூறுதல் எஞ்ஞான்றும் ஏற்புடைத்தாகாது. வகுப்புப் பூசல் அவ்வப்போது சமயம், சாதி, நாகரிகம், இலக்கியம், கலை, ஆக இவைகள் காரணமாக பலதிற மக்களிடையே நிகழ்வதாகும். அதுபோன்ற காட்சியினைத் தென்னாடு மாத்திரமேயன்றி, அகிலம் பூராவுமே கண்டு களிக்கின்றது! சுருங்கக் கூறிடில் ஆங்கிலக் கல்வி முறையே நமக்கு உலகை அறிமுகப்படுத்தியது. பூமி அமைப்பு, ககன கோளங்களின் அமைப்பு, பல நாடுகள் வரலாறு, பொருளாதார சாத்திர வளர்ச்சி, அரசியல் மாறுபாடுகள், விஞ்ஞானக் கலை யபிவிருத்தி, தத்துவ விசாரணையின் முக்கியத்துவம், ஆக இன்ன பிறவற்றை ஆங்கிலக் கல்வி முறை மூலமே நாம் அறியலானோம். ஆங்கிலக் கல்வி முறையால் அனுகூலமே அடைந்தனர் இந்திய மக்கள்; இல்லை என்று மறுக்க முடியுமா?

ஆங்கிலக் கல்விப் பெற்றோர் தம் தொகைக்கேற்ப உத்தியோக பீடங்கள் இல்லையாதலால் ஒருசிலரே வர முடிகின்றது; இதனால் பலருக்கு வருத்தம் ஏற்படுகின்றது; அது காரணமாகப் பூசல் நிகழ்கின்றது என்று கூறப் பெறுகின்றன. ஆம்; முற்றிலும் உண்மையே. பலருக்கும் வருத்தம் நோாவண்ணம் வகுப்புரிமை நீதி முறைப்படி உத்தியோகப் பீடங்களைப் பல வகுப்பு மக்களுக்கும் அளிக்கவேண்டும் என்று அது கருதியே நல்லாட்சியினர்

கோரி நின்றனர். அடுத்தபடியாக, மக்களுடைய கவனத்தை வகுப்புவாதத்தினின்று திருப்ப வேறு மார்க்கம் ஒன்றுண்டு; அஃது நாட்டுத் தொழிற் கல்வி திட்டமாகும் (Technical and Technological Education) என உரைக்கப் பெறுகின்றது. தொழிற் கல்வியினை மக்களுக்குப் போதித்திடினும், அஃதும் வயிற்றுப் படிப்பு என்றே கருதப்பெறும். பிழைக்க சக்தியளிக்காத படிப்பு, படிப்பென்றே இக்கால மக்கள் கருதுவதில்லை. பல் கலைக் கழகப் பட்டங்கள் பல பெற்றுள்ளபோதிலும், பிழைக்க வழிக் கற்றுக் கொள்ளாதவர்களாக நாட்டில் அநேகர் உலாவி வருகின்றனர். அது காரணமாக அவர்கள் தாம் பெற்ற கல்வியினை அவ்வப்போது நொந்து கொள்வதுண்டு. நுன்கலை யுணர்வும், பருக்கலை யுணர்வும் மனிதனுடைய ஆக்கத்திற்கு வழி வகுத்துக் காட்டுவனவேயாகும். காலத்தின் தேவைக்கேற்ப கல்வி முறை மாறியமைந்திடினும், அது மக்களைப் பிழைக்க வழிகள் தெரிந்துகொள்ள சாதகமாக அமையும். கைத்தொழிற் கல்வி முறையில் இற்றை நாளில் அரசியலாரும், மக்களும் நாட்டங் கொண்டு ஆவன செய்து வருகின்றனர். அந்த நற்பயனை யாவரும் சுகிக்க வேண்டுமானல் அப்பொழுதும் வகுப்பு நீதி தத்துவத்திற்கு அவசியம் இருந்தே தீரும். இதுகாறும் கூறியவற்றால் படிப்பு வயிற்றுப் படிப்பாக அமைந்திடினும், அதனை வகுப்பு நீதித் தத்துவப்படி மக்கள் பெற்றுச் சுகிக்க வழியில்லாது போயின், நாட்டில் அமைதிக்குப் பங்கமே நேரிடும் என்று அறியலாகும். இதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இவ்வாதப் பிரதிவாதத்தினை யடுத்தே மற்றொரு வாதத்தினைப் பற்றி ஒருசிறிது கூறி மேலே செல்லுவாம்.

அஃது வகுப்பு நீதிப்படிச் சலுகைகள் தர வேண்டும் என்று படித்த நடுத்தர வகுப்பாரே கோரி நிற்கின்றனர் என்பதாகும். இன்னவாறு கூறியவர் சுதந்தர இந்தியாவில் எந்த மாகாண மந்திரியும் சாதித்துக் காட்டாத அளவுக்குச் சென்னை மராமத்து இலாகா சம்பந்தமான பொதுப்பணிகளைச் செய்து காட்டிய **அமைச்சர் திருவாளர் பக்தவத்ஸலமே யாவர்.** வகுப்பு நீதியின் முழுத் தத்துவத்தைப் பிற மந்திரிகளைவிட அவரே அதிகம் அறிந்தவராவர். அங்ஙனமிருந்தும், அவர் உண்மைக் கருத்திற்கு மாறாகப் பேசினார் காஞ்சி நகரில் ஒரு நாள். அவர் குறிப்பிட்ட படித்த நடுத்தர வகுப்பார் யார்? இந்திரலோக வாசிகளா? அல்லது பாதாளலோக வாசிகளா? அவர்களும் இந்த நாட்டில் வாழும் பொதுமக்களைச் சார்ந்தவர்கள் தானே! மிகப் பெரிய அறிஞர்கள்கூட ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் நடுத்தர வகுப்பாரே என்று கூறி வருகின்றனர். அத்தகைய மகிமை வாய்ந்த நடுத்தர வகுப்பாரின் கோரிக்கையைக் கேவலமாக நினைக்கலாகாது. நடுத்தர வகுப்பாரின் நாடி துடிப்பே, நாட்டின் துடிப்பு! அவர்களின் ஆக்கமே நாட்டின் முன்னேற்றம்! படித்த மக்களே படிக்காத மக்களுக்காகப் பாடுபட இயலும். நமது நாட்டு விடுதலை இயக்கம் முதன் முதலில் எங்ஙனம் அரும்பியது? முதலில் படித்தவர்கள் கையிலிருந்து **உலகப் பெரியார் காந்தியண்ணல்** தலைமையின்கீழ் வந்த பின்புதான் விடுதலை இயக்கம் வளர்ந்து, கற்றார், கல்லாதார் என்ற பாகுபாடின்றி எல்லா மக்களுடைய கவனத்தையும் ஈர்த்தது. **சுதந்திரம் என்ற கோஷமுடன் பிறந்தன வன்றோ சமத்துவம், சகோதரத்துவம் என்பனவும்!**

## வகுப்பு நீதியா வகுப்புப் பூசலுக்குக் காரணம்?

**வாதம்:**—வகுப்பு உரிமை நீதி வழங்கியதால்தான் நாட்டில் உள்ள பல சமூக மக்களிடைப் பூசல், பகைமை முதலான தீய ஒழுக்கங்கள் விளைந்தன.

**பிரதிவாதம்:**—முன்னர்க் கூறியாங்கு 'வகுப்பு வாதம்' வகுப்பு உரிமை நீதி வழங்கியதால் ஏற்பட்டதல்ல. வரலாறு, கலை, நாகரிகம், மொழி ஆக இன்ன பிற முக்கிய வகைகளில் வேறுபாடுகள் உள்ள பல வகுப்பு மக்கள் இந்த நாட்டில் வாழ ஆரம்பித்த நாள் முதற் கொண்டே வகுப்புப் பூசல் தலைக்காட்டலாயிற்று. அஃது தோன்றினமைக்குக் காரணம் சுயநலக் கோட்பாடேயாகும். ஒருசில வகுப்பு மக்கள் பிற சமூக மக்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்து, சுயநலக் கவனசித்தர்களாக நாட்டரசியலார் தரும் நற்பயன்களைத் தாமே ஏகபோகமாக அனுபவித்துச் சுகமடைய எண்ணங் கொண்டு "மாயாஜால வித்தைகள்" காட்டிக் கட்டுப்பாடாக நின்றமையே வகுப்புவாதம் தோன்ற காரணமாகும். ஆதலால், வகுப்பு நீதி காரணமாக வகுப்புப் பூசல் தோன்றியது எனல் பொய்யுரையாகும். இறைமைத்தன்மை மிக்க இயற்கையால் தோற்றுவிக்கப்பெற்ற மனித வர்க்கம் தனது உற்பத்தி அடிப்படையில் ஒற்றுமைத் தத்துவத்தைக் (Philosophy of Unity of Humanity) கொண்டுள்ளது. ஆயினும் புற வளர்ச்சிகள் காரணமாக செயற்கைக் கூறுகளால் இயற்கையிலமைந்த அவ்வொற்றுமை சிதைக்கப்பெற்றுத் தோன்றிய வேற்றுமைகள் புலவற்றிற்கு மக்களினம்

அடிமைப்பட நேரிடுகிறது. ஒற்றுமையைக் குலைக்கும் வேற்றுமையினை மனிதன் தன்னுடைய பண்பு கலந்த அறிவால் தடுத்து நிற்கலாகும். ஆனால், சுயநலக் கவன சித்தர்களாக மக்கள் அமைந்திடுவரேல், அவ்வரிய பணியினை யாற்றல் மிகக் கடினமாகும். சுயநலமே **மனித சமுதாய ஒற்றுமையைக் குலைக்கும்.** அந்தத் தீய சுயநலக் கோட்பாட்டினைத் தடுக்கவே, சமதர்ம சிந்தனைச் சிற்பிகள் முறைகள் பல வகுத்தனர். அவற்றுள் ஒன்றே வகுப்பு உரிமை நீதி என்பது. அந்த நல்ல பணியைச் சிறப்பித்ததுபோல அமைந்த **திரு. இராகவன் குருப்** அவர்கள் (Raghavan Kurup) கூறியுள்ள வாசகத்தினை ஈண்டறியலாகும் :—

"*There are weaker sections in the society and this fact is recognised by the constitution when it lays down that the State should take special care to promote their educational and economic interests.*"

"*The amelioration thus envisaged cannot be effected from top downwards, it has got to proceed from bottom upwards, that is with the stage of the three Rs. so that we do recompense for our age old exploitation of the backward classes and gradually bring them on to a level with more enlightened section of the Society. The State should not be detered by the hulla-baloo of the vested interests trading in the name of Democracy and secularism because both would remain a far cry if the present inequalities are not levelled up and the potentialities of friction and the growth of fissiparous tendencies which left unchecked are bound to assail national solidarity if not eliminated on a planned scale. If it is to be effective the process has to commence at the stage of education and if particular sections manouvere to continue their monopoly of privileges*

*at the expense of weaker sections languishing in centuries old backwardness, it will mean a virtual repudiation of spirit of the constitution. Social Justice is not communalism."*

வகுப்புரிமை நீதி இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கண்டுரைத்து விட்டபடியால் இன்று அது நீக்கப்பட்டுள்ளது. வகுப்புப் பூசலுக்குக் காரணம் வகுப்பு நீதி என்று இது வரை தம்பட்டமடித்தவர்கள் இனி என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை. வகுப்பு நீதி நீக்கப் பெற்று விட்டால் வகுப்புப் பூசல் ஒழிந்துவிடும் என்று நம்பினர் போலும் சுயநலக் கவன சித்தர்கள். அரசியலில் வகுப்பு வாதம் (Communalism in Politics) வேண்டாமென்று கதறியவர்கள், அரசியலில் சுயநலம் கூடாது என்று நல்லபுத்திப் படைத்தார்களில்லை. அதற்கு மாறாக வகுப்புரிமை கோரி நின்ற இயக்கத்தை 'வகுப்புவாதக் கிளர்ச்சி' என்ற பொய்ப் பெயரிட்டழைத்தனர். மநுவாதி நீதி நூற்கள், என்று இந்தத் துர்ப்பாக்கிய நாட்டை ஏவல் கொண்டனவோ அன்று முதற்கொண்டே வகுப்புவாதம் தோன்றலாயிற்று! இந்த உண்மையைச் சுக்கு நூறாக உடைத்து உடைத்து தெளிவிக்கக் கூடும். கூறியது சாலும் என்ற காரணத்தாலும், விரிவஞ்சியும் விடுக்கின்றோம். மநு முதலிய நீதிகளை மாற்றி வள்ளுவரை வரவழைத்தோமாகில் நாம் வகைப் பெறலாகும். இது கருதியே தமிழகத்தின் ஷெல்லி (பாரதிதாசன்),

"மநுநீதி அறமான தொருநாள்—அதை
மாற்றும் நாளே தமிழர்தம் திருநாள்"

என்று சமூக நோயின் காரணத்தையும், அதற்கான கழிவையும் கண்டுரைத்துள்ளார்.

சுயநலங் காரணமாக ஏற்பட்ட வகுப்புவாதத்தினை அடியோடுக் களைந்தெறிய பாநலங் கோரிய முயற்சியே சாலும். இந்த அரிய பணிக்குப் பெரும்பான்மை மக்கள் பால் வேண்டுவன கட்டுப்பாடு, ஒற்றுமைப் பாவம், ஓயாத உழைப்பு, குறிக்கோளில் உறுதியான நம்பிக்கை ஆகியவைகளேயாகும். தேசிய கவிஞர் (National Poet) சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலேயரை விரட்டுவதற்கு நம்மனோரை,

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்"

என்று இனிக்குஞ் செந்தமிழில் பாடித் தட்டி எழுப்பினரன்றோ! அந்த வாசகத்தின் மெய்மையை நிலைகாட்ட நாமெல்லோருஞ் சேர்ந்து, பயன்பெறநடந்து கொள்வோமாக.

## வழக்கறிஞரிடத்தில் வகுப்பு நீதி!

**வாதம்:**—எளிய வகுப்பாருக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல், புத்தகங்கள் இலவசமாகத் தருதல், அநாதை மக்களுக்கு உணவு வசதி முதற்கொண்டு மற்றெல்லா வசதிகள் செய்தளித்தல் போன்ற சலுகைகள் அரசாங்க உத்தரவுகள் மூலம் அளிப்பதாலும், ஆங்கிலக் கல்வி முறைக்கு வரப்போகுஞ் சகாப்தத்தில் இடமில்லையாதலாலும், அதற்குப் பதிலாகத் தாய் மொழி மூலம் கல்விப் புகட்ட திட்டமிட்டிருப்பதாலும், பெருவாரியான மக்கள் படிக்க வசதியுண்டு, முன்னேற்றமடைய வாய்ப்புண்டு, தத்தமது ராஜ்யத்தில் (State) செல்வாக்குப் பெற உரிமையுண்டு. சென்னை ராஜ்ய மக்கள் புதிய சகாப்தத்திற்கேற்பத் தங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமே தவிர வகுப்

புரிமை நீதி போன்ற பிற்போக்கான விஷயங்களில் தலைப் பட்டு வாதிடலாகாது. தாழ்த்தப்பட்ட சாதியினின்று ஆற்றல் மிக்க அம்பேத்கார் முளைக்கவில்லையா? வேத வேதாந்தத்தில் பிராமணரல்லாதாரான சுவாமி விவேகானந்தரே மேலோங்கிய உண்மை தெரியாதா? தென்னிந்தியாவில் உள்ள வகுப்புக்கள் யாவும் பின்தங்கிய வகுப்புக்களாகவே உள்ளனவா? அவைகளில் வேளாள வகுப்பார் முன்னேற்றமடைந்து வரவில்லையா!

**பிரதிவாதம்:-** தமது கால முழுவதும் வகுப்பு நீதியை எதிர்த்துப் பேசியவரும், அதனை ஒருவழியாகத் தீர்த்துக் கட்டுவதற்காகச் சமயம் வந்தபோது அரசியல் சட்டத்தில் ஷரத்தினைப் புகுத்த உதவியவரும், தமிழர் அறமிதுவெனக் காட்டிய வள்ளுவர் வாழ்ந்த அதே மயிலையில், மநுவாதி நூல் கண்டோர் மரபினில் வந்துதித்து வாழ்பவரும், சட்ட மல்லாட்டத்தில் கைத்தேர்ந்தவரும், வகுப்பு நீதி ஒழிப்பு முயற்சியினைப் பிறர் மெச்சுதற்கு நீதி தேவன் துணையை நாடி வழக்கு மன்றமேறியவருமான திருவாளர் **அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்** அவர்களே மேற்கூறிய வாதத்தினை இயற்றியவர்.

உபகாரச் சம்பளம், இலவசமாக புத்தகம் வழங்குதல் போன்ற சலுகைகள் காட்டுவதாலேயே எளிய வகுப்பு மக்கள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கூறுவதற்கில்லை. முதன் முதலில் அம்மக்களுக்குக் கிடைக்க வேண்டியது இட வசதியே. அரசினராலும், புண்ணிய புருஷர்களாலும் வழங்கப்பெறும் கல்வி வசதிகள் மிக மிகச் சிலவே யாதலால், அவர்கள் தரும் வசதிகளைப் பற்றிப் பெரிதும் விசேடித்துரைத்து உண்மையைக் காண மக்களைத் தடுப்பது கூடுமோ?

ஆங்கிலக் கல்வி முறை நீக்கப்பெற்றுத் தாய் மொழி மூலம் கல்வி வழங்கிவிட்டால் மக்கள் பிழைப்பதற்கு வது வுண்டு என்று கூறுவது ஓர் ஏமாற்று வித்தையாகும். கால நிலை, மக்கள் மன நிலை ஆகியவற்றின் யுத்தேசித்துத் தேவைக்கேற்ற கல்வி முறையை அமைத்தாலன்றி மக்கள் முன்னேற்றமடைய முடியாது. வழக்கறிஞர் வகுப்பு நீதியின் மாண்பினை, தத்துவத்தை உணர்ந்து கொள்ள மறுப்பவராய், சாக்குகள் பலச் சொல்லி வாதிடலானார், வகுப்பு உரிமை உத்தரவு ராஜ்ய சர்க்காருக்குக் கல்லூரிகளிலும், அரசியலார் பணி மனைகளிலும் உள்ள இட வசதிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க அதிகாரம் தருவதாகும். இதனை அவர் ஒப்புக்கொள்ளாமல் சுய நலக் கோட்பாட்டிற்கு வழி வகைத் தேடிய வண்ணமமைந்தார். இச்செயல் உண்மை காணுந் தொழிலை மேற்கொண்டாருக்கு அடுக்காததாகும். இது கருதியே அவரைத் தேசீய அரசியல்வாதியாகிய திரு. செங்கல்வராயன்,

> "*He is a first grade Lawyer,*
> *Second grade Politician and*
> *Third grade statesman*"

என்று அளந்து கூறினார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினின்று அம்பேத்காரும், பிராமணரல்லாதார் வகுப்பினின்று சுவாமி விவேகானந்தரும் தோன்றிச் சிறக்கவில்லையா என்று இடித்துக் கூறினார் அல்லாடியார். அவருடைய எண்ணம் முயற்சியே உயர்வைத் தரும் என்பது. அஃது மறுக்க முடியாத மறை மொழியேயாயினும், பெரிய சமூகமாக உள்ள

தாழ்த்தப்பட்ட வகுப்பினின்று ஒரு அம்பேத்கார் மட்டும் முளைத்தால் போதுமா? அந்தச் சமூகம் பல அம்பேத்கார்களைத் தோற்றுவிக்க வேண்டாமா? அதற்கு வழிவகைச் செய்து தருவதே வகுப்புரிமை நீதி சாதனம். குதர்க்கவாதிகளே அறிஞர் அம்பேத்கார் என்ன கூறி யிருக்கின்றார் தெரியுமோ? "அவர்கள் படித்தவர்கள்; ஆனால் அறிவாளர்கள் என்று கூறுவதற்கில்லை" என்று எடைப் போட்டுக் கூறினார். படித்துவிட்டால் மட்டும் போதாது; பயன் தரும் அறிவையும் மக்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதே அவர்களின் முடிந்த கருத்து. வேத வேதாந்தத்தில் சிறந்தோங்கிய காரணத்தால் சுவாமி விவேகாநந்தரைப் புகழ்ந்து பேசும் அல்லாடியார், அவ்விவேக முடையார் கூறிய கருத்துரையைக் கேட் டாரா? அவர் கேட்டு நடப்பவராயிருந்தால் வகுப்பு நீதியை ஒழிக்க வழக்கு மன்றம் ஏறி யிருக்கமாட்டாரே! இது சமயம் சுவாமியவர்கள் ஏழை மக்கள் கல்வியபி விருத்தியைக் குறித்துக் கூறிய பொன் மொழியினையறிந்து போற்றலாகும்:—

*"Our aristocratic ancestors went on treading the common masses of our country under foot, till they became helpless; till under this torment the poor; poor people nearly forgot that they were human beings! They have been compelled to be merly hewers-of-wood and drawers-of-water for centuries, so much so, that they are made to believe that they are born as slaves, born as hewers-of-wood and drawers-of-water. With all owr boasted education of modern times, if any body, says a kind word for them, I often find our men shrink at once from the duty of lifting them up, these poor down trodden people. Not only so, but I also find that all sorts of demonical and*

*brutal arguments culled from the crude ideas of heredity transmission and other such gibberish from the western works are brought forward in order to brutalise and tyrannise over the poor, all the more......Aye, Brahmins, if the Brahman has more aptitude for the learning on the ground of heredity than the Pariah, spend no more money on the Brahmin's education, but spend all on the Pariah. Give to the weak, for there all the gift is needed. If the Brahmin is born clever he can educate himself without help. If the others are not born clever, let them have all the teaching and teachers they want. This is the Justice and reason as I understand it." (Vide—The Mission of Vedanta—The complete works of Swami Vivekananda—Mayavati Memorial Edition 1908, Part III at Page 596)*

கல்வியறிவு (Literacy) மிக மிகக் குறைந்த பட்ச அளவில் உள்ள இந்த நாட்டில் முன்னேற்ற வகுப்பார், பின்தங்கிய வகுப்பார் என்று எங்ஙனம் கணிக்க இயலும்? அவ்வகுப்பில் உள்ள படித்த மக்கள் எண்ணிக்கையைக் கொண்டே அஃது செய்ய இயலும். கனியைக் கொண்டன்றோ மரத்தின் பாங்கை புணரக்கூடும் (The tree is known by the fruits it bears). ஆண்டுகள் நூறாயினும் நமது நாட்டில் 25 சதவிகிதத்தில்கூட மக்களைப் படித்தவர்களாகக் காண முடியாது. கட்டாயக் கல்வித் திட்டமே இந்திய நாட்டிற்கு வேண்டப்படுவதாகும்.

## வகுப்பு நீதிக்குக்கொரு கால எல்லையா ?

**வாதம்:**—குறைந்த பட்சம் இன்னும் இருபத்தைந்து வருட காலம்வரையாவது வகுப்பு உரிமை நீதியை நடைமுறையில் வைத்திருந்தால் நன்றாகவிருக்கும்.

**பிரதிவாதம்** :—சுயநலக் கவனச் சித்தர்கள் வகுப்பு உரிமை நீதியை அடியோடு அரசியல் சட்டங்காட்டிச் சாய்க்க முனைந்தனரே என்று வருத்தமுற்று, தன்னம்பிக்கை யிழந்த மக்கள் கூறிய வாதமே மேலே குறிக்கப் பட்டது. வகுப்புரிமை நீதியின் முழுத்தத்துவத்தை நன்கு உணர்ந்தோர் மருள வேண்டிய அவசியமே இல்லை. உண்மைக்கு என்ஞான்றும் செல்வாக்குண்டு. வகுப்பு நீதி என்று கூறினாலே சிலருடைய காதுகளுக்குக் கடூரமாகவிருக்கும்; பலருக்குப் புரியாததாயிருக்கும். அந் நீதியின் தத்துவஞ் சிறந்ததாகையால், காலத்திற்கேற்ற உருவம் அத்தத்துவம் பெறுவதில் நாம் அச்சமோ, ஆச்சரியமோ பட அவசியமில்லை. சமத்துவக் கொள்கை எந்த உருவத்தில் நிறைவேற்றப்பட்டாலும் நாம் வரவேற்க வேண்டியவர்களாவோம். இனியும் வீரியமே பெரிதென அமைவோமாகில் காரியத்தில் தோற்றே போய்விடுவோம். நாட்டில் அமையும் ஆட்சியோடு ஒத்துழைத்து நல்ல முறையிலமைந்த சமத்துவக் கொள்கையைச் சமரசப் பாவத்துடன் பரவச் செய்தலே பொதுநலத் தொண்டர்தம் கடனாகும். மக்களில் நூற்றுக்கு நூறு பேரும் படித்தாலும் சமத்துவக் கொள்கைக்கு அவசியம் ஏற்படும். எனவே, முக்கியமான காரியமாகிய கல்விக் கற்பதையே மக்கள் தமது முதற் கடமையாகக்கொண்டு சோம்பித் திரியாது உயிர் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. சமரசம், சமத்துவம் ஆகிய பிற அறங் கூறுந் திறங்களைச் சமயத் தொண்டர்களேயன்றி அரசியலாரும் அறிந்து செய்யக்கூடும். முதன் முதலில் மனிதன் வல்லபம் வாய்ந்த இயற்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டு அதனை இறைமைத் தன்மையுடைத்து என வணங்கினன்.

பின்னர் சுயநலமிகள் இடையே புகுந்து இயற்கையின் வல்லபத்தினை உருவ மூலம் இறைவனாகக் காட்டலாயினர். மனிதன் மருண்டு அதையும் வணங்கினான். ஆனால் இன்று விஞ்ஞான ரீதியில் அறிவுப் பெற முயற்சித்து மக்களுக்குத் தொண்டு செய்வது மகேசுவரனுக்குத் தொண்டு செய்வது போலும் (Service to Humanity, way to Divinity) என்றுணர்ந்து அமைகின்றான். இந்த வகையில் பக்குவம் பெற்ற மனிதன் நல்லாட்சியை நிறுவ வேண்டும் என்ற ஆசை உடையாராய் அடிகள் – இராமலிங்கப் பெருமான்,

> " கருணை யிலாவாட்சி கடுகி யொழிக
> அருணயந்த நன்மார்க்க ராள்க—தெருணயந்த
> நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து
> எல்லோரும் வாழ்க இசைந்து "

என்று நல்லாட்சியின் இலட்சணத்தையும், ஆட்சிப் புரிவோர்தம் தகுதியைப் பற்றியும் எளிய முறையில் அறிவித்துச் சென்றார் ; கேட்பவர் யார்?

மூன்றும் அதிகாரம் : முற்றும்.

# 4. விளைவு

## சமூக நீதி சட்ட ரீதியில்!

வரலாற்று மேன்மையும், மறக்க முடியாத மெய்மையுஞ் சான்ற வகுப்பு நீதி உத்தரவு, சுயநலக் கவனச் சித்தர்களுடைய மறச் செயல் காரணமாக உரு மாற்றி யமைக்கப் பெற்றதைப் பற்றி இவ்வதிகாரத்தில் ஒரு சிறிது கூறுவாம். சாதாரண அரசாங்க உத்தரவாக இருந்த வகுப்பு நீதி தத்துவம் சில மாற்றமுடன் அரசியல் சட்டத்தின்கண் இடம் பெற்றுவிட்டது; சமூக நீதி சட்ட ரீதியில் கொண்டு வரப்பெற்றது. வகுப்பு நீதியின் சமத்துவக் கொள்கை யாவருக்கும் உடன்பாடானமையான் அதனை உருமாற்றி யமைக்கும் திருப்பணிக்குத் திருவாளர் குமாரசாமி ராஜா அவர்களின் மந்திரி சபை அருகதையுடையதாயிற்று. விடுதலை யடைந்த இந்தியா தனித்தியங்க ஓர் அரசியல் சட்டம் தேவையாகும். அது காரணமாக இயற்றப் பெற்ற சட்டத்தின்கண் அறிந்தும், அறியாமலும் குற்றங்கள், குறைகள் புகுந்திருக்கக்கூடும். அவற்றினை நீக்கி, மேலும் நல்ல முறையில் கொண்டு வருவது மக்கள் பொறுப்பாகும். சுதந்திரமாக வாழ விரும்பினல் சர்வ ஜாக்கிரதையாக மக்கள் இருந்துதான் ஆக வேண்டும் (Vigilance is the price of Liberty). இவ்வாசகத்தின் மெய்மையினை புணர்ந்து இனிமேலாவது இந்தியர்கள் விழிப்படைவார்களா? வகுப்பு நீதி சம்பந்தமாக அரசியல் சட்டத்தின்கண் உள்ள விதிகளை, வழக்கு மன்ற வாதங்களிலும், பொதுமேடைப் பேச்சுக்களிலும்,

அறிஞர்கள் விவாதித்துக் காட்டியபடியும், யாமறிந்த வகையிலும் கூறுவாம்.

## சட்டமாவதற்கு முன்

இந்திய அரசியல் சட்டம் நகல்-குறிப்பாக (Draft Constitution) இருந்தபோது, அஃது முறைப்படி ராஜ்ய சர்க்கார்களின் விவாதத்திற்கு அனுப்பி வைக்கப்பெற்றது. 3–5–1948 அன்று கூடிய மேல் சட்ட சபையில் (Madras Legislative Council) நகல் குறிப்பு விதி, விதியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது. சென்னை மாநில மக்களுடைய மதிப்பிற்குரிய திருவாளர் B. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் வகுப்பு நீதி சம்பந்தமாக வருமுன் காப்போராக நின்று சில திருத்தப் பிரேரபணைகள் கொண்டு வந்தார். சட்டச் சபையில் அவர் ஒருவருக்குத்தான் அந்த ஆற்றலும், துணிவு மிருந்தன; மற்றவர்கள் வாய்மூடி, மெய்கட்டிப் பாஞ்சாலி மானமழியப் பார்த்திருந்த பாண்டவர்கள் போன்றிருந்தனர். அரசியல் நகல் குறிப்புக் கமிட்டியார் படி விதிகள் 16(4), 29(2) அமைந்ததையும், முதலில் அரசியல் நிர்ணயச் சபையில் கொண்டு வந்தபடி அவை அமைந்ததையும் முறையாகக் கீழே தருகின்றோம்:—

நகல் குறிப்புப்படி :—

*Article 16 (4) [Originally Article 10 (3)] :—Nothing in this article shall prevent the state from making any provision for the reservation of appointments or posts in favour of any backward class of citizens which in the opinion of the state, is not adequately represented in the services under the state".*

அரசியல் நிர்ணயச் சபைத் தீர்மானப்படி அது பின் வருமாறு அமையும் :—

*"Nothing in this article shall prevent the state from making any provision for the reservation of appointments or posts in favour of any class of citizens who, in the opinion of the State, are not adequately represented in the services under the State".*

ராஜ்ய சர்க்கார் கருத்துப்படி அரசாங்க ஊழியங்களில் எந்தப் பின்தங்கிய வகுப்பு மக்களாவது போதிய அளவுக்குப் பிரதிநிதித்துவம் பெறுவிடில், அக்குறையை நீக்க அச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் முறையைத் தடுக்க முடியாதென்பதே மேற்கூறிய அரசியல் சட்ட நகல் குறிப்பு விதியின் கருத்தாகும். இதற்கு நாயுடு அவர்கள், "எந்தப் பின்தங்கிய வகுப்பு மக்களாவது" என்ற சொற்றொடரை நீக்கி "எந்த வகுப்பு மக்களாவது" என்று முன்னரே இருந்த சொற்றொடரைப் பிரயோகிக்கலாகும் எனத் திருத்தம் கொண்டுவந்தார். திருத்தத்தின் மகிமையைச் சிந்தித்துப் பார்த்து உணரும்படி வேண்டுகின்றோம். மேலும் அரசியல் நகல் குறிப்பு விதியில் பின்தங்கிய மக்கள் என்று முதன்முதலில் குறிக்கப்படவில்லை யென்றும், திரு. முன்ஷியார் திருவிளையாடலால் அஃது வந்தமைந்ததென்றும் அறிஞர்கள் மூலம் அறியப்படுகின்றன.

நகல் குறிப்புப்படி :—

*Article 29(2) [originally article 23(2)] :—"No citizen shall be denied admission into any educational institution maintained by the state, or receiving aid out of the state funds, on grounds only of religion, race, caste or language or any of them".*

அரசியல் நிர்ணயச் சபையில் முதலில் கொண்டுவரப் பெற்றபடி :—

*"No minority whether based on religion, community or language shall be discriminated against in regard to the admission of any person belonging to such minority into any educational institution maintained by the State".*

சமயம், சாதி, மொழி ஆகியவற்றின் காரணமாக சிறுபான்மையோரை அரசியலாராலும், அரசாங்கப் பணவுதவிப் பெறுபவர்களாலும் நடத்தப்பெறும் கல்விச்சாலைகளில் அனுமதிப்பதற்காகப் பாகுபாடுப்படுத்தலாகாது என்பதே மேற்கூறிய நகல் விதியின் கருத்து. விதி 29(2) எத்துணைப் பாட பேதம் ஏற்றுள்ளது பாருங்கள்! இஃது நகல் குழுவினர் செய்த 'தர்ம கைங்கரியமாகும்'! மேற்கூறிய அரசியல் நகல் விதி 29(2)-ஐ நாயுடு அவர்கள் அரசியல் சட்ட விதி 37-ற்குக் கட்டுப்பட்டதாக (Subjeet to the provision of Article 37) கொண்டு வரலாம் என்று கூறினர். அவர் கொண்டுவந்த திருத்தப் பிரேரேபணைகள் யாவும் சட்ட சபையில் நிறைவேற்றப்பெற்றன ; ஆயினும் சுயநலமே வெற்றிப் பெற்றது! **நிரந்தரக் கொடுமையை நிலைநாட்டுந் தோரணையில் நகல் குழுவினர் காரியமாற்றினும், சுதந்தரப் புருஷர்களாகிய நமக்கு அக்கொடுமைகளைக் களைந்தெறிய முடியாமலா போகும்!**

## சட்டமானதற்குப் பின்

அரசியல் திட்டத்தைச் சட்டமாக்கி 1950-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 26-ந் தேதி பிரகடனப்படுத்தினர்கள் ஏகப் பிரதிநிதிக் கட்சியார்களாகிய காங்கிரசார். அத

னிடையுள்ள முரண்பாடுகளைக் களைந்தெறிய அவர்கள் கருத்தூன்றினார்கள் இல்லை. அதற்கு மாறாக சட்ட வாதக்காரர்கள் சச்சரவிற்கு அவர்கள் வழிவகுத்துக் காட்டியுள்ளனர்.

அரசியல் சட்டத்தில் இரண்டு முக்கிய விதிகள் 340 ஆகவும், 341 ஆகவும் விளங்குகின்றன. விதி 340-இல் பின்தங்கிய வகுப்பு மக்களின் நிலைமையைக் கண்டறிய ஜனாதிபதி விரும்பிய அங்கத்தினர்கள் நிரம்பிய குழுவை அமைப்பதென்றும், விதி 341-ல் தாழ்த்தப்பட்டோர் நிலைமையினைக் கண்டறிய ராஜ்யப் பிரமுகரின் ஆலோசனையை ஏற்பதென்றும் கூறப்பெற்றுள்ளன. இவ்விதமாக மாறுபட்ட முறைகள் மூலம் காரிய சாதனைச் செய்ய அதிகாரம் அளிக்கும் அரசியல் சட்ட விதிகள், அந்தந்த நாட்டு மக்கள் நிலைமையை நன்கறியும் வாய்ப்புப் பெற்ற ராஜ்ய சர்க்காருக்கு அந்த அதிகாரங்களை, பொறுப்பை அளிக்காத காரணம் என்ன? மேலும் இவ் விஷயங்களில் அவை தலையிடவும் அதிகாரம் தரப்பட வில்லை. பொதுமக்கள் இவற்றினைப் பற்றிச் சிந்தனைச் செய்து, மக்கள் சமுதாயத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்தி யற்றவர்களாக உள்ள மக்களின் எண்ணிக்கையைக் கணித்தறிய ஆவன செய்வார்களாக. சட்டம் நடைமுறையில் வந்து வருடங்கள் இரண்டிற்கு மேலாகியும், சுதந்தர இந்தியாவின் ஜனத் தொகையைக் கணக்கெடுத்த பின்பும் அப் பணியைச் செய்து முடிக்கவில்லை; காரணம் யாதோ? அரசியல் சட்டம் எழுப்பியுள்ள ஜீவநாடிப் பிரச்சினைகளுள் அஃதும் ஒன்றே.

## சமூக நீதி—அரசியல் சட்ட விதி-13

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே "

(" The old order changeth,
yielding place to new,")

என்று இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் வகுத்துரைத்தபடியே, புதிய இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணாக உள்ள பழைய அரசியலார் உத்தரவுகள், சட்டங்கள் ஆகியவை யாவும் நீக்கப்பட்டுள்ளன. இந்த உண்மையைச் சட்டப்பூர்வமாக அரசியல் சட்ட விதி-13 எடுத்துக் கூறுகின்றது. அது வருமாறு:—

*Article 13(1):—" All laws in force in the territory of India immediately before the commencement of this constitution, in so far as they are inconsistent with the provisions of this Part, shall, to the extent of such inconsistency, be void ".*

வகுப்பு உரிமை நீதி நீதிபதிகளின் தீர்ப்புப்படி அரசியல் சட்ட விதிகள் 15(1), 29(2) ஆகியவைகளுக்கு முரணாகக் காணப்பெறுவதால், அரசியல் சட்ட விதி—13ன்படி நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட விதி மூலம் இந்திய அரசியல் சட்டத்திற்கு ஒரு தனி மதிப்புத் தருவதற்காக, அஃது பிரகடனப்படுத்தப்பெறுவதற்கு முன்பு இருந்த (மாறுபாடான) சட்டங்களோ, உத்தரவுகளோ நீக்கலாகும் என்று அரசியல் சட்டம் வகுத்தவர்கள் சர்வ ஜாக்கிரதையாக, " கங்கை யம்மனுக்குக் காப்புக் கட்டுவது " போல் அரசியல் சட்டத்திற்கு ஒரு காவல் விதி அமைத்துள்ளனர். பொதுமக்களுடைய முன்னேற்றத்தில் அவர்

களுக்குக் கவலை யிருந்திருந்தால், பழைய பிற்போக்கான ஏற்பாடுகளை நீக்கிப் புதிய முற்போக்கான விதிகளைப் புகுத்தியிருப்பர்; அஃது செய்தார்களில்லை.

## இந்திய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையும் பொதுப் பிரஜா உரிமையும்—விதி-15

இந்திய அரசாங்கம் மதச் சார்பற்ற சர்க்காரை அமைத்து ஆட்சி நடத்த திட்டமிட்டுள்ளதால், அந்தக் கொள்கையை (Governmental policy) ஒரு பொதுப் பிரஜா உரிமையாகவும் (Fundamental Right) வகுத்துக் காட்டியுள்ளனர். விதிகள் 15(1), 15(2) ஆகிய இவ்விரண்டும் நடைமுறையில் மகிமையுடன் விளங்க வேண்டும் என்பதே அரசியலார்தம் நல்லெண்ணமாகும். அவ்விதிகள், இனம், சமயம், சாதி, பால், மொழி, பிறப்பிடம் ஆகியவைகள் காரணமாக மட்டுமே மக்களைப் பாகுப்படுத்தி அரசியல் நன்மைகளை யனுபவிக்க அனுமதிக்கலாகாது என்று கூறுகின்றன. ஆனால், இந்தப் பொதுப் பிரஜா உரிமைக்கு விலக்காகக் கிளை விதிகள் 15(3), 15(4) அமைந்துள்ளன. கிளை விதி 15(4) அண்மையில் மக்கள் தலைவர் பண்டிதர் - ஜவஹர்லால் நேரு அவர்கள் வகுப்பு நீதி நீக்குதல் சம்பந்தமாகச் சாதித்துக் காட்டிய திருத்த விதியேயாகும். விதி 15-ந்தில் உள்ள முன்னிரண்டு கிளை விதிகள் வகுப்பு நீதித் தத்துவத்தை நிராகரிக்கின்றன; ஆனால் பின்னிரண்டு கிளை விதிகள் ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த முரண்பாடு விதி-15 மாறும் வரை நீடித்தே இருக்கும்; பலவிதச் சட்ட வாதங்கள் நிகழ்ந்தவண்ணமாகவே இருக்கும்.

## பொது விதியினுள் ஒரு சிறப்பு விதி-16

அரசியல் சட்ட விதிகள் 16(2)-ற்கும், 29(2)-ற்கும் நெருங்கிய தத்துவ சம்பந்தமிருந்தபோதினும், வாசக வேற்றுமை யுண்டு. விதி 16(2) கூறுவதாவது :—

*"No citizen shall on grounds only of religion, race, caste, sex, descent, place of birth, residence or any of them be ineligible for, or discriminated against in respect of, any employment or office under the state".*

முன் பக்கங்களில் குறிப்பிட்ட அரசியல் சட்ட விதி 29(2)-ஞேடு இவ்விதி கூறும் வாசகத்தினை ஒப்பிட்டுப் பார்க்கவும். அரச மன்றப் பணியளிக்கும் விஷயத்தில் சமயம், இனம், சாதி, பால், வம்சம், பிறப்பிடம், இருப்பிடம் ஆகியவற்றின் காரணமாக ஒருவரையும் தகுதியற்றவர்களாகக் கருதிப் புறக்கணிக்கலாகாது என்று கூறினர் விதி 16(2)-இல்; ஆனால் விதி 29(2)-இல் அதுபோன்ற காரணங்களுக்காக மட்டுமே கலாசாலைகளில் அனுமதித் தர மறுக்கலாகாது என்று குறிப்பிட்டனர். சுயநலக் கொள்கையை எங்கெங்கு கொழுந்துவிட்டு எரியச் செய்யக்கூடுமோ அங்கெல்லாம், விதி முறைகள் அதற்குச் சாதகமாக அமைக்கப்பெற்றுள்ளன. விதி 15(1), 15(2) ஆகியவை ஏற்பட்ட பின்பு விதிகள் 16(2)-ற்கும், 29(2)-ற்கும் அவசியமேயில்லை. விதி 16(2)ற்கு விலக்காக விதி 16(4) அமைந்துள்ளது. சாதி, மதம் இன்னபிற காரணமாகப் பாகுபாடுச் செய்து புறக்கணிக்கலாகாது என்று விதி 16(2)-ல் கூறிவிட்டு, பின்தங்கிய வகுப்பு மக்களுக்குச் சலுகை செய்து தர விதி 16(4)-ஐ அமைத்திருப்பதின் எண்ணம்

யாதோ? வகுப்புரிமை நீதியின் முழுத் தத்துவத்தை ஒப்புக்கொள்ளாவிடினும், பொது நோக்கத்தையாவது விதி 16(4) ஏற்றுக்கொள்வதை நாம் அறியலாகும். நிலைமை அவ்வாறிருக்க விதி 29(2)-ஐக் காட்டி வகுப்பு நீதியைச் சாடியதேனோ?

## மறக்க முடியாத சட்ட விதி - 29(2)

இனம், சமயம், சாதி, பால், மொழி, பிறப்பிடம் ஆகியவைகள் காரணமாக மக்களைப் பாகுபடுத்தி யுணர லாகாது என்று ராஜ்ய சர்க்காருக்கு விதி 15(1) கட்டளைப் பிறப்பிக்கின்றபோது, விதி 29(2)-ற்கு என்ன அவசியமோ தெரியவில்லை. அடிப்படை உரிமைகளைப் பல பாகுபாடுகளில் வகுத்துரைத்ததால் வந்த கோளாறே இஃது. விதி 29(2) என்பதனைக் "கலை உரிமைகள், கல்வி உரிமைகள்" (Cultural and Educational Rights) என்ற பகுதியில் சேர்த்துள்ளனர் சட்டஞ் செய்த மேதைகள். இந்த விதிக்கு அவசியம் யாதென அரசியல் நிர்ணயச் சபையிலுஞ் சரி, ராஜ்ய சர்க்கார் சட்ட சபைகளிலுஞ் சரி, யாரும் கேட்கவில்லை; தூங்குகின்றவன் தொடையில் கயிறு திரிப்பது போல இந்த விதியை அரசியல் சட்டத்தின்கண்ணே கவனமுடனிருந்து புகுத்திவிட்டனர் பொது மக்களின் நிலைமையையும், நலனையும் உணராத சித்தாந்திகள்.

விதி 29(2), ராஜ்ய சர்க்கார் வகுப்பு நீதி சம்பந்தமாகச்செலுத்திவந்த அதிகாரத்தைக் கௌவிக்கொண்டது. ராஜ்ய சர்க்கார் தமது எல்லைக்குள் வாழும் மக்களுடைய நலனை யுத்தேசித்து என்னென்ன முறைகளை யெல்லாம்

கையாளக் கூடுமோ அவற்றினை யெல்லாம் பெற்றே தீர வேண்டும். அத்தகைய உணர்வின் பயனாகத் தோன்றியதே வகுப்பு நீதி உத்தரவு. அதனைச் சிதைத் தொழிக்கவே விதி 29(2) பலவிதத் தில்லுமுல்லுகளுடன் புகுத்தப் பெற்றது. சிறுபான்மையினராக விருக்கும் மக்கள் உரிமைகளைக் காத்து நிற்க (Protection of interests of minorities) வகுக்கப்பெற்ற இந்த 29(2)-வது சட்ட விதி, பெரும்பான்மை மக்களின் க்ஷேமத்திற்கு ஊறு செய்துவிட்டது ; இஃது வரம்பு கடந்த செயலேயாகும். இந்தத் துர்ப்பாக்கிய நாட்டில் சிறுபான்மையினரே செல்வாக்குப் பெற்றுப் பெரும்பான்மையினரைத் தாழ்நிலைப்படுத்திவந்த அநீதிகளைப் போக்கவே, சென்னை அரசியலார் வகுப்பு நீதி உத்தரவை வெளியிட்டனர். ஆனால், சுயநலப்பிரியர்கள் அதற்கு இடமளிக்காதவாறு விதி 29(2)-ஐ ஆக்கி அமைத்தனர்.

விதி 29(2)-ன்படி மாணவர்களை இனம், சமயம், சாதி, பால், மொழி, பிறப்பிடம் என்ற வித்தியாசங்கள் காரணமாக மட்டுமே பாகுபடுத்தி அரசாங்கக் கலாசாலைகளில், அரசாங்க உதவிப் பெற்று நடத்தப்பெறும் கலாசாலைகளில் அநுமதி தரலாகாது என்பதாகும். இந்தப் பரந்த உபகண்டத்தில் வேதகால முதற்கொண்டு மக்கள் பலதிற வகுப்புக்களில் அடைக்கப்பெற்று உழன்று வருகின்றபோது, அவர்களுக்கெல்லாம் சம சந்தர்ப்ப சௌகரியங்கள் (Equal opportunities for all) செய்து தருவது யாங்ஙனம்? அவ்விடர்பாட்டை வகுப்பு நீதி போன்ற அரசியல் சாதனங்களால் ஓரளவு நீக்க முடியும். அதற்குப் பதிலாக ஏதாவது முறையிருந்தால் கண்டு கூற வேண்டுமே? எந்த அடிப்படையில் மக்களைக் கல்விச்

-சாலைகளிலும், பணி மன்றங்களிலும் அனுமதிக்க வேண டும் என்று அரசியலார் சட்டபூர்வமாகக் கண்டு கணித்துள்ளனர்? அம்சம் (marks) வாங்குவதைத்தான் அடிப்படையாகக்கொண்டு, தகுதி திறமையைக் கணித்து மக்களை அனுமதிக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்தில் கூறப்பெற்றுள்ளது? ஆங்கில ஆட்சியினர் கண்ட முறை யினை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியுமா இனி யும்? இது குறித்துச் சிந்தனை செய்ய வேண்டாமா?

விதி 29(2), அரசியல் சட்டத்தின்கண் முன்னணி கீதமாக (Preamble of the Constitution) அமைந் துள்ள, நீதி (Justice), சுதந்தரம் (Liberty), சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity) என்னும் கோரிக்கைகளை நிறைவேற்றவொண்ணுமல் தடுத்து நிற் கும். **இந்தியாவின் இதய கீதமாக அமைந்துள்ள சமத்துவ நாட்டத்தைச் செயல்வழியுங் காண வேண்டாமா?** மேலும் இவ்விதி, நான்காம் அதிகாரத்தில் கூறப்பெற்ற 46-வது விதிக்கு முரண்பாடாக அமைந்துள்ளது. மேலே கூறிய காரணங்களுக்காகவே இந்த விதியை நாம் மறக்க முடியாத சட்ட விதி என்றழைக்கின்றோம்.

## சமூக நீதிக்குச் சாதகமான சட்ட விதி - 46

*Article 46 :—"The state shall promote with special care the educational and economic interests of the weaker sections of the people, and in particular of the scheduled casts and the scheduled tribes, and shall protect them from social injustice and all forms of exploitation".*

அரசியல் சட்டத்திலுள்ள 46-வது விதியினைப் படிக் குந்தோறும், மகிழ்ச்சி யொருபக்கமும், ஏக்கம் ஒருபக்க

றும் தோன்றுகின்றன. இந்த விதியின் கருத்து, ராஜ்ய சர்க்கார் எளிய வகுப்பினர்களாக உள்ள மக்களுடைய கல்வி யபிவிருத்தியைக் குறித்தும், பொருளாதார ஆக்கத்தைக் குறித்தும் விசேஷ கவனஞ் செலுத்திப் பாதுகாக்க வேண்டுமென்பதாகும். இந்த அருமையான விதிக்குக் காரணமாக இருந்தது, உத்தமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் நல்லெண்ணத்தை யொட்டி வெளிப்பட்ட அடிப்படைக் கொள்கைத் தீர்மானமாகும் (Objective Resolution). அரசினர் கொள்கையும் (State Policy) அம்முறையில் அமையவேண்டும் என்று அவர் வற்புறுத்தினர். இந்த நல்லெண்ணக் கொள்கையை, வைக்க இடந் தெரியாமல் வைக்கோற் போரில் வைப்பதுபோல் அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறும் மூன்றும் அதிகாரத்தில் (Fundamental Rights) புகுத்தாமல், அரசாங்கக் கொள்கையைப் பற்றிக் கூறும் (Directive Principles of State Policy) நான்காம் அதிகாரத்தில் கொண்டு வைத்தனர் சட்டந் தீட்டியவர்கள். அது போதாதென்று இந்த விதியின் சக்தியை, 37-வது விதியின் மூலம் ஒடுக்கியும் விட்டனர். விதி-37 என்ன கூறுகிறது தெரியுமோ?

*Article 37:—"The provisions contained in this part (Part IV) shall not enforceable by any Court, but the principles therein laid down are nevertheless fundamental in the governance of the country and it shall be the duty of the State to apply these principles in making laws".*

இந்த விதியின்படி, நான்காம் அதிகாரத்தில் கூறப்பெற்றிருக்கும் ஷரத்துக்களின் தத்துவத்தை நாட்டரசியலார் செய்யும் சட்டங்களில் ஏற்றுக்கொள்ளலாகும்; ஆனல் அவைகளைக் கோர்ட் மூலம் நடைமுறையில்

கொண்டுவர முடியாது என்று திட்டவட்டமாகக் கூற பெற்றுள்ளது. நாட்டாட்சி நல்ல முறையில் நடப்பதற்கு திட்டம் வகுப்பது ஒரு முறையில், அத்திட்டங்களை நிறைவேற்றவொண்ணுமல் தடுப்பது வேறொரு முறையிலா? இதுவா அரச தர்மம்? வலது கை கொடுப்பதை இடது கைகூட அறியலாகாதென்பர் மெஞ்ஞானிகள்.

"Let not thy left hand know what thy right hand doeth"

ஆனுல் ஈண்டு ஒரு கையால் கொடுக்கப்பெற்ற தர்மம் மற்றொரு கையால் அடித்துப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றது! இதனையா தர்மஞ் செய்தலென்பது? அரசியல் சட்டத்தில் புகுந்துள்ள எத்தனையோ பித்தலாட்டங்களில் இதுவும் ஒன்று. வகுப்புரிமை நீதி வழக்குச் சம்பந்தமாகத் தீர்ப்புக் கூறிய நீதிபதிகள் சட்டம் என்ன சொல்லுகின்றதோ அதனையே வேறு உருவத்தில் விளக்கிக் கூறலாயினர். அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! சட்டாதிபதிகள் (மடாதிபதிகள் போன்று) என்று அழைக்கப்பெற வேண்டியவர்கள், நீதிபதிகள் என்று வழங்கப் பெறுகின்றனர். அதுவும் ஒரு மாயாஜால வித்தையேயாகும்! அவர்கள் கூறிய தீர்ப்பின் கருத்து, அரசியல் சட்டத்தின் நான்காவது அதிகாரத்தில் கூறப்பெற்ற 46-வது விதி முறையைக் கோர்ட் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவர 37-வது விதியின்படி முடியாது. எனவே அதனை அடிப்படை உரிமைகளை வகுத்துரைக்கும் மூன்றும் பாகத்தோடுச் சேர்த்துணரலாகாது. அடிப்படை உரிமைகள் தனி மகிமை (Sacrosanct) வாய்ந்தவை. அவைகளைக் குறைக்கவோ, கட்டுப்படுத்தவோ, மாற்றவோ, அவைகளுக்கு முரணுக நடக்கவோ முடியாதென்று விளம்பினர்.

சமூக மேம்பாட்டைக் குறித்து விளக்கமாக ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் தரும் 46-வது விதி சமூக நீதிக்குச் சாதகமாக அமைந்திருப்பதை நீதியின் தத்துவத்தையும், விதியின் கோரிக்கையையும் இணைத்துப் பார்ப்பவர்களுக்கு எளிதில் புலனாகும். அத்தகைய மகிமை வாய்ந்த 46-வது விதியை நான்காம் பாகத்தில் சொல்லலங்காரமாக இருக்கட்டும் என்று வைத்தனர் மக்கள் நலனை யறியாதார். இது கருதியே நாம், 46-வது விதியை ஆக்கினதற்கு மகிழ்ச்சியும், அதன் பயனை அடைய மூன்றாம் பாகத்தில் அவ்விதியைப் புகுத்தவில்லையே என்பதற்கு ஏக்கமும் கொண்டோம் என்று கூறினோம்.

## அடிப்படை உரிமையும் அரசாங்கக் கொள்கையும்

காலத்தின் தேவைகளுக்கேற்ப இன்று மனித சமுதாயம் அரசாங்க இயந்திரத்திற்கு ஆட்பட்டு வாழ வேண்டிய அவசியத்திற்கு வந்தாகிவிட்டது. ஆதி மனிதனுக்கு அரசாங்க அமைப்பு முறை தேவைப்பட்டிருக்காது. பின்னர் அவனுடைய ஆசாபாசங்கள் பல துறைகளிலும் நாடினமையால், ஓர் அமைப்பு முறையை ஏற்றுக்கொள்ள விழைந்திருப்பான். மண முறை, சொத்துப் படைத்தல், சுதந்தரமாக வாழ்தல், பாதுகாப்பு அமைத்துக்கொள்ளுதல் என்ற திட்டங்கள் அவனுக்குத் தேவைப்பட்டவுடன் தானாகவே ஒருவகை ஒப்பந்தத்திற்கு (Consent) வந்து தனக்கென ஒரு தலைமை அதிகாரம் ஒன்றினை, அரச இயந்திரத்தைச் சமைத்துக் கொண்டிருக்கக் கூடும். அம்மாதிரியான ஒப்பந்தத்திற்கு வந்தபொழுது தனி மனித

உரிமைகள் சிலவற்றை அக்கால மக்கள் தியாகஞ் செய்ய நேர்ந்திருக்கும். இந்தக் கொள்கையை வலி யுறுத்தி ஹாப்ஸ் (Hobbes) என்னும் ஓர் அரசியல் ஞானி யார் (Social contract theory) 'சமூக ஒப்பந்தக் கொள்கை' என்னும் ஓர் அரிய நூலை வெளியிட்டார். அதன் முழுக் கருத்து வருமாறு :—

"*The State is the result of an agreement entered into by men who originally had no Governmental organisation*".

அத்தகைய ஒப்பந்தம் இரண்டு கூறுகள் (Forms) உடையதாகும். ஒன்று, அரசாங்கத்திற்கும் மக்களுக் கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் (Governmental contract); மற்றொன்று, தனி நபர்கள் தமக்குள்ளாகக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு ஐக்கிய பாவத்தோடு ஓரரசியல் சமூகமாக (Political Society) வாழ ஒத்துக் கொண்டதுமாகும் (Social contract).

முன்னர்க் கூறிய ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் (Existence) பின்னர் கூறப்பெற்ற ஒப்பந்தத்தின் உறு தியைப் (Strength) பற்றியுள்ளது. முதலாவதாகக் கூறிய ஒப்பந்தம் மக்களுடைய ஆதரவையும், அரசாங்கத் தின் செல்லுகையையும் துணைக் காரணங்களாகக் கொண் டுள்ளதால் அரசாங்கத்தின் கடமை (Obligation) எது? மக்களுடைய பொறுப்பு (Responsibility) எது? என்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. மக்கள் தம்முடைய முன்னேற்றத்திற்குச் சாதகமாக என்னென்ன உரிமை களைக் கோரி நின்று ஒப்பந்தஞ் செய்துகொண்டனரோ அவைகள் பறிபோகாமல் பாதுகாக்கவும், பொறுப்புணர்ச்சி யுடன் அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்கவும் கடமைப் பட்டவர்களாகின்றனர். அங்ஙனமே அரசாங்கமும் தன்

-னிடம் ஒப்படைக்கப்பெற்ற அதிகாரத்தை மக்கள் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. ஓர் ஆட்சியின்கீழ் அமைக்கப்பெற்ற அரசியல் சமூகம், சமூகமாக வாழ்வதற்குச் சமதர்மக் கொள்கையை அடிப்படைத் தத்துவமாகக் கொள்ள வேண்டும். அதைவிட வேறு மார்க்கம் அந்த அரசியலுக்குக் கிடையவே கிடையாது. சமதர்ம ரீதியில் அரசாங்கத் திட்டங்கள், ஏற்பாடுகள் அமைகின்றனவென்றால் என்ன அர்த்தம்? அவை மக்களுடைய உரிமைகளுக்கேற்ப அமைத்தல் என்பதாகும். சமமாக வாழ வேண்டும் என்ற மக்களுடைய கோரிக்கைக்கேற்றாங்கு அரசாங்கக் கொள்கையமைந்திடில் வேறென்ன வேண்டும்?

மேற்கூறிய தத்துவத்தை வகுப்புரிமை நீதி வழக்குச் சம்பந்தமாக நீதிபதிகள் கூறிய வாக்கினோடும், நாடாளப் பிறந்த நன்மக்கள் புகன்ற நல்லுரைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ளுதல் பயனுடையதென்று கருதி, அன்னோர் வாக்கினை ஆங்கில மொழியிலேயே கீழே தருகிறோம்:

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கூறியதாவது:—

"*The Directive Principles of State policy which by Article 37 are expressly made unenforceable by a Court cannot override the provisions found in Part III which notwithstanding other provisions are expressly made enforceable by appropriate writs, orders or directions under Article 32. The chapter of Fundamental Rights is sacrosanct and not liable to be abridged by any legislative or executive Act or order, except to the extent provided in the appropriate Articles in part III. The Directive*

*Principles of state policy have to conform to and run as subsidiary to the chapter of Fundamental Rights. In our opinion that is the correct way in which the provisions found in Parts III and IV have to be understood. However so long as there is no infringement of any fundamental right, to the extent conferred by the provisions in Part III, there can be no objection to the State acting in accordance with the Directive Principles set out in Part IV, but subject again to the legislative and executive powers and limitations conferred on the State under different provisions of the Constitution".*

சென்னைச், சர்க்காரின் சட்ட. மந்திரியாக அப்பொழுது இருந்த மந்திரி மாதவமேனன் அவர்கள் கூற்று அடுத்து மொழிகின்றும்:—

*"He felt there was an inconsistency in the constitution. While there was a Directive Principle under Article 46 that it was the duty of the State to promote with special care the educational and economic interests of the weaker sections of the people, and in particular of the scheduled castes and tribes and protect them. Article 29 (2) put an absolute ban on discrimination on the basis of race, religion creed or caste. The Courts had held Article 46 a mere pious wish but that was not the intention of the Constitution makers.*

*In the circumstances the state could not reserve seats for the Harijans and scheduled tribes. It was right that they ask that the intention of the Constitution makers be made clear. They had to be charitable in dealing with the situation and lend a helping hand to the less fortunate. All handicaps should be removed and all given fair opportunities".*

சுதந்தர இந்தியாவின் மத்திய அரசாங்கச் சட்ட மந்திரியாக இருந்தவரும், இந்திய அரசியல் சட்டத்தை ஆக்கி அமைத்த குழுவின் தலைவராக (Chairman of the Drafting Committee) இருந்தவருமான டாக்டர் அம்பேத்கார் விதி 29(2)ஐயும், 46-வது விதியையும் ஒப்பிட்டுச் சட்ட திருத்தத்தின் அவசியத்தைப் (Necessity for amending the Constitution) பற்றிக் கூறிய கருத்துக் கீழே தரப்பெறுகின்றது :—

"*Article 46 laid upon Government the obligation of doing everything possible to promote the welfare and interests of the weaker sections of the people by which he understood it to mean the backward classes and such other classes as were, for the moment unable to stand on their own feet. It was incumbent on Government and Parliament to see that this obligation was fulfilled. If it was to be fulfilled he could not see how one could escape the amendment so as to prevent Article 29(2) and 16(4) being interpreted in the way they had been interpreted and made a block in the way of advancement of the weaker sections.*"

கண்ணியமிக்க கர்மவீரர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியப் பாராளுமன்றத்தில் வகுப்புரிமை நீதியை மாற்றியமைப்பதற்கு உதவும் வகையில் சட்ட திருத்த மசோதாவைக் கொண்டுவருகையில் கூறிய வாசகத்தின் முக்கியமான பகுதிகளைத் தொகுத்துக் கீழே தருகின்றோம் :—

"*The Prime Minister in dealing with the amendment to Article 15 said the 'indirect conflict' between the Fundamental Rights and the Directive Principles represented the dynamic move towards certain objectives while the Fundamental Rights preserved certain rights which existed and therefore repre-*

*sented the static. In giving effect to the Directive Principles certain existing relationships had to be varied. There was hence a certain conflict with two approaches. In considering the conflict the courts naturally had to lay greater stress on the Fundamental Rights. The result was that the whole purpose behind the Constitution which was meant to be some what dynamic and living thing had been some what hampered and hindered."*

*"Drawing the attention of the House to Article 29(2) which forbade anyone being shut out of Government educational institutions on grounds of religion, caste etc," Mr. Nehru said, "that it is a Fundamental Right by which this Constitution stands and we must stand by it. There is no question of going behind that. But what I submit is that we have also to respect the Fundamental Directives of the Constitution, the Fundamental duty imposed on us to help and encourage those who are backward to come up and to give them proper training for economic and social advancement".*

பரநல மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள 46-வது விதியைப் பற்றியும், சுயநலத்திற்கு வழி செய்து கொடுக்கும் விதி 29(2)ஐக் குறித்தும் 'லிபரேடர்' பத்திரிகை 'The People Betrayed' என்னும் தலையங்கத்தில் விளக்கிய பகுதியினை ஈண்டு குறிக்காமல் போக மனம் வரவில்லையாதலால், அஃது கீழே தரப் படுகின்றது :—

" It is obvious to any individual with commonsense and gifted with a cursory knowledge of the rules of legal interpretation that the State cannot promote with " *special care* " the educational interests of the weaker sections of the people unless it makes reservations for them. It ought also be obvious that since the Article (46) makes reference in particular to scheduled castes and scheduled tribes, the

State is given the power of regulating admissions to colleges on a communal basis. *The Constitution makers were not so blissfully ignorant of the fundamental nature of society in our country and in this part of the country in particular.* Closer examination of this article will reveal to the reader as well as to the eminent legal luminaries who must be presumed to have studied Maxwell's interpretation of statutes till they turn blue in the face, that the Constitution like any other Act is not rèdundant and that if reference is made to the duty of the State to protect them from social injustice and all forms of exploitations, it follows that not only is the State given the power to reserve but to indulge in other forms of activity—positive activity to protect the long suffering communities from social injustice.

The members of the Constituent Assembly therefore, gave their full and willing consent to two principles of prime importance. The inherant power of the State to regulate admission of students to colleges and educational institutions is conceded. Otherwise what is the meaning of "shall promote with special care the educational interests of the weaker sections of the people"?

Secondly, the State is the judge of who the weaker sections among our people are and is given the dynamic freedom to vary classification of communities depending on the circumstances of the period or epoch. It is a far reaching principle worthy of being emulated even by the most advanced countries of the world. But the strange change has occured. Having approbated this principle how is it appropriate to repudiate it in Article 29(2) now held as pointed out by the Supreme Court, to negative the right of the State to promote "with special care the educational and economic interests of the weaker sections of the people". Surely the vast majority of the members of the Constituent Assembly must have felt that Article 29(2) was not intended to negative the inherant right of the State and was passed in the hope that it means somethingelse.

மேற்கூறிய கருத்துக்களில் பொதிந்துள்ள அரசியல் தத்துவத்தைச் சிந்தனை செய்துணருமாறு வேண்டுகின்றோம். மக்களுடைய உரிமையின் கோரிக்கையே அரசாங்கத்தின் அடிப்படைக்கொள்கையாக பரிணமிக்க வேண்டும். உரிமை, கொள்கையை (Ideal) நிறைவேற்ற உதவும் ஒரு துணைக்கரணமாகும் (Means). அவ்வாறு அரசியல் மார்க்கம் அமையவில்லையெனின், வழங்கப்பெற்ற உரிமைகளால் (Rights and Responsibilities) உண்டாகும் பலன்கள் யாவை ?

## வகுப்பு நீதியைக் காக்க அரசியல் சட்டத்தைத் திருத்துவதா ?

இந்திய அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப் பெற்ற பின்பு, பழைய ஏற்பாடுகள் பல முரணாகத் தோன்றினமையால், நீதிமன்றங்களில் பத்திரிகைச் சுதந்திரம் (Freedom of the Press) சொத்துரிமை (Property Rights) சமத்துவ உரிமை (Equal Rights) ஆகிய சில முக்கிய கோட்பாடுகளைக் குறித்துப் பலவிதமான புதிய தீர்ப்புக்கள் கூறப்பெற்றன. அரசியல் சட்டத்தின்கண் உள்ள சில முரண்பாடுகளே மேற்கூறிய புதிய தீர்ப்புக்களுக்குக் காரணமாகும். அரசியல் சட்டத்திற்கு முரணாகப் பழைய திட்டங்கள் உள்ளனவென்று கூறியதன் காரணமாக, மக்களின் உரிமையே பறிக்கப்படுவதாயிருந்தால் அந்த அரசியல் சட்டத்தினை மாற்றியமைப்பதே மக்கள் பிரதிநிதிகளின் முக்கியகடமையாகும். அரசியல் சட்டம் மக்களுடைய நலனை உத்தேசித்து அவர்களுடைய சம்மதம் பெற்றுக்கப் பெறுவதால், அஃது காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப வளைந்து கொடுக்கக் கூடியதாகவுமிருத்தல் நன்று.

சாதாரணமாக அரசியல் சட்டங்கள் இரு வகையின வாகும். ஒன்று, திருத்தமேற்கும் சட்டம் என்றும் (Flexible Constitution); மற்றொன்று திருத்தங்களுக் கிடனளிக்காத சட்டம் (Rigid Constitution) என்றும் வழங்கப்பெறும். உலகில் ஒருசில நாடுகள் தவிர்த்து, பெருவாரியான நாடுகள் வளைந்து கொடுக்கும் அரசியல் சட்டத்தினையே பெற்றுள்ளன. இதற்கு முதல்தர உதா ரணமாக உள்ளது அமெரிக்க அரசியல் சட்டமாகும். அதுபோலவே நமது இந்திய அரசியல் சட்டம் இருத்தல் வேண்டும் என்று இந்தியாவின் தனித் தலைவர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரச்சாரம் செய்து, காரியத் திலும் செய்திருக்கின்றார். அவரது தொடர்பு இல்லாம லிருக்குமேல், நமது இந்திய அரசியல் சட்டம் ஓரிறுகிய இரும்புச் சட்டத்தினைத் தன்மையில் நிகர்த்திருக்கும்.

பொதுமக்கள் ஏமாந்த காலத்தில், எத்தர்கள் இயற் றிய இடர்பாட்டின் காரணமாக, வகுப்புரிமை நீதி, நீதி பதிகளால் தள்ளப்பெற்றதால், ராஜ்ய சர்க்கார், நாட்டினர் செய்த கிளர்ச்சி காரணமாக, மத்திய அரசாங்கத்தினைச் சமத்துவக் கோட்பாட்டிற்கு வழிவகைச் செய்து தரும் தோரணையில், அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவர இந்தியாவின் ஒப்பற்ற பிரதமரைக் கேட்டுக் கொண்டனரன்றோ! அது காரணமாக அவர் அரசியல் சட்டத்தின் 15-வது விதிக்கு ஒரு புதிய கிளை விதியைத் திருத்த விதியாகக் (Amendment) கொண்டுவரலாயினர். அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கள் பலவாகும்.

குறுகிய தேர்தல் விஸ்தரிப்புப்படி (Limited Franchise) அமைக்கப்பெற்ற அரசியல் நிர்ணயச் சபையே முதல் இந்தியப் பாராளுமன்றமாக மாறியுள்ளதால்,

புதியதாக உண்டாக்கப்பெற்ற அரசியல் சட்டத்தைத் திருத்த யோக்கியதையற்றதென்றும், அரசியல் திருத்தம் முக்கியமான விஷயங்களைக் குறித்துக் கொண்டுவரப் பெறுவதால், சட்டசபைக்கு வெளியிலுள்ள பொதுமக்களின் சம்மதம் பெற வேண்டும் என்றும், வயது வந்தவர்கள் வாக்குரிமைப் (Adult Franchise)படி அமைக்கப் பெறும் இந்தியப் பாராளுமன்றமே அந்தத் திருத்தங்களைக் கொண்டுவரலாகும் என்றும், அரசியல் சட்டம் இன்னும் சின்னஞ்சிறு பயிராகவே இருத்தலால், அதனைக் குரங்குகள் இளம் பயிரை வேரோடுப் பிடுங்கிப் பார்த்தழிப்பதுபோன்று கெடுத்தலாகாதென்றும், நாட்டிலுள்ள வக்கீல் சங்கங்களின் அநுமதி பெறாமல் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரலாகாதென்றும், நீதிமன்றம் சட்டங்களில் உள்ள குற்றங் குறைகள் காரணமாக மாறுபாடான தீர்ப்புக்களை வழங்கும்போதெல்லாம் அவற்றின் தீர்ப்புக்களுக்கேற்றபடி சட்டத்தினைத் திருத்த முற்பட்டால் நாட்டிலுள்ள சட்ட சபையின் மதிப்பும், ஆளும் மந்திரி சபையின் நாணயமும் சந்தேகத்திற் குரியனவாகிவிடுமாதலால், அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர முயற்சி செய்யக்கூடா தென்றும், பல எதிர்த்தரப்பினர் கூறலாயினர். மேற்கூறிய வாதத்தினை இயற்றியவர்கள் யாவரும், சட்டத் திருத்தத்தினைக் கொண்டுவருவதை எதிர்த்தவர்களல்லர்; சட்டத் திருத்தத்தின் நோக்கத்தையே (aim) எதிர்த்து வந்தவர்களாவர். இதனை நன்கறிந்த உத்தமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் எதிர்த் தரப்பினர் வாதங்களுக்கெல்லாம் தக்கவாறு பதில் அளித்தார். அவர் கூறிய வாசகங்கள் யாவற்றையும் ஈண்டு கூற இயலாமையால் சிலவற்றை மாத்திரம்

தொகுத்துரைப்பாம். குறுகிய தேர்தல் விஸ்தரிப்புப்படி முதல் இந்தியப் பாராளுமன்றம் அமைந்திடினும், அதுவே அரசியல் நிர்ணயச் சபையாகவிருந்து அரசியல் சட்டத்தினை ஆக்கியதால், அப் பாராளுமன்றமே சட்டத் திருத்தத்தினைக் கொண்டுவரலாகும் என்றும், சட்டத்தில் அறிந்தும், அறியாமலும் புகுந்த முரண்பாடுகளை நீக்குவதற்காக முதல் ஐந்து வருட கால எல்லை வரை, அச்சட்டம் இடனளிக்கலாகும் என்றும், அம்மாதிரியான சட்டத் திருத்தம் கொண்டுவர அரசியல் சட்ட விதிகள் பல ஆமோதிக்கின்றனவென்றும், சட்ட முறைப்படி நீதி மன்றங்கள் தீர்ப்புக் கூறுவதால் அவை கூறும் கருத்துக்களை (தீர்ப்புக்களை)க் கவனித்து அவற்றிற்கேற்ப பொதுமக்கள் நலனை யனுசரித்து சட்டங்களை அமைத்தல் நன்று என்றும் விளக்கிக் கூறலாயினர். அவர் கூறிய மறுமொழியின் சிறப்பான பகுதியொன்றினைக் கீழே தருகிறோம்:—

"Government had come before the House because certain lucunae had been pointed out by judicial interpretations. So far as the interpretation of the Constitution was concerned, Mr. Nehru declared, "it is the right and privilege of the Highest Courts of Law in the land. It was not for the Government or the House to challenge that right and the Courts must interpret the law free from any political conflict or interpretations".

"But after the Courts had given their interpretation and they had followed that interpretation it became the business of Parliament to see whether the purpose they had aimed at had been fulfilled. If it was not fulfilled then the *will of the Community* had not taken effect and difficulties might arise in course of time. When dynamic and powerful forces were at work all over the world they could not think in terms of remaining static. It was therefore

their duty to see whether it was desirable to change the Constitution here and there to give effect to the ***will of the Community***.

அவர் மேலும் சட்டத் திருத்தத்தின் நியாயத்தை விளக்குவதைப் பாருங்கள் :—

"Mr. Nehru said, that it was for Parliament and Government to decide policy, not for the Courts".

"I speak with no tone of apology about this measure", he said and added, "I intend proceeding with it with full confidence and conviction that it is a right measure".

அவருடைய உழைப்பு, உதார குணம், வகுப்பு நீதி சம்பந்தமாக அரசியல் சட்டத் திருத்த விதி 15(4)-ஐத் தோற்றுவித்தன. அது வருமாறு :

"Nothing in this Article or clause (2) of Article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially or educationally backward class of citizens or for the scheduled castes or scheduled tribes."

இதுவே தென்னிந்திய மக்கள், விடுதலைப் பெற்ற இந்தியாவின் அரசியல் ஆட்டத்தில் பெற்ற முதல் மகத்தான, சட்டபூர்வமான, குறிப்பிடத்தக்க வெற்றியாகும். வழக்கம்போல் தென்னிந்தியர் சுணங்கியிருந்திருப்பரேல், மேற்கூறிய வெற்றி ஏற்பட்டிராது.

"அழுத பிள்ளைக்கே பாலுண வளிப்பாள்
அன்னை யென்பார்கள், அழவலி யில்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்குங் கொடுப்பாள்,
குற்ற மன்றது, மற்றவள் செயலே"

என்று வள்ளலார் கூறிய முறைப்படி தாய்மை நிலையில் அமைய வேண்டிய அரசியலாரை நாம் கேட்டுப் பெறுதலே இற்றை நாளில் நன்றாகும். கபட நாடகமாடி விகடம் புரிந்த எத்தர்களுக்கு இவ்வெற்றிகரமான சம்பவம் ஓரிடி போன்ற தாகும்!

## சமூக நீதிக்குப் பதிலாக வந்த புதிய நீதி

முன்னர்க் குறிப்பிட்டுக் காட்டிய அரசியல் சட்டத் திருத்த விதி 15(4)-இல் உள்ள ஷரத்தினைத் துர்ப்பிரயோகம் செய்ய மாட்டோம் என்று சென்னை ராஜ்ய முதன் மந்திரியார், இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி (assurance) அளித்ததின்பேரில் சட்டத் திருத்தம் வெற்றிகரமாக 2-6-1951 அன்று நிறைவேற்றிற்று. 18-6-'51 அன்று ஜனாதிபதி சம்மதமும் (assent) பெற்றது. இந்த வெற்றியினை நமக்களித்த சென்னை அரசியலாருக்கும், பிரதமர் நேருவுக்கும் நம்முடைய நன்றியும், வணக்கமும் உரியனவாகுக! அரசியல் சட்டத் திருத்த விதி 15(4) சட்டமாகிய பின்பு சென்னை அரசியலார் கல்லூரிகளில் இடவசதியளிப்பது குறித்தும், அரசமன்றப் பணி நியோகிப்பதைக் குறித்தும் ஒரு புதிய உத்தரவை, அந்தப் புதிய சட்டத் திருத்த விதியின் ஷரத்திற்கேற்ற முறையில் வெளியிடலாயினர். அவ்வுத்தரவு கீழ்வருமாறு:—

1. கல்லூரிகளில் இடவசதி அளிப்பதற்கு வகுத்த முறை:—

(1) ஷெட்யூல்ட் சாதியினர்களுக்கும் ஷெட்யூல்ட் பிரிவினருக்கும் 15 சதவிகிதத்தில் இட வசதி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை அரசியலார் தயாரித்துக் குறித்துள்ள பட்டியலில் (Appx. 17-A of the Madras Educational Rules) காணப்படும் பின்தங்கிய மக்களுக்கென 25 சதவிகிதத்தில் இடவசதி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

(3) மேற்கூறிய சதவிகிதப்படி குறைந்தபட்சம் எத்துணை நபர்கள் வருகின்றனரோ, அவ்வளவுப் பேர்களுக்கும்

இட வசதி செய்துதரப்படும். அதற்கு மேலும் வருவரேல், தகுதி திறமை, இடவசதி ஆகியவை களை அனுசரித்து மேற்கூறிய வருப்பு மக்களை அனுமதிக்கலாகும்.

(4) முன் வருடங்களில் நடைமுறையில் இருந்த சத விகிதங்கள்படியே புதிய உத்தரவில் ஒதுக்கி வைக்கப் பெற்ற இடங்கள் (Reserved Seats), ஒதுக்கி வைக்கப்பெருத இடங்கள் (Non-reserved Seats) தமிழ் நாடு, சர்க்கார் பிரதேசம், ராயலசீமா பிரதேசம், மலையாளப் பகுதி ஆக இந்நான்கு பிராந்தியங்களுக்குமென இட வசதிகளைப் பகுத்து வைக்க வேண்டும்.

(5) பெண்களுக்கென வைத்தியக் கல்லூரிகளில் 20 சத விகிதம் ஒதுக்கி வைக்கப்பெறும்.

(6) சென்னை, அண்ணுமலை, ஆந்திரா ஆக இம்மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களைத் (Vice-chancellors) தலைவர்களாகக் கொண்ட மூன்று குழுவினர், வைத்தியக் கல்லூரிக்கெனவும், பொறியியல் கல்லூரிக்கெனவும், விவசாயக் கல்வி, மிருக வைத்தியக் கல்வி முதலியவற்றைப் போதிக்கும் கல்லூரிக்கெனவும், மாணவர்களைக் குறிப்பிடப்பெறும் சில இடங்களில் சென்று நேர் முகமாகத் தேர்ந்தெடுப்பர்.

(7) ஷெட்யூல்ட் சாதியினர், ஷெட்யூல் பிரிவினர் ஆகியவர்களைத் தவிர்த்த மற்ற வகுப்பினர் வைத்தியக் கல்லூரியில் சேர விரும்பினல் கலைத் துறையில் (optional subjects) 45 சதவிகிதத்திற்குக் குறையாமல் அம்சங்கள் பெற்றிருக்க வேண்டும் ;

பொறியியல் கல்லூரியில் சேர விரும்பினால் கலைத் துறையில் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் அம்சங்கள் பெற்றிருக்க வேண்டும். அப்படிக்கல்லாவிடில் மனுக்கள் நிராகரிக்கப்பெறும்.

(8) மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கீழ்க்காணும் முறைகள் தேர்வுக் குழுவினரால் கவனிக்கப் பெறும் :—

(அ) கலைத் துறையில் (Part III subject) நடுத்தர வகுப்புப் பரீட்சையில் மாணவர் பெற்ற அம்சங்களைக் கவனிக்க வேண்டும்.

(ஆ) விளையாட்டுப் பந்தயங்கள் (Sports) தேசிய ராணுவப் பயிற்சி (National Cadet Corps) ஆகியவைகளில் மாணவர் எடுத்துக்கொண்ட பங்கினைக் கவனிக்க வேண்டும்.

(இ) மாணவர்பால் இயற்கையில் அமைந்த பிரத்தியேகமான கல்வியறிவு நாட்டத்தினை (Special Aptitude) உணர வேண்டும்.

(ஈ) மாணவருடைய உடல் வளத்தினைக் கவனிக்க வேண்டும்.

(உ) உயர்ந்த படிப்புச் சம்பந்தமாக மாணவருடைய குடும்பத்தினர் அடைந்துள்ள அந்தஸ்தினைக் கவனிக்க வேண்டும்.

**2. அரச மன்றப் பணிகளில் அநுமதிப்பதைக் குறித்து ஆக்கப்பெற்ற முறை :—**

வகுப்பு நீதி சம்பந்தமாகச் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்புப்படி பழைய முறை நீடித்திருக்க முடியாததலால்

ஒரு புதிய முறை வகுக்கப்பெற்றது. பதினன்கு என்றிருந்த அளவு (Unit of fourteen) இருபதாக மாற்றப் பெற்றது. அவ்விருபது இடங்களில், மூன்று இடங்கள் ஷெட்யூல்ட் சாதியினருக்கும், ஷெட்யூல்ட் பிரிவினருக்கும் எனவும், ஐந்து இடங்கள் பின்தங்கிய வகுப்பினர்களுக்கெனவும், மீதமுள்ள பன்னிரண்டு இடங்கள் தகுதி திறமையுள்ளவர்களுக்கெனவும் வகுத்துரைக்கப்பெற்றன.

சென்னை அரசியலார் மேலே கூறப்பெற்ற உத்தரவுகளில் வகுக்கப்பெற்ற ஷரத்துக்களைத் தீர யோசித்தே தீட்டியிருப்பர். உத்தரவுகளில் எத்தனையோ குற்றங் குறைகள் அமைந்துள்ளனவெனினும், காலப்போக்கை யனுசரித்து அரசியலார் செய்தளித்த உத்தரவு, வகுப்பு நீதி சாய்க்கப்பெற்றதால் ஏற்படும் இன்னல்களைப் போக்கும் முறையில், ஓரளவுக்கு அமைந்துள்ள மெய்ம்மையை நாம் உணர வேண்டும். இந்த உத்தரவில் கண்டுள்ள எட்டாவது ஷரத்து மிக முக்கியமானதாகும். மக்களுடைய கோரிக்கையெல்லாம், அதனைச் சரிவர நடைமுறையில் செய்து காட்ட வேண்டும் என்பதுதான். மக்களுடைய முன்னேற்றம், தேர்ந்தெடுக்கும் குழுவினர்தம் நடுநிலைமையையும், நாணயத்தையும் பொறுத்துள்ளது. இந்தப் புதிய சமூக நீதியைக் குறித்து வகுப்புரிமை நீதி உத்தரவை 1928-ம் வருடத்தில் ஏற்படுத்திய திருமகனர் **S. முத்தய்யா முதலியார்** அவர்கள் கூறிய வாசகத்தினை அறிந்துகொள்வது பொருந்தும்; அது வருமாறு:—

"I have perused the regulations of the Government as regardes admission to Medical, Engineering, Agricultural and Veterinary Colleges.

" In clause (2) Backward Classes are said to be classes who have been listed in the G. O. as backward for educational concessions. This appears to be a very restricted construction of the term backward class as intended in the Constitution Act. What is referred to in the Constitution is classes who are backward in education. A class may be said not to be backward in education if at least 50 per cent of that class are educated.

In fact, any class in which less than 50 per cent are educated is a backward class, and ought to be listed among the Backward classes. 20 per cent of the seats in the Medical college are made available for women. Do they include women of the Scheduled tribes and Backward classes ?" (In this connection, a reference is invited to the press statement made by Mr. M. Bhakthavatsalam, Minister for Public Information, that " reservation of 20 per cent of the seats for women students in the Medical colleges would not in any way create a clash in the proportion specified in the new Rules.)

" It is only appropriate that the Vice-Chancellors of the three Universities should be the chairmen of the three committees but nothing is said as to the qualifications or the credentials of the other members of the committee and a good deal depends up on the choice of the personnel. In the test provided in clause (8) the antecedents and character of the candidates are not included. Although these regulations, to some extent mitigate the hardships caused by the cancellation of the Communal G. O.; till now observed, it cannot be said to be qnite satisfactory, and I must say a good deal depends upon how the selection committees proceed with the work."

புதிய முறைப்படி ஷெடியூல்ட் சாதியினர், ஷெடியூல்ட் பிரிவினர் ஆகியவர்களுக்கு 15 சதவிகிதத்திலும், பின்தங்கிய வகுப்பினர்களுக்கு 25 சதவிகிதத்திலும் இட வசதிகள் ஒதுக்கி வைக்கப்படும். மீதமுள்ள 60 சதவிகித இடவசதி எல்லா வகுப்பு மக்களும் போட்டிப் போட்டுப் (Open competition) பெறலாகும். இம்முறை நியாயமானதா? இல்லையா? என்ற விசாரணைகளுக்கு, இரண்டு மூன்று ஆண்டுகளின் அநுபவமே பதிலாக அமைந்திடும். அண்மையில் எடுக்கப்பெற்ற கணக்குப்படி சென்னை ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 5 கோடி 70 இலட்சமாகும். அவர்களில் பின்தங்கிய மக்களாக 3 கோடிக்கு மேலாக உள்ளனர். அவர்களுக்கு 25 சதவிகிதத்தில் இடவசதி செய்து தருவது திருப்திகரமாக இல்லை. இம்முறைப்படி அமைந்த திட்டம் சரிவர நடைமுறையில் வருகின்றதா, மக்களுக்குத் திருப்தியளிக்கவல்லதாக இருக்கின்றதா என்று அரசியலார் ஆண்டுக்கொரு முறைப் பரிசீலனை செய்தல் பொருந்தும். இப்புதிய முறை, சமூகத்தில் சமத்துவத்தைப் பரப்ப உதவும் என்று யாம் கூறுவதற்கில்லை. பல வகுப்பு மக்களாக நமது நாட்டில் மக்கள் காணப்பெறுவதால், வகுப்புரிமை நீதியே சாலச் சிறந்ததென நாம் தீர்க்கமாகக் கூறுகின்றோம். வகுப்புரிமை நீதி என்றால் வகுப்புக்கொரு நீதியல்ல; வகுப்புகளுக்கெல்லாம் ஒரு நீதியையே அஃது வழங்குகின்றது. அவ்வாறு வழங்குவதற்கு ஜனத்தொகை அடிப்படையாக அமைகின்றது. வகுப்புரிமை நீதியால் சாதிச் சண்டையோ, வகுப்புக் கலவரமோ, மத வாதமோ ஓங்குமென தன்மேலேற்றிக் கூறுவது மதிமயக்கத்தாலேயன்றி வேறல்ல; சிந்தனைச் செய்ய வேண்டும் மனித சித்தம் படைத்தவர்கள்!

இந்திய அரசாங்கத்தார் திருத்தஞ் செய்ததை யொட்டிச் சென்னை அரசியலார் ஒரு புது விருத்தம் பாடிய பின்பு, சிந்து ஒன்று பாடினார் திருவாளர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள். அந்தச் சிந்து வருமாறு :—

"True and lasting benefit can be conferred on the Backward Sections of our people only if they are helped in ways that promote earnest self endeavour and not by over doing kindness, and making concessions and giving privileges for being backward. Concessions carry disadvantages as well as advantages, the former being far-reaching and serious as against the temporary character of the latter. We can please people for the time being, and satisfy our own instincts of compassion by conferring on the Backward people certain easy advantages, but that way lies perpetration of backwardness. If we wish to dig and bring up the buried talent, we should make advancement dependent on industrious application. We must bring up the qualities that have lain hidden and undeveloped and this can be achieved by the encouragement of effort based on self confidence rather than by creating conditions for a competition for the status of backwardness. If we make things easy we encourage unhealthy habits of thought and ruin forces of true and lasting progress. I have spoken the truth as I see it and I hope no one will misunderstand my warning to be the voice of unsympathy".

இந்தச் சிந்து, இஸ்லாமிய மக்கள் ஆதரவில் சென்னையில் துவக்கப்பெற்ற "நியூ காலேஜ்" திறப்பு விழாவின் போது பாடப்பெற்றது. இந்தச் சிந்துவைச் சட்ட நிபுணர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஹைதராபாத்தில் மக்கள் கல்விக் கழகக் கல்லூரியின் கல்நாட்டு விழாவின் போது கூறிய வாசகத்தினோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

அவர் கூறினார் :—

"The problem of raising the lower orders in India is not to feed them, to cloth them and to house them, but to remove from them that inferiority complex which had stunted their growth. Nothing can achieve this purpose except the spread of higher education......The college paid special attention to the education of backward classes and the scheduled castes as all colleges must do if we are to avoid the coming conflict between the higher classes and the lower classes, the signs of which we are already witnessing."

இவ்விரு பெரியவர்கள்தம் வாசகங்களினின்று மக்கள் மகத்தான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாகும். முன்னவர் பின்தங்கிய மக்களிடைப் பிறவாதவர். அவர்கள்தம் கஷ்ட நஷ்டங்களைக் கண்டோ, தாமும் அத்தகைய இன்னல்களை அநுபவித்தோ உணராதவர். அவர் கூறுகிறார், பின்தங்கிய மக்களுக்குச் சலுகையளித்தால் நாட்டில் தாழ்வு மனப்பான்மையே செழித்தோங்கும் என்று! இதனை எழிலற்ற ஏகாதிபத்திய ஆட்சிக்கொரு எடுத்துக்காட்டாகக் கூறலாகும். பின்னவர், பின்தங்கிய மக்கட் கூட்டத்தில் முளைத்த மாணிக்கமனையவர்; கஷ்ட நஷ்டங்களைத் தாம் பட்டுணர்ந்தவர். அவர் கூறுகிறார், பின்தங்கிய மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் உயர்தரக் கல்வி வசதிகள் மிகுதியாக அமைக்க வேண்டும் என்று! இதனைப் பாமர மக்களின் ஏகோபித்த எண்ண எழுச்சிக்கோர் அத்தாட்சியாகக் கூறலாகும். இவ்விரு வேறு கருத்துக்களில் எது உண்மையான கருத்து என்பதையறிய விரும்புகின்றோம்.

நான்காம் அதிகாரம் : முற்றும்.

# 5. இறுவாய்

## தொகுப்புரை

இந்த இறுதி அதிகாரத்தில் இதுகாறும் நான்கு அதிகாரங்களிற் கூறப்பெற்ற கருத்துரைகளைச் சுருங்கிய சிலவாய சொற்களால் தொகுத்துரைப்பது இலக்கிய இலட்சணமெனக் கருதி இயற்றலுற்றும்.

உயிரினுஞ் சிறந்த உரிமையின் மகிமை கொடுங் கோன்மையின் காரணமாகவே பெரும்பாலும் உணரப் பெறும் எனவும்; அவ்வுரிமை தனி மனித உரிமையாக வும், சமூக உரிமையாகவும் அமைந்து காணும் எனவும்; பிறப்புரிமையைக் கோரி நிற்கும் விழிப்புணர்வைப் பிரிவு உணர்ச்சி வாதம் என்று கூறலாகாதெனவும்; சமதர்மத் தைச் சமூகத்தில் பரப்பி நின்ற திட்டத்தைச் சலுகை என்ற சொல்லால் அழைக்கலாகாதெனவும்; பழைய ஏற்பாடுகளின் விளைவாக மக்கள் பல வகுப்புக்களில் அடைக்கப்பெற்றுப் பரிதவித்து வாழ்விழந்துவந்த நிலைமை யினை ஓரளவுக்கு மாற்றுந் தகைமையில் சமதர்ம சமூக சாதனமாக வகுப்பு உரிமை நீதி அமைந்ததெனவும்; அத்தகைய சீரிய செயல் திட்டமே தேச சுதந்திரத்திற்கு உறுதியும், மதிப்பும் அளிக்கவல்ல தென்வும் முதலாம் அதிகாரத்தில் கண்டோம்.

தொடர்பான மனித இயக்கத்தைப் பற்றிக் கூறும் வரலாறு உரைத்த மகத்தான பாடத்தால் முளைத்தெழுந்த வகுப்பு உரிமை நீதி, ஆட்சி முறையில் வருமுன்னரே பல விசித்திரக் காரணங்களை யொட்டிப் பலதிற மக்க

ளிடைப் பூசல்கள் நிகழ்ந்தவண்ணமாகவிருந்தன. வட நாட்டில் ஹிந்து—இஸ்லாமியர் கலவரமாகவும், தென்னாட்டில் வலியான்—எளியவன் பிரச்சினையாகவும் அவை மாறின. வட நாட்டில் இஸ்லாமியர்கள் தங்கள் நன்மையைக் கருதித் தனி உரிமைகள் கோரி நின்று, விடுதலைப் பணியில் பங்கு கொண்டு மேன்மையுற்றனர். அங்ஙனமே தென்னாட்டுத் தேசிய முன்னணியிலும் எளியவர்களின் பிரச்சினையைப் பற்றிக் கவனிக்க மனமொருப்பட்டாலொழிய தேசிய இயக்கத்தில் பங்கு கொள்ள சாத்தியமில்லையென்று உண்மைத் தொண்டர்கள் பலர் கூறலாயினர். அவர்களுடைய கோரிக்கைக்கிணங்காத காரணத்தால் தென்னாட்டில் சமதர்மத்தைக் கோரி (Justice to all) (இரஷ்ய நாட்டில் ஏற்படும் முன்பே) எதிர்ப்புக் கிளர்ச்சி வன்மை பெறலாயிற்று. அஃது நீதிக் கட்சி என்ற உருவந் தாங்கி மக்கள் ஆதரவும், அரசாங்கத்தார் ஆமோதிப்பும் பெற்றுப் பதினைந்து வருட காலம்வரை சென்னை மாநில ஆட்சிப் பீடம் ஏறி, மிகுந்த கட்டுப்பாடுகள் நிறைந்த இரட்டை ஆட்சித் திட்டத்தை ஏற்று அரசு நடத்தி வரலாயிற்று. பெரும்பான்மையோர் பிரச்சினையாக அமைந்த வகுப்பு நீதிப் பிரச்சினையைக் கள்ளியும் காளானுமென மறஞ் செழித்தோங்கிய நாட்டில் கொண்டுவர நீதி நெறிச் சான்ற அரசியலாரும், பொது நலத் தொண்டர்களும் முயற்சிகள் பல இயற்றினர். அம்முயற்சிகளின் பயனாக 1928-ஆம் ஆண்டு, வகுப்பு நீதித் தத்துவம் உருவமேற்று வெளிவரலாயிற்று. அந்நீதி முறை நடைமுறையில் சரிவரக் கொண்டுவரப்படவில்லை என்ற காரணத்தால் அவ்வப்போது அது குறித்துப் பலர் கிளர்ச்சிகள் நடத்தியவண்ணமாகவும், அந் நீதிமுறையினை

அடியோடு அகற்ற வேண்டும் என்று சிலர் முயற்சிகள் நடத்தியவண்ணமாகவும் அமையலாயினர்.

இந்தப் பிரச்சினைக்கெதிராக, வன்மைமிக்க விடுதலைப் பிரச்சினை காந்தியண்ணல் தலைமையின்கீழ் வந்த காங்கிரஸ் மகாசபையின் மூலம் செல்வாக்குப் பெற்று நாட்டில் உள்ள எல்லா மக்களின் இதயத் துடிப்பாக அமைந்த காரணத்தால் நாடு சுயராஜ்யப் பாதையில் படாலாயிற்று. விடுதலையைக் கோரி காங்கிரஸ் மகாசபையினர் எடுத்துக்கொண்ட பேருழைப்பின் பலனாக அச் சபையினர் மக்கள் ஆதரவுப் பெற்று அரச பீடம் ஏறலாயினர். இம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்த பின்பு வகுப்புரிமை நீதியை அகற்றிவிடப் பல முயற்சிகள் எடுக்கப்பெற்றும் அவை பயன் தாராமற் போயின.

இங்ஙனமாக நாட்டில் எதிர்த்துப் பேசியும், சட்ட சபையில் கண்டித்தும், ஆட்சி மூலம் எடுக்க முயன்றும் பயனில்லாது போன காரணத்தால் சுயநலப் பிரியர்கள் தகுந்ததோர் சமயத்தை எதிர்ப்பார்த்தவண்ணம் அமைந்தனர். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் விளைவுகளுள் ஒன்று இந்திய விடுதலை என்பது. அதனோடு பொருளாதாரத் துறையிலும் மக்களுக்குப் பெருத்த விழிப்பு ஏற்பட்டது. மக்கள் பெருவாரியாகப் படிக்கத் தொடங்கினர்; பிழைத்து வாழ வழிவகைகள் தேடலாயினர். மக்களிடைப் பிழைப்பை நாடிப் (Competition for living) போட்டியுண்டாயிற்று. இந்தச் சூழ்நிலையில் 1947-ஆம் வருடம் வாராதது போல வந்தது தேச சுதந்திரம். விடுதலைப் பெற்ற இந்தியாவுக்குத்

தனித்தியங்க அரசியல் சட்டந் தேவைபபட்டதால் அரசியல் நிர்ணயச்சபை என்னுமோர் அரங்கம் அமைக்கப் பெற்று, சட்டஞ் செய்யப் பொதுமக்கள் அறியாத சிலர் அனுப்பப்பெற்றனர். 1950-ஆம் வருடம் அச்சபையினர் ஆக்கியமைத்த அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப் பெற்றவுடன், அச்சட்டத்தில் பொதுமக்களுக் கறிவிக்கா மல் புகுத்தப்பெற்ற சில திட்ட விதிகளைக் காட்டி, வழக்கு மன்ற மூலம், வகுப்புரிமை நீதித் தள்ளப்பெற் றது; அதுகாரணமாக நாட்டில் பெருத்ததோர் கிளர்ச்சிச் செய்யப்பெற்றது. வகுப்பு உரிமை நீதித் தத்துவம் யாவருக்கும் உடன்பாடான காரணத்தால் மக்கள் ஆத ரவுப் பெற்று ஆட்சி நடத்தின காங்கிரஸ் சர்க்காராலேயே காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப ஒரு புதிய ஷரத்தினைச் சமூகப் பொருளாதாரத் துறைகளில் பின்தங்கியோராக விருக்கும் மக்களுக்காக வசதி செய்தளிக்க அரசியல் சட்ட விதி பதினைந்திற்குத் திருத்த விதியாகக் கொண்டு வரப்பெற்றது; அதனையொட்டிச் சென்னை மாநில ஆட்சி யாளரும் புதியதோர் நீதி முறையினைக் கண்டு வகுக்க லாயினர். இவ்வரலாற்று விபரங்களை இரண்டாம் அதி காரத்தில் கண்ட பின்பு, வகுப்பு உரிமை நீதியின் மெய் மையைப்பற்றி மூன்றும் அதிகாரத்தில் வாதப் பிரதிவாத முறையில், பழைய சகாப்த சமூக நிலைமைகள் விடுதலைப் பெற்ற பின்பும் நீடித்து வருவதால் பழைய அரசியல் உத்தரவான வகுப்புரிமை நீதிக்கு அவசியம் உண்டென் றும், மக்கள் பல வகுப்புக்களிலே அடைக்கப்பட் டிருத்தலால், ஜன சங்கியைக்கேற்ப பதவிகளைப் பகிர்ந் தளிக்க வகுப்பு நீதி உதவிற்றென்றும், அரசாங்கத்தா ரிடை சேரும் பணம் பொதுப் பணமாதலால் அப்பணத்

தால் யாவருமே பலன் பெறவேண்டும் என்றும், நூலறிவை யொட்டி அம்சம் வாங்குவதனையே தகுதி, திறமைகளை நிர்ணயிக்க அடிப்படையாகக் கொள்ளலாகாதென்றும், சாதனைகளின் மூலம் தகுதி, திறமையினைக் கணித்தறிய லாகும் என்றும், உயர்ந்த ரக அறிவும், உத்தம குணமும் நம்பற்குரிய அடிப்படைகள் என்றும், மக்கள் சார்பில் அரசு நடத்துவோர் மதவாதங்களுக் கொருதுளியும் இட னளிக்கலாகாதென்றும், பிறவும் விளக்கமாகக் கண்டோம்.

இந்திய அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப்பெற்ற பின்பு அச்சட்டத்தினைக் காட்டி எங்ஙனம் வகுப்பு நீதி வீழ்த்தப்பெற்றதென்றும், அதனால் ஏற்பட்ட நஷ் டத்தைத் திருத்த விதி 15(4)-ன் மூலம் எவ்வாறு தணித் தனர் என்றும் நான்காம் அதிகாரத்தில் கண்டோம்.

பல்லாயிர வருடங்களாக நொசிந்து வந்த மக்க ளினத்தில் பிறந்த பல நற்றொண்டர்கள்தம் சிந்தனைப் பயனால் தோன்றித் தவழ்ந்து, பின்னர் மாற்றியமைக்கப் பெற்ற வகுப்பு உரிமை நீதியே, நீ மீண்டு வருக வருகவே! மக்கள் நன்மை பெற்றோங்க வசதிகள் பல தருக, தருகவே!

# தேற்றவுரை

## பொதுமை யற வுணர்வு

உலக மக்கள் முன்னேற்றமடைய பண்டுதொட்டு உத்தம ஞானவான்கள் பற்பல அரிய மார்க்கங்களைக் கண்டு உணர்த்துவாராயினர். அம்மார்க்கங்களை மக்கட் கூட்டத்தினருள் சிலர் பற்றி நடந்தும், பலர் புறக்கணித்

தும் வருவாராயினர். அதுகாரணமாக உலகில் ஏற்றத் தாழ்வுகள் படைப்புக் காலந்தொட்டு இன்றுவரையும் ஒன்று பலவாகப் பல்கின. மக்களைப் பலவிதத் தொல்லை களுக்குட்படுத்தி வரலாயின. பொருள்வழிச் சார்ந்த இந்த லோக வாழ்க்கை, பண்பினை அடிப்படையாக ஏற்க மறுத்து வருகின்றது. மக்களுடைய வாழ்வு அவர்தம் குணநலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த உண்மையினை வலியுறுத்தவே அவ்வப்போது சமயாசிரியர் கள், தீர்க்கதரிசிகள், பொதுநலத் தொண்டர்கள், அறிஞர் கள் தோன்றி மக்களுக்கு நல்ல மார்க்கத்தினைக் காட்டிச் செல்லுவாராயினர். சமய உணர்வுப் பெறுதல் எனின் எதற்கு? அண்ணலார் திருவடியை நேரே நண்ணுவதற் காகவா? (கூண்டோடே கைலாசம் போவதற்காகவா)? ஒருபோதும் இல்லை. இவ்வுலகில் வாழ்வாங்குதோறும் மிருகக் குண வயத்தானாகாமல், பண்புடன் சான்ற உய்யு நெறியறிந்து வாழக் கற்றுக் கொள்வதற்கேயாகும். சம யம் கடவுளைக் காட்டாது; ஆனால் உண்மையான, இயற்கையான வழியினையே அஃது காட்டா நிற்கும். உண்மை வழிப் படர உணர்வுத் தேவைப்படுகின்றது. அவ்வுணர்விற்குப் பயிற்சிக் களனாக விளங்குவது வீடு; அவ்வுணர்வின் பயனாக ஏற்படும் பண்பிற்கு வழங்குமிட மாவது நாடு. ஒவ்வொரு மனித உயிரும் காணுவது வீடும், நாடுமேயாகும். வீட்டைப் பார்த்த பின்னரே, அவ்வுயிர் நாட்டைப் பார்க்கின்றது. வீட்டு வாழ்க்கை யில் ஒவ்வொரு உயிரும் பொதுமை யற வுணர்வை, பரநல நோக்கையை உணர்ந்து, ஏற்று நடக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பெறுகின்றது. வீடு திரும்பினால் நாடுக் திரும்புமன்றோ! பொதுமை யற வுணர்வெனில் யாது? ஒரு

நன்மை உண்டாயின் அதனை ஒருவரே அநுபவிக்க ஆசைக் கொள்ளாது, வீட்டுள்ளார் யாவருமே சுகிக்க வேண்டும் என்ற மனப்பான்மையினை, சீரிய பண்பினைப் பெறுதலையே பொதுமையற வுணர்வெனப்படும். இந்தச் சீரிய கருத்துக்களை நீதி நூற்களில் மிகுதியும் காணலாகும். உலகம் போற்றும் பொதுமறையின்பால் இக்கருத்து யாண்டமைந்ததென்பதை,

"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்"

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது"

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்னுங் குறளடிகளில் காணலாகும்.

"பாத்துண்ணுந் தன்மை யிலாளர் அயலிருப்பு" கூட உதவாதென்பர் நீதி வாசகமுடையார். இந்தப் பொதுமை யற வுணர்வைப்பற்றி அநுபவ சித்தராகி, அறிவொளிப் பாப்பி நிற்கும் தமிழ்த் தென்றலார் - திரு. வி. கலியாணசுந்தரனார் தமது 'பொதுமை வேட்டல்' என்னும் புதுவுலகத் தேவார முகப்பில் கூறியுள்ள வாசகத்தினை ஈண்டறிதல் சாலும். அது வருமாறு:—

"பொதுமையே சமரசம் என்பது. சமரசமே சன்மார்க்கம். எங்கே சமரசம் உண்டோ அங்கே சன்மார்க்கம் உண்டு. எங்கே சன்மார்க்கமிருக்குமோ அங்கே சமரசமிருக்கும். பொதுமை என்னுஞ் சமரசம்—சன்மார்க்கம்—உலகில் பல பெயர்களாக வழங்கப்படுகிறது.

அவை ஜைனம், பௌத்தம், சைவம், வைணவம், வேதாந்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலியன. இந்நாளில் பொதுநெறியை மாடம் பிளவட்ஸ்கி என்ற சமரச சன்மார்க்க ஞானியார் 'தியோசபி' என்றனர். பொதுமை நெறியைத் தமிழ் நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் நல்லாறு என்றனர்; வேறு சிலர் திருநெறி என்றனர்; திருமூலரும் தாயுமானாரும் சன்மார்க்கம் என்றனர்; இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கம் என்றனர். மக்கள் சன்மார்க்கத்தினின்றும் வழுக்கி விழும்போதெல்லாம் பெரியோர்—தீர்க்கதரிசிகள்—நபி மார்—தோன்றிக் காலதேச வர்த்தமானத்திற்கேற்ற முறையில் சன்மார்க்கத்தை அறிவுறுத்திச் செல்வது வழக்கம்."

இன்றளவும் உலகம் பூராவும் பரவியுள்ள சமய மார்க்கங்கள் கூறும் முடிந்த கருத்தென்ன? ஒருவன் வாழ, மற்றவன் வீழவா அவைகள் போதிக்கின்றன? சமயக் கலையைச் சாக்காகக் கொண்டு சழக்கர்கள் சுயநல ஏற்பாடுகளை உண்டாக்கியிருப்பினும், அவற்றினைக் களைந்தெறிய வேண்டுவது பொதுமை யுணர்வுப் பெற்றார்தம் கடனாகும். உலக மார்க்கங்கள் யாவும் மக்கள்பால் சமத்துவ தாகத்தை உண்டாக்கி வருகின்றன. இம்முறையில் அற மார்க்கத்தைப் போதிக்கும் மார்க்கங்களை மக்கள் புறக்கணித்தே வருகின்றனர். காரணம், சுயநல வேட்கையேயாகும். 'யாம் பெற்ற இன்பம் இவ் வையகமும் பெறுக" என்ற மனப்பான்மை, என்று மனித உயிர் ஒவ்வொன்றனுள் துடிக்கின்றதோ அன்றே ஆழிசூழ் உலகத்தினை அமர லோகமாக நாம் கண்ணால் கண்டு களிக்கலாகும்.

## மெய்யறிவு

உயர்ந்த அறிவும், உத்தம குணமும் வாய்ந்தவர்கள் நாம் போற்றுந் தெய்வங்கள் ஆவர். நம்முடைய தெய்வங்கள் கல்லிலும், செம்பிலும் இருப்பதாக எண்ணி இனியும் ஏமாறுவதற்கில்லை.

"கல்லிலுமோ, செம்பிலுமோ உள்ளான் எம் கண்ணுதலே"

என்ற வாசகத்தின் தெளிவுரையைக் கவனித்தல் நன்று. நம்மிடை உயர்ந்த அறிவாகவும், உத்தம குணமாகவும் அவன் ஒளிருகின்றான். அறிவுடையவனை நாம் பண்டுதொட்டுப் போற்றி வந்திருக்கின்றோம். "துகளறு சங்கற்ப விகற்பங்கள் தோயாத அறிவாகி" நின்ற நிலைமையையே நம் அறிவு காண விழைகின்றது. தாயுமானார் தம் கருணை கீதங்களின் முழுக் கருத்து அறிவே தெய்வம் என்பது. அத்தகைய தெளிவு வாய்ந்த ஆன்றோர் வழிவந்த நாம் அறிவைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றுரைத்த திருமூலர் சொல்லுக்கப்பால் ஒரு சொல் உண்டோ! அவருடைய ஆழ்ந்த கருத்தும் அறிவே தெய்வமென்று போதிக்கின்றது. பெருமைக்கும், புகழுக்கும் காரணமாயுள்ள அறிவினைப் பெற்றிருக்கும் மனிதனை மக்கள் மதித்து வழிபட வேண்டியவராவர். (Man is a Revelation in the Flesh). அங்ஙனம் வழிபட எண்ணும் மக்கள் அவ்வறிவின் திறத்தைச் சற்றுச் சோதிக்க எண்ணுகின்றனர். அவர்கள் சோதனை நாட்டமெல்லாம் அவ்வறிவு உயர்ந்த ரகமாக, உயர்வு நல்கும் தன்மையதாக இருக்க வேண்டும் என்பதேயாகும். பிறரை வஞ்சித்து வாழ உதவும் அறிவைப் புறக்கணிக்கின்றனர். சுயநலக் கோட்பாட்

டிற்கு வழி வகுக்கும் அறிவினைச் சாடுகின்றனர். பொய்ச் சமய மார்க்கங்கள் மூலம், வீடு பேற்றைப் பெறலாகும் என்று கூறும் மயக்க உரையினை வீணுரை என்று கொள்கின்றனர். பர கலத்திற்கு, மக்கள் மேம்பாட்டிற்கு உதவும் அறிவியக்கம் எதுவோ அதனை நாடி இன்றுள்ள மக்கட் கூட்டம் செல்லுகின்றது. வழியடைகள் பற்பல உருவங்களில் வீழ்த்தப்பெறினும், அவைகளைத் தாண்டிச் செல்லவும் மக்கள் தயாராகி வருகின்றனர். உயர்ந்த ரக அறிவினால் ஆகும் பயன் பரிணமிக்க மக்கள்பால் உத்தம குணம் தேவைப்படுகின்றது. தர்மச் சிந்தனை, சமரச பாவம், சமத்துவ நாட்டம் ஆகியவைகளே அறங் கூறுஞ் சிறந்த குணவழிகளாகும்.

"அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய் போற் போற்றாக் கடை"

என்று, வீடு பேறு என்னும் பரலோக சாம்ராஜ்யக் கவனத்தில் மக்களை மற்றவர்கள் இழுத்துச் சென்று மயக்க மூட்டியதுபோல் தாமும் செய்ய மனமிசையாராய் இகலோகத்தில் மனிதன் எங்ஙனம் வாழ்வியலை நடத்த வேண்டும் என்பதைத் தெளிவுறக் கூறிய பொய்யில் புலவன் பொருளுரையினைக் கண்டு தெளியுங்கள். பிறர் எவ்விதத்தும் கஷ்டப்படாமலிருக்கவே தாம் பெற்ற அறிவுத்திறன் உபயோகமாக வேண்டும் என்பதே நாயனார் கோரிக்கை. மதியால் வித்தகனாகவும், மனத்தால் உத்தமனாகவும் ஒவ்வொரு மனித உயிரும் திகழுமேல் இவ்வுலகம் பூராவும் இன்பபுரியாகவே (Paradise on earth or Kingdom of Heaven on earth) காட்சியளிக்கும். இது ஆகாத காரியமல்ல. ஒவ்வொரு உயிரின் பாலும் அதனைச் சாதிக்க சக்தி உண்டு என்பதைக் காலம்

அறிவித்து வருகின்றது. ஆனால், நல்ல மனம் வேண்டும் சீரிய மார்க்கத்தினை ஏற்று நடக்க.

மேற்கூறிய பொதுமை யறத்தினை மெய்யறிவின் துணைக்கொண்டு நாட்டில் செழித்தோங்கச் செய்ய வேண்டுமெனின், அரசியல் ஆட்சியை நடத்த விழையும் பொது மக்கள் சற்று விழிப்புப் பெற வேண்டும். அவ்விழிப்பு அன்னோர்பால் பல துறைகளிலும் ஏற்பட வேண்டும். உயிர் உற்பத்திக்கு உண்மையான காரணம் எது? உற்பத்தியான உயிர் வளருவதற்குக் காரணஸ்தர்கள் யாவர்? வளரும் உயிர் நன்கு வாழ வாழ்க்கையில் ஏன் நம்பிக்கை கொள்ளவேண்டும்?—என்ற கேள்விகளைக் குறித்து விசாரணை செய்யவேண்டும் இக்கால மக்களினம். மேலை நாட்டு மக்களைக் காணீர்! அவர்கள் வாழ்வின் முடிவைவிட வாழ்வின் வளத்தினைப் பற்றியே அதிகக் கவனஞ் செலுத்துகின்றனர். மனிதனைகப் பிறந்தவன் முதலில் வாழத் தெரிந்துகொள்ள வேண்டும்; வாழத் தெரியாதவன் வாழத் தகாதவனேயாவன். இங்ஙனம் கூறுவதால் மக்கள் முதலில் தமது வாழ்வில் நம்பிக்கை வைத்தாக வேண்டும் என்று அறியலாகும்.

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" என்ற மயக்க வுரையை இனியும் கேட்பதற்கில்லை. பிறந்த உயிர் ஜீவித்திருக்க வாழ்வை நம்பாமல் பின்னர் எதை நம்ப வேண்டும்? வாழ்வை நம்புதல் என்றால் மனிதன் தன்னறிவின் திறனில் தளராத நம்பிக்கை வைத்து, உழைத்துப் பிழைக்க வழி தெரிந்து கொள்வதேயாகும். கவனத்தைக் காரியத்தில் திருப்புவதையே வாழ்வின் பாதை யெனலாகும். இதற்காக,

உன்னை ஈன்று புரந்த பெற்றோர்களை நம்பு;
உன்னைப் போற்றி ஆதரித்த சுற்றத்தினரை நம்பு;
உன்னைத் தாங்கி நின்ற தலத்தை நம்பு;
நம்பினால் அன்றி இன்பபுரியடைய முடியாது.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வாக்கினை, 'வாழ்வை நம்பினால் வழி பெறலாகும்'. என்று திருத்தியமைத்துப் பாடம் பெறுவாயாக.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமூக வாழ்வின் நிரந்தரத் தன்மையை இத்தாலிய தத்துவ ஞானியரொருவர் எங்ஙனம் அறிந்துரைத்தனர் என்பதைக் கீழ்வரு மொழியால் உணரலாகும் :—

"Society *is an imperishable organism, whose life extends beyond that of the individuals who are its transitory elements. They are born, grow up, die and are subsituted by others, while social unit always retains its identity and its patrimony of ideas and sentiments, which each generation receives from the past and transmits to the future*".

எனவே, உலக வாழ்வு அநித்யம் என்ற வாதத்தைத் தவிடு-பொடியாக்கு. உலகம் அநித்தியமானால், மாட மாளிகைகள் எதற்கு? கூடகோபுரங்கள் எதற்கு? வாழ்க்கை நித்யமல்லாவிடில், மனைவாசல் எதற்கு? மனைவி, மக்கள் எதற்கு? பிரபஞ்சம் மாயைச் சூழ்ந்ததானால், ரிசர்வ் பாங்குகள் எதற்கு? போலீஸ் பட்டாளங்கள் எதற்கு? உலகம் பொய்யானால், ஊராளும் உத்தம மந்திரிகள் எதற்கு? பாராளும் மன்றங்கள் எதற்கு? வாழ்க்கை அனுபவிப்பதற்கல்லாவிடில், சங்கீத சாகித்தியமெதற்கு? நடன கலா கேந்திரங்களெதற்கு? உலக வாழ்க்கை

வேண்டாததெனில், ஓடும் ரயில் வண்டி எதற்கு? பறக்கும் விமானம் எதற்கு? வாழ்க்கையை விரும்பாவிடில், கல்லூரிகளைச் சுற்றி வட்டமிடுவதெதற்கு? காரியாலயங்களைச் சுற்றி வலம் வருவதெதற்கு? புரிய வேண்டாமா இத்தகைய திருவிளையாடல்களின் மகிமை!

மக்கள்பால் மேற்கூறிய வகைகளில் விழிப்பேற் பெற்றதற்குக் காரணம் அறிஞர்களின் ஏடுகளாகும். அறிவுக் களஞ்சியமெனத் திகழ்ந்த அரிஸ்டாட்டில், சிந்தனைச் சிற்பியென மதிக்கப் பெற்ற சாக்ரடீஸ், அரசியல் ஞானியாராய் விளங்கிய பிளேட்டோ, அற மார்க்கத்தைத் தமது ஆத்ம சிந்தனை வழி உணர்த்திய அரசமாமணி மார்க்கஸ் அவுரிலியஸ், ஆங்கிலச் சாம்ராஜ்யத்தில் பிறந்து சிறந்தொளிர்ந்த தத்துவ ஞானிகள், ஒப்பற்ற நூலால் புகழ்ப் பெற்றோங்கிய திருவள்ளுவப் பெருந்தகையார் ஆகியோரின் சிந்தனைப் பயனால் வெளிவந்த அறிவுரைகள் மக்கள் மனத்தை ஏவல் கொள்ளலாயின. இந்தப் பணிக்குச் சாதகமான கருவியாயமைந்தது அரச மார்க்கமாகும். மக்களுடைய அறிவுத் தெளிவுக்கேற்பவே அரச மார்க்கங்கள் பண்டுதொட்டு இன்றுவரை மாறி மாறி வருகின்றன. முதன் முதலில் ஒரு தலைவன்கீழ் அமைந்த குடும்பம், சிறு குழுவாக, சிறு கிராமமாக, சிறு ஊராக, சிறு ஜில்லாவாக, சிறு பிரதேசமாக, சிறு நாடாக நாளடைவில் வளர்ந்து இன்றுள்ள உலகமாக விளங்குகின்றது. மக்கள் மன்னர் தலைமையில் இருந்து பார்த்தனர் பல நாள்; நாட்டு மக்களின் நலனை யுத்தேசித்து அதிகாரங்களைப் பெற்று ஆட்சி நடத்திய பிரபுத்துவ ஆட்சியை ருசித்தனர் சில நாள்; மக்கட் சம்மதம் பெற்று ஆட்சி நடத்திய நல்ல சர்வாதிகாரர்களின் பராமரிப்பில் நன்மைகள் கண்டனர்

சிலகால்; மேற்கூறிய ஆட்சிகளின் லட்சணங்கள் அவமதிக்கப் பெற்றகாலை மக்கள் பொங்கியெழுந்து தாமே ஆட்சி செய்ய முற்படலாயினர். அவ்வெழுச்சியே இற்றை நாளில் குடியரசாகவும் (Republic), ஜனநாயக மாகவும் (Democracy) உருவம் பெற்று விளங்குகின்றது. முடியரசுகள் அரசு செலுத்திய அத்தாணி மண்டபங் களில் எல்லாம் இன்று குடியரசுகள் குடியேறிவிட்டன. இவ்வளவு மகத்தான முன்னேற்றம் எதைக் கருதி நடந்தது; மக்கள் யாவரும் ஒருங்கே நன்மைகள் பல பெற்றுச் சுகிப்பதற்கல்லவோ?

சமய மார்க்கங்கள் மூலம் பொதுமை யற வுணர்வுப் பெற்ற மக்கள், அரசியல் வாழ்வில் பொதுமக்கள் ஆட்சியே சீரியதென ஏற்கலாயினர். அன்னோர் பொரு ளாதாரத் துறையிலும் சமத்துவ நாட்டத்தைச் செலுத்தி வரலாயினர். உலக மக்களின் பொருளாதார வளர்ச்சியில் அவ்வப்போது மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணம் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்களும், மெஞ்ஞானிகளின் மார்க்க போதனைகளுமாம். கண்டுபிடிப்புக்களும், மார்க்க போதனைகளும் மனித சுபீட்சத்தினைக் கருதியே வெளி யிடப்பெறுகின்றனவாதலால், அந்தச் சௌகரியங்கள் சமதர்மக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு வழங்கப்படுகின்றனவா யென்பதுதான் இன்றுள்ள மக்களின் கேள்வி. சமதர்மக் கொள்கை (Socialism), பொது உடைமை வாதம் (Communism) ஆகிய மார்க்கப் போதனைகள் எதற்காகத் தோன்றி யுள்ளன? அவைகள் தோன்றக் காரணங்களா யிருந்தவை எவை? ஆத்மீக வாழ்விலும், அரசியல் வாழ்விலும், பொரு ளாதாரத் துறையிலும் ஏகாதிபத்தியம் செலுத்தி ஏமாளி

களை ஏய்த்துவந்த எத்தர்களுக்காகத் தயாரிக்கப்பெற்ற அணுக்குண்டுகளன்றோ அவைகள்? மனித சமுதாயம் இன்று சமதர்மப் பாதையில் படரப் புறப்பட்டு விட்டது; அதனைத் தடுக்க இனி யாராலும் முடியாது!

## உழைப்பு

பொதுமை யற உணர்வு, மெய்யறிவின் திறம் ஆகிய வைகளின் மூலம் சமதர்மக் கொள்கையை நிலைநாட்ட எண்ணும் மக்கட் கூட்டம் உழைத்தாக வேண்டும். அவ்வாறு உழைக்க வேண்டுபவர்க்கு ஊக்கந் தேவைப் படுகின்றது.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறளடியைச் சிந்தனைச் செய்து பூர்க்கவும்.

நீ உன்னைப் பிறப்பினால் தாழ்ந்தவன் என்று மதியிலிகள் ஏட்டின் மூலம் காட்டினாலும், நாட்டில் விரித்துரைத்தாலும் கேட்டு மனமுடையாதே. மனித உடம்பினுள் உயிர் நிலைத்திருக்கும்வரையில் நீ உயர்ந்தவனே. உன்னைப் பற்றி நீ நல்ல முறையில் மேன்மையாகவே நினைத்துக் கொள். இந்த உணர்வே உன்னுடைய முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகும். பிறப்பினால் ஒருமைத்தன்மை யுடைய நீ, சிறப்படைய வேண்டுமாயின் செய் தொழில் சீருடன் அமைய வேண்டும். அச் செய் தொழிலுக்கு உன்னைத் தகுதியுள்ளவனாக்கிக் கொள்வதே உன்னுடைய முதற் கடமை. இதுசமயம் அறிஞர் - ஆற்காடு இராமசாமி முதலியார் அவர்கள் 1945-ஆம் வருடம் சான்பிரான்ஸிஸ் கோவில் நடந்த சர்வதேச மகாநாட்டிற்குச் சென்று வெற்றிப் பெற்று, வாகை சூடிச் சென்னைக்குத் திரும்பிய

காலே வரவேற்புப் பெற்றுக் கூறிய அமுதமொழியை உணரலாகும் :—

*"The lesson they in India ought to learn now was that they should first conquer their own inferiority complex if they were to conquer anything at all in this world......we must get rid of our inferiority complex and strive our best to see that we crush those feelings, sentiments, and narrow views, which divide man and man and make a hell out of what should be a blissful happy world".*

உன்னைப் பிறனொருவன் தாழ்மையாகக் கருதுவதற்குக் காரணம் இரண்டு வகையிலமையும். ஒன்று, உன்பால் உண்மையில் குறை இருக்கலாம்; மற்றும் குறை கூறுபவன் சுயநலங் கருதி உன்னை வேண்டுமென்றே குறை கூறலாம். இம்மாதிரியான சூழ்நிலையினின்று தப்பிக்க உன்னை நீ சீர்மைப்படுத்திக் கொள்ளுதலே சாலச் சிறந்த முறையாகும். உன்பால் சோம்பல் ஒரு துளியுமின்றி, உழைத்துப் பிழைக்கத் திட்டமிருந்தால் உன்னை ஒருவன் தாழ்மையாகக் கருதவும் முடியாது; கருதினும் அது பொய்ப்பட்டழியும்.

"மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஒன்னார்க்
கடிமை படுத்தி விடும்"

என்று முப்பாலார் கூறிய அமுத மொழியைக் கவனித்துப் பார். இளமை வயதில் சோம்பித் திரிபவர்களே பின்னளில் பிறர்தம் ஏவல் கேட்டு மாக்களென உழைக்கின்றனர். உழைப்புப் பிழைக்கச் செய்யுமேயன்றி உன்மத்தர்களாக்காது. உழைப்பால் ஆகாத பலன் கிடையவே கிடையாது.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று மாதாநுபங்கியார் கூறிய வாக்கின் தேற்றவுரையைக் கண்டு தெளியுங்கள்!

நம்முடைய தாழ்மைக்குப் பிறர்தாம் காரணம் என்று ஓயாது உளுற்றிப் பயனில்லை. விடுதலையடைந்த இந்தியா, இன்று அதன் மக்களையே நம்பியிருக்கின்றது. ஒவ்வொரு துறையிலும் உழைப்பாளர்களை அனுப்பு என்று கோருகிறது. இந்திய யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அதிகாரிகளால் ஐ. ஏ. ஸ். முதலான பரிட்சைகள் நடத்தப்பெறுகின்றன. அவற்றிற்கு எத்தனைப் பேர்கள் பெரும்பான்மை வகுப்பினின்று அருகாரக முனைகின்றனர். நம்முடைய குற்றத்தைப் பிறர் கண்டு கூறுமுன்னம் நாம் களைந்தெறிய வேண்டும்; பிறர் குற்றத்தை அஞ்சாது கண்டிக்க வேண்டும்.

உன்னுடைய உழைப்பு உன் நினைப்புக்கேற்ற வகையில் அமைய வேண்டும். உன் நினைப்பே சோடையாக இருக்கலாகாது. உயர்ந்த ரக நினைப்பே உன்னைப் பதம் பெறச் செய்யும் ஒரு தூண்டுகோலாகும். இது கருதியே செந்நாப்போதார்,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"

என்று வேகமிக்க ஞானத்தைப் புகட்டிச் சென்றார்.

## பதவி

உன்னுடைய முன்னேற்றம் பூர்வபுண்ணிய வசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற மயக்க

வுரையைக் கேளாதே. "பதவிப் பூர்வ புண்யானும்" என்ற வாக்கைச் சோதித்துப் பார். "சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகில்லை" யாதலால் உன் அறிவைப் பெருக்கி, அது கூறும் நல்வழிப் படர்ந்து பயன்தரும் உழைப்பை மேற்கொண்டாலன்றிப் பதவி உன்னை வந் தடுக்காது. பதவிக்காக நாமலைந்து திரிவதைக் காட்டிலும், நம்மை வந்து பதவியடுக்கும் வகையில் நாம் காரிய சாதனை செய்தல் வேண்டும். இது கருதியே அநுபவச் சித்தர்கள்,

"உய்யுநெறி உழைப்பாலே உறுமென் றெண்ணு"

என்று கூறுவாராயினர்.

## சமத்துவமே சமூக மார்க்கம்

இன்றைய உலக மக்கள் சமதர்ம இலட்சியத்தையே விரும்பிச் செயல் முறைகளில் தலைப்படுதலான், அம் மார்க்கத்தினையே நாம் சமூக மார்க்கம் என்று கொள்ள லாகும். இக்கருத்தைச் செய்திப் பாடல் வகையில் கீழ் வருமாறு உணர்த்தலாகும்:—

வாழையடி வாழையென வந்த கூட்டம்*
ஏழையராம் இந்தியரை ஏமாற்றி ஏய்த்துப்
பிழைக்க பலதந்திரம் உழைக்கா தியற்றியே
தழைபோல் தழைத்துத் தரணிதனில் தங்கிற்றே!

சுயநலமே பேணிப்பல திட்டங்கள் வகுத்ததால்
வயவேந்த ருள்ளிட்டுப் பயந்தே ஒடுங்கினர்:

---

*ஏகாதிபத்திய ஆட்சியாளர்

கொல்லைப் பாழாகுலுங் குருவிக்கிரைப் பஞ்சம்
இல்லையாகி, மற்றவர் தொல்லைப் பட்டனரே!

எழில்மிகு இயற்கையே இறையென ஏற்றார்,
பழியேற்குந் தெய்வங்கள் பல்லுருவில் கண்டனர்,
'பக்திவலையிற் படுவோன் காண்க' வென்னும்
முக்தர்தம் உரையைக் கேட்டு, இயற்றியும்
வலையிற் படுவோன் காணாதுதாம் வீழ்ந்தாரவ்
வலையில். வீழ்ந்தவர் வெளியேற வழிகாணாது
சாதிசமய மென்னுஞ் சந்து பொந்துகளில்
ஆதிமுதல் அமைந்து நொந்துமிக வாடினரே!

சலதியிற் பட்டுத் துடிக்கும் புழுவாகிப்
பலராணூர்ப் பரிதவிப்பைப் பார்த்த பின்னர்,
வழியெதுவோ வகையெதுவோ வென்று மேலோர்
பழிமலிந்தார் பதட்டுரை பொருட்படுத் தாராய்
நாட்டில் நயந்தியங்கி காட்டினர் பாதையை
வாட்டங்கொள் மக்கள் வேட்டமிக வுற்றனர்;
மார்க்க மென்றுஞ்சன் மார்க்க மென்றும்
தீர்க்க தரிசிகள் தெளிவுற வோதியும்
நலிந்த மக்கள் நயந்தில ராகிக்
கலங்கினர், சுயநலப் பேய்க்கூத்து கண்டே!

சுயநலத் தனலாற் சிந்தனை யறந்தீய
பரநலப் புனற்பெருகி, பொதுமையறஞ் செழித்திலை
பாழ்பட்டு நிலைதவறி வாழ்விழந்த பேதைகளின்
தாழ்வுப் பறக்கவும் வாழ்வு மலரவும்
பகுத்தறியும் பண்பிற் சிறந்த அரசியலார்
வகுத்தனர் ஒருநீதி வகுப்புரிமை என்னும்நீதி
பொதுநல முணரார் கதுமென வெழுந்து

பதறிப் பேசினர் கதறிக் கூவினர்
பேசியும் பயனிலே ; ஏசியும் வகையிலவரால்
தேசசட்டம் செய்யுனளில் செய்த சூதால்
வகுப்புநீதி வழக்கு மன்றமூலம் வீழ்ந்ததுவே !

வகுப்புக்கள் பலவுள்ளே அடங்கி வாழுநர்,
வகைப்பெறு மார்க்கம் மற்றெதுவோ காண்கிலம்
தலைசால் மார்க்கம் சமதர்மமே யாதலின்
சமத்துவங் கமழுஞ் சமூக மார்க்கமே
அமைந்திடில் அவலனீங்கி அவனி சிறக்குமே

---

## வணக்கவுரை

'இந்திர ரமிழ்த மியைவ தாயினும்
இனிதெனத் தமியராய் உண்டலும் இலரால்'
'உண்டா லம்ம,இவ் வுலக' மென்று
பண்புகூர் புலவோர் பண்டு வழங்கிய
நல்லுரை கேட்ட தொல்லுல கீர் ! அச்
சொல்லின் சீர்மை உணர்கின் றிலீரே !

தாழ்வைத் தோழனுக்கி வாழ்வைப் பகைத்துப்
பாழ்பட்ட பேதையர் பதம்பெற புரிந்த
உயர்பணி மேன்மை நயத்தகு வகையில்
வியனுல கோர்க்கிதனல் வெளியிட் டேடமால்
குற்றஞ் சேரினுங் குணமாய்க் கொண்டு
நற்றவமாம் பொதுமை யறமோங்க நயப்பீரே !

இடுவாரும் ஏற்பாரும் இல்லை யாக்கிக்
கடுமொழியுங் கொடுசெயலு மறவே நீக்கி

நுணங்கிய கேள்வியொடு வணங்கிய வாயும்
இணங்க ஏற்றுக் கணப்பொழு தளவும்
மடிமைக்கு அடிமைப் படாமல் மீண்டு
படிதனில் தங்கி உழைத்துப் பதம்பெறுவீர்!

பலமக்கள் நலமுணரா வொருவர் ஆட்சிக்
கலகலத்துச் சிதைந்து, கழிந்த பின்னர்
பலராட்சிப் பார்முழுதும் பரவுத லெதற்கோ?
நலமுற்று எல்லோரும் நயந்திருத் தற்கலவோ?

மனித வுயிரெலாம் புனித மிக்கதால்
இனிதே வாழ்ந்து நற்கருமம் இயற்றிட
ஓங்குக பரநலம் வீழ்க சுயநலம்
வாங்குக உயர்மிகு வாழ்விவ் வையகத்தே!

வாழிநற் சமூகம் வாழிசக மார்க்கம்
வாழிசம தர்மம் வாழிமிக இனிதே!

வணக்கம்

ஐந்தாம் அதிகாரம் : முற்றும்.

முற்றிற்று